
ரகசிய
அறை
பிரேமா™
பிரசுரம்
மேதாவி
எழுதிய
மர்ம நாவல்

# ரகசிய அறை

'மேதாவி'
எழுதிய துப்பறியும் நாவல்

மர்ம நாவல்

பிரேமா™
பிரசுரம்
59, ஆற்காடு சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

✆044-24800325, 24833180. : 9486000325
e-mail : aruram@premapirasuram.com
website: www.premapirasuram.com

பிரேமா பிரசுரம் - **23**
இரண்டாம் பதிப்பு : டிசம்பர் 2007
e -book பதிப்பு : ஜூலை 2020

© சகல உரிமைகளும் பெற்றது.

இந்நாவலில் வரும் பெயர்கள், சம்பவங்கள், சூழ்நிலைகள் அனைத்தும் கற்பனையே. இறந்தோர், இருப்போர் எவரையும் குறிப்பிடுவன ஆகா.

# 1. இருட்டில் ஒருத்தி!

உலகம் குரூரமாகவோ குழைவாகவோ காட்சி அளிக்கும் இரவு நேரம்.

குறுக்கு வழியில் குபேரர்களாக முயலும் பேராசைக் காரர்களும் சினிமா நட்சத்திரங்களாக முயலும் இளம் பெண்களும் அலைபாயும் சென்னை மாநகரம்....

பணக்காரப் பெரிய மனிதர்களின் உலகம், தெருப் பொறுக்கிகளான ரௌடிகளின் உலகம், சினிமாக் காரர்களின் உலகம் இம்மூன்று உலகங்களின் அந்தரங்க வாழ்க்கைகளும் இருட்டிய பிறகுதான் ஆரம்பமாகும். அதுவும் மது விலக்கு வருவதற்கு முன்னால் உள்ள காலம் என்றால் அவை கரைபுரண்டு விசித்திரம் விசித்திரமாக வெளிப்படும் கொலை பாதகமான சதித் திட்டங்களோ, கற்பழிவுப் படலங்களோ அந்த இரவு நேரத்தில் போதைக் கோப்பைகள் முன் தான் ஆரம்பமாகும்...

அன்றிரவு பெருமழைக்கு அறிகுறியாகச் சிறு தூற்றல் பெய்து ஓய்ந்து இருந்ததால், தெருவில் ஜன நடமாட்டம் இல்லை.

தெருவில் வரிசையாக அணிவகுத்து இருக்கும் மெர்க்குரி விளக்குகளின் ஊதா வெளிச்சம் ஜீவனற்று சூசயமானவீதியில் படர்ந்திருந்தது, வெற்றிலை பாக்கு கடைகளில் மினுக் மினுக்கென எரியும் மங்கிய வெளிச்சம் அன்றிரவு என்ன பயங்கரம் நடக்கப் போகிறதோ என்பது போல் நடுங்கிக் கொண்டிருந்தது.

மௌண்ட்ரோடில் வந்து நின்ற கடைசி பஸ்ஸிலிருந்து ஓர் இளம் பெண் கீழே இறங்கினாள். அவள் கையில் ஒரு தோல்பை இருந்தது.

சூன்யமான இருளில் தன்னந்தனியாக அவளை இறக்கிவிட்டு பஸ் புறப்பட்டுப் போனதும் அவளது தேகம் வெடவெட வென்று நடுங்கியது. சுற்று முற்றும் இருளை ஊடுருவிப் பார்த்தாள், முன்னும் பின்னும் திரும்பிப் பார்த்துக் கொண்டே வேகமாக ரோடில் நடந்தாள்.

பருவப் பெண் தனியாக இருட்டில் நடந்துபோகும் நேரமல்ல அது! பூரிப்பான சிவந்தமேனி; சதைப் பிடிப்பான கன்னங்கள்; ரோஸ் பௌடர் கமகமக்கும் களையான முகம்; லிப்ஸ்டிக் பூசிய உதடுகள்; கண்மை தடவிய குறு குறு விழிகள்; ஜிகினாப் பொட்டு; சலசலப்பான பாவாடை; இறுக்கமான ஜரிகை ரவிக்கை; மெல்லிய சிவப்புத் தாவணி இவற்றுடன் சினிமா உலக அப்சரஸ் போல் அவள் என்ன தான் தன்னைக் கவர்ச்சிகரமாக அலங்கரித்துக் கொண்டு இருந்தாலும், அவளது கனிவான முகம் ஒரு விதப் பீதியால் வியர்த்துக் கொட்டியது. சுற்று முற்றும் இருளை ஊடுருவிப் பார்க்கும் அவளது கருவிழிகளில் ஒருவித மருட்சி தென்பட்டது. அவள் குறும்புக்காரி என்பதையொட்டி என்ன தான் அவளது சாய உதடுகளில் புன்னகை மினு

மினுத்தாலும், உள்ளூர அவளது நெஞ்சானது புறாவின் மெல்லிய இறகுகளைப் போலப் பயத்தால் படபட வென்று அடித்துக் கொண்டது. இதற்கு எல்லாம் காரணம் அன்றைய தினம் அவளுக்குத் தெரியாமல் அவளது அறைக்குள் போடப்பட்டிருந்த இரண்டு மொட்டைக் கடிதங்கள் தான்.

அவற்றில் ஒரு கடிதம் பின் வருமாறு கூறியது "மனோரமா!".

"கலையுலகில் உலாவும் அப்சரஸ் நீ! அப்சரஸ்கள் கலியாணம் செய்து கொள்வதில்லை! ஆனால் நீயோ, உன்னைக் கலியாணம் செய்து கொள்கிறவனுக்குத்தான் உன் அழகும் கற்பும் சொந்தம் என்று பிடிவாதம் செய்கிறாய்; உன் பருவ அழகைப் பாலைவனத்து நிலவாக வீணாக்கித் திரிகிறாய். மனோரமா! கலியாணம் செய்து கொள்ளலாம் என்ற உன் மனோரதம் நிறைவேறப் போவதில்லை! உன்னுடைய கற்பைக் கவர்ந்து உன்னை என் ஆசை நாயகியாக்கிக் கொள்ளாமல் நான் விடமாட்டேன்! நீ இஷ்டப்பட்டாலும் படாவிட்டாலும் உன்னைப் பலவந்தமாய்க் கொண்டு போய் அடைத்து வைக்கும் அந்தப்புரமாக ஒரு ரகசிய அறை தயாராகிறது என்பதை மறந்து விடாதே!".

"இப்படி உன் அழகில் மிருகமாக மாறக் கூடியவன் யார் என்று வீணாக யூகிக்க முயலாதே! உன்னால் அதை அனுமானிக்கவே முடியாது. என்னுடைய ரகசிய அறையில் நீ சிக்கி, நான் யார் என்பதை அறியும் காலம் வரும்போது நிச்சயம் திடுக்கிடுவாய்!".

காலத்தை எதிர் நோக்கிக் காத்திருக்கும்,

மர்ம மனிதன்"

இன்னொரு மொட்டைக் கடிதம் பின் வருமாறு மனோரமாவைத் திடுக்கிடச் செய்தது;

"மனோரமா!"

"நீயும் உன் காதலன் மோகனும் தீட்டும் ரகசியத் திட்டங்கள் எனக்குத் தெரிந்துவிட்டன. ரகசியத்தை நான் வெளியிட்டால் உங்களுடைய எதிர்காலம் சூன்யமாகிவிடும்; நீங்கள் எதிர்பார்க்கும் திரண்ட சொத்து எல்லாம் வழி தவறிப் போய்விடும்!".

"நான் அந்த ரகசியத்தை வெளிப்படுத்தக் கூடாது என்று நீ விரும்பினால் என்னுடைய அவசரத் தேவைக்கு அட்வான்ஸாக இன்று நீ நூறு ரூபாய் கொடுக்க வேண்டும். நீங்கள் அடைய விரும்பும் திரண்ட சொத்தில் எனக்கு

நூறில் ஒரு பங்கு தரச் சம்மதித்து என் உதவி தேவை எனக் கடிதம் மூலம் இன்று நீ அறிவித்தால் அந்தச் சொத்து விரைவில் உங்களுக்குக் கிடைப்பதற்காக நான் எந்தக் கொலைபாதகச் செயலிலும் இறங்கத் தயாராகி விடுவேன்! நூறு ரூபாய் அல்லது சம்மதக் கடிதம் — இரண்டில் ஒன்று இன்றிரவு உன்னிடம் இருந்து எனக்குக் கிடைக்க வேண்டும். இரண்டில் ஒன்றை ஒரு பழைய கவருக்குள் வைத்து இன்றிரவு சரியாக எட்டு மணிக்கு மௌண்ட் ரோடிற்கு வந்து அன்னிமீரா ஹோட்டலுக்கு எதிரேயுள்ள குப்பைத் தொட்டி மூடி மீது வைத்து விட்டுத் திரும்பிப் போய்விடு. நீ போனதும் இருளில் தயாராக மறைந்து இருக்கும் நான் குப்பைத் தொட்டி மீதுள்ள கவரை எடுத்துக் கொள்கிறேன். நான் சொன்னபடி நீ செய்யத் தவறினால், நாளைக் காலையில் உங்கள் ரகசியத் திட்டத்தை அம்பலப்படுத்தி விடுவேன்.

இப்படிக்கு,

கையில் காசில்லா தவன்."

மேற்கூறிய இரு மொட்டைக் கடிதங்களின் வாசகங்களும் இப்போது இரவில் தனியாக நடந்து செல்லும் மனோரமாவின் நினைவிற்கு வந்து அச்சத்தை மூட்டின.

அவள் அன்னிமீரா ஹோட்டல் இருக்கும் தெருவில் திரும்பிய போது யாரோ தன்னைப் பின் தொடரும் காலடி ஓசைகளைக் கேட்டாள்.

அன்னிமீரா ஹோட்டலுக்கு எதிரேயுள்ள குப்பைத் தொட்டிமீது ஒரு பழைய கவரை வைத்து விட்டு மனோரமா வெடுக்கென அன்னிமீரா ஹோட்டல் காம்பௌண்டிற்குள் ஓடிப் புகுந்து கொண்டாள்.

குப்பைத் தொட்டியின் அருகில் காலடி ஓசைகள் வந்து நின்றன. கூதலுக்காக உடம்பு எல்லாம் ஒரு கிழிந்த கம்பளியால் போர்த்திக் கொண்டிருந்த ஒரு மனித உருவம், குப்பைத் தொட்டியை நோக்கிக் குனிந்தது. அதன் மீதுள்ள ஒரு பழைய கவரைப் பரபரப்போடு அந்த மனிதன் எடுத்துக் கவருக்குள் கைவிட்டுத் துழாவிப் பார்த்தான்.

அந்தப் பழைய கவரில் ஒரு பழைய காலணாக்கூட இல்லை! ஒரு கடிதம் மட்டும் இருந்தது.

அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டுபோய் விளக்கு வெளிச்சத்தில் அந்த மனிதன் படித்துப் பார்த்தான். அதில் மனோரமா பின் வருமாறு எழுதியிருந்தாள்;

"ஏமாந்தவனே!"

"உன்னுடைய உதவியையோ பயமுறுத் தலையோ பொருட்படுத்தும் தேவை எனக்கு இல்லை. நான் அன்னிமீரா ஹோட்டலில் நடைபெறும் விருந்துக்கு வந்தவளே தவிர, உன்னுடைய கடிதத்தை மதித்து வந்தவளல்ல. ஆனால் ஒன்று கூறுகிறேன். என்னைக் கெடுக்க எவனோ திட்டம் தீட்டுகிறான். அவன் யார் என்பதையும் அவனுடைய ரகசிய அறை எங்கிருக்கிறது என்பதையும் நீ கண்டு பிடித்துச் சொன்னால், எங்களுடைய சுயமுயற்சி இல்லாமல் கிடைக்கும் சொத்தில் முக்காலே மூணுவீசம் பங்கையும் உனக்கே கொடுத்து விடுகிறேன".

இப்படிக்கு.

"உன்னைவிடக் கெட்டிக்காரி"

இதைப் படித்த கம்பிளி மனிதனின் முகம் சுருங்கியது. அன்னிமீரா ஹோட்டலில் ஒரே ஒர் அறையில் மட்டும் மின்சார விளக்கு மங்கலாக எரிவது அவனது கண்ணில் பட்டது. அந்த அறையில் நடைபெறும் அதிசய விருந்துக்குத்தான் மனோரமா வந்திருக்கிறாள் என்பதை யூகித்துக் கொண்டான். பிறகு பற்களை நெற நெற வெனக் கடித்துக் கொண்டு அப்பாற் சென்று இருளில் மறைந்து நின்றான்.

அன்னிமீரா ஹோட்டல் காம் பௌண்டுக்குள் புகுந்த மனோரமா மெல்லக் குப்பைத் தொட்டிப் பக்கம் திரும்பிப் பார்த்தாள். அப்போது அவள் பின்னால் காலடி ஓசை கேட்கவே திடுக்கிட்டுத் திரும்பிய அவள் "ஆ. நீங்களா, அண்ணா?", என்றாள்.

"ஆமாம். நான் தான் மனோரமா! அகிலம் புகழும் சகல கலா நாடக அரங்க காரியதரிசி செல்லப்பா தான்" என்று நமட்டுச் சிரிப்புடன் கூறினான் செல்லப்பா.

ஸில்க் ஜிப்பா, மல் வேஷ்டி, ஜரிகை அங்கவஸ்திரம், காலணா அளவுக்கு சந்தனப் பொட்டு, ஒவாய்ப்பல், வெற்றிலை குதப்பும் வாய், அத்தர் செண்ட் வாசனை, உதட்டிலே நமட்டுச் சிரிப்பு — இத்தனையின் கூட்டுத் தொகைதான் நாடக காரியதரிசி செல்லப்பா!

அவனை நோக்கி மனோரமா, "நல்ல வேளை!" என்று நிம்மதியுடன் பெருமூச்சு விட்டாள்.

"மனோரமா, ஏன் பின்னால் திரும்பித் திரும்பிப் பார்க்கிறாய்? பெரிய கருப்பன் செட்டியார் ஆள் யாராவது உன்னைப் பின் தொடர்ந்து வருவானோ எனப் பயமா?" என்று கேட்டான் செல்லப்பா.

"உங்கள் உதவியை நம்பியிருக்கும் போது எனக்கென்ன அண்ணா கவலை?... ஆனால்... இன்று என் மனம் என் எதிர் காலத்தை எண்ணி எவ்வளவு

அவஸ்தைப்பட்டது தெரியுமா? என்னைக் கெடுக்க நினைக்கிறார்களே, என்ன அநியாயம்?"

"கெடுவான் கேடு நினைப்பான் மனோரமா, ஒரு வார்த்தை சொல். உனக்குக் கெடுதல், நினைக்கிறவனைக் குத்திக் கொன்று குடலைப்பிடுங்கி நரசிங்க அவதாரம் போல் மாலையாகப் போட்டுக் கொள்கிறேன்!" என்று செல்லப்பா நாடக பாணியில் கூறிச் சிரித்தான்.

மனோரமாவும் சிரித்தாள்.

"மனோரமா! எங்கே முக்கியமான விருந்துக்கு வராமலிருந்து விடுவாயோ என்று ஹோட்டல் வாசலிலேயே வெகு நேரம் காத்திருந்தேன்!... கோடீஸ்வரர் சோம சேகர் விருந்து கொடுக்கிறார் என்றால் அதற்கு விருந்தாளி குறித்த நேரத்தில் வராவிட்டால், அப்புறம் அவருக்குச் சுயபுத்தி இராது"

"மன்னித்துக் கொள்ளுங்கள், அண்ணா! கோடீஸ்வரர் சோம சேகரின் விருந்துக்கு நான் வருகிறேன் என்று தெரிந்தால், அது மோகனுக்குச் சிறிதும் பிடிக்காது. வழியில் சந்தித்த அவருக்குச் சாக்குப் போக்குச் சொல்லி, அவருக்குத் தெரியாமல் சுற்றி வளைத்துப் பஸ்ஸில் வந்ததால் காலதாமதமாகி விட்டது" என்றாள் மனோரமா.

"மோகன்!" என்ற முகம் சுளித்த செல்லப்பா, "சரி வா! எல்லாம் உனக்காகக் காத்திருக்கிறது!" என்று அவளை ஹோட்டலுக்குள் அழைத்துப் போனான்.

## 2.அதிசய விருந்து!

அன்னிமீரா ஹோட்டலில் கோடீஸ்வரர் சோமசேகர் வழக்கமாகக் கொடுக்கும் விருந்து அன்றிரவும் நடை பெற்றுக் கொண்டிருந்தது.

அறிஞர் பெர்னார்ட்ஷாவைப் போல வெண்ணிறத்தாடி மீசைகளுடன் சுமார் ஐம்பது வயது மதிக்கத் தக்கவராய் விளங்கினார் கோடீஸ்வரர் சோமசேகர்.

அமெரிக்கத் தொப்பி, இங்கிலாந்துச் சுருட்டு, ஐரோப்பிய கோட்டு சூட்டு, பாரிஸ் ஒற்றை மூக்குக் கண்ணாடி, ஸ்விட்ஜர்லாந்துக் கடிகாரம், இத்தியாதி அன்னியச் சரக்குகளுடன் சோமசேகர் ஒவ்வொரு சிறு அம்சத்திலும் மேல்நாட்டு மோஸ்தரிலேயே விளங்கினார். டின்னர் டேபிளில் இரண்டு இளம் பெண்களுக்கு மத்தியில், முகத்தில் வெளிச்சம் படாத விதமாய், அமர்ந்திருந்தார். மனோரமாவுக்கு அவருடைய முகம் சரியாகத் தெரியவில்லை. அவர் கனத்த குரலில் இரண்டு பெண்களுடனும் ஹாஸ்யமாக உரையாடிக் கொண்டிருந்தார்.

விருந்துக்கு முதல் தடவையாக அன்றுதான் மனோரமா வந்திருந்தாள். மனோரமா ஒரு சினிமா நட்சத்திரம் ஆவதற்கு ரொம்பவும் பாடுபட்டு வந்தாள். நட்சத்திரப் பதவி அவளுக்குக் கிடைக்கா விட்டாலும் படத்தில் ஏழெட்டு இடங்களில் 'தலையைக்'காட்டவும், அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில வசனங்களைப் பேசவும் அவளுக்குச் சந்தர்ப்பம் கிடைத்து வந்தது. இருந்த போதிலும், நாடக உலகில் அவளுக்குப் பிரமாதமான செல்வாக்கு இருந்து வந்தது. செல்லப்பா நடத்தி வந்த "சகல கலா நாடக அரங்கத்திலே" அவள் தான் கதாநாயகி வேஷந்தரித்து ரஸிகர் உள்ளத்திலே ஆனந்தத் தாண்டவம் ஆடிவந்தாள்.

மனோரமாவுக்கு, அந்த விருந்து ஒரு புதுமை நிறைந்த கோலமாகவே தோன்றியது. ஏனென்றால் சோமசேகர் விருந்துக்கு, 'பொறுக்கி எடுக்கப்பட்ட' சிலர்தான் அழைக்கப்படுவார்கள். அப்படி அழைக்கப்பட்டவர்கள், தங்களோடு வேறு நண்பர்களையோ, உறவினர்களையோ, அழைத்து வர முடியாது. ஒவ்வொருவருக்கும், "பாட்ஜ்' என்று சொல்லப்படும் ஒரு அடையாளச் சின்னம் கொடுக்கப்படும். அந்த அடையாளச் சின்னம், அரசியல் மகாநாடுகளிலே 'பிரதிநிதி'களுக்குக் கொடுக்கப்படும் சின்னத்தைப் போல அமைக்கப்பட்டிருக்கும். அதில், அதை அணிந்து கொள்ளும் விருந்தினர் பெயர் எழுதப்பட்டிருக்கும்.

இந்த முறைகள் எல்லாம் சோமசேகர் புதிதாகக் கண்டு பிடித்தவை என்று எல்லோரும் சொல்லுவார்கள். அவர் மேல் நாடுகளெல்லாம் போய்ச் சுற்றிவிட்டு வந்தவர் என்றும், இங்கிலாந்து தேசத்திலே, "ஆஸ்காட்' விருந்து என்று அழைக்கப்படும் ராஜாங்க விருந்திலே கையாளப்படும் முறைகளை அவர் கையாளுவதாகவும் சிலர் கூறினார்கள்.

மொத்தத்தில் சோமசேகர், ஒரு மேல் நாட்டாரைப் போலவே காட்சி அளித்தார். தமிழ் பேசுகிறார் என்ற ஒரு "பாவத்தைத்' தவிர அவரைத் தமிழர் என்று சொல்லக் கூடிய எந்தவித யோக்யதாம்சமும் அவருக்குக் கிடையாது, விருந்துக்கு வருபவர்களில் பெரும்பாலோர் அவருக்கு அறிமுகம் இல்லாதவர்களாகவே இருப்பார்கள். அவர்களை அழைக்கும்படி அவருக்கு யோசனை சொல்லுபவன் செல்லப்பாதான். நாடகத்தில் கதாநாயகியாக வருபவர்கள்; சினிமாவில் சில வேஷங்களில் காட்சி தரும் உப— நடிகைகள்; நடன உலகில் அப்பொழுதுதான் "அரங்கேற்றமாகி' யாராவது சிக்க மாட்டார்களா என்ற யானைப் பசி கொண்டலையும் உதய நட்சத்திரங்கள், ஆகிய இப்படிப்பட்ட "கலைஞர்'களைத்தான் செல்லப்பா மூலம் சோமசேகர் விருந்துக்கு அழைப்பார். அப்படி அழைக்கப்பட்டவர்களிடம் ரொம்ப நாள் பரிச்சயம் கொண்டவர் போல, பெயர் சொல்லி அழைப்பதற்காகத்தான் 'பாட்ஜில்' விருந்தினர் பெயர் எழுதப்பட்டிருக்கிறது என்று பேசிக் கொண்டார்கள்.

சோமசேகர் ஒரு கோடீஸ்வரர் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டார்கள், அவருக்குக் கலை அபிமானம் எல்லைமீறி இருப்பதாக செல்லப்பா சொன்னான். அதோடு செல்லப்பாவின், 'சகல கலா நாடக' அரங்கேற்றத்தை, அவர்தான் ஆயிரக்கணக்கான ரூபாய் கொடுத்துப் போஷித்து வருவதாகவும் செல்லப்பாவே கூறிக்கொண்டான்.

செல்லப்பாவைத் தெரியாதவர்கள் நடிகர் கோஷ்டியிலே யாரும் கிடையாது. அவனிடம் எல்லோருக்குமே ஒரு அனுதாபமும் உண்டு. பாதி சம்பளம் வாங்கிக் கொண்டு அவனுக்காக நாடகம் நடத்திக் கொடுக்க எந்த நடிகருமே ஆதரவோடு முன் வருவார்கள். ஏனென்றால் அவர்கள் மனம் கரையும்படி, அழுது கெஞ்சும் கலையில் செல்லப்பா நிபுணனாக விளங்கினான். நாடகத்திற்கு முழுத்தொகை பேசிக் கொண்டு வந்த போதிலும், முடிவில் நடிகர்களிடம் போய் பாதித் தொகை கொடுப்பதாகவும் தான் நொடித்து போய் விடும் நிலையில் இருப்பதாகவும் கண்ணீர் விடுவான், கண்ணீருக்கும். மசியாத 'கல்லுளி' 'மன்னராக' இருக்கும் நடிகர்கள், 'முழுத்தொகையும் கொடுத்தே ஆகவேண்டும்' என்று பிடிவாதம் செய்தால், செல்லப்பா உண்மையிலேயே நொடித்துப் போய் விடுவான்!'... அதாவது தியேட்டரின் கொல்லை வாசல் வழியாக மாயமாய் மறைந்து விடுவான்.

இப்படிப்பட்ட அயோக்யனாக செல்லப்பா இருந்த போதிலும், சில அயோக்கியர்களிடம் இருக்கும் அலாதிக் கவர்ச்சி ஒன்று அவனிடமிருந்தது! அதனால் அவனை எல்லோரும் பிரியத்தோடு நடத்தி வந்தார்கள்! அவனுக்கு உதவி செய்யவும் செய்தார்கள். இதனால் தான், சகல கலா அரங்கம் உருவாயிற்று! அது 'காற்றோடு போகும்' நிலைமையில் இருந்தபோது தான், கோடீஸ்வரர் சோமசேகர் என்ற புதையல் அவனுக்குக் கிடைத்தது. இப்பொழுது செல்லப்பாவின் நிலைமையே மாறி விட்டது.

மனோரமாவுக்கு செல்லப்பாவிடம் அலாதி அனுதாபம் உண்டு. ஏனென்றால் அவள் முன்னுக்கு வருவதற்கே அவன் தான் காரணமாக இருந்தான். அவன் கொடுத்த உற்சாகத்தில் தான் பெரிய கருப்பன் செட்டியார் வீட்டில், சமையற்காரியாக இருந்த அவள் திரையுலக கதாநாயகி ஸ்தானத்திற்குப் போட்டி போடும் தைரியத்தைப் பெற்றாள். அதனால் அவனைப்பற்றி அவள் எவ்வளவுக்கு எவ்வளவு கெடுதலாகக் கேள்விப் படுகிறாளோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவனிடம் வெறுப்புக் கொள்வதற்குப் பதிலாக, அனுதாபம் கொண்டிருந்தாள்!

இன்று தன்னை அந்த விருந்திற்கு அவன் அழைத்ததற்கும் எதுவும் முக்கிய காரணம் இருக்கும் என்று நினைத்தாள். அவள் உட்கார்ந்திருந்த மேஜையருகில் இரண்டு ஆசனங்கள் போடப்பட்டிருந்த போதிலும் ஒன்று காலியாகவே இருந்தது. அந்த இடத்திற்கு வரவேண்டிய நபர் வரவில்லை ஆதலால், மனோரமா பேச்சுத்

துணைக்குக்கூட ஆள் இல்லாமல் தனியாக உட்கார்ந்திருக்க நேர்ந்தது. கோடீஸ்வரர் சோமசேகர், சற்று தூரத்தில் விளக்கு வெளிச்சம் முகத்தில் விழாதபடி ஒரு சோபாவில் உட்கார்ந்து சுருட்டுப் பிடிக்கலானார். அவரது தாடி மின்சார வெளிச்சத்தில் மின்னியதே தவிர, அவரது தொப்பியின் நிழலில் அவரது முகம் சரியாகத் தெரியவில்லை. அவர் அருகில் 'பெண்கள் ரௌடி' என்று பெயர் பெற்ற கமலாவும், பரிமளாவும் உட்கார்ந்து அவரிடம் ஏதோ கேலி பேசிக் கொண்டிருந்தார்கள்.

சோமசேகரின் காதுக்குள் கமலா என்னவோ குசுகுசு வென்று சொன்னாள். அதைக் கேட்டதும் சோமசேகர் இடி இடி என்று சிரித்துக் கொண்டு, "இல்லை கமலா! அந்த மைனரின் கன்னத்தில் தட்டியதோடு நீ விட்டிருக்கக் கூடாது. அவன் இருபது லக்ஷ ரூபாய்க்குச் சொந்தக்காரன். அவனுக்கு நீ நல்லாக் குல்லாய் போட்டு அவனுடைய சொத்தை எல்லாம் அபேஸ் செய்திருக்க வேண்டும்" என்று நையாண்டி செய்தார் சோமசேகர்.

"எனக்கு ஆசைதான்! ஆனால் அதுக்கு வழியும் திறமையும் இல்லையே?"

"இந்தியப் பெண்களே சுத்த அசடுதான்! மேல் நாட்டுப் பெண்களைப் பார்! கொலை, கொள்ளை, வழிப்பறி, பித்தலாட்டம் எதிலும் ஒரு பெண் சம்பந்தப்படாமல் இருக்க மாட்டாள்; கெட்டிகாரப்பெண் இல்லாத கொள்ளைக் கூட்டம் எதுவும் மேல்நாட்டில் இல்லை!" என்று ஹாஸ்யமாகச் சொல்லிவிட்டு, மனோரமாவைக் கடைக் கண்ணால் பார்த்தார் சோமசேகர்.

மனோரமாவுக்கு என்னவோ போலிருந்தது. விருந்திலிருந்து எழுந்து போக வேண்டும் என்று என்னவோ ஒருவித அருவருப்பும் பயமுங்கூடத் தோன்றியது.

அந்தச் சமயத்தில் செல்லப்பா அவள் உட்கார்ந்திருந்த மேஜை அருகே வந்தான்.

மனோரமா, "அண்ணா நான் போகிறேன், எனக்கு 'சோர்'வாக இருக்கிறது!" என்றாள். அண்ணா என்ற பதம் நாடகக் கலையில் ஈடுபட்டவர்களால், சகஜமாக ஒருவரை ஒருவர் அழைக்க உபயோகப் படுத்தப்படுவது! மொத்தத்தில் நாடகக்காரர்களால் அந்த வார்த்தை "ஆ" "ஓ" போன்ற அர்த்தம் இல்லாத' அசைச் சொல்லாக' பிரயோகப் படுத்தப்பட்டு வருகிறது!

செல்லப்பா ஒரு நமட்டுச் சிரிப்போடு, எதிரே காலியாக இருந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

"என்னை எதற்காக இந்த விருந்திற்கு அழைத்தீர்கள்? யாருமே என்னைக் கவனிக்கவில்லை!" என்று செல்லப்பாவின் காதுக்குள் குறைப்பட்டாள் மனோரமா!

"இல்லை மனோரமா! நீதான் இந்த விருந்தில் ரொம்ப முக்கியமானவள். உன்னை நேரில் பார்க்க வேண்டும் என்று சோமசேகர் ரொம்பவும் விரும்பினார்" என்றான் செல்லப்பா.

"எதற்காக?"

"நீ தானே நம் நாடகத்தில் கதாநாயகி! நாடகம் நடத்தப் பணம் கொடுப்பவர் அவர்தானே! பணம்! அடடா, அவரிடம் எப்படிக் குவிந்து கிடக்கிறது தெரியுமா?" என்று செல்லப்பா சொல்லும் பொழுதே அவன் கண்களில் ஓர் ஒளி வீசியது. அதைப் பார்த்ததும் மனோரமாவுக்குச் சிரிப்பு வந்தது. அவள் சிரித்தாள்.

செல்லப்பாவுக்கு ஆத்திரம் குமுறியது. தான் சொன்னதை அவள் கேலி செய்கிறாள் என்று நினைத்தான். உடனே அவளிடம் சூடாக, "ஏன், உனக்கு உலகத்திலேயே உங்கள் பெரிய கருப்பன் செட்டியார் தான் பெரிய பணக்காரராகத் தெரிகிறதா? அவன் கொள்ளை வட்டி வாங்கிப் பணத்தைச் செலவே செய்யாமல் சேர்த்துக் கொண்டு போகிறான்! ஆனால் சோமசேகர் அப்படியல்ல!" என்றான்.

"மனோரமா சிரித்துக் கொண்டே, நானும் கேள்விப்பட்டேன்; சோமசேகர் மாதம் இப்படி ஒரு விருந்து' நடத்துவதாக மோகன் கூறினார்!" என்றாள்.

"மோகன் கூறினாரா?" என்று மோகன் என்ற வார்த்தையை அர்த்த புஷ்டியோடு அழுத்தினான் செல்லப்பா, மனோரமாவுக்கு "ஒரு மாதிரியாக' இருந்தது.

"மோகன், பெரிய கருப்பன் செட்டியாருக்கு உறவா?" என்று வெறுப்புடன் கேட்டான் செல்லப்பா.

"ஆமாம்! மருமகன்" என்று கூறினாள் மனோரமா.

"அதாவது வேறு வாரிசு இல்லாத பெரிய கருப்பன் செட்டியார் செத்துப் போனால் அவருடைய சொத்துக்கு வாரீசாகக் கூடியவன்; இல்லையா?"

"ஆமாம்! ஆனால் செட்டியாருக்கும் அவருக்கும் மனஸ்தாபம்! செட்டியார் தம் சொத்தைக் கோயிலுக்கு எழுதி வைத்து விடுவாரோ என்னவோ? உம்—ஏன் கேட்டீர்கள்!"

"இல்லை! சாதாரணமாகக் கேட்டேன். அந்தப் பிரபாகர் இருக்கிறானே, அவன் செட்டியாருக்கு உறவா?"

"அவர் முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர். செட்டியார் பணம் போட்டிருக்கும் சந்தியா பாங்'கின் ஏஜண்ட்!"

இதைக் கேட்டதும் செல்லப்பா தானாகச் சிரித்துக் கொண்டான். "பிரபாகர் ஒரு பாங்கின் ஏஜண்ட் ரொம்ப வினோதமான விஷயம்! உலகம் அப்படி இருக்கிறது" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

பிரபாகரை மனோரமாவுக்குச் சுமாராகத்தான் தெரியும். அவன் மோகனின் நண்பன். அதோடு நாள் தவறாமல், மனோரமா நடிக்கும் நாடகங்களைப் பார்க்க வருபவன். அவனைப் பற்றி மேற்கொண்டு விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அக்கறை அவளுக்குக் கிடையாது. ஆகவே, தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஒன்பது இருபது ஆகியிருந்தது.

நான் புறப்பட வேண்டும். "மினர்வா' தியேட்டரில் ஒரு ஆங்கிலப் படம் ஓடுகிறது. அதற்கு இரண்டாவது ஆட்டத்திற்கு டிக்கட் "ரிஸர்வ்' செய்திருக்கிறேன்" என்று எழுந்தாள்.

"நீ அவசியம் போகத்தான் வேண்டுமா?"

"ஆமாம்!"

அவளை செல்லப்பா என்னவோ மாதிரிப் பார்த்தான். பிறகு அவளை, சோமசேகர் இருந்த இடத்திற்கு அழைத்துக் கொண்டு போனான். அந்தச் சமயத்தில் நம் ராஜ்யத்தில் மது விலக்கு அமுலுக்கு வரவில்லை ஆதலால், மேல் நாட்டு மோகங் கொண்ட சோமசேகர் விருந்திலே, விரும்பியவர்களுக்குத் தாராளமாக மது வழங்கப்பட்டது. இப்பொழுது அவரே ஒரு "ஷாம்பேன்' பாட்டிலைத் திறந்து, கமலா, பரிமளா ஆகிய இரண்டு "பென் ரௌடி'களோடு சிரித்துப் பேசிய வாறு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

மனோரமாவும் செல்லப்பாவும் தன்னை நோக்கி வருவதைப் பார்த்து "வா, மனோரமா! கொஞ்சம் "ஸ்லைட்'டாக" என்று பாட்டிலைத் தூக்கிக் காண்பித்தார் சோமசேகர்.

"மன்னிக்க வேண்டும்! வேண்டாம். எனக்கு அந்தப் பழக்கமில்லை" என்று முகத்தை அருவருப்போடு சுளித்தாள் மனோரமா. என்னதான் கோடீஸ்வரர் சோமசேகர் மேல் நாட்டு நாகரிகத்தில் மூழ்கியவர் என்றாலும், தமிழ்நாட்டுப் பெண்மையைப் பற்றிச் சிறிதும் யோசிக்காமல் கேட்டு விட்டாரே, என்ற கோபம் அவளுக்கு!

"மனோரமாவுக்கு ஒத்திகை' இருக்கிறது. அவள் புறப்படுகிறாள்!" என்றான் நமட்டுச் சிரிப்புடன் செல்லப்பா.

அவனைக் கடைக் கண்ணால் கவனித்த சோமசேகர், "சரி! இன்னொரு தரம் சாவகாசமாகச் சந்திக்கலாம்!" என்று மனோரமாவிற்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு,

தொடர்ந்து இரு பெண்களோடு அரட்டை அடிக்க ஆரம்பித்தார்.

மனேரமாவை, ஹோட்டலின் வெளிவாசல் வரையில் அழைத்துக் கொண்டு போய், வெளியே தயாராய் நின்ற ஒரு வாடகைக்காரில் அவளை ஏற்றி விட்டான் செல்லப்பா.

"விருந்து இன்னும் ரொம்ப நேரம் நடக்குமோ?" என்று கேட்டாள் மனோரமா.

"இல்லை, அரைமணி நேரத்தில் முடிந்து விடும், இம்மாதிரி விருந்துகளில் பத்து மணிக்கு மேல் சோமசேகர் தங்கியிருக்க மாட்டார். சரியாக பத்து அடிக்கும் போது வெளியே தம் காரில் வந்து ஏறி விடுவார்!" என்றான் செல்லப்பா.

செல்லப்பா கூறியது தான் உண்மை, சோமசேகர் பெரிய பணக்காரர் என்று எல்லோருக்கும் தெரியுமே தவிர, அவர் பங்களா எங்கிருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. ஆன்னிமீரா ஹோட்டலில் விருந்து நடக்கும் தினங்களில் மாலை நேரத்திலேயே அவரது காரிய தரிசி ஹோட்டலுக்கு வந்து ஏற்பாடுகளைச் செய்து விட்டு முன் பணமாகவே பூராத் தொகையையும் செலுத்திவிட்டுப் போய்விடுவான். சோம சேகர் விருந்து நேரத்திற்கு அங்கு வருவார். அவர் காரில் போய் ஏறும்பொழுது வழி அனுப்புவதற்காக யாரும் காரிடம் போகக்கூடாது. இந்த நிபந்தனைகளுக்கு எல்லாம், செல்லப்பா கட்டுப்பட்டே இருந்தான். அவனது நாடக கம்பெனி நிர்வாகத்திற்கே, ஒவ்வொரு வாரமும், தபால் மூலத்தான் பணம் வந்து கொண்டிருந்தது. அவன் நேரில் இதுவரை சோமசேகர் பங்களாவிற்குப் போனதே இல்லை. அது எந்தத் திசையில் இருக்கிறது என்பதும் அவனுக்குத் தெரியாது.

மனோரமா மீண்டும் ஒரு முறை தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள் மணி:9—40 ஆகியிருந்தது. "எனக்கு நேரமாகி விட்டது. நான் வருகிறேன்!...ம், இன்னொன்று கேட்க மறந்து விட்டேன்; எனக்குப் புது நாடகத்தின் பாடங்களை நேற்றுக் கொடுத்தார்கள்" என்று செல்லப்பாவிடம் சொன்னாள் மனேரமா.

"எது? "மாயமனிதன்' நாடகப் பாடமா?"

"ஆமாம். அது என்ன ஒரே கிராதகத் தனமாக எழுதப்பட்டு இருக்கிறதே! அதை எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் மனோரமா.

அதை சோமசேகரே தேர்ந்தெடுத்தார். ரொம்பப் பிரமாதமாக அந்த நாடகம் ஓடும் என்கிறார்!" என்றான் செல்லப்பா.

"உங்கள் சோமசேகர் ஒரு விசித்திரமான மனிதர். அவரது ரசனை உணர்ச்சியே வேடிக்கையாக இருக்கிறது!" என்று கூறிவிட்டு மனோரமா டிரைவரிடம், "மினர்வா டாக்கீஸுக்கு ஓட்டப்பா!" என்றாள். கார் புறப்பட்டது.

செல்லப்பா விருந்து நடக்கும் இடத்திற்குத் திரும்பி வந்தான். மணி ஒன்பதே முக்கால் ஆகி விட்டபடியால், எல்லா விருந்தினர்களும் புறப்பட்டு விட்டனர். சோமசேகரும் அந்தப் "பெண் ரௌடி'கள் இருவரும் இன்னும் உற்சாகப் போதையில் மூழ்கிக் கொண்டிருந்தனர். அந்தப் பெண்கள் இருந்த நிலைமை ரொம்பவும் மோசமாக இருந்தது. சோமசேகர் எந்தக் காலத்திலும் நிதானம் தவறாதவர், அன்று குடி மிதமிஞ்சிப் போய்த் தம்மை மறந்து பேச ஆரம்பித்து விட்டார். அவரது நிலையைக் கண்டதும், செல்லப்பா திடுக்கிட்டு விட்டான். கண்டெடுத்த பெரும் புதையல் தன் கையை விட்டு நழுவி விடுவதைப் போலத் துடித்தான். அவசரமாக ஒரு பணியாளை விட்டு, அந்த இரண்டு பெண்களையும் கீழே நின்று கொண்டிருந்த நாடகக் கம்பெனிக் காரில் ஏற்றி அவர்கள் வீட்டுக்கு அனுப்பச் செய்துவிட்டு, "ஹோட்டல் சர்வர்' காதில் ஏதோ கூறினான். அவன் அவசரமாகக் கீழே ஓடிப்போய் ஒரு பச்சை நிற திராவகம் ஒன்றை ஒரு சிறிய கிளாஸில் ஊற்றிக் கொண்டு வந்தான். அதைச் செல்லப்பா வாங்கி, சோமசேகரை அருந்தச் செய்தான். அதைச் சாப்பிட்டுச் சில நிமிஷங்களில், சோமசேகருக்கு போதை தெளிந்தது, அப்பொழுது மணி 9—58. உடனே தமது "ஹாட்டை' (தொப்பியை) எடுத்து தலையில் வைத்துக் கொண்டு புறப்பட்டார். செல்லப்பா அவரைத் தொடர்ந்து வெளியே போகவில்லை. அப்படிப் போவது சம்பிரதாயத்திற்கு விரோதம்.

கீழே சென்ற சோமசேகர், அங்கிருந்து காரில் ஏறிக்கொண்டு, புறப்படும் சமயத்தில் ஒருவன் எங்கிருந்தோ ஓடி வந்தான். அவன் கூதலுக்காக உடம்பை எல்லாம் கிழிந்த கம்பளியால் போர்த்தி மறைத்துக் கொண்டிருந்தான்.

"மிஸ்டர்! உங்களிடம் ஒரு வார்த்தை!" என்றான், அந்தக் கம்பிளி மனிதன். அவன் முகத்தை ஒருமுறை சோமசேகர் ஏற இறங்கப் பார்த்தார். மறு வினாடி "சர்' என்று என்ஜின் அலறிக் கொண்டு கிளம்பியது. காரின் படிக்கட்டில் ஒரு காலும் தரையில் ஒரு காலுமாக நின்று கொண்டிருந்த கம்பிளி மனிதன், தரையில் மரம் போல் விழுந்தான். கார் வேகமாக, "கேட்'டிலிருந்து திரும்பி ரோடை அடைந்தது. அதற்குள் கீழே விழுந்தவன் சமாளித்து எழுந்து காரைப் பின்பற்றி ஓடினான். கார் வெகு வேகமாகப் பறந்து சென்றது. அதைத் தொடர்ந்து அந்த ஆளும் ஓடிக் கொண்டே இருந்தான். கொஞ்ச தூரம் சென்றதும் இருளில் அந்தக் காரும் ஆளும் மறைந்தனர். இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த "அனனிமீரா' ஒட்டல் சிப்பந்திகளுக்கு விநோதமாக இருந்தது. ஏனென்றால் அவர்கள் "சர்வீஸில் இதைப்போன்ற விநோத அனுபவம் அவர்களுக்கு ஏற்பட்டதே இல்லை!'

## *3. கம்பிளி மனிதன்!*

காரைப் பின்பற்றி வந்த கம்பிளி மனிதன் "ஆர்ட்ஸ் காலேஜ்' கட்டடத்தை நெருங்கும் பொழுது, தான் தொடர்ந்து வந்த கார், மௌண்ட் ரோடை விட்டு, காஸினோ தியேட்டர் பக்கம் திரும்புவதைக் கவனித்தான். இப்பொழுது அவனுக்கும் காருக்கும் இடையே உள்ள தூரம் நாலைந்து பர்லாங்குக்கு மேலிருக்கும். இனிமேல் ஓடியும் பிரயோசனம் இல்லை என்ற முடிவோடு, மெதுவாக நடக்க ஆரம்பித்தான்.

கார், மௌண்ட் ரோட்டை விட்டுத் திரும்பிய இடத்தை அடைந்ததும், அவனும் அந்தப் பக்கமாகவே திரும்பி நடந்தான். காரைக் கண்டு பிடிக்கும் உத்தேசம் இப்பொழுது அவனுக்கு கிடையாது. அவனுடைய ஜாகை பொம்மி நாயக்கன் தெருவில் கன்னிமேரி பார்க் அருகில் இருந்தது. ஜாகை என்றால் வீடோ அல்லது அறையோ அல்ல! அது மாதா கோயிலை ஒட்டியிருந்த ஒரு வெளிப்புறத் திண்ணை! அந்தத் திண்ணையில் படுத்து இரவைக் கழித்து விட்டுப், பகல் எல்லாம் ஊரைச் சுற்றி வருவது தான் அவன் வேலை. அவன் பெயர் சங்கர்.

சங்கர் நேராக வடக்கு நோக்கிப் போகும் ரோடு வழியாக நடந்தான். பிரிட்ஜ் ரோடு என்று அழைக்கப்படும் அந்த ரஸ்தாவிலே, பிரம்மாண்டமான ஒரு மாடி வீடு இருந்தது. அந்த வீட்டைச் சுற்றிப் பெரிய காம்பவுண்ட் சுவர் எடுக்கப்பட்டு இருந்தது. அந்த வீட்டின் எதிரே சில வினாடிகள் நின்றான் சங்கர்.

அந்த வீட்டுக்காரருக்கு ஏராளமான பணம் இருந்தது. லேவா தேவித் தொழில் செய்து மேன் மேலும் அதைப் பெருக்கிக் கொண்டே போனார். இவ்வளவு பணம் இருந்தும் அந்த வீட்டுக்காரரான பெரிய கருப்பன் செட்டியார், பாரிசவாயுவால் பீடிக்கப்பட்டு நடக்க முடியாத நிலையில் இருந்தார். மாலை நேரங்களில், அவரை ஒரு தள்ளு வண்டியில் உட்கார வைத்து வேலைக்காரனான பாலு அவரைத் தோட்டத்தில் சுற்றி அழைத்துக் கொண்டு போவான்.

இந்த விவரம் எல்லாம் சங்கருக்கு நன்றாகத் தெரியும், தன்னைப் போல, திடகாத்திரனாய் வாழ்க்கையை நன்றாக அனுபவிக்கக்கூடிய யோக்கியதை உள்ளவனைக் கடவுள் காலணாவுக்கு லாட்டரி அடிக்கவிட்டு விட்டு, பெரிய கருப்பன் செட்டியாரைப் போன்ற நொண்டிக் கிழவனிடம் 'கொள்ளை கொள்ளை'யாகப் பொருளை அள்ளிக் கொடுத்திருக்கிறாரே என்று அவன் நெஞ்சு குமுறியது. அதோடு பெரிய கருப்பன் செட்டியார் மீது அவனுக்கு வேறொரு ஆத்திரமும் இருந்தது, ஒரு நாள் இரவு சங்கர் வேறு முக்கிய வேலையாக அவர் தோட்டததில் நுழைந்தான். அது என்ன வேலை என்று அவன் யாரிடமும் சொல்லத் தயாராக இல்லை. அந்தச் சமயத்தில், மாடியில் படுத்திருந்த பெரிய கருப்பன் செட்டியார் கொஞ்சம் கூடச் சப்தம் செய்யாமல் போலீசுக்கு போன் செய்து, சங்கருக்குத் திருட்டுப் பட்டம் கட்டி, போலீசாரிடம் அவனை

ஒப்புவித்து விட்டார். அதன் பயனாக அவன், சென்னை "பெனிடென்ஷியரி' என்ற சிறைச் சாலையில் ஆறு மாதம் அடைபட்டுக் கிடக்க நேர்ந்தது.

அப்பொழுதும், தான் அங்கு தயங்கி நிற்பதைப் பெரிய கருப்பன் செட்டியார் பார்த்திருப்பாரோ என்ற பீதி சங்கருக்கு ஏற்பட்டது.

உடனே, சட்டென்று திரும்பி, அந்த வீட்டுக் காம்பவுண்டை ஒட்டிக் கிழக்கே போகும் சாமி நாயக்கன் தெருவில் நுழைந்து, தன் "ஜாகை'யை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

சாமி நாயக்கன் தெருவும் பொம்மி நாயக்கன் தெருவும் சந்திக்கும் இடத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் போது இடது புற வரிசையில் இருந்த ஒரு வீட்டு மாடியில் இருந்து, யாரோ பாடுவது இருளின் புலம்பல் ஒலியைக் கிழித்துக் கொண்டு நன்றாகக் கேட்டது. அந்தக் குரலைக் கேட்டதும் சங்கர், பிரமை தட்டிப் போய் அப்படியே நின்று விட்டான்.

ஐயா முதலித் தெருவிலிருந்து, பொம்மி நாயக்கன் தெருவைக் கடந்து, சாமி நாயக்கன் தெருவிலே ஒரு ரோந்து போலீஸ்காரன் வந்து நுழைத்தான். கொஞ்ச தூரம் நடந்ததும் அவனும் மாடியிலிருந்து வந்த பாட்டுச் சத்தத்தைக் கவனித்தான். பாட்டைப் பாடியவன் போதையில் இருக்கிறான் என்பதைச் சுலபத்தில் புரிந்து கொண்டான்.

அந்த மாடி அனறயிலே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வீட்டின் கீழ்த்தளம் ஒரு மோட்டார் ஷெட்; மாடிக்குப் போவதற்த ஒரு படிக்கட்டு இருந்தது. கார்ப்பரேஷன் மின்சார விளக்குகள், அந்த வீட்டிற்குச் சிறிது தூரத்திற்கு அப்பால் இருந்ததால், அந்த இடம் இருட்டாக இருந்தது.

ரோந்து போலீஸ்காரன், தன் கையிலிருநந்த டார்ச் விளக்கை, படிக்கட்டின் பக்கம் அடித்துப் பார்த்தான். படிக்கட்டிலே ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவன் முகத்திலே தாடி முளைத்திருந்தது. காக்கி நிறத்தில் அவன் அணிந்திருந்த சட்டை, பல இடங்களில் கிழிந்திருந்தது. அவன் கட்டியிருந்த வேஷ்டி தண்ணீரைக் கண்டு பத்து நாள் இருக்கும் போலிருந்தது! போலீஸ்காரன் டார்ச்சை அடித்ததும் அவன், இளித்துக் கொண்டே எழுந்து வந்தான்.

"கேட்டியாப்பா அந்தப் பாட்டை! ஆள் 'தண்ணி ஜோர்லெ இருக்கான்! ஏமாளிப்பயல்! இப்படியா குடிக்கிறது? கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே என்னை "தபாச்சுட்டு' தப்பிச்சு வந்தான்... அவனாதான் இருக்கும்! குடி!" என்று அந்தப் போலீஸ்காரனிடம் கூறினான்.

போலீஸ்காரன் அவனை ஏற இறங்கப் பார்த்தான்.

"உன் பேர் என்னடா?"

"சங்கர்!"

"நீயும் "தண்ணி' போட்டிருக்கிறாயா?"

"ஹிஹிஹி!" என்று இளித்தான் சங்கர். இதற்குள் மாடியில் கேட்ட பாட்டோசை நின்று விட்டது. மிகவும் மெதுவான குரலில் ஒரு "ஹம்மிங்' சப்தம் மாத்திரம் வந்து கொண்டிருந்தது.

"உன் கூட்டாளியா, மேலே இருக்கும் ஆள்?"

"தெரியலே. இருக்கலாம். போய்ப் பார்க்கணும்" என்றான் சங்கர்.

போலீஸ்காரன் அவனை முறைத்துப் பார்த்தான். "ஏண்டா உன்னை எழும்பூர் கோர்ட்டிலே ஒரு தரம் பார்த்து இருக்கிறேனே!" என்றான்.

"ஆமாம்"!

"எவ்வளவு நாள் உள்ளே போனே?"

"ஆறு மாசம்!" "சரி! இங்கே எங்கேடா சுத்தறே! இன்னொரு தரம் இங்கே பார்த்தால், உன்னை 'ஸ்டேஷ'னுக்குக் கொண்டு போய் "வளைவு' எடுத்து விடுவேன்!" என்று மிரட்டினான்.

"நான் போகிறேன் சார்!" என்று சங்கர் பொம்மி நாயக்கன் தெருவை நோக்கி நடக்க ஆரம்பித்தான். ரோந்து போலீஸ்காரன் அவன் போவதையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு மேலே நடக்க ஆரம்பித்தான்.

சங்கருக்குத் தன் "ஜாகைக்கு'ப்போய்ப் படுக்கும் உத்தேசம் இப்பொழுது இல்லை. அவன் தூக்கம் எல்லாம் போய்விட்டது. எங்காவது ஒரு பீடித்துண்டு கிடந்தால் அதை எடுத்து "தம்' அடிக்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு! பீடி வாங்க அவனிடம் காசு இல்லை.

ஆகவே எந்த இடத்தில் "வெற்றிலைப் பாக்குக்கடை' திறந்து இருக்கிறது என்று பார்த்து அந்தப் பக்கம் நடந்தான். போகும் பொழுது அவன் மனம் பலவாறாக எண்ணத் தொடங்கியது. அவன் இதைப்போல கஷ்டப்படவே தேவையில்லை. ஏனென்றால் அவனிடம் இப்பொழுது ஒரு பெரிய "ரகசியம்' சிக்கிக் கொண்டு இருக்கிறது. அதைப் போய்ச் சொல்ல வேண்டிய இடத்தில் சொன்னால் அவனுக்கு ஏராளமாகப் பணம் கிடைக்கலாம். இல்லாவிட்டால், அந்த 'ரகசியத்தை' வெளியே சொல்லி விடுவதாக அவனை — அந்தப் பாட்டுப் பாடியவனை — மிரட்டினால் நிறையப் பணம் கறக்கலாம்! ஆம்; அது தான் சரியான யோசனை! இப்படி யோசனை செய்து கொண்டே சங்கர்

நடந்து கொண்டிருக்கும்போது ஓர் இருளான சந்திலிருந்து உருவம் ஒன்று வெளியே வந்தது!

"டேய்!" என்று அதிகாரபூர்வமாக அழைத்தது அந்த உருவம்.

சங்கர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். எதிரில் துப்பறியும் இன்ஸ்பெக்டர் துரைசாமி நின்று கொண்டிருந்தார். "சலாம் சார்!" என்றான் சங்கர்.

"ஏண்டா பிக்பாக்கெட்! எங்கே கன்னக்கோல் சாத்தப் போகிறாய்?" என்று துரைசாமி மிரட்டினார்.

"இல்லை சார்!" என்று முனகினான் சங்கர். அந்தச் சமயத்தில் எங்கோ ஒரு கடிகாரத்தில் மணி ஒன்று அடித்தது.

துப்பறியும் இன்ஸ்பெக்டர் துரைசாமி அவனது சட்டைப்பையில் கையை வைத்துப் பார்த்தார். அவன் மடியைச் சோதனை செய்தார்.

"பாருங்க ஸார்! என் கிட்டே, அரம், திருப்புளி, எதுவும் இல்லெ, ஸார்! நான் அந்தத் தொழிலெ விட்டுட்டேன் ஸார்!" என்றான் சங்கர்.

துரைசாமி அவனை ஏற இறங்கப் பார்த்தார். "இப்பொழுது என்ன தொழில் செய்கிறாய்?" என்றார்.

"கூலி வேலை சார்!" என்றான் சங்கர்.

"ம்...எங்கே — எந்த பிளாட்பாரத்திலே படுக்கை?"

"சிந்தாதிரிப்பேட்டை மாதா கோவில் திண்ணை ஸார்!" என்றான் சங்கர்.

"ம்!" என்று முனகினார் இன்ஸ்பெக்டர் துரைசாமி. திடீரென்று அவருக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. "ஏண்டா ஜெயில்லே உனக்கு யார் கூட்டாளி?"

"யாருமில்லே ஸார்! எல்லோரும் என்னைப் போட்டு நொறுக்கு வாங்க" என்றான் சங்கர்.

இல்லை... இப்பொழுது அரம், திருப்புளி இல்லாமலேயே ரொம்ப "ஸயண்டிபிக்'கா திருடுகிறார்களே, அதைக் கற்றுக் கொண்டிருக்கிறாயோ என்று பார்த்தேன் — ஆனால் உனக்கு அவ்வளவு மூளை ஏது?" என்று துரைசாமி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, எதிரே இருந்த ஒரு வீட்டு மாடியிலிருந்து ஒரு டார்ச்சு வெளிச்சம் வீதி நோக்கி அடிக்கப்பட்டது. உடனே பல மறைவிடங்களில் இருந்து பல போலீஸ்காரர்கள் அந்த வீட்டை நோக்கி வேகமாகப் போனார்கள், துரைசாமியும் அந்த இடத்திற்கு அவசரமாகப் போனார். ஏதோ சூதாடும் கோஷ்டியைப் பிடிக்கப் போகிறார்கள் என்று நினைத்துக் கொண்டு சங்கர் "தப்பித்தோம் பிழைத்தோம்' என சாமிநாயக்கன் தெருவை நோக்கி

நடந்தான். அவன் மனதிலே குறுக்கு வழியில் குபேரனாகும் திட்டம் ஆதிக்கம் பெற்றிருந்தது!

## 4. காதலின் பாதையில்!

மௌண்ட் ரோட், "ரவுண்டாணா'விலுள்ள "மிஸ்டா' ஹோட்டலில், மனோரமாவும், மோகனும் "டீ' சாப்பிட்டு முடிக்கும் பொழுது இரவு மணி 3—30 ஆகி விட்டது. தனது கைக் கடிகாரத்தைப் பார்த்த மனோரமா, திடுக்கிட்டு "அடாடா; இன்றைக்கு உங்களுக்கு ரொம்ப சிரமம் கொடுத்து விட்டேன்" என்று உபசாரமாகச் சொன்னாள். மோகன் லேசாக ஒரு புன்னகை புரிந்தான். அவர்கள் இருவரும் "மினர்வா தியேட்டரில்' "இரவு முத்தம்' என்ற ஆங்கிலப் படம் பார்த்து விட்டுச் சிற்றுண்டி அருந்துவதற்காக, "மிஸ்டா' ஹோட்டலுக்கு வந்தார்கள்.

ஒரு தனி அறைக்குள் இருந்து கொண்டு காதலர்கள் இருவரும் "குசுகுசு'வெனப் பேசினார்கள்.... அவர்கள் மெல்லிய குரல் ஹோட்டலின் இரைச்சலில் வேறு யாருக்கும் கேட்காதபடி இருந்தன.

"மனோரமா! இரவுக் காட்சியாக இருந்தாலும் இரவு முத்தம் சினிமாவிற்கு இன்று அவசியம் நீ வர வேண்டுமென வற்புறுத்தினேனே, அந்த ஆங்கிலப் படம் எப்படி இருந்தது பார்த்தாயா? அதில் வரும் காதலி எப்படி உயிருக்கு உயிராய்க் காதலிக்கிறாள். உம்... காதலன் கொலைகாரன், திருடன் என்பது எல்லாம் தெரிந்திருந்தும், அவன் அவளை ரகசியக் குகைக்கு தூக்கி வந்து அவளுக்கு வரப்போகும் சொத்தைப் பறிக்கத் திட்டமிட்டவன் என்பதை அறிந்த பிறகுங்கூட எட்டி உதைக்கும் உன்னுடைய காலை எடுத்து எப்படி ஆசையோடு முத்தமிடுகிறாள், பார்த்தாயா?"

"நான் அந்தக் காதலியின் ஸ்தானத்தில் இருந்தால், எட்டி உதைக்கும் அவனை நானும் எட்டி உதைத்து விட்டு வந்து விடுவேன்! அவனுடைய ரகசியக் குகையையும், அவன் கொலைகாரன் என்பதையும் போலீஸாரிடம் காட்டிக் கொடுத்திருப்பேன்'... என்று குறும்பாகச் சிரித்தாள் மனோரமா.

அவளை நோக்கி மோகன் ஆசையோடு, "மனோரமா! உன் மீது எனக்கு எவ்வளவு ஆசை தெரியுமா? உனக்காக நான் எதையும் செய்து விடுவேன்!"... என்றான்.

"ஆனால் நம் கலியாணம் நடை பெறாதபடி உங்கள் மாமா பெரிய கருப்பன் செட்டியார் குறுக்கே நிற்கின்றார்..."

"ஜாதி விட்டு ஜாதியில் கலப்பு மணம் புரிந்து கொள்வதை அனுமதிக்க மாட்டாரே தவிர, உன்னை ஆசை நாயகியாக வைத்துக் கொள்ள அந்தப் பெரிய மனிதர்

சம்மதிப்பார்!... நீயும் அவருடைய சொத்தும் எனக்குக் கிடைக்க வேண்டும் என்றால் நான் அப்படித்தான் செய்ய வேண்டும் போலிருக்கிறது. அல்லது..."

"அல்லது அவரை என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்ட மனோரமா, ஆசைநாயகி என்றதும், இப்போது தான் நினைப்பு வருகிறது என்று கூறி, தனக்கு மர்ம மனிதனிடம் இருந்து வந்த மொட்டைக் கடிதத்தைக் காட்டினாள். மோகனின் முகம் அதைப் பார்த்ததும் சவம் போல் வெளுத்தது.

"நம்முடைய ரகசியத்தை வெளியே சொல்லி விடுவதாக மிரட்டிப் பணம் பறிக்க ஒரு காசில்லாதவன் இன்னொரு மொட்டைக் கடிதம் உங்களுக்கும் போட்டிருந்ததாகச் சொன்னீர்களே...?"

"ஆமாம், நான் ஏதோ பெரியகருப்பன் செட்டியாரைக் கொன்றுவிட்டு அவருடைய சொத்துக்குச் சீக்கிரம் வாரிசாகத் திட்டம் தீட்டுகிறேன் என்றும், அதைச் செட்டியாரிடம் சொல்லக் கூடாது என்றால் பணம் தர வேண்டும் என்றும் அந்தப் பயல் எழுதினான்... அவனை...ம்... இனிமேல் அவனைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை."

"ஏன் அவனை என்ன செய்துவிட்டீர்கள்?..."

"ஒன்றுமில்லை!...ம்...!"

பில்லைக் கொடுத்துவிட்டு மோகனும் மனேரமாவும் புறப்படும் பொழுது ஒரு இளைஞன் அந்த ஹோட்டல் படியில் வந்து ஏறினான். மோகனைக் கண்டதும் மனோரமாவைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டே ஒரு புன்னகையோடு "வணக்கம்" என்று கூறினான்.

மோகனும் பதிலுக்கு வணக்கம் செலுத்தினான். அந்த இளைஞன் ஹோட்டலுக்குள் டிபன் சாப்பிடுவதற்கு உள்ளே போய்விட்டான். ஆசை வழியும் விழிகளால் அந்த இளைஞன் தன்னைப் பார்த்தது மனோரமாவுக்குப் பிடிக்கவில்லை. அவன் போனதும், மனோரமா, அவர் யார்? என்ற கேட்டாள்.

"ராமையா என்று பெயர். அவனுக்குப் போதிய சம்பாத்தியம் கிடையாது. இருந்த போதிலும் வீண் சம்பத்திற்காகக் கடன் வாங்கிச் செலவு செய்து கொண்டு திரிபவன். மொத்தத்தில் இவனும் உங்கள் நாடகக் கம்பெனி செல்லப்பா போல ஒரு ஒழிசல்தான்!"

"பாவம்; செல்லப்பா!" என்று அனுதாபம் காட்டினாள் மனோரமா, "அவனைப் போன்ற அயோக்கியர்கள் வெளியே வெள்ளை வேட்டியுடன் நடமாடும் போது, யார் யாரோ ஜெயிலுக்குள் கிடக்கிறார்களே; அது தான் வேடிக்கை" என்று மோகன் சிரித்துக் கொண்டே கூறினான்.

இதற்குள் அவர்கள் இருவரும், "மிஸ்டா' ஹோட்டலின் வெளியே இருந்த பிளாட்பாரத்திற்கு வந்து விட்டார்கள். ஏதாவது ஒரு வாட கைக்கார் வந்தால் அதில் ஏறிக்கொண்டு வீடு போகலாம் என எதிர் பார்த்துக் கொண்டு நின்றார்கள். இந்தச் சமயத்தில் துப்பறியும் இன்ஸ்பெக்டர் துரைசாமி அங்கே வந்து சேர்ந்தார்.

"அடடே! மனோரமா! இந்த அகாலத்தில்...?" என்று ஆரம்பித்தார் துரைசாமி.

"ஒரு ஆங்கிலப் படத்திற்குப் போயிருந்தோம்," என்றான் மோகன்.

"என்ன படம்? அமெரிக்கப் படமா?" என்று கேட்டார் துரைசாமி.

"ஆமாம்; ஒரு மர்மக்கொலை' சம்பந்தமான கதை!"

துரைசாமி ஒரு பெருமூச்சு விட்டார். "இந்த அமெரிக்கப் படங்களே இப்படித்தான். ஓடுகிற ரயிலிலே எப்படிக் கொள்ளை அடிப்பது; ஏரோப்ளேனில் எப்படிக் கொலை செய்வது என்று எல்லாவற்றையும் நவீன—விஞ்ஞான ரீதியிலே செய்து காட்டி — நம் ஊர்த் திருட்டுப் பயல்களுக்குக் கற்றுக் கொடுத்து — நாட்டையும் ஒரு நியூயார்க் நகரமாக மாற்றி விடுவார்கள் போலிருக்கிறது" என்று வேதனையோடு கூறினார்.

"இல்லை, ஸார்! எவ்வளவு புதுமையாகக் குற்றங்கள் புரிந்தாலும் குற்றவாளிகள் கடைசியில் அகப்பட்டு விடுவார்கள் என்ற போதனையைத்தான் அத்தகைய படங்கள் தருகின்றன. அவை நமக்குத் தேவை" என்றான் மோகன்.

இந்தச் சமயத்தில் ஒரு வாடகைக் கார் அந்தப் பக்கம் வந்தது. மோகன் அதை நிறுத்தினான், மனோரமா காரில் ஏறிக் கொண்டாள். மோகன் அவளை வீட்டில் கொண்டு வந்து விட்டு வருவதாகக் கூறினான். மனோரமா வேண்டாம் என்று மறுத்து விட்டாள். இன்ஸ்பெக்டர் துரைசாமி, டிரைவரை எச்சரித்து, "அந்த அம்மாளை ஜாக்கிரதையாக வீட்டில் சேர்க்க வேண்டும்" என்று கூறினார்.

"ரொம்ப நல்ல பெண்!" எனக் கூறிவிட்டு இன்ஸ்பெக்டர் துரைசாமி, "எனக்கு சினிமாக்காரிகள் என்றால் அவ்வளவு பிரமாதமாகத் தோன்றுவது இல்லை. சற்று முன் மூன்று பேரைக் கைது செய்து ஸ்டேஷனுக்கு அனுப்பினேன். அவர்களும் சினிமாக்காரிகள் என்றுதான் சொல்லிக் கொண்டார்கள்!" என்றார்.

"எதுவும் விடுதி" சோதனை நடந்ததா?"

"உங்களிடம் சொல்ல மறந்து விட்டேன் மோகன்! நேற்று உங்கள் "ஒர்க்ஷாப்' பக்கம் வந்தேன். நீங்கள் அங்கே இல்லை! துப்பாக்கி வெடிக்கும் பொழுது சப்தமில்லாமல் செய்வதற்காக நீங்கள் ஒரு "ஸைலன்ஸர்' கண்டு பிடித்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதைப் பார்க்கத்தான் வந்தேன். அது, அமெரிக்க நாட்டு,

ஸைலன்ஸர்'களை விட ரொம்ப மலிவானதாமே!" என்று ஆச்சரியத்தோடு கேட்டார் துரைசாமி.

"உறுதியானதுங் கூட!" என்றான்.

"அந்தப் பையன் ராமையாவைக் கேட்டேன். அவனுக்கு விவரமாகச் சொல்லத் தெரியவில்லை. இதெல்லாம் அவனுக்கு எங்கே விளங்கப் போகிறது!" என்று கூறிவிட்டுத் துரைசாமி, "இதெல்லாம் அமெரிக்காவில் நியூயார்க் நகரத்தில் லட்சக்கணக்கில் விற்பனையாகும்! ஹூம்! நியூயார்க்! வாரத்திற்கு எட்டுக் கொலை நடக்குமாம். ஒரு குற்றவாளி கூட அகப்படமாட்டானாம்" என்று இகழ்ச்சியாகக் கூறினார்.

மோகன் இலேசாகச் சிரித்தான். அவன் சமீபத்தில் தான் அமெரிக்கச் சுற்றுப் பிரயாணம் போயிருந்தான். அங்கு நியூயார்க் நகரத்தில் இந்தக் கொலைகளைப் பற்றி அவன் காதுக்கு எதுவும் எட்டவில்லை!

"காரில் ஆளை ஏற்றிக் கொண்டு போய், நகரத்திற்கு வெளியே சுட்டுக் கொல்லுகிறார்களே அமெரிக்காவில், அப்படிப்பட்ட குற்றம் இங்கே நடக்க முடியுமா?" என்று கேட்டு விட்டு துரைசாமி, "நடக்கவே நடக்காது" என்று தமக்குத் தாமே பதிலையும் சொல்லிக் கொண்டார்.

"சரி; மணி நாலு ஆகிறது; நான் இங்கே இந்தப் பனியில் நின்று கொண்டு, கொலையைப் பற்றி விவாதிக்கத் தயாராக இல்லை. வாருங்கள்; நாம் சிறிது தூரம் நடந்து மவுண்ட்ரோடு போஸ்டாபீஸ் அருகில் போய் ஒரு டாக்ஸி' பிடித்துக்கொண்டு என் வீட்டுக்குப் போகலாம்!" என்று அழைத்தான் மோகன்.

துரைசாமி சிறிது யோசித்தார். பிறகு, "சரி, என் வேலை தீர்ந்து விட்டது. வருகிறேன் ...ம்... அதோ ஒரு "டாக்ஸி' கார் நிற்கிறதே!" என்றார்.

"டிரைவரைக் காணோம்!" என்றான் மோகன்.

காருக்குள் படுத்துத் தூங்குவான்! வாருங்கள், போய்ப்பார்ப்போம்! என்று இன்ஸ்பெக்டர் துரைசாமி காரை நோக்கி நடந்தார். மோகனும் அவரைத் தொடர்ந்து சென்றான். காரை நெருங்கியதும், இன்ஸ்பெக்டர் துரைசாமி காருக்குள் தலையை நீட்டிப் பார்த்தார். யாருமில்லை:

"டாக்ஸி டிரைவரைக் காணோமே!" என்று கூறிவிட்டு வெளியே சுற்ற முற்றம் பார்த்தார். யாரும் இல்லை. எஞ்சின் பக்கம் பார்த்தார். "சுவிட்ச்' சாவி வண்டியில் இருந்தது. சாவியை வைத்து விட்டு அவ்வளவு தைரியமாக வண்டியை அங்கே விட்டுவிட்டு எவன் போவான்?

மெதுவாக பின் ஸீட் பக்கம் உள்ள கதவைத் திறந்தார். யாரோ அங்கே இருப்பது தெரிந்தது. காரின் தளத்தில் படுத்து காலை வீட்டின் மேல் வைத்துக் கொண்டு ஓர் உருவம் கிடந்தது.

பயல் நிறையக் குடித்திருக்கிறான் போலிருக்கிறது! என்று கூறிக் கொண்டே இன்ஸ்பெக்டர் துரைசாமி 'டார்ச்' விளக்கின் வெளிச்சத்தை அந்த உருவத்தின் மீது அடித்தார்.

அந்த உருவத்தின் முகம் தெரிந்தது. ஆனால் அடையாளம் தெரியவில்லை, ஏனென்றால் மிகவும் சமீபத்தில் ரிவால்வரைப் பிடித்து யாரோ அவனைச் சுட்டுக் கொன்றுறா இருக்கிறார்கள். அவன் தலை 'டாப்' எகிறி இருந்தது. இன்ஸ்பெக்டர் துரைசாமி பரபரப்போடு அந்த உருவம் யாரென்று பார்த்தார். அவருக்கு அதைக் கண்டுபிடிக்க வெகுநேரம் ஆகவில்லை. பிணமாகக் கிடந்தது சங்கர் தான்!

"யாரோ காரில் ஏற்றிப்போய் இவனைச் சுட்டுக் கொன்று இருக்கிறார்கள்! அட கடவுளே! இது சென்னையா? நியூயார்க் நகரமா?" என்று, பிரமித்துப் போனார் துப்பறியும் துரைசாமி.

## 5.கொலை செய்தது யார்?

சிறிது நேரத்திற்குள் அங்கு ஒரு கூட்டம் கூடி விட்டது. துரைசாமி டெலிபோன் மூலம் செய்தி அனுப்பிப் போலீஸ் லாரியையும். ஆம்புலன்ஸ் காரையும் தருவித்தார். காருக்குள் கிடந்த சங்கரின் பிரேதத்தைத் தூக்கி ஆம்புலன்ஸில் போட்டார்கள். அப்படிப் போடும் பொழுது காரின் தளத்தில் ஒரு ரிவால்வர் குண்டு கிடப்பதைக் கண்டார்கள்.

உடனே துரைசாமி, "இவனை வெளியே நிறுத்திச் சுட்டிருக்க வேண்டும். பிறகு காரில் தூக்கிப் போட்டதும், உயிர் இருப்பதைப் பார்த்து மீண்டும் சுட்டிருக்க வேண்டும்!" என்றார்.

ஆம்புலன்ஸ் கார், ஜெனரல் ஆஸ்பத்திரியை நோக்கிப் பறந்தது. துரைசாமி டாக்ஸிக்காரைச் சுற்றி வந்து பார்த்தார். அதன் நம்பரைக் குறித்துக் கொண்டு அதைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகும்படி கூறினார்.

டாக்ஸிகாரின் சொந்தக்காரர் யார் என்று கண்டுபிடிக்க வெகுநேரம் அகவில்லை. அதன் சொந்தக்காரரே அதை ஓட்டிக் கொண்டு இருந்தார் என்றும் தெரிய வந்தது. போலீஸ் லாரியை அனுப்பி அந்த டிரைவரை ஸ்டேஷனுக்கு அழைத்து வரும்படிக் கூறிவிட்டு, துரைசாமி நேரே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார். மோகனும் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு தன் இருப்பிடம் சென்றான்.

துரைசாமி ஸ்டேஷனை அடைந்த சிறிது நேரத்திற்கு எல்லாம் டாக்ஸிக்கார முத்துவை போலீஸார் அழைத்து வந்தனர். முத்து நல்ல தூக்கத்தில் இருந்த பொழுது போலீஸார் அவனை எழுப்பி இருக்கிறார்கள். விஷயத்தைக் கேள்விப்பட்டதும் அவன் ஒரேயடியாகக் கலவரம் அடைந்து விட்டான், துரைசாமி முன்னால் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட பொழுதும் அவன் முகத்தில் அளவு கடந்த பீதி தாண்டவ மாடியது.

உள்ளபடியே டாக்ஸி டிரைவர் முத்துவுக்கு இந்த நிகழ்ச்சிகள் எதுவும் தெரியாது. அவன் இரவு ஒரு மணிக்குத் தனது "டாக்ஸி, காரை தன் வீட்டின் முன்னால் நிறுத்திவிட்டு சாப்பிடப் போனான். வழக்கமாகச் சாப்பிட்டதும், கொஞ்ச நேரம் படுத்து உறங்கிவிட்டு, காலை 5—30 மணிக்கு எழுந்து காரை எழும்பூர் ஸ்டேஷனுக்கு ஓட்டிப் போய் யாராவது வாடகைக்கு வருகிறார்களா என்று காத்திருப்பான். இடையில் காரை அவன் "ஷெட்'டுக்குள் விடுவதில்லை. "ஸ்விட்சு' சாவியை, எஞ்ஜினை ஒட்டியுள்ள சிறு அறையில் போட்டு விட்டுத்தான் போவான். ஏனென்றால் சென்னை நகரத்தில் "டாக்ஸி' கார்களைத் திருடும் பழக்கம் அடியோடு கிடையாது. இதே போலத்தான் அன்று இரவும் காரை வீட்டிற்கு முன்னால் நிறுத்தி விட்டுச் சாப்பிடப் போனான். சாப்பிட்டு, தூங்கிக் கொண்டு இருந்தவனைப் போலீஸார் எழுப்பி இருக்கிறார்கள். இந்த விவரங்களை எல்லாம் அவன் சொல்லும் போது துரைசாமி அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். அவன் சொல்வது எல்லாம் உண்மை என்றே அவருக்குப்பட்டது. அதோடு, முத்து காரைக் கொண்டு போய் வீட்டின் முன் நிறுத்தி உள்ளே நுழைந்ததை ஒரு "பீட்' கான் ஸ்டேபிள் பார்த்திருக்கிறான். அதன் பிறகு மீண்டும் 3—மணிக்கு அதே கான்ஸ்டேபிள் அந்த ரோடின் வழியாக வந்த பொழுது கார் நின்று கொண்டிருந்தது என்றும் அக் கான்ஸ்டேபிள் கூறினான்.

ஆகவே 3—மணிக்கு மேல் யாரோ, அந்தக் காரை எடுத்துப் போய் சங்கரையும் ஏற்றிச் சென்று கொலை செய்திருக்க வேண்டும் என்ற தீர்மானித்தார்கள். டிரைவர் முத்துவின் பேரில் சந்தேகம் இல்லாததால் அவனை விட்டு விட்டார்கள். காரில் ஏதாவது ரேகை அடையாளம் இருக்கிறதா என்று துருவிப் பார்த்தார்கள்.

அதுவும் அன்று மாலை நான்கு மணிக்கு இன்ஸ்பெக்டர் துரைசாமி மெல்ல மோகனின் துப்பாக்கி தொழிற்சாலைப் பக்கம் போயிருந்தார். ஓர்க் ஷாப்பின் உள்ளே மோகன் தான் புதிதாக கண்டுபிடித்த "ஸைலன்ஸர்' என்ற கருவியை வைத்து ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தான். பக்கத்திலே, துப்பாக்கிகளும், பிஸ்டல்களும், ரிவால்வர்களும் இருந்தன.

துரைசாமி வருவதைக் கண்டதும் மோகன் அவரை வரவேற்று உபசரித்தான். கொலை சம்பந்தமாக எதுவும் துப்புக் கிடைத்ததா என்று கேட்டான்.

"கொலையுண்டவன் பையில் நூறு ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய ஓரு கத்தை இருந்தது" என்றார் துரைசாமி.

"யார்? சங்கர் பையிலா?"

"அவன் பெயர் சங்கர் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று சந்தேகத்தோடு கேட்டார் துரைசாமி.

இதற்கு மோகன் உடனே பதில் சொல்லவில்லை. பிறகு "இதில் என்ன ஆச்சரியம் என்றால் அவனைப் பார்த்த உடனேயே அவன் யாரென்று எனக்குத் தெரிந்து விட்டது. பல வருஷங்களுக்கு முன் என் மாமா பெரிய கருப்பன் செட்டியாரிடம் அவன் வேலை பார்த்து வந்தான்" என்றான்.

"இதை நேற்றிரவு நீங்கள் என்னிடம் சொல்ல வில்லையே!"

"அந்த உடலை ஆம்புலன்ஸில் தூக்கி ஏற்றும் பொழுதுதான் என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. என் மாமா வீட்டில் ஏதோ திருடிவிட்டான் என்றுதான் அவர் அவனை வேலையை விட்டு விலக்கி விட்டார்."

துரைசாமி ஆமாம் என்ற பாவனையில் தலையை ஆட்டினார்.

"நானும் இன்று காலையில் தான் உங்கள் மாமாவைப் பார்த்தேன் — அவர் உங்கள் மாமாவா? சரியான ஆள்! போலீஸார் என்றால் அவருக்குக் "கிள்ளுக்கீரை' போலிருக்கிறது! எவ்வளவு அலட்சியமாக நடக்கிறார்!" என்றார் துரைசாமி. சாதாரணமாக அவர் யாரிடமும் எந்தவித மரியாதையும் எதிர் பார்ப்பவரல்ல. அவரே அப்படிச் சொன்னால் தன் மாமா ஏதே தாறுமாறாக நடந்து கொண்டிருக்க வேண்டும் என்று மோகன் புரிந்து கொண்டான்.

"அவர் சுபாவமே அப்படித்தான், மனிதத் தன்மையே இருக்காது!" என்றான் மோகன்.

"சங்கர் கொலையைப் பற்றி அவரால் எதுவும் உளவு சொல்ல முடியுமோ என்று பார்த்தேன். அவர், அவன் ஒரு திருட்டுப்பயல் என்றும் முடிச்சுமாறி' என்றும் 'கன்னாபின்னா' வென்று திட்டினாரே தவிர, எந்தவித உருப்படியான தகவலையும் கொடுக்கவில்லை. ஆனால்...' என்று ஏதோ சொல்ல வந்தவர், பேச்சை இடையில் நிறுத்திக் கொண்டு மோகன் வைத்திருந்த "ஸைலன்ஸரை' எடுத்து ஒரு துப்பாக்கியில் பொருத்தி மேலுங்கீழும் தூக்கிப் பார்த்தார் துரைசாமி. பிறகு, "ஹூம்! விஞ்ஞான ஆராய்ச்சி எப்படி வளர்கிறது! சத்தம் இல்லாமல் ஒரு ஜீவனைத் தீர்த்துக்கட்ட ஒரு கருவி! கொலைகாரர்களுக்கு ரொம்ப உபயோகம்!" என்று தமக்குத்தாமே கூறிக் கொண்டு அதைக் கீழே வைத்தார்.

"நேற்று சங்கரைக் கொலை செய்ய உபயோகப்பட்டது, சப்தமில்லாத துப்பாக்கி தானோ?" என்று கேட்டான் மோகன்.

"நிச்சயமாகத் தெரியவில்லை, அது சரி மோகன்! உங்களுக்கும் சங்கருக்கும் ஒரு தடவை ஒரு தகராறு நடந்ததா?"

மோகனின் முகம் சிவந்தது.

"மாமா சொன்னாரா?" "யாரோ சொன்னார்கள்" என்று அலட்சியமாகக் கூறினார் துரைசாமி.

"ஆமாம்! அவனை இந்த "ஒர்க்ஷாப்பில் விட்டு உதைத்து கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினேன். என் மாமாவிடமிருந்து ஏதோ ஓர் அவமானகரமான தகவலைக் கொண்டு வந்தான். அதோடு அதை விடக் கேவலமாக தன் சொந்த அபிப்பிராயத்தையும் சேர்த்து என்னிடம் கூறினான், அதற்காகத்தான் உதைத்தேன்."

துரைசாமி தாம் உட்கார்ந்திருந்த ஆசனத்தை விட்டு எழுந்தார். மெதுவாகத் தம் ஆடையில் ஓட்டியிருந்த தூசியைத் தட்டி விட்டுக் கொண்டார்.

நீங்கள் நேற்று இரவே இதை என்னிடம் சொல்லி இருக்க வேண்டும். எனக்கு அது எவ்வளவோ வேலையை மிச்சப்படுத்தி இருக்கும்!" என்றார், மோகன் அவர் முகத்தையே உற்றுப் பார்த்தான். பிறகு, கீழே வைத்திருந்த "சப்தமில்லாத' துப்பாக்கியை எடுத்து! மீண்டும் ஒரு தடவை துரைசாமி பார்த்தார்.

"இதைக் கொண்டும் அதைச் செய்ய முடியும்!" என்று தமக்குத் தாமே பேசிக் கொண்டார்.

மோகன் உடல் பதறியது. "அப்படியானால், நான் தான் சங்கரைக் கொலை செய்தேன் என்கிறீர்களா?" என்று ஆத்திரமாகக் கேட்டான்.

"நான் அப்படிச் சொல்ல இல்லையே! இதைப் போன்ற சப்தமில்லாத துப்பாக்கியால் தான் நியூயார்க் படு கொலைகள் நடக்கின்றன..." என்று துரைசாமி சொல்லிக் கொண்டே வரும் பொழுது, மோகன் இடைமறித்து. "மிஸ்டர் துரைசாமி! அமெரிக்கக் கொலைகாரர்களைப் பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்குப் பதிலாக, அமெரிக்க போலீஸார் எப்படித் துப்புத் துலக்குகிறார்கள் என்று நீங்கள் தெரிந்து கொள்ள முயன்றால் உபயோகமாக இருக்கும்" என்ற 'சுடச் சுடப்' பேசினான்.

துரைசாமி சிரித்தார். "அவர்கள் துப்பறியும் முறை ரொம்ப சாதாரணமானது. அதில் நான் கற்றுக் கொள்ள வேண்டியது எதுவும் இல்லை" என்று கூறிக்கொண்டே, துப்பாக்கியைக் கீழே வைத்து விட்டு, "நான் வருகிறேன்" என்று புறப்பட்டு வாசலை நோக்கி நடந்தார்.

மோகன், நின்ற இடத்தைவிட்டு அசையாமல், அவர் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவர் தலை மறைந்ததும், "அப்பா இந்த போலீஸ்காரர்கள் இருக்கிறார்களே" என்று அலுப்போடு கூறிக் கொண்டான்.

மோகனை விட்டுப் புறப்பட்ட இன்ஸ்பெக்டர் துரைசாமி, நேராக "கன்னிமேரி பார்க்' பக்கம் வந்தார். "தினக்—கொலை, பத்திரிகையை ஒருவன் விற்றுக் கொண்டு போனான். "காருக்குள் சங்கரன் படுகொலை — புதுத் தடயம்" என்று கத்திக் கொண்டே போனான். தாம் வெளியே வந்த பிறகு ஏதாவது தடயம் அகப்பட்டதோ என்ற பதை பதைப்பில் ஓரணுக் கொடுத்து ஒரு பேப்பரை வாங்கினார். "நூறு ஒரு ரூபாய் நோட்டுகள் கொலையுண்ட சங்கரின் பையிலிருந்தது தான் புதிய தடயம்" என்ற பத்திரிகையில் போட்டிருந்ததைப் பார்த்து ஏமாற்றத்தோடு அதை வீசி எறிந்து விட்டு பஸ் ஸடாண்டை நோக்கி நடந்தார்.

அன்று மாலை 7—மணிக்கு வேப்பேரியில், போலீஸ் அதிகாரிகள் கூட்டம் ஒன்று நடைபெற இருந்தது. சாதாரணமாக அந்தக் கூட்டத்திற்கு துரைசாமி போவது ரொம்பவும் துர்லாபம். இருந்த போதிலும் அன்றைய தினம் சங்கர் "கொலை'யைப் பற்றி விவாதிக்க ஏற்பாடு செய்திருந்தபடியால், துரைசாமி அவசர அவசரமாக "பஸ்ஸில்' ஏறி அங்கு சென்றார்.

வேப்பேரியில் நடந்த கூட்டத்தில், உபயோகமான எந்த உளவும் பேசப்படவில்லை. ஆனால் ஒரே ஒரு தகவல் மாத்திரம் கிடைத்தது. சாமி நாயக்கன் தெருவில், ரோந்து போலீஸ்காரன் சங்கரைப் பார்த்து துரத்திய தகவலை மாத்திரம் சொல்லி இருக்கிறான். ஆனால் சங்கர் ஒரு வீட்டிலிருந்து வந்த பாட்டு சப்தத்தைக் கேட்டு மயங்கி உட்கார்ந்திருந்தான் என்றோ, அப்படி ஒருவன் பாட்டுப் பாடினான் என்றோ அந்தப் போலீஸ்காரன் தகவல் கொடுக்கவில்லை. ஏனோ, அதை முக்கியமற்ற விஷயமாகக் கருதிவிட்டான்.

கூட்டம் முடிந்து துரைசாமி அயர்வோடு ஆபீஸ் அறைக்குச் சென்றார். அவருக்குப் பல தபால்கள் வந்திருந்தன. அவற்றில் ஒன்று சென்ட்ரல் ஸ்டேஷனில் அன்று மத்தியானம் தபாலில் போடப்பட்டிருந்தது. கவர் அழுக்காக இருந்தது. எழுத்தும், படிக்காதவன் கிறுக்கியதைப் போலிருந்தது. அதை பிரித்துப் பார்த்தார்.

உள்ளே ஒரு சிகரெட் பாக்கெட் உறையில், பென்ஷீலால் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது.

"சங்கரைக் கொலை செய்தது யாரென்று உங்களுக்குத் தெரிய வேண்டுமானால், நீங்கள் பிரபாகரைப் பார்த்து நேரில் பேசவும்."

துரைசாமி அந்த அனாமதேயக் கடிதத்தை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு "ஏன் பார்க்கக்கூடாது?' என்ற தம்மைத் தாமே கேட்டுக் கொண்டார். சந்தியா பாங்க் ஏஜண்டான பிரபாகரனைப் பற்றி, துரைசாமிக்கும் புரியாத விஷயங்கள் எவ்வளவோ இருந்தன.

## 6. பெரிய கருப்பன் செட்டியார்

மனோரமா, நாடக நடிகையாகத்தான் காலந்தள்ளி வந்தாளானாலும், எதிர்காலத்தைப் பற்றி அவள் திடமான நம்பிக்கை கொண்டிருந்தாள். என்றாவது ஒரு நாள், தானும் பிரபல சினிமா நட்சத்திரம் ஆகலாம்; அந்தக் காலத்தில், அவளது பெயரையும் உருவத்தையும், ராட்சஸ அளவிலே எழுதி சினிமா முதலாளிகள் எங்கு பார்த்தாலும் தொங்க விடுவார்கள்; அப்பொழுது நாடு முழுவதும் அவளது பெயரையே உச்சரித்துக் கொண்டு, உறங்காமல் தவித்துக் கொண்டு கிடக்கும் என்று எல்லாம் எதிர்பார்த்தாள்.

உள்ளபடியே மனோரமா ரொம்பத் தைரியசாலி. எதிர்காலத்தைப் பற்றிப் பேராசைக்கனவுகள் கண்டு, அவை பலிக்கு மென்று நம்பியவள். அந்த நம்பிக்கையை எந்த விதமான சூழ்நிலையிலும் இழக்காமல் இருந்து வருபவள் இப்படி எல்லாம் அவள் இல்லா விட்டால், பெரிய கருப்பன் செட்டியார் வீட்டை விட்டு வெளியே வந்திருக்கமாட்டாள்.

சென்னையிலுள்ள பலருக்கு, மனோரமா பெரிய கருப்பன் செட்டியார் வீட்டில் சிறு வயது முதல் வேலைக்காரியாக இருந்து வந்தாள் என்றுதான் தெரியும். ஆனால் உண்மை அதுவல்ல. மனோரமாவின் தந்தையும் பெரிய கருப்பன் செட்டியாரும், பதினைந்து வருஷங்களுக்கு முன் கூட்டாக இருந்து, வட்டிக்கடை நடத்தினார்கள். மனோரமாவின் தந்தை, முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர். வியாபாரத்தில் பெரிய புலி என்று பெயர் எடுத்தவர். ஆனால் தம்மை நம்பியவர்களுக்குத் துரோகம் செய்யக் கூடாது என்ற உயர்ந்த பண்பாடு அவருக்கு இருந்தது. அதனால் பெரிய கருப்பன் செட்டியாருக்கு அவர் மேல் அளவு கடந்த நம்பிக்கை, தமக்கு பாரிச வாய்வு வந்து நடக்க முடியாமல் போன பிறகும், அதன் பிறகு 'காமாலை' வந்து கண்பார்வை முக்கால்வாசி மங்கிய பிறகும் பெரிய கருப்பன் செட்டியார் வட்டிக் கடையின் முழுப் பொறுப்பை மனோரமாவின் தந்தையை நம்பி அவரிடம் ஒப்புவித்து விட்டார்.

ஆனால் பத்து வருஷங்களுக்கு முன் எதிர்பாராத விதமாக, மனோரமாவின் தந்தைக்கு விஷ ஜுரம் கண்டது. தான் பிழைக்கமாட்டோம் என்ற நிலை ஏற்பட்டதும், தம்மிடமிருந்த ரொக்கம் எழுபதினாயிரம் ரூபாயையும் மனோரமாவையும் பெரிய கருப்பன் செட்டியாரிடம் ஒப்புவித்து, மனோரமாவுக்கு இருபத்தோரு வயது நிரம்பியதும்

பணத்தை அவளிடம் கொடுக்கும்படி கூறி விட்டு இறந்து போய் விட்டார். அப்பொழுது மனோரமாவுக்கு வயது எட்டு. பிறகு பல வருஷங்கள் — அதாவது போன வருஷம் வரை—மனோரமா, பெரிய கருப்பன் செட்டியார் வீட்டிலேயே இருந்து குடும்ப நிர்வாகத்தை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்தாள். அந்த வீட்டில் அவளைத் தவிர வேறு பெண்கள் கிடையாது. கொஞ்ச நாள் சங்கர் அங்கு வேலை பார்த்தான், பிறகு வேறொருவன் வந்தான். அவனும் அங்கு அதிக நாட்கள் தங்கவில்லை. இப்படிப் பல ஆட்கள் மாறிமாறி வேலைக்கு வருவதும் போவதுமாக இருந்தார்கள்.

மனோரமாவைப் பெரிய கருப்பன் செட்டியார் வளர்த்து வரும் நோக்கத்தைப் பற்றி பலரும் பலவாறாகக் கருதி வந்தனர்.

மனோரமாவுக்குச் சேரவேண்டிய எழுபதினாயிரம் ரூபாய் தம்மிடம் இருப்பது வெளியே தெரிந்தால், எவனாவது அவளைத் தன் வலையில் போட்டுக் கொண்டு பணத்தைத் தம்மிடமிருந்து வழக்குப் போட்டு வசூலிக்கத் தயாராகி விடுவான். கடைசியில் பணத்தைப் பறித்து கொண்டு மனோரமாவையும் அனாதையாகத் தெருவில் விட்டு விடுவான் என்பது பெரிய கருப்பன் செட்டியாரின் எண்ணம். சுளையாக எழுபதினாயிரம் ரூபாய்கள் வட்டியோடு நம்மை விட்டுப் பிரிவதும் அவருக்கு இஷ்டமில்லை. அதனால் மனோரமாவுக்கு ரொக்கப் பணம் தம்மிடம் வரவு இருப்பதை வெளியே சொல்லாமல், மனேரமாவை நாதியற்ற ஒரு வேலைக்காரி போலவே உலகம் கருதும்படித் தம் வீட்டில் வளர்த்து வந்தார்.

மனேரமா சூடிக்கையான பெண் என்றாலும், சிறு வயசு முதலே செட்டியாருக்கு தெரியாமல் நாடகம், சினிமாவிற்குப் போய் வேடிக்கை பார்த்து வருவதில் அதிக விருப்பம் உள்ளவள். அவளுக்குப் பெரியகருப்பன் செட்டியாரின் கருமித்தனமும் கண்டிப்பும் பிடிக்கவில்லை. முக்கியமாக அவருடைய மருமகன் மோகனோடு அவள் நெருங்கிப் பழகுவதைச் செட்டியார் கண்டிப்பதும் தடுக்க முயல்வதும் அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை அவருக்குப் பின் அவரது திரண்ட சொத்திற்கு வாரிசாகக்கூடிய மோகன் ஜாதிவிட்டு ஜாதியில் முதலியார் மகளான மனோரமாவைக் கலப்பு மணம் புரிந்து கொள்ள முயன்றால், தம் சொத்தை எல்லாம் கோயிலுக்கு எழுதி வைத்து விடுவாரோ என்ற எண்ணம் அவளுக்கு இருந்தது. அதோடு தன்னுடைய பிறப்புப் பற்றிய ரிகார்டை மறைத்து விடுவாரோ அல்லது தனக்குத் தந்தை வைத்து விட்டுப் போயிருக்கும் எழுபதினாயிரம் ரூபாயையும் தனக்குக் கிடைக்க முடியாதபடி செலவு கணக்கு எழுதிச் சரிக்கட்டி விடுவாரோ என்ற பயம் அவளுக்கு இருந்தது. பெரியகருப்பன் செட்டியார் இளவட்ட வயசில் பெண் பித்தராக இருந்தார் என்பதும், மூன்று தாரங்களைப்பறி கொடுத்து இத்தனை வயதான பிறகும் நான்காவது தாரமாக இன்னும் ஒருத்தியை மணம் புரிந்து கொள்ளலாமா என்ற சபலம் செட்டியாருக்கு

உண்டு என்பதும், அவளுக்காவது ஒரு குழந்தை பிறக்காதா என்று ஆசைப்படுகிறார் என்பதும், கண்பார்வை மங்கி, பாரிச வாயுவால் கால் முடமாகிக் கிடக்கும் அவருக்கு யாரும் பெண் கொடுக்க முன் வராததால்தான் அந்த ஆசையை அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதும் மனோரமா பல பல சமயங்களில் கேள்விப்பட்ட விஷயங்களாகும். சில சமயங்களில் மனோரமா வீட்டுக்குள் நடமாடும் போது செட்டியார் அவளைப் பார்க்கும் பார்வைகளும் என்னவோ ஒரு மாதிரி அவளுக்குப் பிடிக்காமல் இருந்தன, அவன் காதலிக்கும் மோகனையே கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்றால் செட்டியாரின் வீட்டை விட்டு வெளியேறிச் சுயமாகச் சம்பாதிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருந்தாள். செல்வமாக வளர்ந்த மோகன் ஆனந்தமாக அவளோடு வாழ வேண்டும் என்றால் நிறையப் பணம் தேவைப்படும். செட்டியாரைப் புறக்கணித்து விட்டுப் பிரமாதமாகச் சம்பாதித்து விடலாம் என்று மோகன் ஆரம்பித்திருக்கும் துப்பாக்கித் தொழிற்சாலையோ, ஆரம்ப நிலையானதால் நஷ்ட திசையில் போய்க் கொண்டிருந்ததே தவிர, லாபம் என்பதைச் சமீபத்தில் எதிர்பார்க்க முடியாத நிலையில் இருந்தது. அது லாபம் தரும் காலம் வரை மனோரமாவிடம் பருவம் காத்திருக்குமா என்று தோன்றவில்லை. மேலும் தொழிற்சாலையின் மாதாந்திரச் சம்பள பட்டுவாடாவையும் கஷ்டத்தையும் நிரவல் செய்ய அவனுக்குப் பெருமளவில் பணத்தேவை பெருகிக் கொண்டிருந்தது. மனோரமாவின் மனோரதம் நிறைவேற வேண்டும் என்றால் அவள் சினிமாவில் சேர்ந்து ஏராளமாகப் பணம் சம்பாதித்தால் தான் உண்டு. அவளுக்குச் சிறு வயசு முதலே நாடகம், சினிமா, ரேடியோ, முதலான கலைத துறைகளில் இருந்து வந்த ஆசையாலும், தன்னைக்கண்டு தானே மோகிக்கும் படியாக அவளுடைய அழகான தோற்றத்தை முகம் பார்க்கும் கண்ணாடி அடிக்கடி பிரதிபலித்துக்காட்டி வந்ததாலும், சினிமாவில் சேர்ந்தால், தன்னுடைய நடிப்பு பிரமாதமாகச் சோபிக்கும் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்து வந்தது, லட்சம் லட்சமாகப் பணம் குவித்து விடலாம் என்ற எண்ணமும் வளர்ந்து வந்தது.

சென்ற வருஷம் செல்லப்பா கொடுத்த தைரியத்தில் மனோரமா, துணிச்சலாக, பெரிய கருப்பன் செட்டியார் வீட்டை விட்டு வெளியேறி நாடகக் கம்பெனியில் சேர்ந்து விட்டாள். அதற்காகச் செட்டியார் அவள் மீது ஆத்திரப்படவில்லை. "நீ நாடகக் கம்பெனியில் சேர்ந்து விட்டாய். ஆகையால் உனக்கு இந்த வீட்டில் இடம் கிடையாது. உன் தகப்பன் உனக்கு 21 வயது நிறைந்ததும் உன்னிடம் கொடுக்கும்படி எழுபதாயிரம் ரூபாய் என்னிடம் கொடுத்து வைத்திருக்கிறான். உன்னை வளர்ப்பதில் ஏற்பட்ட செலவுத் தொகை போக அதை அப்பொழுது தான் உனக்குக் கொடுப்பேன்; அதுவரை வருஷத்திற்கு நானூறு ரூபாய் அதன் வட்டியாக உனக்குக் கொடுத்து வருவேன்! அவ்வளவு தான்!" என்று கண்டிப்பாக அவளிடம் சொல்லி விட்டார். ஆகவே

மனோரமா, ஆயிரம் விளக்குப் பக்கமாக ஒரு வீட்டின் மேன்மாடியில் இடம் பிடித்துத் தனியே வசித்து வந்தாள்.

அன்றைய தினம் அதாவது சோமசேகர் விருந்துக்கு அவள் போய்விட்டு வந்த இரண்டாவது நாள்— பெரியகருப்பன் செட்டியாரைச் சந்திக்க, அவர் வீட்டுக்குப் போனாள்.

தனக்குக் கொடுக்கப்படும் நானூறு ரூபாய் போதாது என்றும், இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்பதற்காகத்தான் அங்கு சென்றிருந்தாள். அதைக் கேட்டதும் பெரிய கருப்பன் செட்டியாருக்கு ஆத்திரம் வந்தது. "தர முடியாது!" என்று ஒரே வார்த்தையில் கூறிவிட்டார்.

"என் பணத்திற்கு "அரை வட்டி' வீதம் கணக்கிட்டாலும் வருஷத்திற்கு ஆயிரத்து இருநூறு ரூபாய் ஆகிறதே?" என்று மனோரமா குமுறினாள்.

"அந்தப் பேச்செல்லாம் இங்கு வேண்டாம். அவ்வளவு தான் தர முடியும். உனக்கு இருபத்தொரு வயது வந்ததும் உன் பணத்தை உன்னிடம் வீசி எறிந்து விடுகிறேன். உன்சங்காத்தமே நமக்கு வேண்டாம்" என்று சீறினார் பெரிய கருப்பன் செட்டியார்.

மனோரமா ஒன்றும் பேசாமல் சிலைபோல நின்றாள். திடீரென்று ஏதோ நினைவு வந்தவர் போல் பெரிய கருப்பன் செட்டியார், "ஆமாம் என் மருமகன் மோகன் இருக்கிறானே. அவன் உன் கூடச் சுற்றுகிறானாமே!" என்று கேட்டார். அதைக் கேட்டதும் மனோரமா வந்த ஆத்திரத்தை மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

"அந்தப் பயலுக்கு நான் உயிரோடு இருந்தாலும் சரி, செத்தாலும் சரி செப்புச் சல்லிகூடக் கிடையாது, ஞாபகம் வைத்துக் கொள்," என்றார். அவர் குரலில் அளவு கடந்த வெறுப்பு தாண்டவ மாடியது.

இதற்கு மேல் அங்கே நிற்க, மனோரமா விரும்பவில்லை. மௌனமாக வாயிற்படியை நோக்கி கடந்தாள். செட்டியாரின் பணியாளான பாலு மௌனமாக அவளை வெளிவாசல் வரை தொடர்ந்து வந்தான்.

"கவலைப்படாதீர்கள் அம்மா! அந்தக் கிழவன் காலையிலிருந்து இப்படித்தான் எரிந்து விழுகிறார்! எல்லாம் நாளைக்குச் சரியாகப் போய் விடும்!" எனறு அனுதாபத்தோடு கூறினான். அவன் குரல் தழுதழுத்தது. பாலு ரொம்பவும் இளகிய மனம் படைத்தவன்.

அதை எல்லாம் மனோரமா கவனிக்கவில்லை; பத்து நிமிஷம் கழித்து, டெலிபோன் மூலம் மோகனிடம், தன் ஆத்திர வார்த்தைகளைக் கொட்டினாள். அவன் சமாதானம் சொன்ன பிறகுதான் அவளுக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

பெரிய கருப்பன் செட்டியார் உண்மையிலேயே ஒரு விசித்திரமான மனிதர். யாரையும் ஏமாற்றிச் சம்பாதிக்க வேண்டும் என்றோ மோசம் செய்து விட வேண்டும் என்றோ நினைக்காதவர். ஆனால் தம்மைச் சுற்றியுள்ள மற்ற மனிதப் பிறவிகள் எல்லாம் வடிகட்டிய மடையர்கள் என்றும், அயோக்கியர்கள் என்றும் முடிவு கட்டி வைத்திருந்தார். தம்மிடம் கடன் வாங்க வருபவன் ஒரு முட்டாள் என்பதே அவர் முடிவான எண்ணம்.

"முட்டாளாக இருப்பதால் தான் கடன் வாங்குகிறான், முட்டாளாக இருப்பதால்தான், அவ்வளவு வட்டிக்கு ஒப்புக் கொள்கிறான். முட்டாளாக இருப்பதால் தான் திருப்பிக் கொடுக்கிறான்!" என்பது அவரது முடிவு!

தம்மிடம் கடன் வாங்க வருபவர்களை "அலைகழிக்கும்' கெட்ட வழக்கம் அவருக்குக் கிடையாது. "உண்டு' என்றால், "உண்டு'! "இல்லை' என்றால் "இல்லை'! அவ்வளவுதான். இதனால் அவரிடம் கடன் காரர்களுக்கு ஒரு மரியாதை இருந்து வந்தது. கடன்காரர்களைப் பற்றித்தான் பெரிய கருப்பன் செட்டியார் அப்படிப்பட்ட தாழ்வான எண்ணம் வைத்திருந்தார் என்றால், இன்னும் சிலரைப்பற்றி அவர் இதைவிடக் கேவலமான எண்ணம் வைத்திருந்தார். நியாயமாகத் தம் சொத்துக்கள் எல்லாம் வாரீசாக வர வேண்டிய மோகன் தலைகிறுக்குக் கொண்டு தம்மைப் பகைத்துக் கொண்டு அலைகிறானே; அவன் முட்டாளை விட முட்டாளல்லவா? வீட்டோடு இருந்து ஒழுங்காக வேளா வேளைக்குச் சாப்பிட்டு விட்டு, காலா காலத்தில் கல்யாணத்தை செய்து கொண்டு நிம்மதியாக இருக்க வேண்டிய மனோரமா, முகத்தில் பெயிண்டைப் பூசிக் கொண்டு, காலையும் கையையும் ஆட்டிக் கூத்தாடி, கஷ்டப்பட்டு அலைகிறாளே! அவளை என்ன வென்று சொல்வது?

இந்த இரண்டு முட்டாள்கள் தாம் போகட்டும் என்றால், வேலைக்காரன் பாலு; அவன் மாத்திர மென்ன? அவனும் ஒரு மடையன் தான் என்பது செட்டியாரின் முடிவு.

பாலுவைப் பொருத்த வரையில், பெரிய கருப்பன் செட்டியார், கொஞ்சம் அனுதாபத்தோடு நடந்து கொள்ளலாம். ஏனென்றால் ஆஜானுபாகுவான உடலோடும், வழுக்கைத் தலையோடும், வியர்வை சொட்டச் சொட்ட, வீட்டுக் காரியத்தில் ஒன்று விடாமல் கவனித்துக் கொண்டு அவரைத் தள்ளுவண்டியில் உட்கார வைத்துத் தோட்டம் முழுவதும் தள்ளிக் கொண்டு போய் கடைசியில் அவருக்கு தினசரிப் பத்திரிகைகளை ஒரு வரிவிடாமல் படித்துக் காண்பித்து அவரைத் தூங்கப்பண்ணுவது வரை சிரத்தையோடு கவனித்து வந்தான் பாலு.

பாலுவைப் பொதுவாக செட்டியார் விரும்பினார் என்றாலும் அவன் வீட்டுக்குள்ளேயே சினிமாப் பாட்டுகளை முனகிக் கொண்டே வேலை செய்வது அவருக்குப்

பிடிக்கவில்லை. பாலு ஒரு குஷாலான ஆத்மா. செட்டியாருக்கு இப்பொழுது அவன்தான் பணியாள்.

அந்தரங்க வேலைக்காரன், தூதன், சமையற்காரன், ஸெகரெட்டரி எல்லாம்! "யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்' என்கிறார்களே, அதே போல அவன் விழித்து இருந்தாலும், தூங்கினாலும், அவனுக்கு இப்பொழுது கொடுப்பதைப் போன்று மூன்று பங்கு சம்பளம் கொடுக்கலாம். அவ்வளவு பிரயோஜனமானவன். அவனைக்கூட ஒரு மடையன் என்று தீர்மானித்து விட்டார் என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்!"

பெரிய கருப்பன் செட்டியார் ஏதோ யோசனையாக இருந்தார். அவர் முகத்தில் அதிருப்தியின் சாயைதான் அதிகமாகப்படர்ந்து இருந்தது. திடீரென்று பாலு பக்கம் திரும்பி,

"அந்தப் போலீஸ்காரன் வந்தானா?" என்று கேட்டார்.

"எந்தப் போலீஸ்காரனைக் கேட்கிறீர்கள்?"

"அதுதான்! அந்த "முடிச்சுமாறி' சங்கரைப் பற்றி விசாரிக்க வந்தானே!" என்று சீறினார் செட்டியார்.

"காருக்குள் செத்துக் கிடந்தானே?"

"ஏ மடையா! நான் யாரைப் பற்றிக் கேட்கிறேன் என்று உனக்கு நன்றாகத் தெரியும்!" என்று உறுமினார் செட்டியார். பிறகு "அவனோடு கூட்டுக் கொள்ளை அடிக்கப் போகும் எந்தத் திருட்டுப் பயலாவது அவனைக் கொன்றிருப்பான்! இந்த மாதிரிப் பயல்களுக்கு முடிவு இப்படித்தான் வரும்" என்றார். இதைச் சொல்லி விட்டுக் கொஞ்ச நேரம் பெரிய கருப்பன் செட்டியார் மௌனமாக உட்கார்ந்து இருந்தார். திடீரென்று, பாலுவும் தம்மைக் கொள்ளை அடித்துக் கொண்டு வருகிறானோ என்று அவருக்குச் சந்தேகம் ஏற்பட்டது சாமான்கள் விலைகள் எல்லாம் ஏறிவிட்டது என்று சொல்லி, வீட்டுச் செலவுக்கு வழக்கத்தைவிட அதிகமாகப் பணம் பறித்து வருகிறான். ஒருக்கால் கொள்ளை அடித்தாலும் அடிப்பான் என்றுதான் செட்டியார் நினைத்தார். காலையில் இதைச் சொல்லி அவனை மிரட்டியபோது, அவன் அழுதே விட்டான். இருந்தாலும்?...

இந்தச் சமயத்தில் பாலு, "இன்றைக்கு அருமையாகத் தென்றல் அடிக்கிறது!" என்று இயற்கையை வருணித்தான்.

"சும்மா இருடா!" எனச் "சள்'ளென்று விழுந்தார் பெரிய கருப்பன் செட்டியார். சிறிது நேரம் ஒரே நிசப்தம். பிறகு,

"அந்தக் கழுதை எத்தனை மணிக்கு வருகிறது?" என்று கேட்டார்.

"எந்தக் கழுதை? மனோரமாவா?" என்று சாவதானமாகக் கேட்டான் பாலு.

"அவள்தான் வந்து போய்விட்டாளேடா மடையா!" என்று சீறி விட்டு, "அந்த பாங்க் ஏஜண்ட் பிரபாகரன்! அவனைப் பார்த்து இங்கே வரச் சொன்னாயா, இல்லையா?" என்று ஆத்திரமாகக் கேட்டார்.

"அவர் வருகிற நேரந்தான் இது" என்றான் பாலு. "சரி, சரி; அவன் உன்னிடம் அனுப்பிய கடிதத்தை எடுத்துவா!"

பாலு, மேஜை மீது கிடந்த காகிதங்களை கோழி தானியம் பொறுக்க சீய்ப்பதைப் போல், தள்ளித் தள்ளி கடைசியாக ஒரு லெட்டரைப் பொறுக்கி எடுத்து வந்தான்.

"படி! படி!" என்று எரிச்சலாகக் கூறினார்.

கடிதங்களை அவரால் படிக்க முடியாது. ஏனென்றால் அவர் பார்வை அவ்வளவு கெட்டுப் போயிருந்தது. இருட்டா வெளிச்சமா என்று சொல்ல மட்டும் அவரால் முடியும். வெளிச்சத்தில் எந்த உருவம் நிற்கிறது என்பதைக்கூடச் சரியாக அவரால் நிர்ணயித்துக்கூற முடியாது. தமது படுக்கை அறை, இரும்புப் பெட்டி முதலியவற்றிற்கு பிறர் உதவி இல்லாமல் போகப் பழக்கப்படுத்திக் கொண்டிருந்தார். இந்தப்பார்வை மங்கலால் தான், அவர் வீட்டில் இரும்புப் பெட்டியில் பணமே வைத்துக் கொள்வதில்லை ஆனால் "செக்'கில் மட்டும், கையெழுத்துப் போடுவார். அந்தக் கையெழுத்து சாதாரணமாக நல்ல பார்வையுள்ள ஒருவன் போட்டால் எப்படி இருக்குமோ, அவ்வளவு சுத்தமாக இருக்கும்! இதனால் — அவருக்குப் பார்வை சரியாகத் தெரியாது என்ற விவரம் பலருக்குத் தெரிவதற்கே இடமில்லாமல் போய்விட்டது. அதை மறைத்து வைக்க வேண்டும் என்பது தான் செட்டியாரின் சாட்சியமும்!

கடிதத்தை பாலு படிக்க ஆரம்பித்தான்.

"அன்புள்ள ஐயா,

தங்களை நேரில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்ததற்கு மகிழ்ச்சி அடைகிறேன். காலை 11—மணிக்கு வருகிறேன்.

பிரியமுள்ள
பிரபாகர்"

பெரிய கருப்பன் செட்டியார், ஒரு ஏளனச் சிரிப்பு சிரித்தார். "மகிழ்ச்சி அடைகிறாராமே! ஹும்! அவரை மகிழ வைக்கத்தான் அழைத்தேனா?" என்று வெறுப்பாகக் கூறினார். இந்தச் சமயத்தில், தெருக்கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது.

பாலு எழுந்து வெளியே சென்றான், சில வினாடிகளில் ஒரு நாகரிகமான ஆளோடு உள்ளே வந்தான்.

"பிரபாகர் வந்திருக்கிறார்!" என்றான்.

"உட்காருங்கள் பிரபாகர்! டே! ஐயா உட்காரக் குறிச்சி கொண்டு வந்து போடுடா!" என்றார் செட்டியார். பிறகு "டேய் பாலு! நீ வெளியே போடா! புரிகிறதா! கதவு இடுக்கில் காதை வைத்து ஒட்டுக் கேட்காதே! தொலைத்து விடுவேன்!" என்றார்.

பாலு அறைக் கதவைச் சாத்திக் கொண்டு வெளியே போனான். அவன் முகத்தில் ஆத்திரமோ வருத்தமோ, கவலையோ, எதுவும் தென்படவே இல்லை. அவனைப் பார்த்து, வந்திருந்த நபருக்குச் சிரிப்புக்கூட வந்துவிட்டது.

"ம், பிரபாகர்! நீங்கள் தான் சந்தியா ஏஜண்டோ?"

"ஆமாம்! ஆறுமாதங்களுக்கு முன்பு ஒரு தடவை உங்களைப் பார்க்க முயன்றேன்..."

"எனக்கும் நினைவு இருக்கிறது. நான் என் 'பாங்கர்களைப் பார்க்க விரும்புவதில்லை. எதற்காகப் பார்ப்பது? நான் பணம் போடுகிறேன்! அதை நீங்கள் பாதுகாக்கிறீர்கள்! அதனால் பயனும் அடைகிறீர்கள். அவ்வளவுதான் — அது சரி; என் கணக்கை எடுத்து வந்தீரா ஐயா?"

வந்தவர், தம் கோட்டுப் பைக்குள் கையை விட்டு ஒரு கவரை எடுத்தார். அதிலிருந்த இரண்டு பெரிய நமூனாக்களை எடுத்து "இதோ!" என்று செட்டியாரிடம் நீட்டினார். "எங்கள் சந்தியா பாங்கில் நீங்கள் போட்டு வைத்திருக்கும் பணத்தின் வரவு செலவுகளுக்கு ஸ்டேட்மெண்ட்... அதாவது கணக்கு நகல்!" என்றார் வந்திருந்தவர்.

"நான் அதைப் பார்க்க வேண்டியது இல்லை — இருப்பு எவ்வளவு இருக்கிறது என்று சொல்லுங்கள்!"

"இரண்டு லட்சத்துப் பனிரெண்டாயிரத்து அறுபது ரூபாயும் பதினான்கு பைசாவும் இருக்கிறது."

"ம்" என்றும் கொட்டினார் பெரிய கருப்பன். பிறகு "என் பெயரில் ஷேர்கள் வாங்கி" டெபாஸிட் செய்திருக்கிறேனே அது!"

"மூன்று லட்சத்து முப்பதாயிரம்! தனியாக இருக்கிறது!"

"சரி! உங்களை எதற்காக இங்கு அழைத்தேன் என்று சொல்லுகிறேன்" என்று ஆரம்பித்த செட்டியார் இடையில் நிறுத்திவிட்டு, "கதவைத் திறந்து பாருங்கள்! அந்தப்பயல் ஒட்டுக் கேட்பான்!" என்றார்.

வந்தவர் எழுந்து கதவைத் திறந்து பார்த்து விட்டு, "ஒருவருமில்லை!" என்றார். செட்டியாரின் சந்தேகம் அவருக்கு வேடிக்கையாக இருந்தது.

"ஒருவருமில்லையா? சரி! பிரபாகர்! நான் சொல்ல வேண்டியதைச் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். நான் யாரையும் நம்புவதில்லை. என் 'பாங்கர்'களைக் கூட நம்புவதில்லை! என் பார்வை இப்பொழுது முன் போல் இல்லை. அதனால் கணக்கு வழக்குகளைச் சோதனை செய்வது எனக்கு சாத்தியம் இல்லாமல் இருக்கிறது. ஆனால் ஒரே ஒரு பழக்கம் செய்து வைத்திருக்கிறேன். அதாவது ஒரு தடவை உங்களிடம் என் "இருப்பைக் கேட்டுக் கொண்டால், அதை மனதில் எழுதி வைத்து விடுகிறேன். பிறகு எவ்வளவு பணம் போட்டேன், எவ்வளவு எடுத்தேன் என்பதையும் மனதிலேயே பதிந்து கொள்வேன். மொத்தத்தில் என் மனம் ஒரு கணக்குப் புத்தகத்தின் பேரேடு போல் இருக்கும். என்னை யாரும் ஏய்க்க முடியாது," என்று கூறிவிட்டுக் கொஞ்சநேரம் சும்மா இருந்தார் பெரிய கருப்பன் செட்டியார். பிறகு 'நீங்கள் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு உறுதி இல்லாதவர்களுக்கு உங்கள் பாங்கில் கடன் கொடுப்பதுண்டா?" என்று கேட்டார்.

"இல்லை செட்டியாரே! நாங்கள் அப்படிச் செய்வதில்லை!" சிறிது நேரம் மௌனம் நிலவியது.

"ம்! இந்த மடையன் பாலு, இரண்டு மூன்று நாட்களுக்கு முன் ஒரு செய்தியைப் படித்தான். ஒரு பாங்க் ஏஜண்ட் பாங்கிலிருந்து ஏராளமான ரொக்கத்தைச் சுருட்டிக் கொண்டு கம்பி நீட்டி விட்டானாம்! உள்ளபடியே என் நிம்மதி போய் விட்டது என்று ஒப்புக் கொள்கிறேன். ஏனென்றால், பலர் என் சொத்தைக் கொள்ளை அடித்திருக்கிறார்கள், அடிக்க முயல்கிறார்கள்"

"நீங்கள் பேசுவது—பேசும் முறை அழகாக இல்லை, செட்டியார்!"

"அட சரிதானய்யா! அழகாய்ப் பேச, நான் என்ன தேவடியாளா? உண்மையைச் சொல்லுகிறேன். என்னைக் கொள்ளை அடித்த பயல்களைப் பற்றிச் சொல்கிறேன். சங்கர் என்று ஒரு பகற் கொள்ளைக்காரப் பயல் என்னிடம் வேலைக்கிருந்தான். அவன்தான் காரில் பிணமாகக் கிடந்தானே" என்று ஆரம்பித்த பெரிய கருப்பன் செட்டியார், மகாபாரதம் போலிருந்த அந்த நீண்ட கதையைக் கூறி முடித்துவிட்டு, இவ்வளவு நேரம் கழுதையை விடப் பொறுமையாக அவற்றைச் சகித்துக் கேட்டுக் கொண்டு இருந்த பொறுமை சாலியிடம், "சரி; பிரபாகர்! நீங்கள் போகலாம்!" என்று விடை கொடுத்தார், அந்த வீட்டு வாசற்படியைக் கடக்கும் பொழுது, அந்தப் பொறுமைசாலி', "கோடிப்பொன் கிடைத்தாலும், இந்த ஜோலி நமக்கு வேண்டாம்!" என்று முனகிக்கொண்டே போனார்!

செட்டியார் பாலுவைக் கூப்பிட்டார், அவன் வந்ததும், "ஏண்டா பாலு வந்தானே, அவன் முகம் எப்படியிருந்தது? யோக்கியன் மாதிரி இருந்ததா?" எனக் கேட்டார்.

பாலு ரொம்ப நேரம் யோசித்தான். பிறகு, "சாதாரணமாக இருந்தது!" என்று கூறினான். செட்டியாருக்கு ஆத்திரம் கட்டு மீறி வந்தது. அதை அடக்கிக் கொண்டார். —

"சரி; இன்னும் யார் இன்று என்னைப் பார்க்க வருகிறார்கள்?"

"ராமையா என்ற ஒரு ஆள் வருகிறார்!" "ஓ! ராமையாவா? யாரையோ சொல்லுவது போலச் சொல்கிறாயே! அவன் எனக்குச் "சொளையாக' மூவாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும்! எத்தனை மணிக்கு வருகிறான்?"

"இரவு எட்டு மணிக்கு!"

"இரவு எட்டு மணிக்கா? தீவட்டிக் கொள்ளை அடிக்கவா வருகிறான்?" என்று முனகினார்.

பிறகு பாலுவிடம், "சரி; சரி! கொஞ்ச நேரம் தூங்குகிறேன். என்னைச் சாப்பாட்டு நேரத்திற்கு எழுப்பு" என்றார்.

அன்று மாலை வழக்கம் போல அவரைத் தள்ளு வண்டியில் வைத்து பாலு தோட்டத்தில் தள்ளிக் கொண்டு வந்தான். கொஞ்ச நேரமானதும், பெரிய கருப்பன் செட்டியார் "சரிடா பாலு! பேப்பர் எடுத்து வந்திருக்கிறாயா?" என்று கேட்டார்.

"எடுத்து வந்திருக்கிறேன்" என்றான் பாலு.

"வண்டியை நிறுத்தி விட்டுக் கீழே உட்கார்ந்து படி!"

பாலு, வண்டியை ஒரு மரத்தின் அடியில் நிறுத்தி விட்டுப் பெரிய கருப்பன் செட்டியாருக்கு எதிரிலே ஒரு பாராங்கலில் உட்கார்ந்து படிக்க ஆரம்பித்தான், அது "தின கொலை' பத்திரிகை ஊரிலுள்ள முடிச்சுமாறிகள், விபசாரிகள், ஆகியவர்களைப் பற்றிய விவகாரங்கள் எல்லாம் நிறைய வெளிவரும் பத்திரிகை அது. அதைப் படிப்பதில் பாலுவுக்குத் தனி உற்சாகம். அதைக் கேட்பதில் செட்டியாருக்கும் ஓர் உற்சாகம்.

பாலு படித்துக் கொண்டிருக்கும் போது இடையில் செட்டியார் திடீரென்று கேட்டார்: "டேய் பாலு! அந்த மனோரமா என்ன நெஞ்சு அழுத்தமாகக் கேட்கிறாள் பாத்தியா, அவள் அப்பன் வீட்டுப்பணத்தை! என் ஸ்தானத்தில் இன்னொருவனாக இருந்தால் என்ன செய்திருப்பான் தெரியுமா?"

'நீங்கள் செய்ததைத்தான் செய்திருப்பான்.... அதுதான் நியாயம்!'

"அடே போடா முட்டாப் பய மவனே! பெரிய மனுஷன் மாதிரி பொல்லா நியாயத்தைக் கண்டு விட்டாய்... டே, பாலு..என் ஸ்தானத்தில் இன்னொருத்தன் இருந்தால் அவளுக்கு ஒரு தாலியைக் கட்டித் தன் தாரமாக்கிக் கொண்டு அவளுக்குச் சேர வேண்டிய பணத்துக்கு ஒரு புள்ளையைப் பெத்து வாரீசாக்கி விடமாட்டான்?"

"ஆமாம்! ஆமாம்! அது தான் நியாயம்!"

"சரி வாயை மூடுடா! என்ன சிரிப்பு வேண்டியிருக்கு?" என்று செட்டியார் எரிந்து விழுந்தார். பாலு வாயை மூடிக்கொண்டான். என்னவோ யோசனையில் ஆழ்ந்த செட்டியார் குரலைக் கனைத்துக் கொண்டு, திடீரென்று "டேய்! பாலு! ஓடிப் போய் பெரிய எழுத்து அராபிக்கதை பொஸ்தகத்தை எடுத்து வாடா!" என்றார்,

பாலு ஓடிப் போய் அந்தப் புத்தகத்தை எடுத்து வந்தான்.

"டேய்! நேற்று விட்ட இடத்திலிருந்து கதையைத் தொடர்ந்துபடி! "ம்' — எந்த இடத்தில் கதையை விட்டாய், தெரியுமா?"

பாலு திருதிருவென விழித்தான்.

"அடே, பாழாய்ப் போறவனே! இப்படி ஞாபக மறதியிருந்தால் நீ உருப்பட்டாற் போலத்தான்... நேற்று நீ கதையை எங்கே விட்டாய் தெரியுமா? ராஜகுமாரியைப் பூதம் ஒரு நிலவறையில் அடைத்து வைத்த கதையில்... அதை இன்னொரு முறை படி மண்டுகமே!" என்றார் பெரிய கருப்பன் செட்டியார்.

பூதத்தின் கதையைப் பாலு இன்னொரு முறை ராக ஆலாபனையோடு நீட்டிப் படித்தான்.

செட்டியார் திடீரென்று, "டேய்! பாலு! என்னைப் பூதம் என்று எந்தப் பயலாவது சொல்லுகிறானா?... அது தாண்டா... கேவலம் வீட்டில் வளர்ந்த ஒரு வேலைக்காரியைப் பூதம் மாதிரி நிலவறைக்குள் அடைத்து வைக்க நான் ஆசைப்படுவேன் என எந்த முட்டாள் பயலாவது கதை கட்டிவிடப் பார்க்கிறானாடா?"

"நீங்கள் தான் அப்படி முதன் முதலில் சொல்லுகிறீர்கள்!"

"அந்தத் தறி கெட்ட பெண்ணை விட்டுத் தள்ளுடா— நம்ப ஊர் சுற்றி மோகன் பயல் என்ன செய்கிறான்? மனோரமாவுக்குத் தாலி கட்டலாம்னு இன்னுமா அந்தத் தறதலைப்பயல் நினைத்துக் கொண்டிருக்கிறான்? டேய் பாலு — ஒரு வேலைக்காரிமீது ஆசையிருந்தால் அவளை

ஆசை நாயகியாக வைத்துக் கொள்கிறது தான் ஊர் உலக சம்பிரதாயம். அவளுக்குத் தாலி கட்டுகிறதுக்காகச் சொத்தை இழப்பேன்னு சொல்ற மோகனை விட முட்டாள் பயல் யாராவது உண்டாடா?" எனக் கேட் டார் செட்டியார்.

"தெரியலையே! உங்களை விட்டு நான் எங்கே வெளியே போறேன்? எனக்கு ஊர் உலகத்தைப் பற்றி என்ன தெரியும்?" என்று அழாத குறையாய்க் குறைப்பட்டான் பாலு.

"சரி; முனகாமே பேப்பரை இன்னொரு முறை படியடா!" என்றார் செட்டியார். பாலு படித்துக் கொண்டிருக்கும் போது இடையில், "ஏண்டா பாலு

ராமையா எத்தனை மணிக்கு வருகிறான்?" என்று செட்டியார் கேட்டார்.

"இரவு எட்டு மணிக்கு!"

"சரி! அவன் வரும்போது நீயும் கூடவே இரு! புரிகிறதா? அந்தப் பயல் பொல்லாதவன்—ஆபத்தானவன், என்ன புரிகிறது" என்று சிறிது கலவரத்தோடு கூறினார் செட்டியார்.

"புரிகிறது!" என்றான் பாலு. அவனுக்குத் தூக்கக் கலக்கம்.

"சரி! அந்தக் குப்பையைப் படி!"

பாலு தினப் பத்திரிகையைப் படிக்க ஆரம்பித்தான். அதைக் கேட்ட படி கண்ணை மூடினர் பெரிய கருப்பன் செட்டியார்.

## 7. கடன்காரன் ராமையா!

ஜேவியர் யாரென்று வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டியது அல்வளவு அவசியம் இல்லை. ஏனென்றால் அவன் இந்தக் கதையிலே மிகவும் குறைவாகத்தான் பங்கெடுத்துக் கொள்கிறான், அவ்வளவு குறைவாகப் பங்கு கொண்டாலும் அவனது செய்கையால், ஒரு மனிதனின் மீது தூக்கு மேடையின் நிழல் படா நேர்ந்து விட்டது என்பதை மறுக்க முடியாது.

ஜேவியர் பார்ப்பதற்குப் பெரிய லட்சாதிபதி வீட்டுப் பிள்ளை மாதிரி இருப்பான். எப்பொழுது பார்த்தாலும், "மாப்பிள்ளை'க் கோலம் தான் சென்னையில் உள்ள அயல் நாட்டு வர்த்தகக் காரியாலயம் ஒன்றில் வேலை பார்த்து வந்தான். நகரிலுள்ள எல்லா முக்கிய ஸ்தாபனங்களிலும் அவன் அங்கத்தினன். அவனது அருமைத் தோழன் தான் ராமையா. ராமையாவின் பல அந்தரங்கங்கள் ஜேவியருக்குத் தெரியும். தெருக்கடியான பல சந்தர்ப்பங்களில், ராமையாவுக்கு அவன் யோசனை சொல்லுவது உண்டு.

அன்றைய தினமும், ராமையா அவனுடைய மந்திர ஆலோசனையைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது மாலை ஆறு மணி இருக்கும். "பஸட்டா ஹோட்டலில் அவ்வளவு கும்பல் இல்லை. முன் ஹாலில் உட்காராமல் வழக்கம் போல, உள்ளே இருந்த திறந்த முற்றத்தில், ஒரு பூங்கொடி அருகே கிடந்த ஆசனத்தில் தான் இருவரும் அமர்ந்து தேநீர் அருந்திக் கொண்டு இருந்தார்கள்.

"எட்டு மணிக்கு நான் வருவதாகச் சொல்லி இருக்கிறேன்," என்றான் ராமையா.

"அவன் பெயர் என்ன?' என்று கேட்டான் ஜேவியர்.

"பெரிய கருப்பன் செட்டியார்" என்றான் ராமையா.

"நீ எவ்வளவு கொடுக்க வேண்டும்?"

"இரண்டாயிரம் ரூபாய் தான் வாங்கினேன். வருஷங்கள் பல ஆகிவிட்டதால் மூவாயிரம் ரூபாயில் வந்து நிற்கிறது."

"ரொம்ப நெருக்குகிறானோ?" என்று கேட்டான் ஜேவியர்.

"ஆமாம். கோர்ட்டில் வழக்குப் போடுவதாக மிரட்டுகிறான். கோர்ட்டுக்குப் போனால், இன்றுதான் சமூகத்தில் வகித்து வரும் கௌரவம் என்ன ஆவது?" என்று ராமையா "அழாக்குறையாக'க் கூறினான்.

ஜேவியர் கொஞ்ச நேரம் எதுவும் பேசவில்லை.

பிறகு, "அந்த இரண்டாயிரம் இருந்தால் உனக்குப் போதும்! ஏதோ கொடுத்து விட்டு, தவணை சொல்லிக் கொள்ளலாம். அந்த "சைகோன்'காரன் இரண்டாயிரம் கொடுக்கத் தயாராக இருக்கிறான். அந்த "சின்ன' வேலைக்கு நானாக இருந்தால் அவ்வளவு கொடுக்க மாட்டேன். அவன் தயாராக இருக்கிறான். நான் அவனைத் தடுக்கப் போவதில்லை. உனக்கு அந்தத் தொகை கிடைப்பதில் எவ்வளவோ சந்தோஷம்! ஆமாம்; நீ அந்த வேலையைச் செய்தால் என்ன?" என்று கூறி விட்டு ராமையா முகத்தைப் பார்த்தான்.

ராமையா எங்கோ வான முகட்டைப் பார்த்தபடி உட்கார்ந்து இருந்தான். தான் கேட்ட பணத்திற்கு, ஒரு வேலையைச் செய்யும்படி ஜேவியர் கூறியபோது, தான் ஒரு "கௌரவமானவன்' என்பதை ராமையா மறக்க வில்லை. இப்பொழுது அவனைச் செய்யச் சொன்ன வேலை ரொம்பவும் மனச் சங்கடத்தைத் தரக்கூடியதாக இருந்தது. இருந்த போதிலும் நிலைமை அவ்வளவு நெருக்கடியாக இருக்கிறது. தற்கொலை செய்துக் கொள்வதைத் தவிர, மற்ற எல்லா வழிகளையும் ராமையா முயன்று பார்த்து விட்டான்.

"என்ன இருந்தாலும், அதை நிச்சயம் செய்ய முடியுமா என்று என்னால் சொல்ல இயலவில்லை!" என்று பெருமூச்சோடு கூறினான்.

அந்தச் சமயத்தில் இருவர், பக்கத்திலிருந்த மற்றொரு மேஜையில் உட்கார்ந்தார்கள். இருவரையும் ராமையாவுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதில் ஒரு நபரைப் பார்த்த பொழுது தான் அவன் பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

உடனே ஜேவியர், "அது யார் ?" என்று கேட்டான்.

"அவன் தான் சந்தியா பாங்கிங் கம்பெனியின் சூத்திரக்கயிறு! பிரபாகரன்!" என்றான் ராமையா.

"ஒஹோ!"

"அவன் துப்பாக்கி சுடுவதில் ரொம்பவும் கெட்டிக்காரன் என்று பெயர் வாங்கியவன். கொஞ்சகாலம் 'மிலிடெரி'யில் இருந்தானாம். சமீபத்தில், இரண்டு மூன்று வருஷங்கள் அமெரிக்காவில் போய்த் தங்கி இருந்து விட்டு வந்தான்!" என்றான் ராமையா.

ஜேவியர் 'உச்' கொட்டி, தனக்கு அதில் அவ்வளவு அக்கரை இல்லை என்று காட்டிக் கொண்டான். பிறகு ராமையாவிடம், "சரி; என்ன? நான் சொன்ன விஷயம்?" என்றான்.

ராமையா வேதனையோடு, "நான் அதைப்பற்றி யோசிக்க வேண்டும். ரொம்பவும் மிருகத்தனமான செயலாக எனக்குத் தோன்றுகிறது என்றான்.

"இன்ஸால் வெண்டாகி மிருகமாகத் தெருவில் அலைவதற்குப் பதில் அது எவ்வளவோ மேல்!" என்றான் ஜேவியர். அவன் சொன்னது ராமையாவுக்கு ஓரளவு நியாயமாகவே பட்டது.

"சரி; புறப்படலாம்!" என்றான் ஜேவியர். இருவரும் ஒட்டலை விட்டு வெளியே வந்தார்கள். வரும் வழியில் பிரபாகர், ராமையாவைப் பார்த்து ஒரு புன்னகை பூத்தான். ராமையாவும் பதிலுக்குப் புன் சிரிப்புச் சிரித்து விட்டு நடந்தான்.

வெளியே வந்ததும் ஜேவியர், ராமையாவைத் தட்டிக் கொடுத்து, "தைரியமாகச் செய்!" என்று சொல்லி விட்டு மவுண்ட் ரோடு போஸ்டாபீஸ் பக்கம் நடந்தான்.

ராமையா பக்கத்திலிருந்த ஒரு ரிக்ஷாக்காரனைக் கூப்பிட்டு அதில் ஏறிக் கொண்டான். நேராக மோகனின் துப்பாக்கித் தொழிற்சாலைக்குப் போனான். ராமையா அங்கு போவதற்குச் சில நிமிஷங்களுக்கு முன்னால் தான், மோகன் பக்கத்திலிருந்த ஒரு "ஷாப்புக்குப்' போயிருந்தான். மணி ஏழாகி விட்டதால் தொழிலாளர் யாரும் அங்கு இல்லை. உள்ளே நுழைந்த ராமையா சில வினாடிகள் வாசற்படி அருகில் தயங்கி நின்றான். பிறகு மெதுவாக மோகனின் மேஜைப் பக்கம் சென்றான். மேஜையின் மேல், ஒரு தகரப்பெட்டி இருந்தது. தூக்கிப் பார்த்தான். அதிகமாகக் கனக்கவில்லை. அதை இருந்த இடத்தில் வைத்து விட்டு, அறைக்கதவில் போடப்பட்டிருந்த பூட்டின் சாவியை எடுத்துப் பார்த்தான். பிறகு அவசர அவசரமாக அதைப் படமாக வரைந்து கொண்டான். பிறகு வெளிக்கதவு பக்கம் வந்து, அந்தக் கதவின் சாவியையும் அளவெடுத்துப்

படமாக வரைந்து கொண்டான். அந்தப் பாடங்களைப் பத்திரமாக "கோட்' பைக்குள் வைத்துக் கொண்டான். அந்தச் சமயத்தில் மோகன் வந்து விட்டான்.

"என்ன ராமையா! சௌக்கியமா?" என்று கேட்டான்.

"சௌக்கியம் தான்!" என்றான் ராமையா.

"எங்கே இப்படி?"

"சும்மா பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்!—ம்...நீ தான் இப்பொழுது நம்மைக் கவனிப்பதே இல்லை. உனக்குப் புது "ஜோடி கிடைத்து இருக்கிறது! — ஆனால் அதை எல்லாம் நம்பாதே! நாங்கள் தான் கடைசிவரை சதமாக இருப்போம்!" என்று கிண்டலாக ராமையா பேசினான்.

"நீ யாரைச் சொல்கிறாய்?" என்று புரியாமல் கேட்டான் மோகன்.

"அதானப்பா! மனோரமா!"

"ராமையா! மனோரமாவைப் பற்றிப் பேசாதே!" என்று அமரிக்கையாகக் கூறினான் மோகன்.

"அடேயப்பா! உறவு முற்றி விட்டதோ? அதுதான் நீ என்னை அவளுக்கு அறிமுகம் செய்து வைக்கத் தயங்குகிறாயோ?" என்று மீண்டும் கிண்டல் செய்தான் ராமையா. "மனோரமாவைப் பற்றி மீண்டும் நீ பேச்சு எடுத்தால், நன்றாக இருக்காது; ஜாக்கிரதை" என்று குமுறினான் மோகன்.

"என்ன மிரட்டுகிறாய்?" என்று மீண்டும் கேலி செய்ய முயன்றான் ராமையா.

"மிரட்டவில்லை! உதைப்பேன்!"

"சரி, நமக்கேன் வீண் தகராறு. நான் உன் மாமா பெரியகருப்பன் செட்டியாரைப் பார்க்கப் போகிறேன், எதுவும் தகவல் இருக்கிறதா?"

"ஒரு தகவலும் இல்லை. நீ போகலாம்!" என்றான் மோகன்.

"என்னப்பா; ஒரு நண்பனிடம் பேசுகிறோம் என்பதைக் கூட மறந்து பேசுகிறாயே!" என்றான் ராமையா.

"நீ என் நண்பனா? எந்தக் காலத்தில் நாம் நண்பர்களாக இருந்தோம்? உன்னைக் கண்டால் எனக்குப் பிடிப்பதே இல்லை. உனது வாழ்க்கை முறை, உன் கொள்கைகள், உன் பெண் பித்து, உன் நடவடிக்கை, உன் சகவாசம் எல்லாமே எனக்கு நஞ்சாக இருக்கின்றன. நீ இனி இங்கே வராதே! வேண்டுமானால் என்னை ஒரு எதிரி என்றே நீ பாவித்துக் கொள்ளலாம்" என்று குறுக்குத் தெறித்தாற் போலப் பேசினான மோகன்.

ராமையா ஒன்றும் பேசவில்லை. 'விறு விர'வென்று வெளியே கடந்தான்.

## 8. பிரபாகரின் சம்பந்தம்... ?

'சந்தியா பாங்'கின் பிற்பகல் அலுவல்கள் எல்லாம் முடிந்து ஏஜண்ட் பிரபாகர் வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்ற பிறகுதான் இன்ஸ்பெக்டர் துரைசாமி அங்கே போய்ச் சேர முடிந்தது. அன்று அவருக்கு நிறைய வேலை இருந்தது. பல இடங்களில் போய், பலரைப் பார்த்துப் பேச வேண்டி இருந்ததால், பாங்க் மூடுவதற்கு முன் அங்கு வர இயலாமல் போய்விட்டது.

சென்னை நகரத்திலே, எந்தத் துறையில் பிரபலமடைந்த நபராக இருந்தாலும் சரி; அவரைப் பற்றிய 'ஜாதகக் குறிப்பு' இன்ஸ்பெக்டர் துரைசாமியிடம் இருக்கும். யாரைப்பற்றி அவர் அவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறாரோ, அந்த பேருக்கே, "இன்ஸ்பெக்டர் துரைசாமி' தன்னைப் பற்றி அவ்வளவு தூரம் தெரிந்து வைத்திருக்கிறார் என்ற விபரம் தெரியாது! இந்த நாகரிக காலத்தில், அநேகமாக எல்லோருக்குமே ஓர் அளவு மனச்சாட்சியை மறந்து நடக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்டு விடுகின்றன. மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் பொழுது அவர்கள் — பெரிய மனிதர்களாகக் காட்சியளித்தாலும் உள்ளுக்குள் சில விஷயங்கள் மறைக்கப்பட்டுக் கிடக்கும். அப்படி மறைக்கப்படும் விஷயங்களில், "சமூகத்துரோக'மான செயல்கள் என்னென்ன இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து "ரெகார்டு' செய்து வைத்துக் கொள்வது இன்ஸ்பெக்டர் துரைசாமியின் வழக்கம்..

"சந்தியா பாங்'கிலிருந்து பிரபாகர் குடியிருக்கும் வீட்டிற்குப் போகும் வழியில் தான் பெரிய கருப்பன் செட்டியாரின் பங்களா இருக்கிறது. அதைத் தாண்டி துரைசாமி போகும் பொழுது தன்னை நோக்கி பாலு வேகமாக நடந்து வருவதைப் பார்த்துச் சிறிது நின்றார். பாலுவை இதற்கு முன் அவர் பார்த்துப் பேசியிருக்கிறார். பிறரைப் பற்றி அவதூறான விஷயங்களையும் வதந்திகளையும் சேகரிப்பதில் அவன் நிபுணன் என்று அவருக்குத் தெரியும். அவன் சொல்லும் கதைகளில் முக்கால் வாசி கப்ஸாவாக இருக்கும் என்றும் துரைசாமி அறிவார். ஆனால், "சந்தியா பாங்க' ஏஜண்டான பிரபாகரிடம் அவன் ஒரு காலத்தில் வேலை பார்த்தான் என்று துரைசாமி கேள்விப்பட்டிருந்தார். ஆகவே அவனை ஏதாவது கேட்டுப் பார்க்கலாம் என்றுதான் நின்று கொண்டிருந்தார்.

பாலு நெருங்கியதும், "என்னப்பா?" என்றார்.

"இல்லை; இந்தப் பக்கமாகப் போகிறீர்களே; ஏதாவது விசேஷம் உண்டோ என்று கேட்கத்தான் ஓடி வந்தேன்" என்றான் பாலு.

"அது சரி; உனக்கு சங்கரைத் தெரியும் என்று சொன்னாய் அல்லவா?"

"நான் இங்கே வேலைக்கு வருமுன், அவன் இந்த வீட்டில் வேலை பார்த்து வந்தான!" என்றான் பாலு.

"இங்கு நீ வருவதற்கு முன், எங்கே வேலை செய்து கொண்டிருந்தாய்?"

"பிரபாகரிடம்."

"ம்— பிரபாகர் ஆள் எப்படி? நல்ல மனிதனா? தாராள மனதா? —செலவாளியா?— எப்படி?" என்று கேட்டார் துரைசாமி.

இந்தக் கேள்விக்கு, பாலு உடனே பதில் சொல்லவில்லை. தான் சொல்லப் போகும் பதிலில் தான் தன் வாழ்வே அடங்கியிருக்கிறது என நினைத்தவன் போல ரொம்ப நேரம் சிந்தித்தான்.

"அவர் நல்ல மனுஷன் — ஒரு பெரிய மனுஷன்— அப்படித்தான் என்னால் சொல்ல முடியும். நான் நாலு மாதந்தான் அவரிடம் வேலை பார்த்தேன்! அவர் பங்களாவைக் கூட தம் தோட்டத்தில் இருந்து பார்க்கலாம்!"

Dreamzzz

"நடத்தை எப்படி?" என்று கேட்டார் துரைசாமி.

"நடத்தை ஒன்றும் மோசம் என்று சொல்ல முடியாது. இதற்கு முன் அவர் சினிமாக்காரர், நாடகக்காரர்களை எல்லாம் அழைத்து விருந்து கொடுப்பார். அதுவும் நின்று போய் விட்டது. அவர் பணம் எல்லாம் தொலைந்ததும், இதை எல்லாம் நிறுத்தி விட்டார்' என்றான் பாலு.

"பணம் தொலைந்து விட்டதா? அவர் பாங்க் ஏஜண்ட் தானே? அவருக்குச் சொந்தப் பணம் எதுவும் இருந்ததா?" என்று வியப்போடு கேட்டார் துரைசாமி,

"அது அவர் சொந்தப் பணம் சார்" என்று திடுக்கிட்டுப் போய் பாலு கூறினான். தான் பேசியதால் ஏற்படக் கூடிய தப்பபிப் பிராயத்தைப் போக்குவதற்காக, அவர் சொந்தத்தில் இருந்த பணத்தைக் கொண்டு வேறொரு பாங்கில் "ஷேர்'கள் வாங்கியிருந்தார். அந்தப் "பாங்க்' நொடித்து விட்டது. அதனால் தான் என்னை எல்லாம் வேலையை விட்டு நிறுத்தி விட்டார்" என்றான்.

"கலைஞர்களை அழைத்து விருந்து கொடுப்பார் என்றாயே; எப்படிப்பட்ட விருந்து? இப்பொழுது ஒரு ஆள் —அவன் பெயர் என்ன?—கோடீஸ்வரர் சோமசேகர் தானே— அன்னிமீரா ஹோட்டலில் கொடுக்கிறானே விருந்து அதைப் போல, "மது வகைகளோடு விருந்தா?" என்று கேட்டார் துரைசாமி.

பாலு சஞ்சலத்தோடு சுற்றிலும் திரும்பிப் பார்த்தான். எப்படியாவது தப்பித்து ஓடினால் போதும் என்ற நிலையில் இருந்தான்.

"எங்கேயாவது அவசரமாகப் போகிறாயா?" என்று கேட்டார் துரைசாமி.

"ஆமாம் ஐயாவுக்குச் சாப்பாடு போட வேண்டிய நேரம் இது!" என்று புளுகினான் பாலு. துரைசாமி அப்பொழுதும் விடவில்லை.

"பணக்காரர்களுக்குத் தான் பசிக்காது என்கிறார்களே; உங்கள் பெரிய கருப்பன் செட்டியாருக்கு மாத்திரம் அதற்கு உள்ளாகவா பசி வந்து விடும்? அது போகட்டும், அந்தக் கொலையுண்ட "சங்கர்' பிரபாகரிடம் வேலை பார்த்தானா?"

"எனக்குத் தெரியாது ஸார்—ஆங்; இன்னொன்று சொல்ல மறந்துவிட்டேனே. பிரபாகர் இன்று ராத்திரி 9—15 மணிக்கு ரேடியோவில் பிரசங்கம் செய்யப் போகிறார். பேப்பரில் போட்டிருக்கிறது" என்று பேச்சை வேறு வழியில் திருப்பினான் பாலு. இருந்த போதிலும் துரைசாமி விடாமல், சங்கரைப் பற்றி அவனிடம் பல கேள்விகள் கேட்டு விட்டு, பிரபாகர் வீட்டை நோக்கி நடந்தார். பாலு சொல்லிய படி, பிரபாகர் வீடு செட்டியார் வீட்டுக்கு நேர் பின்புறமாக, சாமி நாயக்கன் தெருவில் இருந்தது.

பிரபாகர் குடியிருந்த வீடு "பங்களா டைப்பில்' அழகாகக் கட்டப்பட்டிருந்தது. சிறியதாக இருந்தாலும் சுற்றிலும் காம்பவுண்ட் எடுத்து அழகிய பூந்தோட்டம் அமைக்கப்பட்டிருந்தது. பார்வைக்கு ஒரு கவர்ச்சியும், கம்பீரமான தோற்றமும் கொண்டிருந்த அந்த வீட்டுக்கு மாதம் நூற்றைம்பதுக்குக் குறையாமல் வாடகை வாங்குவார்கள் என்று நினைத்தார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

துரைசாமி வீட்டிற்குள் நுழையும் பொழுது, பிரபாகர் ஸ்னாணம் செய்து கொண்டிருந்தார். வேலைக்காரப் பையன் ஒருவன் அவரை ஹாலில் கிடந்த சோபாவில் உட்காருமாறு கூறினான். துரைசாமி அங்கு உட்கார்ந்து ஹாலின் அமைப்பைக் கவனித்தார்.

ஹால் ரொம்ப விசாலமாக இருந்தது. தரையில் ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. சோபா ஸெட்டுகள் ஏராளமாகப் போடப்பட்டிருந்தன. பிரமாண்டமான "மாஸ்டர் வாய்ஸ்' ரேடியோ ஒன்று ஒரு புறம் வைக்கப்பட்டு இருந்தது. ஹாலில் பெரிய பெரிய சித்திரங்கள், சட்டம் போட்டுத் தொங்க விடப்பட்டிருந்தன. இவற்றைத் தவிர ஒரு கண்ணாடி பீரோவில் அபூர்வமான தங்கச் சாமான்களும் வெள்ளி உருவங்களும் வைக்கப்பட்டிருந்தன. பார்ப்பதற்கு, ஒரு மகாராஜா வீட்டு ஹாலைப் போல இருந்தது அது!

ஹாலில் இருந்த சாமான்களே பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் இருக்கும் என்று நினைத்தார், துரைசாமி. சாதாரணமாக ஒரு பாங்க் மானேஜருக்கு என்னசம்பளம் இருக்குமென்று துரைசாமிக்குத் தெரியும். அப்படிப்பட்ட ஒருவர் மாதம் 150 ரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டு ராஜபோக வாழ்க்கை நடத்துகிறார் என்றால்? பிரபாகருக்கு பணம் ஏது? எங்கிருந்து வருகிறது?

இப்படி எல்லாம் துரைசாமி மண்டையைக் குழப்பிக் கொண்டிருக்கும் போது, பிரபாகர் குளித்து விட்டு உள்ளே நுழைந்தான்.

"மிஸ்டர் துரைசாமி!" என்று ஆச்சரியத்தில் கூறி விட்டு, "ஏது அத்தி பூத்தது போல வந்திருக்கிறீர்கள்!" என்று வரவேற்றான்.

"இப்படி சும்மா வந்தேன்!—ம்... உங்கள் வீடு ரொம்ப நேர்த்தியாக இருக்கிறது!" என்று கூறிய துரைசாமி தொடர்ந்து "அழகுக்கு அழகு செய்தது போல நீங்கள் ரொம்ப அலங்காரம் செய்தும் வைத்திருக்கிறீர்கள்" என்றார்.

"என்னவோ" என்று அலட்சியமாகக் கூறிவிட்டு பிரபாகர் சுவரில் தொங்கிய ஒரு ரவி வர்மா படத்தைச் சுட்டிக் காட்டினான். அந்தப் படம், "கான் வாஸ்' துணியில் "ஆயில்' பெயின்டினால் எழுதப்பட்டிருந்தது. "இந்தப்படம் ரவிவர்மா கையால் எழுதியது. இதற்கு ஆயிரத்தைந்நூறு ரூபாய் விலை கொடுத்து, விட்டல்புரம் இளவரசியிடம் இருந்து என் தந்தை வாங்கினார். இப்பொழுது பதினாயிரம் கொடுத்தாலும் கிடைக்காது" என்றான் பிரபாகர்.

"ஏன் பிரபாகர், உங்கள் அப்பா பெரிய பணக்காரரோ?" என்று சட்டெனக் கேட்ட துரைசாமியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான் பிரபாகர்.

"அவரிடம் பணம் இருந்தது!— ஆமாம், எதற்காக இந்தக் கேள்வியைக் கேட்டீர்கள்? எனக்குக் கிடைக்கும் முன்னூறு ரூபாய் மாதச் சம்பளத்தில், அதை எல்லாம் வாங்கியிருப்பேன் என்று நினைத்திருக்க மாட்டீர்கள்! அப்படி நினைத்தீர்களா?" என்று சொல்லி விட்டுச் சில வினாடிகள் மௌனமாக அவரையே பார்த்தான். மறுபடியும் அவன் தொடர்ந்து, "அல்லது இந்தச் சாமான்களை எல்லாம் வாங்க, பாங்க் பணத்தில் கொள்ளையடித்து இருப்பேன் என்ற சந்தேகப்பட்டீர்களா?" என்று கேட்டான். அவன் அதைக் கேட்ட "தொனி' ஒரு மாதிரியாக இருந்தது.

இன்ஸ்பெக்டர் துரைசாமி பதட்டமில்லாமல் பதில் சொன்னார். "மிஸ்டர் பிரபாகர்! அப்படிப்பட்ட சந்தேகம் எதுவும் இதுவரையில் என் மனதில் ஏற்படவில்லை!"

"சரி, மிஸ்டர் துரைசாமி! நீங்கள் எதுவும் வேலை இல்லாமல் சும்மா வரமாட்டீர்கள். என்ன விசேஷமாக என்னைத் தேடி வந்தீர்கள்? சொல்லுங்கள்," என்று

நேரடியாகத் தாக்க ஆரம்பித்தான்.

துரைசாமி யோசனையோடு தம் உதட்டை மடித்துக் கொண்டார். பிறகு, "சங்கர் கொலையுண்டது பற்றி நான் விசாரணை நடத்திக் கொண்டு வருகிறேன!" என்று முடிக்கும் முன் பிரபாகர் இடைமறித்து, ஒகோ, அவனை எனக்குத் தெரியுமா என்று கேட்கிறீர்களா? தாராளமாகத் தெரியும். அவன் ஒரு அட்டை மாதிரி, நான் தினமும் வீட்டை விட்டு வெளியே கிளம்பும் போது பங்களாவின் கேட் அருகில் என்னிடம் எதையோ சொல்ல விரும்புபவனைப் போலத் தவித்துக் கொண்டு நிற்பான். ஆனால் அவன் எதைச் சொல்ல விரும்பினான். என்று நான் தெரிந்து கொள்ளவில்லை என்றான். இதைச் சொல்லும் பொழுது அவன் பேச்சில் ஒரு படபடப்புக் காணப்பட்டது. அவன் குரல் ஒரு பெரிய மனிதன் குரல் மாதிரி இல்லாமல், கொஞ்சம் தாழ்ந்த பண்பாடு உள்ளவன் குரல் போல முரட்டுத்தனமாக இருந்தது. பார்க்கப் போனால், பிரபாகர் எளிய நிலையில் இருந்து, மேலே வந்தவன் என்பது துரைசாமிக்கு நன்றாகத் தெரியும். ஆகவே ஆத்திரமாகப் பேசும் பொழுது அவனது சுயஉருவம் வெளிப்பட்டு விடுவது இயற்கை என்றே அவர் நினைத்தார்.

அதே முரட்டுக் குரலில் பிரபாகர், "கொலை செய்தது நான் என்று நினைக்கிறீர்களா?" என்று ஆத்திரமாகக் கேட்டான்.

இதற்குத் துரைசாமி பதில் சொல்லவில்லை. ஒரு புன் சிரிப்பு சிரித்துக் கொண்டார், அதன் அர்த்தம் என்னவென்று பிரபாகருக்குப் புரியவில்லை.

"மனோரமாவை உங்களுக்குத் தெரியும். இல்லையா?"

"சுமாராகத் தெரியும்! ஏன் கேட்கிறீர்கள்?"

"இல்லை.... நீங்கள் நடிகர்களுக்கு எல்லாம் விருந்து வைப்பீர்களாமே?"

"அது ஒரு காலம். நான் நன்றாக இருந்த சமயம் அது!"

"ஒஹோ!" என்று கூறிவிட்டு துரைசாமி மௌனமாக இருந்தார். பிரபாகர் நிம்மதியில்லாமல் எழுந்து ஹாலில் குறுக்கும் கெடுக்குமாக நடந்தான்.

"நீங்கள் எதற்காக வந்தீர்கள் துரைசாமி? என்னை அந்தக் கொலையோடு சம்பந்தப்படுத்த முயல்கிறீர்களா? அந்தத் தெருநாயின் கேவலமான சாவுக்கு நான் காரணம் என்று முடிவு கட்டுகிறீர்களா?" என்று பதறினான்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி "இல்லை' என்பது போல் தலையை ஆட்டினார்.

"பிறகு ஏன் என்னைக் கேள்விமேல் கேள்வியாகக் கேட்கிறீர்கள்? தயவு செய்து சொல்லுங்கள். எதற்காக இந்த மர்மம்?" என்று தவித்தான் பிரபாகர்.

துரைசாமி தன் ஆசனத்திலிருந்து எழுந்தார்: "மிஸ்டர் பிரபாகர்! அதை உங்களுக்குத் தெளிவாகவே சொல்லி விடுகிறேன். எங்களுக்கு ஒரு அனாமதேயக் கடிதம் வந்தது. அதில் சங்கர் மரணத்தைப் பற்றி நீங்கள் எதுவும் சொல்லக்கூடும் என்று எழுதி இருந்தது!" என்றார்.

"நான் சொல்லக் கூடுமென்றா? எனக்கு அவனைத் தெரியவே தெரியாதே!" என்று பதட்டத்தோடு கூறினான் பிரபாகர்.

"உங்களுக்கு பெரிய கருப்பன் செட்டியாரைத் தெரியுமா?"

"தெரியும். அவர் எங்கள் பாங்கில் தான் கணக்கு வைத்திருக்கிறார்."

"சமீபத்தில் அவரை எப்பொழுது பார்த்தீர்கள்?" பிரபாகர் சிறிது யோசித்தான். பிறகு "சமீபத்தில் அவரைப்பார்க்க வில்லை. பார்த்து ஒரு வருஷத்திற்கு மேலிருக்கும்!" என்றான்.

"ஓ!" என்றார் துரைசாமி. அதற்குமேல் அவரால் எதவும் பேச முடியவில்லை. அதனால், "ஓ" என்று நிறுத்திக் கொண்டார். பிறகு சமாளித்துக் கொண்டு "சரி; நான் போய் வருகிறேன். சிரமத்திற்கு மன்னித்துக் கொள்ளுங்கள். நமது தேசத்திலேயே சென்னை ராஜ்ய போலீஸ் தான் திறமை வாய்ந்தது என்று "மெயில்' பத்திரிகையில் செய்தி வந்ததைப் பார்த்திருப்பீர்கள். வருகிறேன்" என்று கூறிவிட்டு "சர்'ரென்று வெளியே போய் விட்டார் துரைசாமி. துரைசாமி போன பிறகு வெகுநேரம் வரையில் பிரபாகர் யோசனையோடு உட்கார்ந்திருந்தான். பிறகு ஹாலில் மாட்டியிருந்த ஒரு படத்தைக் கழட்டினான். அதன் மறைவிலே ஒரு சுவரையொட்டி இரும்புப் பெட்டி இருந்தது. அதைத் திறந்து அதிலருந்த பல தஸ்தாவேஜுகளை எடுத்துப் பார்த்தான். அவற்றைத் தவிர இதில் வெளிநாடு செல்ல பாஸ்போர்ட்டும் விமான டிக்கட் ஒன்றும் இருந்தன. அதோடு ஒரு கவரில் ஆயிர ரூபாய் நோட்டுகள் நூறு கட்டி வைக்கப்பட்டிருந்தன. எல்லாவற்றையும் மீண்டும் இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டி விட்டு படத்தையும் எடுத்து மாட்டினான். அவன் மனம் ரொம்பவும் குழம்பியிருந்தது. பெரிய கருப்பன் செட்டியார் பேச்சை துரைசாமி எடுத்துப் பேசியது. அவனை ஆட்டங்காணச் செய்தது!

## 9. பிடித்துத் தள்ளு!

அன்றிரவு ஏழரை மணிக்கு, சாப்பாட்டை முடித்துக் கொண்டு. பெரிய கருப்பன் செட்டியார், வழக்கமாக உட்காரும் ஆசனத்தில் வந்து அமர்ந்தார்.

"டேய் பாலு!"

பாலு அடுக்களையிலிருந்து மேலே ஓடிவந்தான். "பாலு இன்றைக்கு ரேடியோவில் என்னடா "புரோக்கிராம்' இருக்கிறது?" என்று கேட்டார் செட்டியார்.

பாலு "புரோக்கிராம்' எல்லாம் படித்துக் கொண்டே வந்தான். கடைசியில் 9—5 மணிக்கு இந்திய லேவாதேவி முறை—ஆங்கிலத்தில் பேச்சு; ஸ்ரீ பிரபாகர் என்ற இடத்திற்கு வந்ததும் செட்டியார் கவனித்தார்.

"பிரபாகர்! நேற்று என்னைப் பார்க்க வந்தானே, அவனா?" என்று அலட்சியமாகக் கேட்டார் செட்டியார்.

"ஆமாம்!" என்றான் பாலு.

"லேவாதேவி முறை, ஹஹ்ஹஹ்ஹா!" என்று விழுந்து விழுந்து சிரித்தார் செட்டியார். அதைப்பற்றி பிரபாகர் பேசப் போகிறார்! மீண்டும் விழுந்து விழுந்து சிரித்தார்.

"டேய் பாலு'

"ஐயா?"

"நான் அதைக் கேட்கப் போவதில்லை!—புரிந்ததா?— நான் அதைக் கேட்கப் போவதில்லை, என்ன!" என்று அதட்டினார் செட்டியார். "நீங்கள் அதைக் கேட்கப் போவதில்லை!"— என்று திருப்பிச் சொன்னான் பாலு.

கொஞ்ச நேரம் பெரிய கருப்பன் செட்டியார் ஒன்றும் பேசாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தார். கடிகாரம் அரைமணி அடித்தது.

"மணி ஏழரையா?"

"பத்து நிமிஷம் "லேட்டாகப் போகிறது' என்றான் பாலு.

"அதனால்— அதனால் என்னடா? ரயில் தவறிப் போய் விடுமோ? போடா; போய் எனக்குப் பழங்கொண்டு வா!" என்று சீறினார்.

"அந்தப் போலீஸ்காரரைப் பார்த்தேன் — துரைசாமி ஐயாவை!"

"போடா போய்ப் பழங் கொண்டுவா!"

மறு பேச்சுப் பேசாமல் பாலு கீழே போய், பழங்களைக் கொண்டு வந்தான். செட்டியார் சாப்பிட்டுக் கொண்டே, "மணிலா எண்ணெய் மார்க்கெட் நிலவரத்தைப் படித்துக் காண்பி!" என்றார்.

பாலு ஓடிப்போய், தினக் கொலை பத்திரிகையை எடுத்து வந்து படிக்க ஆரம்பித்தான்.

"விலை மாத்திரம் ஏறினால், பாங்குக்காரனை கோர்ட்டிலே இழுத்து நிறுத்தி விடுவேன். அந்த மிருகம் பிரபாகர்தான் அந்த "ஷேர்'களை எல்லாம் விற்கச் சொல்லி யோசனை சொன்னான்."

"விலை ஏறியிருக்கிறதா?" என அக்கறையோடு கேட்டான் பாலு.

"உன் வேலையைக் கவனிடா நீ!" என்று சீறினார் செட்டியார்.

உள்ளபடியே கடலை (மணிலா) எண்ணெய் தயாரிக்கும் பிரபல மில் ஒன்றின் "ஷேர்'களை பெரிய கருப்பன் செட்டியார் ஏராளமாக வாங்கியிருந்தார். மனோரமாவின் பணத்தையும் ஷேராக மாற்றி வைத்து விட்டார். ஆனால் "மணிலா மார்க்கெட்' நிலவரம் ரொம்பவும் தலை வேதனை கொடுத்து வந்தது. சமீபத்தில், கடலை எண்ணெயை வெளிநாடுகளுக்கு ஏற்றமதி செய்வதைத் தடுத்து சர்க்கார் சட்டம் இயற்றியதும், எண்ணெய் விலை திடீரென விழுந்து விட்டது. அந்தத் தொழில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாம் எந்த வினாடியில் நிர்மூலமாகப் போகிறோமோ என்ற பீதியோடு இருந்தார்கள். அந்த "ஷேர்களைக்' கையை விட்டு விற்றுத் தலை முழுகி விடலாம் என்றும் எதிர்காலத்தில் நிலவரம் ரொம்ப மோசமாகி விடும் என்றும் பிரபாகர் தகவல் கொடுத்த தன் பேரில் செட்டியார் அதில் கையெழுத்திட்டு அனுப்பிவிட்டார்.

ஆனால் இன்னொரு நம்பிக்கையான தகவலும் வெளிவந்தது. அதாவது சர்க்கார் தங்கள் சட்டத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு, மீண்டும் வெளிநாட்டு ஏற்றுமதியை அனுமதிக்கப் போகிறார்கள் என்ற ஒரு வதந்தி உலவியது. அப்படி அனுமதித்தார்கள் ஆனால் மீண்டும் இந்த 'ஷேர்'களுக்கு மதிப்பு உண்டாகி விலை உயரும். இந்த ஏற்பாட்டுக்காக வர்த்தகர்களின் தூது கோஷ்டி ஒன்று டெல்லிக்குப் புறப்பட்டுப் போய்ப் பல நாட்களாக தங்கி இருக்கிறது!

ஆனால் தூது கோஷ்டியின் முயற்சிகள் வெற்றி அளிக்குமா என்பது சந்தேகமே என்றும், சர்க்கார் ஏற்றுமதிக்கு அனுமதி அளிப்பது துர்லாபமே என்றும் அன்று காலை வெளிவந்த "தினக்கொலை' பத்திரிகையில் அதன் டெல்லி விசேஷ நிருபர் எழுதியிருந்தார். இதைப் படித்ததிலிருந்து செட்டியாருக்கு ரொமபக் கவலை காலா காலத்தில் பிரபாகர் அந்த "ஷேர்'களை யார் தலையிலாவது கட்டி, ரொக்கமாக மாற்றுவானோ என்னவோ என்ற கவலை வாட்டி வதைத்தது. அதற்கு இடையில், ஒருக்கால் "ஷேர்'களை விற்று விட்ட பிறகு அதன் மதிப்பு உயர்ந்து விடுமோ என்ற திகில் வேறு! இப்படியாக இரு தலைக் கொள்ளி எறும்புபோல அவதிப்பட்டார், பெரிய கருப்பன் செட்டியார்.

எட்டு மணிக்கு கடன்காரன் ராமையா, பணங் கொடுத்த செட்டியாரைப் பார்ப்பதற்காக வந்து சேர்ந்தான். அங்கு வருவதற்கு முன்பே அவரிடம் எப்படி எப்படிப்

பேசுவது என்று பல தடவைகள் ஒத்திகை பார்த்துக் கொண்டு வந்திருந்தான், செட்டியார் லேவாதேவியை இப்பொழுது நிறுத்தி எல்லாக் கடன்காரர்களிடமும் கொடுத்த கடனை வசூல் செய்து கொண்டு வந்தார். எல்லோருமே கொடுத்து விட்டார்கள். ராமையா ஒருவன தான் பாக்கியாக அவரிடம் சிக்கியிருக்கிறான். ஆகவே, கிழட்டுப் பூனை தன்னிடம் கடைசியாகச் சிக்கிய சுண்டெலியை எப்படி ஆசை தீர வதைத்துக் கொல்லுமோ, அதே போல, பெரிய கருப்பன் செட்டியார் தன்னை வதைக்கப் போகிறார் என்று எதிர் பார்த்தான் ராமையா' அவன் நினைத்ததும் ஒரு விதத்தில் சரிதான்!

"'உட்கார் ராமையா! டேய், பாலு! போடா வெளியே!"

"பாலு இங்கே இல்லை செட்டியாரே!" என்றான் ராமையா.

"அந்தப் பயல் வெளிப்பக்கம் கதவோரத்தில் நின்று ஒட்டுக் கேட்கிறான்—அவன் எப்பவுமே அப்படித்தான் ஒட்டுக் கேட்கிறான். போய்ப்பாருங்கள்!" என்றார்.

ராமையா கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான். இப்படி அவமானகரமாகத் தூஷிக்கப்பட்ட பாலு, அங்கே இல்லை!

பெரிய கருப்பன் செட்டியார் உடனே விவகாரத்திற்கு வந்து விட்டார். "என்ன? எனக்குக் கொடுக்க வேண்டியது இருபதாயிரத்து நூற்று இருபத்து மூன்று ரூபாய் நாலணா ஆறு தம்பிடி! இன்று ராத்திரி கணக்கைத் தீர்த்து விடுகிறீர்களல்லவா?" என்ற கேட்டார்.

"துரதிர்ஷ்ட வசமாக இன்றைக்கு ராத்திரியல்ல; இன்னும் பல ராத்திரிகளுக்கு, கணக்கைத் தீர்க்க முடியாத நிலையில் இருக்கிறேன்!" என்றான் ராமையா சாதாரணமாக.

"யாருக்கையா துரதிர்ஷ்டம்?—உனக்கா? எனக்கா?"

"இருவருக்கும்"

"மரியாதையாகப் பணத்தை இன்று ராத்திரியே கீழே வைத்தால் ஆயிற்று; இல்லாவிட்டால், விஷயம் வக்கீலிடம் போய் விடும்" என்று கத்தினார் செட்டியார்.

"போனால்?" "உன் மானம் போகும்; மரியாதை போகும் பெரிய பெரிய மனிதர்களோடு "சமதை' போட்டுப் பழகுகிறாயே; அதெல்லாம் பறந்து போகும்!" என்றார் செட்டியார்.

இனி மேல் அவரிடம் ஜாக்கிரதையாகப் பேச வேண்டுமென முடிவு செய்து கொண்டான் ராமையா. இல்லாவிட்டால் தீயுடன் விளையாடுவது போல் ஆகி விடும்.

"கோபப் படாதீர்கள் செட்டியாரே! இந்த வாரக் கடைசியில் எப்படியும் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து விடுகிறேன். பாக்கிபைக் கொஞ்சம் தவணை கொடுத்தால் செலுத்தி விடுகிறேன்" என்றான் பணிவாக.

"இந்த வாரக் கடைசி வரை பொறுக்க முடியாது. நாளைய தினம் சாயங்காலம் ஆறுமணிதான் கடைசி தவணை!" எனக் கத்தினார் செட்டியார்.

ராமையா கொஞ்ச நேரம் சிலை போல் உட்கார்ந்து இருந்தான். அவன் முகத்தில் கோபாக்கினி தணலாக வீசியது! உள்ளபடியே செட்டியாருக்குப் பார்வை மாத்திரம் சரியாக இருந்து அவன் முகத்தைப் பார்த்திருந்தார் ஆனால், பயந்து போயிருப்பார்.

கடைசியாக ராமையா ஒரு தீர்மானத்திற்கு வந்தவன் போல, "சரி; செட்டியாரே! நாளை மாலை ஆறு மணிக்குப் பணம் கொண்டு வருகிகிறேன்!" என்றான்.

"ஏது பணம்?"

"என் நண்பர் ஒருவரிடமிருந்து"

"நண்பரா? உன் நண்பன் எவன் பாக்கி இருக்கிறான் இன்னும்? எல்லோரிடமும் தான் வாங்கிக் கொண்டு, "அவன்கள்' நெற்றியில் பட்டையாக நாமத்தைக் குழைத்துப் போட்டு விட்டாயே" இதைச் செட்டியார் சொல்லி முடிப்பதற்குள், ராமையாவின் ஆத்திரம் கட்டுமீறிப் போய்விட்டது.

பயங்கரமான ஸ்தாயியில் "டேய் கிழட்டு ராஸ்கல்! கொள்ளைக்கார நாயே! மூடடா வாயை!" என்று கத்தினான்.

இதைக் கேட்ட பெரிய கருப்பன் செட்டியார் ஆவேசத்தோடு துள்ளி எழுந்து, போடா வெளியே!..."கிழட்டு ராஸ்கல் கொள்ளைக்கார நாய்—நானாடா?... நானா? டேய் பாலு! பாலு!" என்று தொண்டை கிழிய கத்தினார்.

பாலு "திடு திடு' வென்று மேலே ஓடி வந்தான்.

"இவனைப் பிடரியைப் பீடித்து "கல்தா' கொடுடா! உதைடா! நொறுக்குடா!" என்று வீறிட்டார் செட்டியார்.

பாலு வேகமாக ராமையா அருகில் போய் மிகவும் மெதுவாக, "நீங்கள் பேசாமல் போங்கள் சார்; என்னைக் கவனிக்காதீர்கள்!" என்று சொல்லிவிட்டு உரத்த குரலில், "ஏய்! போக வெளியே, ம்! மரியாதையாகப் போய் விடு!" என்று ராமையாவின் பிடரியைப் பிடித்துத் தள்ளுபவன் போல் தத்ரூபமாக நடித்துக் கத்திக் கொண்டே போய். வெளிக்கதவைப் படாரென்று அடித்துத் திறந்தான். தன் முஷ்டியால் உள்ளங்கையில், படார் படார் என்று அடித்துக் கொண்டான். ராமையாவுக்கு அந்த ஆத்திரத்திலும் சிரிப்பு வந்து விட்டது. அதை அடக்கிக் கொண்டு வெளியே நடந்தான்.

பாலு கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே வந்ததும் "அவனை உதைத்தாயா?" என்று கேட்டார் செட்டியார். "அவன் எலும்பு முறிந்திருக்கும்! வெளுத்து விட்டேன்!" என்றான் பாலு. "என்னடா கேப் மாறி! குத்துச் சண்டைக்காரன் "சலாம் வரிசை' எடுப்பது போல உன் உடம்பிலேயே காலாலும் கையாலும், "படார் படார்' என்று அடித்துக் கொண்டுவிட்டு, அவனை அடித்ததாக புளுகுகிறாயே! உனக்கு ஏதடா அந்தத் துணிவு? அப்படித் துணிச்சல் இருந்தால் முந்தா நாள் இரவு சமயற்கட்டில் கண்ணாடி ஜன்னலை உடைத்துக் கொண்டு உள்ளே குதித்த திருடனைப் பிடித்திருக்க மாட்டாய்?" என்று கத்தினார். உள்ளே குதித்த சப்தத்தைக் கேட்டு செட்டியாரே சமையலறைக்குத் தடவிக் கொண்டு போய், அரைமணி நேரம் சத்தம் போட்டு எழுப்பிய பிறகு தான், பாலு தூக்கத்திலிருந்து எழுந்தான்!

"போடா போடா! இங்கே நிற்காதே!" என்று மீண்டும் செட்டியார் கத்தினார். பாலு போய் விட்டான். அவன் போய் வெகு நேரம் வரையில் பெரிய கருப்பன் செட்டியார் யோசனையாக உட்கார்ந்திருந்தார். பிறகு மெதுவாக ரேடியோவைத் திருப்பினார். "இந்தியாவில் — லேவாதேவி முறை இப்பொழுது எப்படி நடக்கிறது என்று சொல்வதற்கு முன், பழைய காலத்தில் இந்த முறை எப்படி இருந்தது என்று கவனிக்க வேண்டும்!" என்று ஒலி வந்தது. பிரபாகர் தான் ஆங்கிலத்தில் பேசினான். அதை சுவாரஸ்யத்தோடு செட்டியார் கேட்க ஆரம்பித்தார்!

## 10.துப்பாக்கியைக் காணோம்!

வேல்டாக்ஸ் தியேட்டரில், நடிகர்கள் "மேக்— அப்' செய்து கொள்ளும் அறையில் மோகன் உட்கார்ந்திருந்தான், மனோரமா, கண்ணாடி முன்னால் நின்று பவுடர் போட்டுக்கொண்டிருந்தாள். மாய மனிதன் நாடகத்தில் அவள் கதாநாயகியாக நடிக்கிறாள்... காதலனிடமிருந்து அவள் பிரிக்கப்பட்டு மாய மனிதனால் எங்கோ ஒரு குகைக்குத் தூக்கிக்கொண்டு போகப்பட்டுக் கற்பு சூறையாடப்படும் கட்டம். கண்ணே, உன் அழகு என்னை "மிருகமாக்குகிறது' என்று மாய மனிதன் சொல்வதற்குத் தோதாக அவள் அற்புதமாக வேஷம் தரித்துக் கொண்டிருந்தாள். அவளது அழகை அள்ளிப் பருகியவனாய் மோகன் பெருமூச்சு விட்டான்.

"இதே போல நாம் இருவரும் நீண்ட நாட்கள் இருந்து வந்தால், அனாவசியமான வதந்திகள் பரவுவதற்கு இடம் ஏற்படும் மனோரமா" என்றான் மோகன்.

"அதற்காக—?"

"பேசாமல். கல்யாண ரிஜிஸ்ட்ராருக்கு நோட்டீஸ் கொடுத்து விடுவோம். பதினைந்து தினங்களுக்கப்புறம், பதிவுத் திருமணம் செய்து கொள்ளலாம்" என்றான் மோகன்.

"இவ்வளவு நாட்கள் இல்லாமல், இன்று திடீரென்று இந்த யோசனை வரக்காரணம்?" என்று கேட்டாள் மனோரமா.

"இப்பொழுதுதான் என் கைக்கு நிறையப் பணம் வந்திருக்கிறது!" என்றான் மோகன். "பணமா? ஏது? ஏதாவது போட்டிப் பந்தயத்தில் கிடைத்ததா? அல்லது உங்கள் மாமாவே மனம் மாறி சொத்தை எழுதி வைத்து விட்டாரா?" என்று கிண்டலாகக் கேட்டாள்.

"நான் புதிதாகக் கண்டு பிடித்திருக்கும் துப்பாக்கி ஸைலன்ஸர் செய்யும் முறையை, மலேசியாவைச் சேர்ந்த ஒருவருக்கு ஏகபோக உரிமையாகப் பதிவு செய்து கொடுத்து விட்டேன். அதற்காக ஒன்றரை லட்சம் ரூபாய் உரிமைத் தொகை வாங்கி விட்டேன்!

"அடேயப்பா!" என்று குதூகலத்தோடு கூறினாள் மனோரமா.

இந்தச் சமயத்தில் யாரோ, கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. அங்கிருந்த ஒரு வேலைக்காரப் பையன் கதவைத் திறந்தான். சந்தியா பாங்க் ஏஜண்ட் பிரபாகர் உள்ளே நுழைந்தான்.

"உன் நேரத்தை இங்கே வியர்த்தமாக்கிக் கொண்டிருந்ததற்கு, ரேடியோவைச் திருப்பி என் பிரசங்கத்தையாவது கேட்டிருக்கலாமே" என்று மோகனைப் பார்த்துக் கூறினான் பிரபாகர்.

"ஓ! நீ ரேடியோவில் இன்று பேசினாயா?"

"அங்கிருந்து தான் நேராக வருகிறேன்!" என்றான் பிரபாகர்.

இதற்குள் நாடகம் ஆரம்பிக்க மணி அடித்து விட்டபடியால் மனோரமா, ஸ்டேஜுக்குப் போய் விட்டாள்.

"இந்த நாடகத்தைப் பார்த்தாயா?" என்று கேட்டான் மோகன்.

"எந்த ஜன்மாவில் செய்த பாபமோ, இதைப் பார்த்தேன்! பெயரைப் பார் மாய மனிதன்! இதைப் போன்ற மிருகத்தனமான கற்பனையை இதுவரை நான் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை! இதை நடத்தும் ஆசாமி—நம் செல்லப்பாவை நான் சொல்லவில்லை...பணங் கொடுக்கும் ஆசாமியைச் சொல்கிறேன்—பெரிய குபேரனாக இருக்க வேண்டும்!" என்றான் பிரபாகர்.

"கோடீஸ்வரர் சோமசேகர் என்பவரைப் பற்றி நீ கேள்விப்பட்டதில்லை?" என்றான் மோகன். பிரபாகர் முகம் சலனமற்று இருந்தது.

"கேள்விப்பட்டதில்லை. அவன் எந்தவூர் ஆசாமி?" என்று கேட்டான் பிரபாகர்.

"எல்லாம் மர்மமாக இருக்கிறது. கிட்டத்தட்ட பதினையாயிரம் ரூபாய் வரையில் இந்த நாடகத்தில் நஷ்டம் அடைந்திருப்பான். எதற்காக இதைத் தொடர்ந்து நடத்துகிறான் என்றும் தெரியவில்லை. இதில் நடிக்கும் நடிகைகளில், மனோரமாவைத் தவிர, வேறு எந்தப் பெண்ணும் "காறித் துப்ப கால் காசு பெறமாட்டார்கள்! மனோரமாவோடும் அவனுக்கு எந்தவித நட்பும் இல்லை! எதற்காக இதை நடத்துகிறானோ' ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!" என்றான் மோகன்..

"எவனோ மர்ம மனிதன் கோடீஸ்வரர் சோமசேகர் என்று வேஷம் தரித்து மறைமுகமாகத்தான் நடத்தி வருகிறான். அவன் நோக்கம் என்ன என்பது போகப் போகத்தான் தெரியும்! அந்த மர்ம மனிதன் நமக்குள்ளே ஒருவராகவும் இருக்கலாம்" என்று ஒரு நடிகன் சொல்லி விட்டு மாயமனிதன் நாடகத்திற்கு முகமூடியணிந்து கொண்டு ஸ்டேஜுக்குப் போய் விட்டான்.

மோகன் முகமும் பிரபாகரின் முகமும் ஏககாலத்தில் என்னவோ போல் ஆகிவிட்டன.

சோமசேகர்! பெயர் கேள்விப்பட்ட மாதிரி இருக்கிறது! எங்கே?...ம்...சொல்ல மறந்துவிட்டேனே... இன்று உன் நண்பன் இன்ஸ்பெக்டர் துரைசாமி—என் அறைக்கு வந்தான். அன்று சங்கர் கொலையுண்டு கிடந்ததைக் கண்டு பிடித்தபோது, நீயும் கூட இருந்தாயல்லவா?"

"ஆமாம்!"

"அவனைக் கொலை செய்ய நான் தான் ஏற்பாடு செய்தது போல துரைசாமி என்னிடம் நடந்து கொண்டான்!"

"அதை ஏன் கேட்கிறாய்? அன்று என் துப்பாக்கித் தொழிற் சாலைக்கு வந்து, நான் தான் அவனைக் கொலை செய்துவிட்டேன் என்று என்னைக் குற்றஞ் சாட்டும் முறையில் நடந்து கொண்டான்" என்றான் மோகன்.

பிரபாகர் எழுந்து வெளியில் கதவைத் திறந்து சுற்று முற்றும் பார்த்து விட்டு, கதவை நன்றாக மூடி விட்டு, முதலில் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்து உட்கார்ந்தான்.

"மோகன், உன்னால் எனக்கு ஒருகாரியம் ஆகவேண்டும்!" என்று மெதுவாகக் கூறினான்.

"என்ன!"

நான் சென்னையை விட்டு ஒரிரண்டு வாரங்கள் வெளியூரில் போயிருக்க நேரிடும். "லீவ்' இன்னும் சாங்ஷன் ஆகிவரவில்லை. அநேகமாக இப்பொழுது வந்து விடும். அப்படி நான் புறப்பட்டு விட்டால், என் வீட்டுச் சாவியை உன்னிடம் கொடுத்து விட்டுப்

போகிறேன். ஏதாவது லெட்டர்கள் அங்கு வந்து கிடந்தால் அதை ஜாக்கிரதையாக எடுத்து வைத்திரு. அதோடு வீட்டையும் ஒரு "கண்' பார்த்துக்கொள், என்ன முடியுமா? என்று கேட்டான்.

"நீ எப்பொழுது புறப்படுகிறாய்?"

அதைப் பற்றி பிரபாகரால் எதுவும் தீர்மானமாகக் கூற முடியவில்லை. ஏனென்றால், லீவ் கிடைப்பது தலைமைக் காரியாலயத்தாரின் தயவைப் பொருத்ததாக இருந்தது. லீவ் கிடைத்ததும் சாவியை "ஓர்க் ஷாப்'க்கு அனுப்புவதாகப் பிரபாகர் கூறினான்.

மோகன் "சரி'யென்று அந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக் கொண்டான், பிறகு, "பிரபாகர்! ஒரு விஷயம் உங்களிடம் சொல்ல மறந்து விட்டேனே, நான் புதிதாகக் கண்டுபிடித்த துப்பாக்கி ஸைலன் ஸரை உற்பத்தி செய்யும் உரிமையை ஒரு மலேசியாக்காரருக்கு இன்று விற்று விட்டேன்" என்றான்.

"அப்படியா? எவ்வளவு ரூபாய்?"

"ஒண்ணரை லட்ச ரூபாய்" என்று உற்சாகத்தோடு கூறினான் மோகன்."நாம் இப்பொழுது அதைப் பார்க்கலாமா? அந்த ஸைலன்ஸர், துப்பாக்கியைச் சொல்லுகிறேன்," என்று கேட்டான் பிரபாகர். "அதற்கென்ன; இப்பொழுது நான் வீடு திரும்பும் வழியில் தான் தொழிற்சாலை இருக்கிறது. அங்கு போய்ப் பார்த்துவிட்டுப் போகலாம்!" என்றான் மோகன்.

இருவரும் காரில் ஏறிக்கொண்டு, தொழிற்சாலையை நோக்கிப் போனார்கள். வழியில் மோகன், "நல்ல வேளை நான் ஒரு முட்டாள் தனம் செய்து விட்டேன்! துப்பாக்கி ஒன்றில் குண்டுகளைப் போட்டு "ஸைலன்ஸரை' மாட்டி வைத்துவிட்டு வந்துவிட்டேன். அப்படிக் குண்டோடு வைப்பது ஆபத்து. காலையில் எவனாவது பையன்கள் அதைத் தீண்டினால் உயிருக்கு ஆபத்தாகிவிடும். இப்பொழுது அந்தத் துப்பாக்கியிலுள்ள குண்டை வெளியே எடுத்து அதை "அன்லோடு' பண்ணிடலாம்!" என்றான்.

இருவரும் ஏறிச் சென்ற டாக்ஸிகார், மோகனின் தொழிற்சாலை வாசலில் போய் நின்றது. மோகன் இறங்கி வாசற்கதவைத் திறப்பதற்காகச் சாவியைக் கொண்டுபோய் கதவில் வைத்தான். அதில் ஏற்கனவே ஒரு சாவி இருந்தது. "சட்'டென்று கதவைத் தள்ளினான் — திறந்து கொண்டது! அவசரமாக உள்ளே நுழைந்து விளக்கைப் போட்டான். உள்பூட்டு திறந்து கிடந்தது. மேஜையின் மேல் வைத்திருந்த துப்பாக்கியையும் "ஸைலன்ஸரையும்' காணோம்! மாயமாய் மறைந்து விட்டது. "பிரபாகரும், மோகனும் பிரமித்துப்போய் நின்றார்கள்".

# 11.மதராஸ் பாபு!

துப்பாக்கியும் "ஸைலன்ஸரும்' காணாமல் போய் விட்டதைப் பற்றிக்கூட, மோகன் அவ்வளவு கவலைப்படவில்லை; ஏனென்றால் அந்த "ஸைலன்ஸர்' செய்யும் விதமும்"பிளான்' முதலியனவும் மலேசியாக்காரனிடம் அன்று பகலில் கொடுத்து விட்டான். ஆகவே,"ஸைலன்ஸர்' காணாமல் போனது ஒரு பெரிய நஷ்டத்தை அவனுக்கு ஏற்படுத்தி விடவில்லை. ஆனால் தன் "ஒர்க்ஷாப்பில்' அவ்வளவு தைரியமாகப் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து திருடியவன் யாராக இருக்கக் கூடும். அதுதான் அவனுக்குப் பெரிய வேதனையை, அளித்தது. அதோடு அதைப் புரியாத்தனமாகத் தாறுமாறாக உபயோகித்து விட்டால் உயிருக்கே ஆபத்து வந்துவிடும். அதோடு அந்தத் துப்பாக்கியால் சுடப்பட்டு யாராவது இறந்தால், மோகன் மேல் கொலைக் "குற்றம்' சுமத்தப்பட்டாலும் படலாம். இதை எல்லாம் மோகன் எண்ணிப் பார்த்தான்.

"போலீஸுக்குத் தெரிவித்து விடுவது நல்லதல்லவா?" என்று பிரபாகரைக் கேட்டான்.

"ஆமாம். இல்லாவிட்டால் பிறகு ஏதாவது "வம்பு' வந்து சேரும். இப்போதே இந்த இன்ஸ்பெக்டர் துரைசாமி படுத்தும் பாட்டில் இது வேறு சேர்ந்தால் கேட்கவே வேண்டாம்! தொலைந்தோம்!" என்றார் பிரபாகர்.

உடனே மோகன், இன்ஸ்பெக்டர் துரைசாமிக்கு இந்தத் திருட்டை விளக்கி "டெலிபோன்' செய்தான். இன்ஸ்பெக்டர் உடனே புறப்பட்டு வருவதாகப் பதில் கூறினார்.

"உன்னிடம் இந்த "ஸைலன்ஸர்' இருக்கும் விவரம் யாருக்குத் தெரியும்?"

"அநேகமாக நண்பர்கள் எல்லோருக்கும் தெரியும்!" என்றான் மோகன்.

"அது சரி! அதை எந்த இடத்தில் வைத்திருக்கிறாய் என்ற விவரம் யார் யாருக்குத் தெரியும்?" என்று கேட்டான பிரபாகர்.

"மனோரமாவுக்குத் தெரியும்; ராமையாவுக்குத் தெரியும்—ஓ; சரி! விளங்குகிறது!" என்றான் மோகன் .

பிரபாகர் சிரித்துக் கொண்டே, "இருக்காது' என்ற பாவனையில் தலையை ஆட்டினான்.

"ராமையாவுக்கு அவ்வளவு தைரியம் வராது; அதோடு இதை எங்கே கொண்டு போய் விற்பது என்ற விபரமும் அவனுக்குப் புரியாது" என்று சொல்லிக் கொண்டே வந்த பிரபாகர், திடீரென பேச்சை இடையிலே நிறுத்தினான். மோகன் அவன் முகத்தை ஆச்சரியத்தோடு பார்த்தான்.

பிரபாகர் யோசனையோடு, "அன்றைய தினம், அவனை பரோட்டா ஹோட்டலில்' பார்த்தேன். அவன் கூட அந்த தில்லு முல்லுக்கார ஜேவியர் இருந்தான்! ஜேவியரை உனக்குத் தெரியும் அல்லவா? அவன் மேல் ஒரு சர்வதேச' மோசடிக் கேஸ் கூட இருக்கிறதே!" என்றான்.

மோகன் "தெரியும்' என்று தலையை ஆட்டினான். பிறகு பிரபாகரிடம், "ராமையா, தன் வீட்டில் "டெலிபோன்' வைத்திருக்கிறானா?" என்று கேட்டான்.

"அது எல்லாம் குறைச்சல் இல்லை. வைத்திருக்கிறான்!" என்றான் பிரபாகர்.

உடனே மோகன் டெலிபோன் புத்தகத்தை எடுத்து அவன் நம்பரைத் தேடிப் பிடித்தான், அவனுக்கு டெலிபோன் செய்தான். முதலில் "லயனில்' யாரோ பேசிக் கொண்டிருப்பதாக எக்ஸ்சேஞ்'சில் தகவல் கொடுத்தார்கள். ஐந்து நிமிஷம் கழித்து மீண்டும் மோகன் போன் செய்தான். ராமையாவே நேரில் பேசினான்.

"ஹலோ, ராமையாவா! என் துப்பாக்கியும் ஸைலன்ஸரும்" உன்னிடம் இருக்கிறதா? என்று எடுத்த எடுப்பில் கேட்டான் மோகன்.

"உன்னுடைய... எது?" என்று புரியாமல் கேட்டான் ராமையா.

"நீ இன்று இரவு என் "ஒர்க்ஷாப்பு'க்குள் வந்து விட்டுச் சிறிது நேரத்தில் வெளியே சென்றதாகவும் உன் கையில் என்னவோ எடுத்துக் கொண்டு போனதைப் பார்த்ததாகவும் நண்பர் ஒருவர் சொன்னார்!" என்று துணிச்சலாகப் புளுகினான் மோகன்.

"எந்த மடையன் அப்படிச் சொன்னான்? இன்று மாலை நீ என்னிடம் நாய் மாதிரி விழுந்தாயே; அதன் பிறகு சுயமரியாதை உணர்ச்சியுள்ள எவனாவது, உன் வாசற்படியை மிதிப்பானா?" என்று கூறிவிட்டு "டக்' கென்று போனை வைத்து விட்டான்.

மோகன் சிரித்துக் கொண்டே போன் ரிஸீவரை'க் கொக்கியில் மாட்டினான். "அவன் என்ன தான் அயோக்கியன் என்றாலும் இந்தத் திருட்டை அவன் செய்திருப்பான் என்று என்னால் நம்ப முடியவில்லை!" என்று பிரபாகரிடம் கூறினான்.

"சரி; இன்ஸ்பெக்டர் துரைசாமி வந்ததும் அவனிடம் சொல்லு! நான் வரட்டுமா? இன்னும் சாப்பிடவில்லை" என்று எழுந்தான பிரபாகர். மோகனும் — எழுந்து வாயிற்படிவரை போய், "சரி போய்வா! ஊருக்குப் போகும் சமயத்தில் சாவியை அனுப்பு. நான் வீட்டைப் பார்த்துக் கொள்ளுகிறேன்!" என்றான்.

பிரபாகர் வெளியில் காத்திருந்த டாக்ஸியில் போய் ஏறினான். அவன் காரில் அமர்ந்ததும் மோகன், "நீ எந்த ஊர் போகப்போகிறாய்" என்று கேட்டான்.

"அது ஒன்றைத்தான் உன்னிடம் சொல்லுவதற்கு இல்லாமல் இருக்கிறது!" என்றான் பிரபாகர்.

"ரைட்டோ!" என்றான் மோகன். கார் புறப்பட்டது.

மோகன் தன் ஆசனத்தில் போய் அமர்ந்து, இன்ஸ்பெக்டர் துரைசாமியின் வரவிற்காகக் காத்திருந்தான். கொஞ்ச நேரத்தில் இன்ஸ்பெக்டர் துரைசாமி வந்து சேர்ந்தார். அவரிடம் மோகன் எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னான்.

"இதைப்போல திருட்டுகள் சாதாரணமாக நடக்கின்றன." என்று கூறிவிட்டு, அறையைச் சுற்றிப் பார்த்தார். பிறகு, "இன்று மாலை யார் இங்கு வந்தார்கள்?" என்று கேட்டார்.

மோகன், "ராமையா வந்திருந்தான்!" என்றான்.

"அவனா? அவனுக்கு அவ்வளவு துணிவு இருக்குமா என்பது சந்தேகம். அவன் கெட்டவன் தான். ஆனால் இது மாதிரி அல்ப வேலைகளில் அவன் ஈடுபட்டதாக நான் கேள்விப்பட்டது இல்லை. ம்...சரி போகட்டும்! இந்தத் திருட்டைப் பற்றி பத்திரிகை நிருபர்களுக்குத தெரிவிக்கப் போகிறீர்களா? பெரியதாக — கொட்டை எழுத்தில் தினக் கொலைகாரன் போடுவானே!" என்று கேட்டார் துரைசாமி.

"அப்படிப்பட்ட பைத்தியக்கார வேலை எதுவும் செய்ய உத்தேசமில்லை!" என்ற மோகன் சிரித்துக் கொண்டே கூறினான்.

"அதுதான் புத்திசாலித்தனம்!" என்றார் துரைசாமி.

"எனக்கு வேறொன்றும் கவலையில்லை. அந்தத் துப்பாக்கியின் லைசென்ஸ் என் பெயரில் இருக்கிறது. அதில் குண்டு அடைத்து வேறு வைத்திருக்கிறேன்" என்று கவலைப்பட்டான் மோகன்.

"அதனால் என்ன? யாராவது சுடுபடட்டும். அப்பொழுது எவன் திருடினான் என்று தெரிந்து விடும்!" என்று சாதாரணமாகக் கூறினார் துரைசாமி. அவர் மனதில் மற்ற எல்லா விஷயங்களையும் விட, சங்கர் கொலையே தலை தூக்கி நின்றது!

"ம்! காரிலேயே போட்டுச் சுட்டுக் கொன்றிருக்கிறான் பாருங்கள் அமெரிக்க முறையிலே! — அடடா; எங்கே பார்த்தாலும் அமெரிக்கனின் ஆதிக்கமா? வர்த்தகத் துறையில், நமது நாட்டிலுள்ள, எந்த மார்கெட்டை எடுத்தாலும் அவன்தான். இப்பொழுது இந்தக் "கொலை—மார்க்கெட்'டில் கூட அவன் ஆதிக்கம் பரவிவிட்டதே!" என்று அங்கலாய்த்தார் துரைசாமி இதைச் சொல்லி முடிக்கும் பொழுது, திடீரென்று துரைசாமியின் கண்கள் பூமியில்"கிடந்த ஒரு வஸ்துவை நோக்கின. குனிந்து அதை எடுத்தார். அது "புஷ் கோட்'டில் வைத்துத் தைக்கப்படும் ஒரு பித்தான்.

அதை மோகன் காண்பித்து, பார்த்தீர்களா? குற்றவாளி விட்டுப் போன தடயம்! கொலை வழக்குகளில் பூர்வாங்க விசாரணை நடத்தும் பொழுது சில கிழவிகள்

இருட்டில் உயரமாக கருப்பாக ஒருவன் போனான்' என்று எங்களுக்குத் தடயம் கொடுப்பார்கள். அதைப் போல இது ஒரு தடயம்!" என்று கேலியாகக் கூறினாரே தவிர, அந்தப் பித்தானை தம் "கோட்' பையில் போட்டுக் கொண்டார்.

"அந்தப் பித்தான் பிரபாகருக்கு உடையதாகவும் இருக்கலாம். அவன் இன்று இரவு புஷ்கோட் போட்டுக் கொண்டு இங்கே வந்திருந்தான். நாங்கள் இருவரும் ஒன்றாகத்தான் இங்கு வந்தோம்!" என்றான் மோகன்.

இன்பெக்டர் துரைசாமி தம் மூக்கைச் சுளித்துக் கொண்டார்.

"இதுவா? சட்! அவருடைய பித்தான் வைரமாகவோ, கோமேதகமாகவோ இருக்கும்! அவர் "பாங்க்' ஏஜண்டல்லவா? இது "பாங்'கில் பணம் போடும் "ஏழைகள்' பித்தான் மாதிரி இருக்கிறது! — அது சரி; பிரபாகரைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

"அவன் நல்லவன். அவனை எனக்கு ரொம்பப்பிடிக்கும்!" என்றான் மோகன்.

"சில சமயங்களில் எனக்கு அவரைப் பிடிப்பதில்லை. பொதுவாக அவர் மேல் எனக்கு வெறுப்புக் கிடையாது!" என்றார் துரைசாமி. மோகன் இதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. துரைசாமி மேலே பேச ஆரம்பித்தார்.

"இன்று அவர் வீட்டிற்குப் போயிருந்தேன், அடடா; என்ன பிரமாதமான அலங்காரங்கள்! ரத்னக் கம்பளங்களும், சோபாக்களும் ஆயிரக்கணக்கில் செலவழித்து வாங்கிய ரேடியோ ஸெட்டுகளும்..."

"பிரபாகருக்கு என்ன? சொந்தத்தில் நிறையப் பணம் அவனுக்கு இருக்கிறது" என்றான் மோகன். "ஆமாம்; ஆமாம், அவர், கையில் இருக்கிறவரை அவருக்குச் சொந்தம்தானே?" என்று துரைசாமி கூறிவிட்டு, "சரி; நான் வருகிறேன்" என்று புறப்பட்டார்.

இங்கே வருவதற்காக இன்ஸ்பெக்டர் துரைசாமி தலைமைக் காரியாலயத்தை விட்டுப் புறப்படும் பொழுது. அரை மனதோடுதான் புறப்பட்டு வந்தார். ஏனென்றால் அங்கே அமெரிக்கத் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்த ஓர் உயர்தர அதிகாரி, அமெரிக்கத் துப்பறியும் முறையைப் பற்றி விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தார். அந்த அதிகாரியின் பெயர் ஸாமுவேல் கோல்ட்வின் என்பதாகும். அவரை "வேல்' என்றே எல்லோரும் அழைப்பார்களாம். அமெரிக்க நாட்டு குற்றவாளிகளைப் பற்றி விரிவாகச் சொல்லி அவர் பிரசங்கம் செய்த பொழுது, எல்லோரும் அதை மெய் மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னால், இன்ஸ்பெக்டர் துரைசாமி சங்கர் கொலை செய்யப்பட்ட விபரத்தை அவரிடம் விரிவாக எடுத்துக் கூறினார். அதைக் கேட்ட அமெரிக்க அதிகாரி, "இம்மாதிரிக் கொலைகள் இந்த

நாட்டில் அதிகமாகப் பரவுவதற்கு வழியில்லை. ஏனென்றால் இங்கு தலைமறைவாக இருந்து, பிரமிக்கத்தக்க குற்றங்களை ஆட்களை வைத்துச் செய்யும் பெரிய தலைகள் எதுவும் கிடையாது. ஆகவே இது ஒரு "இமிடேஷன்' வேலையாகவே எனக்குப்படுகிறது. அமெரிக்கப் பத்திரிகைச் செயதிகளைப் படித்த எவனோ ஒருவன் இப்படிச் செய்திருக்கலாம். இங்கும் சில கொடியவர்கள் இருக்கிறார்கள் என்றே தெரிகிறது. சென்னையைச் சேர்ந்த ஒருவன் அமெரிக்காவில் வந்து தங்கி இருந்து ஐந்தாறு கொலை கொள்ளைகளில் ஈடுபட்டுருக்கிறான். அவன் தலைமறைவாகவே இருந்து அங்கு செயலாற்றியதால் அவன் யாரென நிர்ணயிக்க முடியவில்லை. மூன்று வருஷ காலம் அவன் அட்டகாசம் அங்கு நடந்தது. அவன் பல வேஷங்களில் பல பெயர்களில் கொள்ளை கொலைகளை நடத்தி வந்தான். அவனை "மெட்ராஸ் பாபு' என்ற பெயரில்தான் நாங்கள் அறிவோம். அவன் இப்பொழுது அங்கில்லை. அநேகமாக இங்கு திரும்பியிருக்கலாம். ஆனால் அவன் தான் இதைச் செய்தானா என்று கேட்டால் நிச்சயமாக இருக்காது' என்று தான் நான் சொல்லுவேன். ஏனென்றால் கொலையுண்டவன் உடலில் நூறு ரூபாயை விட்டுவிட்டு அவன் நிச்சயமாகப் போகமாட்டான்!" என்று கூறினார்.

அவர் பேச்சினால், இன்ஸ்பெக்டர் துரைசாமிக்குப் புதுத்துப்புகள். எதுவுமே உருவாக வில்லை எந்த இடத்தில் விஷயத்தை விட்டாரோ அதே இடத்தில் நின்று கொண்டிருந்தது. ஆகவே இப்பொழுது மோகனின் "ஒர்க் ஷாப்'பை விட்டதும் நேரே சிந்தாதிரிப்பேடடை போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார். ஏனென்றால் சங்கர் கொலையுண்ட அன்று "ரோந்து' சுற்றிய போலீஸ்காரன், தான் ஒரு விஷத்தை, பிரேதவிசாரணை சமயத்தில் சொல்ல மறந்து விட்டதாக, தலைமைக் காரியாலயத்திற்கு டெலிபோன் செய்தான். அவனை சிந்தாதிரிப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனில் காத்திருக்கும்படி இன்ஸ்பெக்டர் துரைசாமி கூறியிருந்தார். அவனைப் பார்ப்பதற்குத்தான் அங்கு சென்றார்.

அந்தப் போலீஸ்காரன், அன்று சங்கர் மாடிப்படியில் உட்கார்ர்திருந்ததையும், யாரோ ஒருவன் பாடிக் கொண்டிருந்ததையும், அவனைப் பற்றி சங்கர் கூறியதையும் விவரமாகக் கூறினான்.

"இந்த விவரங்களை நான் அன்று சொல்லத்தவறி விட்டேன். இன்று காலையில் க்ஷவரம் செய்து கொள்ளும் பொழுது நினைவு வந்தது. அன்று எப்படித் தவறினேன் என்பது வேடிக்கையாக இருக்கிறது" என்றான் கான்ஸ்டபிள். "இது வேடிக்கை இல்லை. வேடிக்கையாக இருந்தால், நான் இதைக் கேட்டதும் சிரிப்பேன். இப்பொழுது நான் சிரித்துக் கொண்டிருக்கிறேனா?"

"இல்லை சார்!" என்று கான்ஸ்டபிள் ஒப்புக் கொண்டான். இது வேடிக்கை இல்லை; விபரீதம்! ஒரு ஓணானுக்கு இந்த உடுப்பை மாட்டி விட்டாலும், அது ஞாபகமாக இந்த விவரங்களை எல்லாம் மேல் அதிகாரியிடம் சொல்லி இருக்கும். ஒரு நோஞ்சல், உருப்படா அவலட்சண ஓணான் கூட, ஓட்டமாக ஓடி, ஒரு சப்—இன்ஸ் பெக்டரிடம் இப்படி இப்படி நடந்தது என்று இந்த விவரங்களைச் சொல்லி இருக்கும்! ஒரு ஒணானால் இது முடியும் என்றால், உன்னால் ஏன் முடியவில்லை.

இந்தக் கேள்விக்கு கான்ஸ்டபிளால் பதில் சொல்ல முடியவில்லை. ஏனென்றால் அரசியலில் "பச்சோந்தி'யைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கறானே தவிர, போலீஸ் படையில் "ஓணானை'ப் பற்றி அந்த கான்ஸ்டபிள் கேள்விப்பட்டதில்லை!

துரைசாமி அவனை இன்னும் விடவில்லை.

அதோடு இப்பொழுதாவது நினைவு வந்ததே என்று நீ பெருமைப் பட்டுக் கொள்ளுகிறாய் — நினைவு வந்ததே என்று! அதுவும் க்ஷவரம் செய்து கொள்ளும் போது! — அது சரி, "பிளேடு' மாட்டி ஸேப்டி ரேஸரால்' க்ஷவரம் செய்து கொள்ளுகிறாயா?"

"ஆமாம் சார்"

"அந்த ரேஸரால் நீ கழுத்தை அறுத்துக் கொண்டு சாக முடியாது... அதுவும் ஒரு துரதிர்ஷ்டம்... சரி, என்னை அந்த இடத்திற்கு உடனே அழைத்துப்போ! நான் எதுவும் கேட்டாலன்றி என்னோடு பேசாதே! உன்னை வேலையை விட்டு நான் "தொலைக்கா'ததற்குக் காரணம், எனக்கும் — உடுப்பணிந்த போலீஸ் "இலாகா'வான உங்கள் இலாகாவுக்கும் சம்பந்தம் இல்லாததுதான்! ஒரு காலத்தில் நானும் உடுப்பணிந்த போலீஸ் "இலாகா'வில் தான் இருந்தேன். ஆனால் அந்தக் காலத்து கான்ஸ்டபிள்கள் மண்டையில் "மூளை' இருந்தது!"

இன்ஸ் பெக்டர் துரைசாமி ஒருவாறாகத் தன் ராம பாணப் பிரயோகத்தை முடித்துக் கொண்டு, மௌனமாக நடக்க ஆரம்பித்தார்.

## 12. பழைய சாவி

இன்ஸ்பெக்டர் துரைசாமியின் கொடிய தாக்குதலுக்கு ஆளான அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த கான்ஸ்டபிள், அவரை சாமி நாயக்கன் தெருவிலிருந்த மாடிக் கட்டிடத்திற்கு அழைத்துப் போய், சங்கர் உட்கார்ந்திருந்த படிக்கட்டைக் காண்பித்தான். இன்ஸ்பெக்டர் அந்தப் படிக்கட்டில் ஏறி மேலே சென்றார். முன் கதவு பூட்டப்பட்டிருந்தது.

தம் கையிலிருந்த ஒரு சாவிக் கொத்தின் உதவியால் அதைத் திறந்தார். நியாயமாக ஒரு "வாரண்டு' இல்லாமல் அவர் ஒரு வீட்டிற்குள் நுழைந்து சோதனை போட முடியாது. இருந்த போதிலும் நீதியை நில நாட்டும் வேலையில் ஈடுபட்டுத் தாம் செய்யும் காரியங்கள் மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாதிருந்தால், துப்பறியும் இன்ஸ்பெக்டர் துரைசாமி சில சமயங்களில் சாதாரண சட்ட சம்பிரதாயங்களை ஒதுக்கி வைத்து விடுவார்.

மாடியில் ஒரு பெரிய ஹால் தான் இருந்தது. அதுவும் ரொம்ப "தூசு' படிந்து கால் வைக்க யோக்யதை இல்லாமல் இருந்தது. அந்த ஹாலில் ஒரு பழைய பீரோ இருந்தது. அதன் பக்கத்தில் ஒரு மேஜையும், அந்த மேஜையோடு பொருத்தப்பட்ட ஒரு நிலைக் கண்ணாடியும் இருந்தன. சுவரில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் டில்லி "தர்பார்' படம் ஒன்று மாட்டப் பட்டிருந்தது. அந்தப் படம் ரொம்பப் பெரிதாக இருந்தது. அது எக்காரணத்தாலோ, ஒரு பக்கம் கோணலாகத் தொங்கிக் கொண்டிருந்தது.

காற்றடித்தால் அந்தப்படம் கீழே விழுந்து உடையக்கூடும் என்று நினைத்த இன்ஸ்பெக்டர், அதை நேராகச் சரி செய்து வைக்க நகர்த்தினார். அதன் பின்னாலிருந்து ஏதோ "தொப்'பென்று தரையில் விழுந்தது. சட்டென்று குனிந்து அதை எடுத்தார் துரைசாமி. அது தோலினால் செய்யப்பட்ட ஒரு கை உறை. அதற்குள் பழைய காலத்துச் சாவி ஒன்று இருந்தது. அந்த மாதிரிச் சாவிகளை இப்பொழுது எங்கும் பார்க்க முடியாது.

பழைய சாவியாக இருந்ததே தவிர, அதில் வேறு எந்தவித விசேஷமும் தெரியவில்லை. அதைத் தம் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டார் துரைசாமி, அந்தக் கை உறையையும் ஜாக்கிரதையாக வைத்துக் கொண்டார்.

இவற்றைத் தவிர, அறையில், வேறு எந்த வித முக்கியத் தடங்களும் இல்லை. அந்த அறையில் ஒரு படுக்கை கூடக் கிடையாது. இது இன்ஸ்பெக்டர் துரைசாமிக்கு அதிக ஆச்சரியத்தை அளித்தது.

அந்தப் பீரோவைத் திறந்து பார்த்தார். அதில் அடுக்காக நவநாகரிக ஆடைகள் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் அந்த உடுப்புகள் ஒன்றிலாவது "சலவைக்குறி' காணப்படவில்லை! அது யாருடையது என்று கண்டுபிடிக்கவே வழி இல்லாமலிருந்தது!

உடைகளைத் தவிர, ஒரு வாசனைத் தைல பாட்டிலும், "சென்ட்' பாட்டில் ஒன்றும் "கிராப்' சீப்பு ஒன்றும் அங்கு இருந்தன. அதோடு ஒரு பூட்டப்பட்ட பெட்டி ஒன்றும் இருந்தது. அதை மேஜை அருகே எடுத்து வந்து இன்ஸ்பெக்டர் தம் சாவி கொத்திலிருந்த சாவியால் திறந்து பார்த்தார். அதில் இரண்டு "டோப்பா" க்கள் (நாடகக்காரர்கள் தலை முடிக்கு வைத்துக் கொள்பவை) இருந்தன.

"வேடிக்கையாக இருக்கிறதே!" என்று முணு முணுத்தார் துரைசாமி. மறுபடியும் அறையெல்லாம் சுற்றிப் பார்த்தார். எதுவும் கிடைக்கவில்லை. கடைசியாக அந்தச் சோதனையில் கிடைத்தது எல்லாம், ஒரு சாவியும் கை உறையும் தான்!

ஒருக்கால் அந்த இடத்தில் குடி இருப்பவன் ஒரு நடிகனாக இருக்கலாம். சங்கர் அந்தக் குடிகாரன் பாட்டை ரசித்தது. ஒரு சாதாரண விஷயமாகவும் இருக்கலாம். துரைசாமி அந்த இடத்தைச் சோதனையிட்டதே தேவை இல்லாததாக இருக்கலாம்.

இப்படிப் பலவித யோசனைகளோடு. அந்த அறையைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தார் துரைசாமி, ஆனால் ஒரு விஷயம் மாத்திரம் அவருக்குப் புதிராகவே இருந்தது. அந்த அறையில் படுக்கையே இல்லை. அங்கு யாராவது குடியிருந்தால் கட்டாயம் படுக்கை இருக்கும்! ஆனால் இல்லையே!

கடைசியாக ஒரு வித முடிவுக்கும் வர முடியாமல் இன்ஸ்பெக்டர் துரைசாமி திரும்பவும் கதவைப் பூட்டி விட்டுக் கீழே இறங்கி வந்தார்.

அந்தச் சாவியையும் கை உறையையும் இந்த வழக்கில் எப்படிச் சம்பந்தப்படுத்த முடியும்? இருந்த போதிலும் அதை வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஏனோ அவர் மனதில் பட்டது. அதைப் பிறகு தலைமைக் காரியாலத்தில் கொண்டு போய்த் தம் அறை டிராயரில் பூட்டி வைத்துக் கொண்டார்.

"இந்த ஆள் யாராக இருப்பான்?" என்று தமக்குத் தாமே கேட்டுக் கொண்டார்.

"நாளைக்கு அடுத்த வீட்டுக்காரர்களை விசாரித்துச் சொல்கிறேன் ஸார்! என்றான் கான்ஸ்டபிள்.

"அட பாவி! அப்படி எல்லாம் செய்து விடாதே! "சும்மா' இருந்தால் போதும். அப்படி எல்லாம் விசாரித்தால் ஆசாமி எச்சரிக்கை அடைந்து விடுவான். இன்று இரவு இங்கே நாம் சோதனை போட்டோம் என்று கூட யாரிடமும் சொல்லாதே" என்று எச்சரித்தார் துரைசாமி.

"இல்லை சார்!"

"சரி, நீ ஸ்டேஷனுக்குப் போ!" என்று கூறி விட்டு, துரைசாமி தம் ஆபீசை நோக்கி நடந்தார்.

## 13.செட்டியாரின் கதி...?

எதிர் பாராத விதமாக அன்று இரவு பதினொரு மணிக்கு தன் வீட்டுக் கதவை, யாரோ தட்டுவதைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள் மனோரமா. இது அவளுக்குப்

புதிய அனுபவம். பொதுவாக அவள் வீட்டிற்கு அவளைத் தேடி வருபவர்கள் மிகக்குறைவு. அப்படி வந்தாலும் பகல் வேளைகளில் தான் வருவார்கள். இரவு பதினோரு மணிக்கு யார் அவ்வளவு அவசரமாக வருவார்கள் என்று பயந்து கொண்டே அவள் வெளிப்பக்க விளக்கைப் போட்டு விட்டு, ஜன்னல் வழியாகப் பார்த்தாள் நல்ல வேளை, பிரபாகரன் நின்று கொண்டிருந்தான்! ஆனால் அவன் இரவு நேரத்தில் தனியாக வாழும் ஓர் இளம் பெண்ணின் வீட்டிற்கு வரக்காரணம்..? அவன் ஆசை பீறிடும் விழிகளுடன் அவளுடைய நாடகங்களுக்கு வரக் காரணம்...? தயக்கத்துடன் வீதிக்கதவின் தாளைத் திறந்து விட்டாள் மனோரமா. பிரபாகர் தயக்கத்தோடு உள்ளே நுழைந்தான்.

உட்காருங்கள்!" என்று ஹாலில் கிடந்த நாற்காலியைச் சுட்டிக் காண்பித்தாள் மனோரமா. ஆனால் அவளுடைய கால்கள் வீதிக் கதவை நோக்கித் தயாராய் நின்றன.

பிரபாகர் உட்கார்ந்து கொண்டே, "என்னை ரொம்பவும் மன்னிக்க வேண்டும். இந்த அகாலத்தில் வந்து நான் உங்களைத் தொந்தரவு செய்தது பிசகு. ஆனால் நான் நிலவரத்தை விளக்கிச் சொன்னால் நான் எப்படிப்பட்ட சங்கடத்தில் சிக்கிக் கொண்டேன் என்று புரிந்து கொள்வீர்கள், என்மீது ஆத்திரப் படமாட்டீர்கள்!" என்று பட படப்போடு கூறினான். பேசும் பொழுது அவன் குரலிலே கலவரம் தொனித்தது. தன் கோட்பைக்குள் கையை விட்டான். மனோரமாவிற்கு என்னவோ நெஞ்சு நடுங்கிக் குப்பென்று முகம் வியர்த்தது. ஆனால் அவன் ஒரு கவரைத் தான் வெளியே எடுத்தான். அவ்வாறு கவரை எடுக்கும் போது அவன் கை நடுங்கியது.

நான் உங்களைத் தொந்தரவு செய்திருக்கவே மாட்டேன் மனோரமா, ஆனால் நான் வீட்டுக்குப் போனதும், 'எனக்கு ஒரு கடிதம் வந்திருப்பதைப் பார்த்தேன். அது என்னைக் கலங்க அடித்து விட்டது. என் பிரதிநிதி ஒருவர் எழுதிய கடிதம் அது!"

மனோரமாவுக்கு பிரபாகரை நன்றாத் தெரியும். அதன் கொஞ்சம் ஜம்பக்காரன், என்பதையும் அறிவாள். வாய்ப் பேச்சுப் பேசினால் முத்து உதிர்ந்து விடும் என்று எண்ணும் 'பெரிய மனிதர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவன் அவன். அதோடு அவன் பெண் சபலம் உள்ளவன் என்றும் பராபரியான வதந்தி. அதனால் அவனை அவளுக்கு அவ்வளவாகப் பிடிக்காது. இருந்த போதிலும் அவள் பெரிய கருப்பன் செட்டியாரிடம் மாதாமாதம் ஒரு சிறு தொகை அலவன்ஸ்' வாங்குவதாலும் அந்த 'அலவன்ஸ்' "சந்தியா பாங்க்" மூலம் அவளுக்குக் கிடைப்பதாலும் அவனிடம் பகைமை பரராட்டாமல் இருந்து வந்தாள்.

"உங்களிடம் விஷயத்தை விளக்கமாகச் சொல்கிறேன், மனோரமா, இது முழுக்க முழுக்க என் சொந்த விஷயம்.... இதில் ஏற்படும் நல்லவை கெட்டவைகளுக்கு நானே

சொந்தப் பொறுப்பு ஏற்க வேண்டும். எனக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தொல்லையில் இருந்து என்னை விடுவிக்க ஓரே ஒரு மனிதரால்தான் முடியும், அவரிடம் தான் போக விரும்பவில்லை. அவர் வேறு யாருமில்லை. உங்கள் கார்டியன் பெரிய கருப்பன் தான் அவர்!" என்றான் பிரபாகர். பிரபாகர் இப்படிப் பேசுவதைக் கேட்டு, மனோரமா பிரமித்துப் போய் விட்டாள். மலை கலங்கினாலும், மனங் கலங்காதவன் பிரபாகர் என்று அவள் நினைத்திருந்தாள். அவன் தன் முனனால் இப்படித் தடு மாறி, சிறு பிள்ளை போலத் திக்கித் திணறிப் பேசுவதைக் கண்டு அவள் அளவற்ற ஆச்சரியம் அடைந்தாள்.

"என்னால் எதுவும் உதவி செய்யக் கூடுமானால் அவசியம் செய்கிறேன்!" என்றாள்.

"பெரிய கருப்பன் செட்டியார், மணிலா எண்ணெய் தயாரிக்கும் கம்பெனியின் 'ஷேர்'கள் சிலவற்றை விற்று விடும்படி என்னிடம் கையொப்பமிட்டுக் கொடுத்தார். நான் அவற்றை வேறொரு 'பார்ட்டி' யிடம் விற்று, அந்தப் பணத்தைச் செட்டியார் கணக்கில் வரவு வைத்து விட்டேன். இப்போது அந்த ஷேரை' விலைக்கு வாங்கிய 'பார்ட்டி' யார், அதில் உங்கள் கையொப்பம் இருந்தால் தான் விற்பனை செல்லும் என்றும், ஏனென்றால் அவை உங்கள் பெயரால் செட்டியாரால் வாங்கப்பட்டிருப்பதாகவும், இப்பொழுது செட்டியார் கையெழுத்து மாத்திரம் இருப்பதால் செல்லாது என்றும் கூறுகிறார்கள். அது மட்டுமல்ல. நான் வேண்டும் என்றே அவர்களை மோசடி செய்ய உங்கள் கையெழுத்தை வாங்காமல் விற்பனை ஏற்பாடு செய்ததாகவும் இதை என் மேல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப் போவதாகவும் மிரட்டுகிறார்கள். அவர்கள் எங்கள் பாங்கில் நிறையத் தொகை லேவா தேவி செய்பவர்கள். அவர்கள் மேலே, தலைமை ஆபீஸிற்கு எழுதினால், என்னை மோசக்காரன்' என்று பட்டங் கட்டி, எங்கள் ஆபீஸை விட்டு என்னை வெளியேற்றி விடுவார்கள். பிறகு நான் உயிரோடு நடமாட மாட்டேன்," என அழாக் குறையாகக் கூறினார் பிரபாகர்,

"என் கையெழுத்து வேண்டும். அவ்வளவு தானே?" என்று கூறி விட்டு மனோரமா, ‘‘ஏதோ அளவிட முடியாததாக்கும் என்று பயந்து விட்டேன்!" எனச் சிரித்தாள்.

பிரபாகர், தான் கொண்டு வந்த 'ஷேர் ' பத்திரங்களை மனோரமா விடம் கொடுத்து, அதில் கையொப்பமிட வேண்டிய இடத்தையும் காட்டினான் அதற்குக் கீழே பெரிய கருப்பன் செட்டியார் கையொப்பமிட்டு இருந்ததையும் மனோரமா பார்த்தாள். அவன் காண்பித்த இடத்தில், கையெழுத்துப் போட்டு, அந்தப் பத்திரங்களை அவனிடம் கொடுத்தாள்.

"ரொம்பவும் நன்றி!" என்று கூறி அதை வாங்கிக் கோட் பையில் வைத்துக் கொண்டான் பிரபாகர். பிறகு கொஞ்சம் சந்தோஷத்தோடு, 'எனக்கு இந்தச் சங்கடம் வந்திருக்காது. ஆனால் சரியாகக் கையொப்பம் இடப்படாத ஒரு விற்பனைச்

சாதனத்தின் மீது, இன்னொருவர் உடைய பணத்தை நான் எடுத்துக் கொடுப்பது தவறல்லவா? நம்பிக்கைத் துரோகமல்லவா? அதோடு, நாளைக்கே பெரிய கருப்பன் செட்டியார் இறந்து விட்டால், இந்த விற்பனை ஏற்பாடு செல்லாமல் போய் விடும்" என்றான்.

மனோரமா சிறிது திடுக்கட்டாள். பெரியகருப்பன் செட்டியார் நாளைக்கே இறக்கக் கூடுமா?" பிரபாகர் தலையை 'இல்லை' என்ற பாவனையில் ஆட்டினான்.

"அது எனக்குத் தெரியாது. இருந்தாலும் அவருக்கு வயதாகி விட்டதல்லவா?" என்ற ஒரு மாதிரியான விஷமப் புன்னகையுடன் கூறிவிட்டு, "சரி, வருகிறேன். சிரமத்திற்கு மன்னிக்க வேண்டும்!" என்று புறப்பட்டான்.

பிரபாகரை வெளியே அனுப்பியதும், கதவைத் தாளிட்டுக் கொண்டு தன் படுக்கைக்கு வந்தாள் மனோரமா. அவளுக்குத் தூக்கமே வரவில்லை. அவன் இப்படி அகாலத்தில் வந்ததற்குக் காரணம் ஏதாவது தவறான நோக்கமாக இருக்குமோ? இந்த முடிவுக்கு அவளால் வர முடியவில்லை, பெரியகருப்பன் செட்டியார் நாளைக்கு இறந்துவிட்டா? பிரபாகரின் பதைப்பையும் அவசரத்தையும் பார்த்தால், அவர் மறுநாளே இறந்து போய் விடும் நிலையில் இருப்பதாகவே தோன்றியது. இருந்தாலும் போன தடவை அவரை மனோரமா பார்க்கச் சென்ற போது, அவர் தேகநிலை ஒன்றும் அவ்வளவு மோசமாக இல்லை. ஒன்றும் விளங்காமலே அன்றிரவு படுக்கையில் படுத்து வெகு நேரம் புரண்டு கொண்டு கிடந்தாள்.

மறுநாள் காலை அவள் காப்பி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது. மோகன் அங்கு வந்தான். தன் 'ஒர்க் ஷாப்பில் நடந்த துப்பாக்கித் திருட்டைப் பற்றி அவன் கூறியபோது அவள் திடுக்கிட்டு விட்டாள் பெரியகருப்பன் செட்டியார் இறந்து விடுவாரா? — 'துப்பாக்கி' திருட்டு? இந்தச் சமயத்தில் வெளிக் கதவை யாரோ 'டொக்—டொக்' என்று தட்டும் சப்தம் கேட்டது. மோகன் எழுந்து போய்க் கதவைத் திறந்தான். நாடக செகரெட்டரி செல்லப்பா உள்ளே நுழைத்தான். செல்லப்பாவை சாதாரணமாகப் பார்க்கும் பொழுதே, ரொம்பவும் களைத்து அலுத்துப் போனவன் மாதிரி இருப்பான். இன்று நோயில் அடிபட்டவன் மாதிரி இருந்தான். அவன் முகம் பிரேதம் மாதிரி சவக்களை தட்டியிருந்தது.

மனோரமா வியப்போடு, "என்ன அண்ணா? உடம்புக்கு என்ன?" என்று பதறியவளாய்க் கேட்டாள்.

"ஒன்றுமில்லை. உன்னிடம் ஒரு தகவல் தெரிவித்துப் போக வந்தேன், நம்முடைய மாய மனிதன்' டிராமாவை சனிக்கிழமை முதல் நிறுத்தப் போகிறோம்!" எல்லாம் முடிவு

கட்டத்தை அடைந்து விட்டதா என மனோரமா திடுக்கிட்டாள். ஆனால் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை.

"ரொம்ப சந்தோஷம்! அப்பாடா; சனி ஒழிந்ததா?" என்று பெரு மூச்சு விட்டாள் மனோரமா.

"நானும் ஒழிந்து விடுவேன் போலத் தோன்றுகிறது!" என்று வேதனையோடு கூறினான் செல்லப்பா.

"ஏன்; சோம சேகர், தான் அளித்து வந்த ஆதரவை நிறுத்திக் கொண்டாரா?"

"கிட்டத்தட்ட அதைப் போலத் தான். ஏனென்றால் வாராவாரம் அவர் அனுப்பி வரும் 'செக்' 'நேற்றே வந்திருக்க வேண்டிய தவணை. இன்னும் வரவில்லை. இது விஷயத்தில் நம்பி ஏமாறுவதற்கு எனக்குத் தைரியமில்லை!" என்றான் செல்லப்பா,

அவனைப் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது. முன் தினம் இரவு பிரபாகர் எப்படி ஆடிப் போய் இருந்தானோ, அதைப் போல செல்லப்பாவும் இருந்தான். நிம்மதி இல்லாமல் உட்காருவதும் எழுந்திருப்பதுமாக இருந்தான்.

"யார் அந்த மர்மமனிதன் சோமசேகர்? அவன் தொழில் என்ன?" என்று கேட்டான் மோகன்.

"எனக்குத் தெரியாது! ஏதோ வர்த்தகம் போலிருக்கிறது. நான் கூட அவரை நேரில் போய்ப் பார்க்கலாம் என்று நினைத்தேன். ஆனால் தொந்தரவு என்னவென்றால், இன்று இரவு நடிகர்களுக்கு எல்லாம் சம்பளப் பட்டுவாடா தினம், 'செக்' இன்றைக்குள் வந்து விட்டால் பரவாயில்லை. ஒன்றும் சங்கடம் இருக்காது. இதில் அதிகச் சம்பளம் உனக்குத்தான், இன்று தெய்வாதீனமாக ஏதாவது அசந்தர்ப்பம் நேர்ந்து விட்டால், நீ அடுத்த வாரம் சம்பளம் வாங்கிக் கொள்ள முடியுமா?" என்று மனோரமாவைச் செல்லப்பா கேட்டான்.

மனோரமா சிறிது யோசித்தாள். செல்லப்பா நடத்தும் கம்பெனியாக இருந்தால் நிச்சயம் நம்ப முடியாது. ஆனால் இப்பொழுது பணப் பொறுப்பை, ஒரு பெரிய புள்ளி மேற்கொண்டு இருப்பதால் நம்பலாம்.

"சரி; வாங்கிக் கொள்கிறேன்! ஆனால், சோமசேகர் நிச்சயமாக."

"நொடித்துப் போய்விட்டாரென்றா? நான் அப்படி நினைக்கவில்லை. அவர் ஒரு விசித்திரமான மனிதர்!" என்று சாதாரணமாகச் சொன்னான் செல்லப்பா. பிறகு, 'சரி; நான் வருகிறேன்" என்று புறப்பட்டு விட் டான்.

"நோயால் அவஸ்தைப்படுகிறான்!" என்றான் மோகன். "வியாதியாலாயா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் மனோரமா.

"மனோவியாதி, பணம் வரவில்லை என்பதனால் மட்டும் இவ்வளவு ஓடிந்து போயிருக்க மாட்டான்; இன்னும் ஏதோ ஒரு பெரிய மர்ம சமாச்சாரம் அவனை வாட்டுகிறது!" என்று கூறி விட்டு மோகன் பறப்பட்டான்.

மனோரமா வீட்டை விட்டுக் கிளம்பிய மோகன் நேரே இன்ஸ்பெக்டர் துரைசாமியைப் போய்ச் சந்தித்தான். அவரிடம் முக்கிய தகவல்கள் எதுவும் இல்லை. துப்பாக்கியின் அடையாளங்களைக் குறித்து அனுப்பி இருப்பதாகவும், எங்காவது மூர் மார்கெட்டிற்கோ வேறு இடங்களுக்கோ விற்பனைக்கு வந்தால் பிடித்து விடுவார்கள் என்றும் துரைசாமி கூறினார். "ஆனால் இதனால் ஒன்றும் பிரயோஜனம் ஏற்படாது. அதை விற்க மூர்மார்கெட்டுக்குக் கொண்டு வர மாட்டான்" என்றார். பிறகு மோகனிடம், "உங்களுக்கு மகா கோடீஸ்வரர் மகா மர்ம மனிதர் சோமசேகரைத் தெரியுமா?" என்று கேட்டார்.

"நேரிடத் தெரியாது " என்றான் மோகன்.

நான் இப்பொழுது தான் அன்னிமீரா ஹோட்டலுக்குப் போய் அங்கு அவனைப் பற்றி விசாரித்தேன். அவர்கள் யாராலும் அவனைப் பற்றிய சரியான விவரங்கள் கொடுக்க முடிய வில்லை. விருந்து சமயங்களில் தான் அவன் அங்கே வருவானாம். அதற்கு ஏற்படும் செலவை முன்பணமாகவே ரொக்கமாகக் கொடுத்து விடுவானாம். அவ்வளவு தான் அவர்களுக்குத் தெரிகிறது" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

"அவன் விஷயத்தில் இப்பொழுது கொஞ்சம் அக்கறை கொண்டிருக்கிறீர்களோ?" என்று மோகன் கேட்டு விட்டு, அன்று செல்லப்பா மனோரமாவைச் சந்தித்துக் கூறிய விவரங்களை எல்லாம் சொன்னான்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி மோகன் கூறிய விவரங்களைச் சுவாரஸ்யமாகக் கவனித்தார். அவனுக்கு பாங்க் கணக்கு வேறு இருக்கிறதோ? சரிதான். கொழுத்த புள்ளிதான் போலிருக்கிறது. இந்தப் பணம் படைத்த ஆட்கள் எல்லாம் எதற்காக நாடகக்காரர்களைக் கட்டி அலைகிறார்கள் என்று தான் ஆச்சரியமாக இருக்கிறது.'' என்றார்.

"செல்லப்பாவை நீங்கள் பிடித்து விசாரித்தால் அவனுக்கு நிறைய விவரங்கள் தெரிந்திருக்கும்" என்றான் மோகன்.

அவனா? அந்தப் பயல் ஒரு வார்த்தை வெளியிட மாட்டானே! "அவனை எனக்கு நன்றாகத் தெரியும்!'' என்றார் துரைசாமி.

"எது எப்படி இருந்தாலும் அவனுக்குத் தான், சோமசேகரோடு இப்பொழுது தொடர்பு இருக்கிறது. நாடகம் நடத்தவே அவர் தானே பணம் கொடுக்கிறார்" என்றான் மோகன்.

அன்று மத்தியானம் சாப்பாட்டிற்காக, 'பஸோட்டா' ஹோட்டலில் நுழைந்தான் மோகன். நுழையும் பொழுதே முன் ஹாலில், தனக்குப் பிடிக்காத ஒருவர் உட்கார்ந்திருப்பதைக் கவனித்தான்! ஜேவியரும் ராமையாவும் ஒரு மேஜை அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள், மோகனைப் பார்த்ததும் ஜேவியர் புன்னகை செய்தான், மோகன் பதிலுக்குப் புன் சிரிப்புச் சிரித்தான். ராமையா முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

மோகன் அந்த ஹோட்டலுக்குள் வந்து நுழைவதற்தச் சில வினாடிகளுக்கு முன்புதான், அவர்கள் இருவரும் அங்கு வந்தார்கள். ராமையா ஒரு விஷயத்தைப் பற்றி விவாதிக்கப் பேச்சை ஆரம்பிக்கும் பொழுது எல்லாம், ஜேவியர் வேர எதை எதையோ கூறிப் பேச்சை மேலே தொடர முடியாமல் செய்து கொண்டிருந்தான். தெருவில் போகிறவர்களைப் பற்றியும், கார்களைப் பற்றியும் மற்றும் இன்னும் என்னென்ன உண்டோ அவைகளைப் பற்றியும் எல்லாம் பேசினானே தவிர, ராமையா சொல்ல வந்த விஷயத்தைச் சொல்வதற்கு விடவில்லை, கடைசியாக ராமையா பொறுமை இழந்து, 'சரி; இப்பொழுது அந்தத் துப்பாக்கி விஷயமாக என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான்.

“துப்பாக்கி?" என்று எங்கோ மனதை வைத்துக் கொண்டு கேட் டான் ஜேவியர். பிறகு, "நல்ல வேளையாக இன்று நீயே என்னைச் சந்தித்தாய். நான் உன்னிடம் கூறிய திட்டத்தைக் கைவிட வேண்டியது தான்!" என்றான்.

"நீ என்ன சொல்கிறாய்?" என்று பிரமித்துப் போய்க் கேட்டான் ராமையா, அவன் முகம் வெளுத்து விட்டது.

"ஆமாம். அந்தத் துப்பாக்கி ஸைலன்ஸர்' செய்யும் முறையையும் அந்த உரிமையையும் மலேசி யாக்காரன் ஒருவனுக்கு மோகன் விற்று விட்டானாம். அவன் உலகம் முழுவதற்கும் உரிமைபைப் பதிவு செய்து கொண்டு விட்டானாம். இனிமேல் அதைச் செய்யும் முறை தெரிந்தும் பிரயோசனமில்லை. வேறு யாரும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு விட்டது" என்றான் ஜேவியர்.

“அப்படியானால்... அப்படியானால் அது' வேண்டாம் என்றா சொல்கிறாய்?" என்று திக்கித் திக்கிக் கேட்டான் ராமையா.

"ஆமாம். பணத்திற்காக நீ அவ்வளவு ஆபத்துக்கு உடன் பட்டுக் கஷ்டப்பட வேண்டாம். வேறு வழிகள் என்ன இருக்கிறது என்று பார்க்கலாம்!"

நன்றாகப் பார்த்தாய் போ! நான் அதை எடுத்து வந்து விட்டேன்! நேற்று இரவு தான் போய்க் கொண்டு வந்தேன்!" என்று வெறியோடு கூறினான் ராமையா.

"அடபாவி! உன் அதிர்ஷ்டம் இப்படியா இருக்க வேண்டும்?" என்று அங்கலாய்த்தான் ஜேவியர்.

ராமையா, பிரமை பிடித்தவன் போல கொஞ்ச நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தான். "இன்று இரவுக்குள் அந்தக் கிராதகனுக்கு இரண்டாயிரம் ரூபாய் தருவதாகக் கூறியிருந்தேன். அதைக் கொடுக்க முடியாது! கொடுக்க முடியாது" என்று குமுறினான்.

"கொடுக்கா விட்டால்... கொடுக்கா விட்டால்" என்று நினைத்ததுமே, வெறி கொண்டவன் கண்களைப் போல, அவன் கண்கள் ஒளி வீசி நின்றன. அவை ரத்தப்பசி கொண்டலைவதைப் போல ஜேவியருக்குத் தோன்றியது.

எதுவும் பேசத் தைரியம் மில்லாமல் மௌனமாக ராமையா எதிரே உட்கார்ந்திருந்தான். எவ்வளவு நேரம் இருவரும் அப்படி உட்கார்ந்திருந்தார்களோ தெரியாது. மோகன் எழுந்து போனதைக் கூட அவர்கள் கவனிக்கவில்லை.

அன்று மத்தியானம் சாப்பாட்டை முடித்துவிட்டு மனோரமா ஒரு நாவலைப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அப்பொழுது பெரிய கருப்பன் செட்டியார் வீட்டிற்குப் பால் ஊற்றும் பால்காரியின் மகன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து மனோரமாவிடம் கொடுத்தான். பெரிய கருப்பன் செட்டியார் இதை உங்களிடம் அவசரமாகக் கொடுக்கச் சொன்னார்" என்றான். மனோரமா அந்தக் கடிதத்தை வாங்கிக் கொண்டதும் பையன் ஓடி விட்டான்.

மனோரமா அவசரமாகக் கவரைப் பிரித்தாள். அதற்குள் ஒரு துண்டுக் காகிதத்தில் பென்ஸிலால் நாலைந்து வரிகள் எழுதப்பட்டிருந்தன, கடிதத்தின் மறு புறத்தில் ஏதோ டைப் அடித்த கணக்கு விவரங்கள் இருந்தன. அதிலிருந்து (பாங்கில் பணம் போட்டு வைத்திருக்கும் செட்டியாரின் கணக்கு வரவு பற்றுகளுக்கு ஒரு நகல் போல் விளங்கும்) 'பாங்க் ஸ்டேட்மெண்'டைக் கிழித்து அதில் எழுதி அனுப்பி இருக்கிறார் என்று மனோரமா புரிந்து கொண்டாள். கடிதத்தை அவசரமாகப் படித்துப் பார்த்தாள்:

"உடனே பிரபாகரை அழைத்துக் கொண்டு பிற்பகல் மூன்று மணிக்கு இவ்விடம் வரவும். பிரபாகர் நேற்று இங்கே வந்திருந்தான். ஆனால் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. இன்ஸ்பெக்டர் துரைசாமியையும் கூடவே அழைத்து வரவும். கூட இன்ஸ்பெக்டர் வருவது, பிரபாகருக்கோ, மற்ற யாருக்கா தெரியக் கூடாது.

பெ.கரு.

கடிதத்திலிருந்து, நிலைமையின் நெருக்கடியைப் புரிந்துக் கொண்டாள். மனோரமா. அப்பொழுது மணி இரண்டாகி இருந்தது. உடனே மோகனுக்கு டெலிபோன் செய்து பார்த்தாள். மோகன் வீட்டில் இல்லை இன்ஸ்பெக்டர் துரைசாமி மோகனுக்குத் தான்

நெருங்கிய நண்பர், அவரைத் தானாக டெலிபோன்' மூலம் அழைத்துப் பேசவும் அவள் விரும்பவில்லை. சந்தியா பாங்க்'கிற்கு டெலிபோன் செய்து, பிரபாகர் இருக்கிறாரா என்று விசாரித்தாள். பிரபாகர் அங்கு இல்லை. அவர் வீட்டுக்குப் போய் விட்டதாக ஒரு குமஸ்தா கூறினான் வீட்டுக்கு டெலிபோன் செய்தாள், டெலி போனை கையில் எடுக்கவே அங்கு யாரும் இல்லை. மணி கண கண'வென்று அடித்துக் கொண்டே இருந்தது. வெகு நேரம் வரையில் பொறுத்துப் பார்த்தாள் பதிலுக்காக.

எவ்வளவு நேரம் பொறுத்தும் பயன்படவில்லை, பிறகு மறுபடியும் பாங்கிற்கு 'போன்' செய்தாள். இந்தச் சமயத்தில் பாங்க் அக்கவுண்டெண்டே பேசினார். "பிரபாகர் இன்று பங்கிற்கே வரவில்லை " என்றார் அவர்.

"லீவில் போய் விட்டாரா?" என்று கேட்டாள் மனோரமா.

"எனக்கு விவரம் சரியாகத் தெரியவில்லை அவர் லீவுக்கு விண்ணப்பம் போட்டிருந்தார். ஆனால் இன்னும் லீவ் சாங்ஷன்' ஆகவில்லை. ஆகவே போயிருக்கமாட்டார். இன்று காலையிலிருந்து அங்கு வரவில்லை; அவ்வளவு தான் சொல்ல முடியும்" என்றார் பாங்க் அக்கவுண்'டெண்ட்.

மனோரமாவுக்கு ஒரே திகிலாக இருந்தது, டெலிபோனை விட்டு எழுந்து வந்து தன் வீட்டு ஜன்னலின் மேல் கவலையாக உட்கார்ந்திருந்தாள். பிரபாகர் தன்னிடம் கையெழுத்து வாங்கிப் போனதைப் பற்றிக் கூட அவள் மோகனிடம் இன்னும் சொல்லவில்லை. அந்த தஸ்தாவேஜியில் செட்டியார் கையெழுத்து இருந்ததால், அதைச் சாதாரண விஷயமாகவே அவள் கருதினாள். இப்பொழுது நிலவரம் இருப்பதைப் பார்த்தால் அவளுக்குப் பயமாக இருந்தது.

மறுபடியும் எழுந்து டெலிபோன் இருக்கும் இடத்திற்குப் போய் மோகனுக்கு டெலிபோன் செய்தாள். நல்ல வேளையாக அவனே போனில் பேசினான். மனோரமா பதட்டத்தோடு, செட்டியார் அனுப்பிய குறிப்பைப் பற்றிக் கூறினாள், பிறகு பிரபாகர் பாங்கிற்கு வராத விவரத்தையும் சொன்னாள். மோகன் குரலில் கலவரம் தொனித்தது.

"பிரபாகர் இரண்டு மூன்று வாரங்களுக்கு வரமாட்டான் என்றும், வெளியூர் போகிறான் என்றும் அவனது வேலைக்காரன் இப்பொழுது தான் என்னிடம் தகவல் அறிவித்து விட்டுச் சாவியையும் கொடுத்து விட்டுப் போயிருக்கிறான்!" என்றான் மோகன். மனோரமாவுக்குப் 'பகீரென்றது', "நீங்கள் உடனே இன்ஸ்பெக்டர் துரைசாமியை அழைத்துக் கொண்டு இங்கே வாருங்கள்" என்று பதறினாள். கொஞ்ச நேரத்தில் ஒருகாரில் மோகனும் இன்ஸ்பெக்டர் துரைசாமியும் அவள் வீட்டை அடைந்தார்கள்.

மனோரமா செட்டியார் அனுப்பிய கடிதத்தை அவர்களிடம் கொடுத்தாள்.

அதைப் படித்து விட்டு இன்ஸ்பெக்டர் துரைசாமி, "பெரிய கருப்பன் செட்டியாருக்குப் பார்வை அவ்வளவு நன்றாகத் தெரியாதோ?" என்று கேட்டார்.

"ஆமாம், ஆனால் அதை அவர் ஒப்புக் கொள்வதில்லை. ஆனால் இது அவருடைய கையெழுத்துத்தான்!" என்றான் மோகன்.

பிரபாகரைச் சந்திக்க முடியாவிட்டாலும் தாங்களாவது உடனே செட்டியாரைப பார்க்கப் போவதென்று முடிவு செய்து புறப்பட்டார்கள்.

செட்டியாரின் பங்களாவிற்குச் சிறிது தூரம் இருக்கும் பொழுது, 'படபட' வென்று ஒரு சத்தம் கேட்டது. பிறகு ஒருவினாடி அது நின்று விட்டது. பிறகு மீண்டும் 'படபட' வென்ற அந்தச் சப்தம் அவர்களை நோக்கு வருவது தெரிந்தது. சப்தத்தைத் தொடர்ந்து ரோடு மூலைத் திருப்பத்திலிருந்த ஒரு 'பழைய கால' மோட்டார் வண்டி 'படபட' வென்ற சப்தத்தோடு புகையைக் கக்கிக் கொண்டு பறந்து வந்தது. அதை ராமையா ஓட்டிக் கொண்டு வந்தான். அந்தக் கார் தங்களுடைய காரைத் தாண்டிச் சென்றதும் இன்ஸ்பெக்டர் துரைசாமி "குப்பை வண்டிக்குக் கூட லாயக்கில்லாத காரை சென்னை மாநகரத்தில் வெட்கம் இல்லாமல் ஓட்டிக் கொண்டு போகிறானே பாருங்கள்!" என்றார்.

பெரிய கருப்பன் செட்டியார் பங்களாவை அடைந்ததும், அவர் 'தள்ளு வண்டியில் அமர்ந்து மாமரத்தடியில் உட்கார்ந்து இருப்பதையும், எதிரே பாலு பத்திரிகை படித்துக் கொண்டு இருப்பதையும் கவனிததார்கள். நேராக அங்கு சென்றார்கள்.

அவர்கள் வந்த சப்தத்தைக் கேட்டு, பாலு படிப்பதை நிறுத்தி விட்டு செட்டியார் முகத்தைப் பார்த்தான்.

"அட, தூங்கி விட்டாரே!" என்று வியந்து கொண்டு தன் இருப் பிடத்தை விட்டு எழுந்தான்.

செட்டியார் நாற்காலியில் உட்கார்ந்தபடியே தலையைத் தொங்க விட்டபடி இருந்தார். அம்மாதிரி உறங்குவது அவர் ஒருவரால் தான் முடியும். மோகன் மனோரமாவிடம், "அவரை எழுப்பு" என்றான்.

"செட்டியாரே" என்று மெதுவாகக் கூப்பிட்டாள் மனோரமா. திரும்பத் திரும்ப நாலைந்து முறை உரக்கவும் கூப்பிட்டாள். பதில் இல்லை .

இன்ஸ்பெக்டர் துரைசாமி மெதுவாக அவர் பின் பக்கம் போய்ப் பார்த்தார். பிறகு முன் பக்கம் வந்து, செட்டியார் போர்த்தி இருந்த அங்கவஸ்திரத்தை இழுத்துப் பார்த்தார். பிறகு அதை மெதுவாக மூடிவிட்டு, மனோரமாவிடம் வந்தார். "நீங்கள்

உடனே உங்கள் வீட்டுக்கு போங்கள். நாங்கள் பிறகு வருகிறோம்!" என்று பரிவோடு கூறினார். மனோரமாவின் முகம் சவம்போல வெளுத்து விட்டது.

"நடுங்கிய குரலில், அவர் இறந்து விட்டாரா?" என்று கேட்டாள். ஆம் என்று தலையை ஆட்டினார் இன்ஸ்பெக்டர். தள்ளாடிய வண்ணம் மனோரமா காருக்குச் சென்றாள்.

அவள் தலை மறைந்த பிறகு இன்ஸ்பெக்டர் "முதுகுப் பக்கமாகச் சுட்டுக் கொலை செய்தது இருக்கிறார்கள், காயத்தைப் பாருங்கள்" என்று மோகனிடம் காட்டினார். அதைப் பார்த்து மோகனின் ரோமங்கள் குத்திட்டு நின்றது!.

## 14. பிரபாகரைக் காணோம்!

ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து வந்த 'ஆம்புலன்ஸ்' காரில் பெரிய கருப்பன் செட்டியாரின் சவத்தைத் தூக்கிப் போட்டு அனுப்பி விட்டு, இன்ஸ்பெக்டர் துரைசாமி, மோகனோடு வீட்டுக்குள் நுழைந்தார். கூடவே வேலைக்கார பாலுவும் அழுது கொண்டே போனான். இதற்குள், அந்த எல்லையைச் சேர்ந்த போலீஸ் சப்—இன்ஸ்பெக்டரும் வந்து விட்டார்.

எல்லோரும் கீழ்த்தளத்திலே சாப்பாட்டுக் கூடத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தார்கள். துரைசாமி பாலுவை பார்த்து நடந்தது எல்லாம் ஒன்று விடாமல் சொல்லு!" என்றார். பாலு அழுது கொண்டே தலையை ஆட்டினான். "எனக்கு ஒன்றும் தெரியவில்லை!... ஐயாவுக்கு எவ்வளவு கோரமான சாவு வந்தது!" என்று விக்கி விக்கி அழுதான்.

"யாராவது அவரைப் பார்க்க வந்தார்களா?"

"யாரும் வரவில்லை!" "சரி; மத்தியானம் ஒரு மணிக்கு அவர் எங்கே இருந்தார்?"

“மேலே; தன்னுடைய அறையில் உட்கார்ந்திருந்தார். மேஜை மேல் வைத்து என்னவோ எழுதிக் கொண்டிருந்தார், எனனைக் கண்டதும் கையை வைத்து மறைத்துக் கொண்டார். நான் அது என்ன என்று பார்க்கவில்லை."

"பிறகு?"

"அப்பொழுது தான் பால்காரப் பையன் பாலைக் கொண்டு வந்து கொடுத்தான். அவன் பேச்சுக் குரலைக் கேட்ட செட்டியார் அவனை மேலே கூப்பிட்டார். அவனிடம் என்னவோ கடிதத்தைக் கொடுத்து அதை எங்கோ கொடுக்கச் சொன்னார் போலிருக்கிறது. அவன் தலை தெறிக்க ஓடினான்!" என்றான் பாலு.

"ஓ! அது மனோரமாவுக்கு அனுப்பிய கடிதம்!" என்றான் மோகன். இனஸ்பெக்டர் துரைசாமி சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு பாலுவிடம், "அவர் இதைப் போல அடிக்கடி லெட்டர்கள் அனுப்பு வாரோ?" என்று கேட்டார்.

"இல்லை" என்ற பாவனையில் தலையை ஆட்டினான் பாலு. "அவர் உன்னிடம் எந்தக் கடிதமும் எழுதிக் கொடுத்து அனுப்புவதுண்டா ?"

"இல்லை". பாவம், செட்டியார் ரொம்ப சந்தேகப் பிராணி, அவருக்கு கண் சரியாகத் தெரியாது. அதனால் மற்றவர்கள் தனக்குத் தெரியாமல் தன் கடிதங்களைப் படிப்பதாகவும் கதவு மறைவில் நின்று ஒட்டுக் கேட்பதாகவும் எண்ணிக் கொண்டு சீறி விழுவார். அதனால் தான் எழுதும் கடிதங்களை வேறு யாராவது "வீதியோடு போகிறவனை விட்டுத்தான் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கச் சொல்லுவார்!"

"நேற்று யாராவது அவரைப் பார்க்க வந்தார்களா?"

"நேற்று இரவு ராமையா வந்திருந்தார். அவர். செட்டியாருக்குப் பணம் தரவேண்டும். அது விஷயமாக இரண்டு பேருக்கும் தகராறு ஏற்பட்டது!"

"தகராறு என்றால்? சண்டை போட்டுக் கொண்டார்களா?"

"ஆமாம். என்னைச் செட்டியார் கூப்பிட்டு, ராமையாவை உதைத்து விரட்டச் சொல்லி சப்தம் போட்டார்."

இன்ஸ்பெக்டர் துரைசாமி தமது டயரியில் என்னவோ குறித்துக் கொண்டார்.

"வேறு யார் வந்தார்கள்?" என்று பாலுவைக் கேட்டார்.

"நேற்று வேறு யாருமில்லை.. ம் பிரபாகர் வந்திருந்தார்." இன்ஸ்பெக்டர் துரைசாமி அதையும் குறித்துக் கொண்டார்.

"சரி; இன்று என்ன நடந்தது என்று விவரமாகச் சொல்லு"

"செட்டியார் மத்தியானம் சாப்பிட்டதும், மாடிக்குப் போய் ஒரு சீட்டு எழுதி பால்காரப் பையனிடம் கொடுத்து அனுப்பியதும், என்னைக் கூப்பிட்டார். நான் போனேன். "பேப்பரை எடுத்துப்படி" என்றார். படிக்க ஆரம்பித்தேன். சரி சரி; நிறுத்து!" என்று கோபமாகப் கூறினார். அவர் மனம் ஏதோ சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று புரிந்து கொண்டேன். படிப்பதை நிறுத்தி விட்டுக் கொஞ்ச நேரம் அங்கேயே இருந்தேன். "நீ கீழே போ!' என்று சத்தம் போட்டார். நான் கீழே வந்துவிட்டேன். பிறகு இரண்டரை மணிக்கு மறுபடியும் கூப்பிட்டார். தோட்டத்துக்குப் போகவேண்டும் என்றார். தள்ளு வண்டியில் வைத்து அவரைத் தள்ளிக் கொண்டு போனேன். அங்கே மரத்தடியில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் காட்டிக் கொண்டிருந்தேன், நடுவில் தண்ணீர் குடிக்க ஒருமுறை உள்ளே எழுந்து போயிருக்கிறேன்" என்றான் பாலு.

"அப்பொழுது உனக்கு எதுவும் சப்தம் கேட்டதா?" பாலு சிறிது யோசித்தான்.

"ஒரு கார் தடதட வென்று போயிற்று — அது சிறிது நின்று மறுபடியும் தடதடவென்று சப்தத் தோடு புறப்பட்டுச் சென்றது."

இதுவரை ராமையாவின் காரை மறந்திருந்த துரைசாமியும் மோகனும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"எதுவும் துப்பாக்கிச் சப்தம் கேட்டதா?"

பாலு தலையை ஆட்டி விட்டு, "கார் சப்தந்தான் காது செவிடாகும் படி கேட்டது" என்றான். "செட்டியார் முனகவோ துள்ளவோ இல்லையா?"

" இல்லை !"

இன்ஸ்பெக்டர் துரைசாமி சிறிது நேரம் யோசித்தார். பிறகு, "ஏன்? பாலு செட்டியார் பிணமாக இருப்பதை நாம் கண்டு பிடித்தோமே அதற்கு எவ்வளவு நேரத்திற்கு முன்னால் செட்டியாரை உயிரோடு பார்த்தாய்?" என்று கேட்டார்.

"அதற்கு ஐந்து நிமிஷங்களுக்கு முன் அந்தச் செய்தி வேண்டாண்டா, 'வேறு ஏதாவது படி!' என்று என்னிடம் சொன்னார். நான் படித்தேன்" என்றான் பாலு. இன்ஸ்பெக்டர் துரைசாமி வீட்டை ஒருமுறை நன்றாகப் பார்த்தார். பிறகு "ஏன் இவ்வளவு குப்பையாக இருக்கிறது?" என்று கேட்டார்.

"நான் ஒருவன் தான் எல்லாவற்றையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. என் மனைவியும் இங்கே முதலில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பெரிய 'வம்பி' அதனால் அவளைத் துரத்தி விட் டேன்!" என்றான் பாலு.

சமயற் கட்டில் ஜன்னல் கண்ணாடி உடைந்திருப்பதைப் பார்த்த இன்ஸ்பெக்டர் "அது எப்படி உடைந்தது?" என்று கேட்டார். சில தினங்களுக்கு முன் யாரோ ஜன்னலை உடைத்துக் கொண்டு வந்ததையும் இதற்காகப் போலீஸை அழைத்து வீண் ஆரவாரம் செய்ய வேண்டாம் என்று செட்டியார் தடுத்து விட்டதையும், பாலு எடுத்துக் கூறினான்.

துப்பறியும் இன்ஸ்பெக்டர் துரைசாமியும், வந்திருந்த ஸப்—இன்ஸ்பெக்டரும் வீடு முழுவதும் சோதனை செய்து பார்த்தார்கள். செட்டியாரின் சாவிக்கொத்தை இன்ஸ்பெக்டர் எடுத்து வைத்துக் கொண்டார். வேறு அங்கு உபயோகமான தடயம் எதுவும் கிடைக்க வில்லை.

கடைசியாக எல்லோரும் முன் ஹாலுக்கு வந்தார்கள், துரைசாமி ஒரு ஜன்னலோரமாகப் போய்நின்று வெகுநேரம் யோசித்துக் கொண்டிருந்தார். பிறகு மோகனிடம், அமெரிக்காவிலிருந்து ஒரு துப்பறியும் அதிகாரி நமது நகரத்திற்கு

வந்திருக்கிறார். அவர் பெயர் வேல், அவரிடம் இந்தக் கொலையைச் சொல்லி அவர் யோசனையைக் கேட்டுப் பார்க்கலாம்" என்றார். பிறகு தம் கைக்கெடியாரத்தைப் பார்த்தார்.

"சரி; பிரபாகர் சமாச்சாரமே தெரியவில்லையே! நாம் அவர் பங்களாவைப் போய்ப் பார்க்கலாம்" என்றார் துரைசாமி. மோகன், தன்னிடம் அவர் பங்களாவின் சாவி இருப்பதைக் கூறினான். எல்லோரும் அங்கு போனார்கள்.

எதிர்பாராத விதமாகத் தோட்டத்தில், அந்த வீட்டைப் பெருக்கும் வேலைக்காரி நின்று கொண்டிருந்தாள். இன்ஸ்பெக்டர் துரைசாமி, "உங்கள் ஐயா இருக்கிறாரா?" என்று கேட்டார்.

"இப்பொழுதுதான் வீட்டைப் பூட்டிக் கொண்டு புறப்பட்டார்" என்றாள் அவள்.

இதைக் கேட்டதும் அவர்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "இப்பொழுதுதான் போனாரா?"

"ஆமாங்க! கடிகாரத்திலே காலு அடிச்சுது! அவர் கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்பினார்!" என்று தீர்க்கமாகச் சொன்னாள்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி கடிகாரத்தைப் பார்த்தார். மணி 4—25 "சாவி என்னிடம் இருக்கிறதே!" என்றான் மோகன்.

"டூப்ளி கேட்டு சாவி அவரிடம் எப்பவும் இருக்கும்!" என்றாள் வேலைக்காரி.

அவசர அவசரமாக வீட்டைத் திறந்து கொண்டு, துரைசாமியும் மோகனும் உள்ளே சென்றார்கள். பிரபாகர் அவசரமாகப் புறப்பட்டுப் போயிருக்கிறான் என்று தெளிவாகத் தெரிந்தது. ஒரு சில்க் 'புஷ்' கோட்டைக் கழற்றி ஸ்டாண்டில்' தாறுமாறாகப் போட்டிருந்தான். அந்தக் கோட்டின் பையில் அவன் கட்டிக்கொள்ளும் தங்கக் கைக் கடிகாரமும் எண்பது ரூபாய் ரொக்கமும் இருந்தன. புறப்பட்ட அவசரத்திலும், பதட்டத்திலும், அதை எடுத்துக் கொள்ள மறந்து விட்டுப் போயிருக்கிறான். மேஜைமீது மோகனுக்கு விலாசம் எழுதி, ஒரு சிறு கடிதம் கிடந்தது. மோகன் அதை ஆவலோடு எடுத்துப் பார்த்தான். "நான் அவசரமாகச் செல்கிறேன். அந்த மிருகங்கள் என்னை ஏமாற்றிவிட்டன'' என்று எழுதியிருந்தது. "மிருகங்கள் என்றால்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர். மேல் அதிகாரிகளாக இருக்கும்!" என்றான் மோகன்.

பிரபாகரின் அறையை எல்லாம், துரைசாமி துருவி ஆராய்ந்து பார்த்தார். அவன் படுக்கும் கட்டிலின் அடியில் ஒரு துப்பாக்கி இருந்தது. அதில் 'ஸைலன்ஸர்' ஒன்று பொருத்தி வைக்கப்பட்டிருந்தது. அதைக் கையில் எடுத்த துரைசாமி, "மோகன்" என்று

ஆச்சரியத் தோடு கூப்பிட்டார். மோகன் அவசரமாக அங்கே போனான். இன்ஸ்பெக்டர் அந்தத் துப்பாக்கியை அவனிடம் கொடுத்தார்.

"ஆமாம்; இது தான் பிரபாகர் துப்பாக்கி. இந்த 'ஸைலன்ஸர்' அமெரிக்காவில் செய்யப்படுவது. இதை பிரபாகர் அமெரிக்கா போய் வந்தபோது வாங்கி வந்திருக்கிறான். இதை நான் முன்பே பார்த்திருக்கிறேன்" என்றான் மோகன்.

"இந்தத் துப்பாக்கி அவருக்கு ஏன்?"

"அவன் துப்பாக்கி சுடுவதில் நிபுணன் என்று பெயர் பெற்றவன் இல்லையா? அது, அவனுக்குப் பொழுது போக்கு!" என்றான் மோகன்.

" நல்ல பொழுது போக்குத்தான்"

இன்ஸ்பெக்டர் துரைசாமி அந்தத் துப்பாக்கியைச் சோதனை செய்து பார்த்தார். அதைச் சமீபத்தில் உபயோகப்படுத்தியதாக எந்த அறிகுறியும் இல்லை. அப்படி உபயோகித்திருந்தால், அதைச் சுத்தம் செய்திருக்க வேண்டும். அதில் எந்தவிதத் தடயமும் இல்லை. அந்தத் துப்பாக்கியை எடுத்து வைத்துக் கொண்டார்.

அந்தச் சமயத்தில் மோகன் திடீரென்று, "இந்த ஜன்னல் நாம் வரும் பொழுதே திறந்து கிடந்ததே!" என்று ஆச்சரியத்தோடு கூறினான். இன்ஸ்பெக்டர் உடனே அந்த ஜன்னலருகே போய் நின்று பார்த்தார். அங்கிருந்து பார்த்தால், பெரிய கருப்பன் செட்டியார் வீடும் தோட்டமும் மிக அருகிலிருப்பது தெரிந்தது; செட்டியார் வழக்கமாகக் காற்று வாங்கும் மாமரத்தடி: ஜன்னலிலிருந்து 200 கஜ தூரத்துக்குள் தான் இருக்கும்! இந்த ஜன்னலிருந்து செட்டியார் கொலையுண்ட இடத்தை வெகு நன்றாகப் பார்க்கலாம்.

'உங்களுக்கு என்ன படுகிறது?'' என்று கேட்டான் மோகன், இன்ஸ்பெக்டர் ஒன்றும் சொல்லவில்லை. அவர் முகத்தில் ஒரு புன்னகை தோன்றியது. வீடு கூட்டுபவளை அழைத்து பிரபாகரின் வேலைக்காரனுடைய விலாசத்தை தெரிந்து கொண்டார். பிறகு மோகன் பக்கம் திரும்பி ‘‘சரி மனோரமாவைப் போய்ப் பார்த்து விட்டு, செட்டியாரின் சவ அடக்கத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள், நான் ஒரு இடத்திற்குப் போய்விட்டு, செட்டியார் வீட்டுக்கு வருகிறேன்!" என்று புறப்பட்டார்.

## 15.ஓடிப்போனவன் மோசடி...?

இன்ஸ்பெக்டர் துரைசாமி, சந்தியா பாங்க் கட்டிடத்தை நெருங்கியபோது, பாங்கை மூடும் நேரமரக இருந்தது. அங்கே 'அக்கவுன் டெண்'டும் கிளார்க்குகளும் தான் இருந்தார்கள். துரைசாமி அக்கவுண் டெண்டைச் சந்தித்து சில கேள்வி கேட்டார்.

"பிரபாகர் எங்கே போயிருக்கிறார் என்ற தகவல் எனக்குத் தெரியாது. அவர் லீவ் கேட்டிருந்தார். லீவைத் தலைமை ஆபீஸில் மறுத்து விட்டார்கள். இத்தகவல் இன்று காலையிலேயே எனக்குக் கிடைத்தது. உடனே டெலிபோன் மூலம் அவருக்குத் தெரிவித்தேன் அவர், தான் இன்றைக்கு 'பாங்குக்கு' வரப்போவதில்லை என்றும், என்னைக் கவனித்துக் கொள்ளும் படியும் சொன்னார்!"

"இதை நீங்கள் உங்கள் தலைமைக் காரியாலயத்துக்குத் தெரிவித் தீர்களா?" என்று கேட்டார் துரைசாமி.

"இல்லை. இதை எல்லாம் நாங்கள் குறித்து வைப்போம். மாதக் கடைசியில் தான், தலைமைக் காரியாலயம் போகும். அதோடு, பிரபாகர் தலைமைக் காரியாலயம் போய் மானேஜி ங் டைரக்டரைச் சந்தித்து எப் படியாவது 'லீவ்' பெற்று வரத்தான் போயிருக்கிறார் என்று நான் நினைத்தேன்— அது சரி; ஏன் அவருக்கு 'எதுவும்' நேர்ந்துவிட்டதா?" என்று கவலையோடு கேட்டார் அக்கவுன்டெண்ட்.

"ஒன்றுமில்லை என்று தான் நினைக்கிறேன். அது சரி; அவர் உங்கள் பாங்கியிலேயே தான் பணம் போட்டு வைத்திருக்கிறாரா?— அதாவது அவரது சொந்தப் பணமா?" என்று கேட்டார் துரைசாமி.

Dreamzzz

"இல்லை, ஏற்கனவே இங்கே கொஞ்சம் பணம் போட்டு வைத்தார். பிறகு அவர் ஷேர்கள் வாங்குவதும், பாற்பதமாகத் தொழில் செய்வதை எங்கள் பாங்க டைரக்டர்கள் விரும்பவில்லை என்று தெரிந்து கொண்டார். அதனால் தனது சொந்த விவகாரத்தை டைரக்டர்கள் தெரிந்து கொள்ளாமல் இருக்க வேண்டி, வேறு பாங்கு ஒன்றில் கணக்கை மாற்றிவிட்டார். எந்த பாங்கு என்று எனக்குச் சரியாகத் தெரியவில்லை அது; மிஸ்டர் துரைசாமி எதற்காக இந்த விசாரணை எல்லாம்?" என்று அக்கவுன்டெண்ட் கேட்டார்.

அன்று நடந்த கொலையைப்பற்றி இன்ஸ்பெக்டர் துரைசாமி இரண்டொரு வரிகளில் கூறினார்.

"பெரிய கருப்பன் செட்டியாருக்கு எங்கள் பாங்கில் தான் கணக்கு இருக்கிறது. அவர்கள் கணக்கில் முன்பு எல்லாம் நிறைய பணம் இருக்கும். இப்பொழுது அவ்வளவு கிடையாது" என்றார் அக்கவுன்டெண்ட்.

துரைசாமி தம் கைக் கெடிகாரத்தைப் பார்த்தார். பிறகு அக்கவுன்டெண்டிடம் "உங்கள் மானேஜிங் டைரட்டரை இப்பொழுது போனால் பார்க்க முடியுமா" என்று கேட்டார். அக்கவுன்டெண்ட், தலைமை ஆப்ஸிற்கு டெலிபோன் செய்து கேட்டுவிட்டு, அவர் வெளியே போய் விட்டதாகக் கூறினார். பிறகு, "பிரபாகர் நாளைக் காலையில் இங்கு வராவிட்டால்..." என்று குரலை இழுத்தார் அக்கவுன்டெண்ட்.

"நிச்சயம் வர மாட்டார்!" என்று இடை மறித்தார் இன்ஸ்பெக்டர்.

"அப்படி வராவிட்டால், நீங்கள் நேரே தலைமை ஆபீஸ் போய் எங்கள் மானேஜிங் டைரக்டரைச் சந்தித்து உங்களுக்குத் தேவையான தகவல்ககள விசாரியுங்கள். ஏனென்றால், எங்கள் வாடிக்கைக் காரர்களைப் பற்றியோ, பிரபாகரைப் பற்றியோ, எந்த விதத் தகவலையும் நாங்கள் வெளியிடக் கூடாது. ம்... ஒரு நிமிஷம் இருங்கள், இதோ வந்து விடுகிறேன்!" என்று கூறி விட்டு அக்கவுன்டெண்ட் எழுந்து போய்ச் சிறிது தூரத்திலிருந்த ஒரு குமாஸ்தாவிடம் ஏதோ கலந்து ஆலோசனை செய்துவிட்டுத் திரும்பி வந்து, "நான் உங்களிடம் இந்தத் தகவலைச் சொல்வது சரியோ சரி இல்லையோ இருந்தாலும் சொல்கிறேன். பெரிய கருப்பன் செட்டியார் நேற்று அறுபது ஆயிரம் ரூபாய்க்கு ஒரு 'செக்' கொடுத்து இருக்கிறார். அந்த 'செக்' சிந்தாதிரிப் பேட்டையில் உள்ள ஒரு 'பாங்க்' மூலமாக எங்களுக்கு வந்து மாற்றிப் போயிருக்கிறது. அதற்கு மேல் அதைப்பற்றி விவரம் நான் சொல்லக் கூடாது. ஆனால் தலைமை ஆபீஸுக்குப் போனீர்களானால் நிச்சயம் அங்கு ஒரு அனுமதிச் சீட்டு உங்களுக்குத் தருவார்கள். அதோடு வந்தால் நான் எல்லா விவரமும் தருகிறேன்" என்றார்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி, அக்கவுன்டெண்டுக்கு நன்றி தெரிவித்து விட்டுப் புறப்பட்டார். அவர் போலீஸ் காரியாலயத்திற்கு வந்த பொழுது அங்கு ஒரே கூட்டமாக இருந்தது. அமெரிக்கத் துப்பறியும் நிபுணரான 'வேல்' அன்று இரவு விமானத்தில் டெல்லி போய், பிறகு நேராக அமெரிக்கா போகிறார் என்று தெரிந்து கொண்டார். அவரிடம் துரைசாமி இந்தக் கேஸைப் பற்றிக் கூறிய போது இந்தக் கொலைக் கேஸில் உங்களோடு சேர்ந்து வேலை செய்வது என்றால் எனக்கு எவ்வளவோ மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால் நான் அவசரமாக போக வேண்டும். எதுவும் உளவு கிடைத்ததா?" என்று கேட்டார். இன்ஸ்பெக்டர் துரைசாமி, தமக்குத் தெரிந்த எல்லா விவரங்களையும் ஒன்று விடாமல் கூறினார்.

"அந்த மெட்ராஸ் பாபு இங்கே தான் திரும்பி விட்டான் என்று கேள்விப் பட்டேன். நான் அமெரிக்கா சென்றதும் அவனது புகைப்பட நகல்களை இங்கே அனுப்புகிறேன். குற்றம் நடந்திருக்கும் ரீதியைப் பார்க்கும் பொழுது, இதில் அவன் சம்பந்தப்பட்டு இருப்பான் என்றே தோன்றுகிறது. அவன் பெரிய பெரிய பாங்குகளில் பொறுப்பான இடங்களில் நுழைந்து ஒருவர் பணத்தை மற்றொருவர் பெயரில் மாற்றுவதும்—பெரிய இடங்களில் நம்பிக்கையான ஸ்தானத்தைப் பெற்று கொள்ளை அடிப்பதுமே தொழிலாகக் கொண்டிருக்கிறான். ஆனால் அவனைப் பார்த்தால் நீங்கள் கொஞ்சங்கூடச் சந்தேகப்பட முடியாது! அவன் போட்டோவையும் வைத்துக் கொண்டு தேடிப் பாருங்கள் !" என்றார் வேல்.'

அதன்பின், இன்ஸ்பெக்டர் துரைசாமி, குற்ற இலாகா உதவிக் கமிஷனரைச் சந்தித்தார். உதவிக் கமிஷனர் — ரொம்ப அனுபவம் வாய்ந்தவர். "பிரபாகர் எப்படி இருக்கிறான் என்று அங்க அடையாளங்களைக் குறித்து எல்லா இடங்களுக்கும் தகவல் அனுப்பிவிட வேண்டும். இல்லாவிட்டால் அதனால் பல சங்கடங்கள் வரலாம். ஏனென்றால், பிரபாகர் வீட்டில் துப்பாக்கி இருந்தது என்பது பெரிய 'துப்பு' அல்ல, அந்தத் துப்பாக்கியால்தான் சுடப்பட்டதா என்பதும் நமக்கு நிச்சயம் தெரியாது. அதோடு பிரபாகருக்குத் துப்பாக்கி லைசென்ஸ்' வேறு இருக்கிறது! நமக்குத் தெரிந்த வரையில் பாங்க் கணக்குகளில் எதுவும் தாறுமாறாக நடந்ததாகத் தெரியவில்லை. அந்தச் செட்டியாரின் கடிதத்தில் பிரபாகர் பெயர் குறிப்பிடப் பட்டிருக்கிறது என்பதைத் தவிர வேறு எந்த விதத்திலும் அவனை இதில் இழுக்க முடியாது!" என்று கூறி விட்டு, உதவி கமிஷனர் "அந்தக் கடிதம் இருக்கிறதா?" என்று கேட்டார். இன்ஸ்பெக்டர் துரைசாமி அதை மனோரமாவிடம் இருந்து வாங்கி வைத்திருந்தார். அதை உதவி கமிஷனரிடம் கொடுத்தார். "பிரபாகர் செட்டியாரை எப்பொழுது சந்தித்தான்?" என்று கேட்டார் உதவி கமிஷனர்.

"நேற்று சந்தித்திருக்கிறான். ஆனால், அவரைப் பார்த்து ஒரு வருஷத்திற்கு மேலாகிறது என்று என்னிடம் சொன்னான்!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"அப்படியா சொன்னான்?" என்று கேட்டார் உதவிக் கமிஷனர்.

"ஆமாம். எதற்காக அவன் அப்படிப் பொய் சொல்ல வேண்டும்? அவரைச் சந்தித்து விட்டு, பிறகு எதனால் சந்திக்கவில்லை என்று கூற வேண்டும்? அவனை அழைத்துக் கொண்டு வரும்படி எழுதிய செட்டியார் கூடவே போலீஸ் அதிகாரியையும் அழைத்து வரும்படி ஏன் எழுத வேண்டும்? இதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும். பிரபாகர் செய்த ஒரே ஒரு மோசடியை செட்டியார் கண்டு பிடித்திருக்க வேண்டும். அவனை மிரட்டுவதற்காகவோ, அல்லது தண்டனை பெறச் செய்வதற்காகவோ அவர் போலீஸ் உதவியை நாடியிருக்க வேண்டும். பிரபாகர் அவசரமாக லீவு கேட்டிருக்கிறான். அது கிடைக்கவில்லை. அவன் பாங்குக்கே வரவில்லை! இதைப்பற்றி நாம் தலைமைக் காரியாலயத்தில் விசரித்தால் நிச்சயமாக அவர்களுக்கும் ஒன்றும் தெரியப் போவதில்லை! — செட்டியாரின் பாங்க் கணக்கு, பிரபாகர் நிர்வாகத்தில் தான் இருக்கிறது. அதில் ஏதாவது ' கை வைத்திருந்தானானால்' நிச்சயம் ஜெயிலுக்குப் போக நேரும்; ஆனால் அவன் கை வைத்தானா, இல்லையா என்பதைச் செட்டியாரால் தான் சொல்ல முடியும். அவர் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கிறார். அதுவும் பிரபாகர் நகரை விட்டுப் புறப்படுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு இந்தச் சூழ்நிலை சாட்சியங்களைக் கொண்டு கவனித்தால், பிரபாகரை நாம் சந்தேகிக்கப் போதுமான காரணம் இருப்பதாகவே தோன்றுகிறது!"

இன்ஸ்பெக்டர் துரைசாமி கூறிய வாதத்தை கேட்டு உதவிக் கமிஷனர் பூரணமாக மறுக்கவில்லை. அன்று இரவு, வேல்டாக்ஸ் தியேட்டருக்கு துரைசாமி போயிருந்தார். நாடகம் முடிந்ததும் 'மேக்—அப்' அறைக்குச் சென்றார். மனோரமா வேஷத்தைக் கலைத்துக் கொண்டிருந்தாள். மோகனும் அங்கு வந்து சேர்ந்தான்.

"ஒருவாறாக, இந்த நாடகத்தைத் தீர்த்துக் கட்டி விட்டீர்கள். போலிருக்கிறதே!" என்றார் துரைசாமி.

மனோரமா சிரித்துக் கொண்டே, ஆமாம்! இன்றோடு நாடகம் முடிந்தது. ஆனால் செல்லப்பா எதிர் பார்த்தபடி அவர் நிலைமை அவ்வளவு மோசமாகி விடவில்லை. சோமசேகர் அனுப்பிய 'செக்' அவருக்கு வந்து சேர்ந்து விட்டது. எல்லோருக்கும் பணம் கொடுத்து விட்டார். அவரும் வழக்கம்போல எடுத்துக் கொண்டிருப்பார்!" என்றாள். மூவரும் சிரித்தார்கள்.

செட்டியார் கொலை சம்பந்தமாக அவளை துரைசாமி இரண்டொரு கேள்விகள் கேட்ட பொழுது, பிரபாகர் அன்று இரவு தன்னிடம் சில 'ஷேர்' பத்திரங்களின் மேல் கையெழுத்து வாங்கிப் போனதைச் சொன்னாள் மனோரமா.

"எதற்காக அவன் உன் கையெழுத்தை வாங்கினான்?" என்றான் மோகன்.

"அந்த 'ஷேர்' பத்திரங்கள் எந்தக் கம்பெனியைச் சேர்ந்தவை என்று கவனித்தீர்களா?" என்று கேட்டார் துரைசாமி. 'இல்லை' என்று மனோரமா தலையாட்டினாள்.

"இதில் ஒன்றும் மோசடியிருக்காது. செட்டியார் கையெழுத்து அதில் இருந்ததால் அவர் அவ்வளவு சுலபத்தில் போட்டுக் கொடுத்திருக்க மாட்டாரே!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

அன்று இரவு, துரைசாமி வேறு அதிகமாக எதையும் செய்ய முடியவில்லை. செட்டியார் கொலையுண்ட இடத்தைச் சுற்றிக் காவல் போட்டு விட்டு, அங்கிருந்த அவருடைய தஸ்தாவேஜுகளைப் பத்திரமாக 'சீல்' வைத்து, வீட்டிற்கும் 'பாரா' போட ஏற்பாடு செய்தார், அன்றிரவு வெகு நேரத்திற்கு மேல், அவருக்குப் பிரேத பரிசோதனை ரிப்போர்ட் வந்தது, செட்டியாரின் முதுகுப் பாகத்திலிருந்து அவர் இருதயத்தில் குண்டு பாய்ந்து இருப்பதால் அவர் இறந்ததாக ரிப்போர்ட்டில் எழுதப்பட்டு இருந்தது. உடலில் குண்டு அகப்படவில்லை.

இதைப் பார்த்ததும், இன்ஸ்பெக்டர் துரைசாமி, மறுதினம் அந்தத் தோட்டத்தைப் பூராவும் சோதனையிட்டுக் கொலை செய்த குண்டு கிடக்கிறதா எனத் தேடும்படி

உத்திரவு எழுதி வைத்தார். அதன் பிறகு அவர் படுக்கைக்குப் போகும் பொழுது வெகு நேரம் ஆகிவிட்டது.

மறுநாள் காலையில், 'சந்தியா பாங்'கின் தலைமைக் காரியாலயத்திற்குச் சென்றார். மானேஜிங் டைரக்டரைக் கண்டு பேசும் பொழுது பிரபாகருக்குக் கடைசி வரை 'லீவ்' வழங்கப் படவில்லை என்று தெரிந்தது.

"பிரபாகர் நல்ல கெட்டிக்காரன். வாடிக்கைக் காரர்களிடம் ரொம்பச் சாதுர்யமாக நடந்து கொண்டு, எல்லோரருடைய நல்ல அபிப்பிராயத்தையும் பெற்று விடுவான். அதனால் தான், அவன் குறைபாடுகள் எல்லாம் தெரிந்த போதிலும், வேலைக்கு வைத்திருந்தோம். இம்மாதிரி லீவு வாங்காமல், வீட்டிலேயே உட்கார்ந்து கொள்ளும் கெட்ட பழக் கத்தைத் தவிர, நாங்கள் அவன் மேல் எந்தவிதக் கோளாறும் சொல்ல முடியாது!" என்றார் மானேஜிங் டைரக்டர்.

"அப்படி அவன் வராமல் இருந்தால், அவன் லீவு எடுக்காமலே" வராமல் இருக்கிறான் என்று தான் அர்த்தம்?—அதாவது அது தவறு என்று நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள்; இல்லையா?" நிச்சயமாக! அவன் பெங்களூர் போயிருக்கிறான் என்ற நினைக்கிறோம். அங்கு போவதாகத்தான் லீவ் கேட்டான்!" என்றார் டைரக்டர்.

"அவன் பெங்களூர் போகவில்லை என்று எனக்குத் தெரியும், நேற்று நாலேகால் மணிக்கு மீனம்பாக்கத்திலிருந்து, புறப்பட்ட விமானத்தில் டெல்லிக்கு இரவு 12 மணிக்கு போயிருக்கிறான், அங்கிருந்து காஷ்மீரத்திற்குப் போகும், 'காஷ்மீர் எக்ஸ்பிர'ஸில் இரவு 12—30க்கு ஏறியிருக்கிறான். அதன் பிறகு தகவல் தெரியவில்லையே!" என்றார் துரைசாமி.

மானேஜிங் டைரக்டர் பிரமை தட்டிப் போய் துரைசாமியைப் பார்த்தார். அவர் முகம் வெளுத்து விட்டதாக நினைத்தார் துரைசாமி.

"காஷ்மீரத்திற்கா?"

அதை அவரால் நம்பவே முடியவில்லை. பிரபாகர் ஏஜண்டாக இருந்த கிளை ஆபீஸில் பெரிய பணக்காரர்கள் எல்லாம் கணக்கு வைத்திருந்தார்கள். அப்படிப்பட்ட முக்கிய இடத்தில், பொறுப்பான பதவி வகித்தவன். திடீரென்று மறைந்து போவது என்றால் — அதுவும் மிகவும் சந்தேகாஸ்பதமான சூழ்நிலையில் மறைகிறான் என்றால் — அவன் வெறும் கையோடா போயிருப்பான்?

"அவனைப் பற்றி நான் அவசரப்பட்டுத் தவறான முடிவுக்கு வந்து விடமாட்டேன். அவனுக்கு பணம் சம்பாதிப்பதில் அளவற்ற ஆசை இருந்தாலும், கௌரவமான வழிகளில் போய்ச் சம்பாதிக்கத் துணிய மாட்டான். இது எனக்குத் தெரியும்" என்று

கூறிவிட்டு மானேஜிங் டைரக்டர் மேஜை மீதிருந்த ஒரு மின்சாரப் பித்தானை அமுக்கினார். "இருந்தாலும் நான் உடனே இரண்டு இன்ஸ்பெக்டர்களை அனுப்பிக் கணக்கைச் சோதிக்கச் செய்கிறேன். எப்படி இருந்தாலும் பிரபாகரை உடனே வேலையை விட்டு நீக்கிவிட்டு வேறொரு ஆளை நியமிக்க வேண்டியது தான்'' என்றார்.

பிரபாகரின் படம் ஏதாவது கிடைக்குமா என்று கேட்டுப் பார்த்தார் துரைசாமி, மானேஜிங் டைரக்டர் தங்களிடம் எதுவும் இல்லை என்று கூறினார். "ஆனால் அவன் அடையாளத்தைப் போட்டோ எடுத்தது போல் நான் சொல்ல முடியும். முக்கியமாக அவன் தலை வழுக்கை. மாறுவேஷம் தரிக்க வேண்டும் என்று நினைத்தால், அவன் நாடக வேஷ தாரி போலத் தலைமயிர் 'டோப்பா'தான் வைத்துக் கொள்ளலாம்..." என்று கிண்டலாகக் கூறினார் மானேஜிங் டைரக்டர்.

'டோப்பா' என்று சொன்னதும் சிந்தாதிரிப்பேட்டை சாமிகாய்க்கன் தெரு நினைவு வந்தது துரைசாமிக்கு அவர் சோதனையிட்ட அறையில் இரண்டு 'டோப்பாக்கள்' இருந்தன. சிந்தாதிரிப்பேட்டை அங்குள்ள ஒரு பாங்கின் மூலமாகத்தான் செட்டியாரின் அறுபதாயிர ரூபாய் 'செக்' நேற்று மாற்றப்பட்டது.

உடனே துரைசாமி, பிரபாகர் வேலை பார்த்த கிளை ஆபீஸின் கணக்குகளைப் பூரணமாகச் சோதனை செய்ய எழுத்து மூலம் அனுமதி ஒன்றை வாங்கிக் கொண்டு, அந்தக் கிளை ஆபீசிற்குப் புறப்பட்டார்.

கிளை ஆபீஸில், அக்கவுன்டெண்ட் இருந்தார், இன்ஸ்பெக்டர் துரைசாமி அவரிடம் சென்று, "பெரிய கருப்பன் செட்டியாரின் பாங்க் இருப்பைக் குறித்து ஒரு 'ஸ்டேட்மெண்ட்' என்னிடம் எதிர்பாராத விதமாகக் கிடைத்திருக்கிறது. அந்த ஸ்டேட்மெண்டை உங்கள் ஆபீஸிலிருந்து அனுப்பியிருக்கிறீர்கள். அதில், பின் பக்கத்தில் செட்டியார், ஒருவருக்குக் கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறார். இதோ!" என்று பையிலிருந்த அந்த கணக்கு ஸ்டேட்மெண்டை எடுத்துக் கொடுத்தார்.

அதை அக்கவுண்டட் வாங்கிப் பார்த்தார். "இதில் அந்த அறுபதாயிரம் சேர்த்து தான் இருக்கும். அதைக் கழித்துவிட்டு, கணக்குப் புத்தகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறேன்'' என்றார்.

அந்த 'ஸ்டேட்மெண்'டை எடுத்துக் கொண்டு போய் ஒரு மணி நேரங்கழித்து அக்கவுண்டெண்ட், இன்ஸ்பெக்டர் இருக்கும் இடத்திற்கு வந்தார்.

இந்த ஸ்டேட்மெண்டில் காணப்படும் புள்ளி விவரங்களுக்கும் செட்டியாரின் கணக்குக்கும் கொஞ்சங்கூடச் சம்பந்தமே இல்லை. இதில் முந்தாநாள் தேதி போடப்பட்டு இருக்கிறது. உதாரணமாக அந்தத் தேதியில் இருப்பு இரண்டு லட்சத்துப் பனிரெண்டாயிரத்து சொச்சம் இருப்பதாகக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த தேதியில்

அவர் பெயரால் எழுபத்து நாலாயிரத்துப் பனிரெண்டு ரூபாய்தான் எங்கள் பாங்கில் இருக்கிறது!" என்றார்.

அப்படியானால் இந்த 'ஸ்டேமெண்ட்'டில் இருப்பு என்று எழுதப் பட்டிருப்பதற்கும் உண்மையிலேயே பாங்கில் இருப்பு என்று எழுதப் பட்டிருப்பதற்கும், பாங்கில் இருப்பதற்கும் உள்ள வித்தியாசம் கிட்டத் தட்ட ஒன்றரை லட்ச 'ரூபாய்க்கு மேல் இருக்கிறது என்று சொல்லுங்கள்!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"ஆமாம். இதைப் பார்த்த உடனேயே எனக்கு அந்தச் சந்தேகம் ஏற்பட்டது!" என்றார் அக்கவுன் டெண்ட்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி சிறிது நேரம் யோசித்தார். பிறகு முந்தா நாள் பெரிய கருப்பன் செட்டியாரை பிரபாகர் சந்தித்தாரா?" என்று கேட்டார்.

அக்கவுண்டெண்ட் சிரித்தார். "அன்று அவரைப் பார்த்திருந்தாரானால், அதை அவர் என்னிடம் சொல்லவில்லை. ஆனால் அன்று மத்தியானம் தான் பாங்கிற்கு வந்தார். யாரோ வாடிக்கைகாரரைப் பார்த்துப் பேசிவிட்டு வந்ததாகச் சொன்னாரே தவிர, யாரைப் பார்த்தார் என்று சொல்லவில்லை!"என்று சொன்னார் அக்கவுன்டெண்ட் பிறகு நீங்கள் செட்டியார் கணக்கைப் பார்க்கிறீர்களா? என்றார்.

"பார்க்கிறேன்" என்றார் துரைசாமி. கணக்குப் புத்தகத்தை எடுத்து அந்தக் கணக்கைக் காண்பித்தார். "சென்ற ஒரு வருஷ காலத்தில் பெரும் பெரும் தொகைகளுக்கு செட்டியார் 'செக்' கொடுத்திருக்கிறார். இதைப் போல அவர் இதுவரை கொடுத்ததில்லை. இதோ பாருங்கள்; பத்தாயிரம்; பதினைந்தாயிரம், இருபதினாயிரம்; கடைசியாக அவர் கொடுத்த மிகப் பெரிய செக் அறுபதாயிரம்; சிந்தாதிரிப் பேட்டை பாங்க் மூலம் வந்தது" என்றார். அந்தச் செக் யார் பெயருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று கவனித்தார் துரைசாமி,

சோமசேகரர்!

துரைசாமியின் முகம் ஆச்சரியத்தில் விரிந்தது!

## 16. மோகன் குற்றவாளியா?

வெகு நேரம் வரையில், இன்ஸ்பெக்டர் துரைசாமி அந்தக் கணக்குத் தொகைகளையே பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு, "சிந்தாதிரிப்பேட்டை பாங்க் ஏஜண்டைக் கூப்பிட்டு சோமசேகரின் அங்க அடையாளங்களைக் கேட்டுப் பாருங்கள்!" என்றார்.

அக்கவுன்டெண்ட் டெலிபோன் மூலம் அந்த ஏஜண்டைக் கேட்டார். சோமசேகரின் அங்க அடையாளங்கள் தனக்கு நினைவில்லை என்று அந்த ஏஜண்ட் கூறினார்.

"சரி; அவரை உங்கள் பாங்கிற்கு அறிமுகம் செய்தவர் யார்?" என்று கேட்டார் அக்கவுன்டெண்ட். "ஒரு நிமிஷம் இருங்கள்; பார்த்துச் சொல்லுகிறேன்!'' என்று கூறி விட்டு, ஏஜண்டு டெலிபோனைக் கீழே வைத்தார். இதை, இன்ஸ்பெக்டர் துரைசாமியிடம் அக்கவுன்டெண்ட் கூறியதும் துரைசாமி முகத்தில் நம்பிக்கை உணர்ச்சி ஏற்பட்டது. "ஹலோ!"என்று சிந்தாதிரிப்பேட்டையில் இருந்து மீண்டும் குரல் வந்தது. அக்கவுண்டெண்ட் "யெஸ்ஸார்" என்றார்.

"மிஸ்டர் சோமசேகரை அறிமுகம் செய்து வைத்தவர், சென்ற மாதம் தான், தமது கணக்கை இங்கு மூடிவிட்டு பம்பாய்க்குப் போய்விட்டார்!" என்றார் சிந்தாதிரிப் பேட்டை பாங்கர்.

"கொஞ்சம் அப்படியே இருங்கள் ஸார்!" என்று சொல்லி விட்டு அக்கவுண்டெண்ட் இந்த விவரத்தைத் துரைசாமியிடம் சொன்னார்.

துரைசாமி தாமே எழுந்து போய், டெலிபோனை கையில் வாங்கிக் கொண்டு, "ஹலோ; நான் 'டிடெக்டிவ்' இன்ஸ்பெக்டர் துரைசாமி பேசுகிறேன்!'' என்றார்.

"என்ன சார் விசேஷம்?" என்று சிந்தாதிரிப்பேட்டை பாங்க் ஏஜண்ட் கேட்டார்.

"ஒரு கொலை கேஸ் சம்பந்தமாக விசாரணை நடத்தி வருகிறேன். உங்கள் மூலம் எனக்கு ஒரு ரகசியத் தகவல் வேண்டும்" என்றார் துரைசாமி.

"என்னால் ஆன உதவியைச் செய்கிறேன் ஸார்!" என்றார் ஏஜண்டு .

"சோமசேகர் கணக்கில் எவ்வளவு பாக்கி இருக்கிறது?"

"பார்த்துச் சொல்கிறேன்" என்று கூறிவிட்டு, சில நிமிஷங்களுக்குப் பிறகு "நேற்று காலை வரையில் பெருந்தொகை இருந்தது. ஆனால் நேற்று காலையில் ஒரு பெருந்தொகைக்கு 'செக்' பணம்பட்டுவாடாகி ஆகி விட்டது. இப்பொழுது மிச்சம் 107 ரூபாய்தான் இருக்கிறது" என்றார்

சரி; சார்; வந்தனம்!" என்று கூறிவிட்டு டெலிபோனை வைத்து விட்டார் துரைசாமி.

சந்தியா பாங்கை விட்டு வெளியேறிய இன்ஸ்டெக்டர் துரைசாமி நேரே மோகனின் தொழிற்சாலைக்குச் சென்றார். போகும் வழி எல்லாம் இந்த மர்ம மனிதர் சோமசேகரைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு போனார். சோமசேகர் யாராக இருந்தாலும், அவருக்குச் செட்டியாரின் பணம் ஏராளமாகப் போய்ச் சேர்ந்திருக்கிறது. அநேகமாக அதே ஆள் தான் செட்டியாரைக் கொன்றவனாகவும் இருக்கலாம்.

மோகனுடைய தொழிற் சாலையைத் துரைசாமி அடைந்த போது மோகன் இன்னொரு புதுத்துப்பாக்கி 'சைலன்சரைச்' செய்து கொண்டிருந்தான். பாங்கியில், செட்டியார் பணம் ஏராளமாகச் சூறையாடப் பட்டிருப்பதைக் கேள்விப்பட்டதும், கலங்கிப் போய்விட்டான் மோகன்.

"ஒருக்கால், இந்தப் பெரியகருப்பன் செட்டியாரே, சோமசேகராயும் மாறு வேஷம் தரித்து நடித்து, மைனர் விளையாட்டு நடத்தி இருந்தால்...?" என்று இன்ஸ்பெக்டரைக் கேட்டான் மோகன்.

"அதையே நானும் நினைத்தேன்! ஆனால் அது சாத்யமில்லை. ஏனென்றால், பாரிச வாயுவினால் அவர் நடக்கக்கூடத் திண்டாடும் போது இப்படி மாறு உருவத்தோடு அலைந்தார் என்று நம்ப முடியாது. ஆகவே அப்படி நினைப்பது தவறு. இந்த 'செக்'குகளில் ஏதாவது கள்ளக் கையெழுத்திருக்குமோ என்று ரொம்பவும் கவனித்தேன். அப்படியும் இல்லை. அவரே கையெழுத்துப் போட்டிருக்கிறார். மாதிரிக்கு ஒரு 'செக்' கூட கொண்டு வந்திருக்கிறேன்" என்று தம் சட்டைப் பையில் கையை விட்டு ஒரு 'செக்'கை வெளியே எடுத்தார் இன்ஸ் பெக்டர் துரைசாமி.

யதேச்சையாக அதைப் பின் பக்கம் திருப்பிப் பார்த்த பொழுது இதுவரை அவர் கண்டுபிடிக்காத ஒரு புதிய விஷயம் அவர் கண்ணில் தென்பட்டது. அதாவது என்னவோ பென்சிலால் எழுதி அழிக்கப்பட்டிருந்தது. பென்ஸில் குறி அழிந்திருந்தாலும், அதை அழுத்தி எழுதியதால் ஏற்பட்ட பள்ளம் அப்படியே இருந்தது. மோகன் 'ஓர்க்' ஷாப்பில் இருந்த ஒரு பூதக் கண்ணாடியை வாங்கி அதைக் கூர்மையாகக் கவனித்தார். அந்தப் பென்ஸில் அழுத்தம் இரண்டு வரி இருந்தது.

"எனக்கு இனி நெல்லூர் அ..

இப்படித் தொடர்ந்து ஏமாற்றினால் வீண்—" என்று எழுதி இருந்தது.

"இதற்கு என்ன அர்த்தம்?" என்று திகைத்தார் துரைசாமி.

"இது என் மாமா கையெழுத்துத்தான்!" என்று ஒப்புக் கொண்டான் மோகன்.

பெரியகருப்பன் செட்டியாருக்குக் கண் பார்வை கொஞ்சம் மங்கி விட்டபடியாலே, அவர் 'செக்'கின் மேல் இதை எழுதும் பொழுது, பாதி விஷயம் கீழே உள்ள அட்டைக்குப் போயிருக்கிறது! அதைப் புரிந்து கொள்ளாமல், முழுவதையும் 'செக்' மேல் எழுதி விட்டதாகவே அவர் நினைத்திருக்கக் கூடும் என்று துரைசாமி நினைத்தார். அது எப்படி இருந்தாலும், இதற்கு என்ன அர்த்தம்? இதை யாரிடம் கேட்பது? இந்த 'செக்' சோமசேகர் பெயருக்கு எழுதப்பட்டது. ஒருக்கால், சோமசேகருக்குத்தான் அதன் அர்த்தம் தெரியுமோ என்னவோ?

அன்று மத்தியானம் மனோரமாவை மோகன் சந்தித்து இக்கொலை வழக்கு சம்பந்தமாகப் பேசிக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் துரைசாமி தன்னிடம் கூறிய விவரங்களை எல்லாம் சொல்லி விட்டு. 'செக்'கைப் பற்றியும் அதன் பின்னால் பென்சிலால் எழுதப்பட்டிருந்த வரிகளைப் பற்றியும் கூறினான்.

இதை மோகன் கூறியதும். மனோரமா துள்ளி எழுந்து உட்கார்ந்தாள். "என்ன என்ன? இன்னொரு தரம் சொல்லுங்கள்!" என்று கேட்டாள். மீண்டும் மோகன் பூரா விவரங்களையும் கூறினான். பாங்கிலிருந்து பெரிய தொகைகளுக்கு கொடுக்கப்பட்ட 'செக்'குகளெல்லாம் சோமசேகர் பெயருக்கே கொடுக்கப்பட்டு இருப்பதாகவும் சொன்னான். சில இடங்களில் அவளுக்கும் புரியாத விஷயங்களை, இடையில் மோகனைக் கேள்விகள் கேட்டுப் புரிந்து கொள்ள முயன்றாள். அவன் முழுவதும் சொல்லி முடித்ததும், அவள் கண்களில் ஒரு அசாதாரணமான ஒளி வீசியது.

மோகன்,"என்ன மனோரமா! உன்னைச் சுற்றி ஏதோ மர்மம் படர்ந்திருப்பது போலத் தோன்றுகிறதே!" என்றான்.

"ஆம்! நான் மர்மம் நிறைந்தவள் தான்!" என்றாள் மனோரமா.

"பெரிய கருப்பன் செட்டியாரைக் கொலை செய்தவன் யாரென்று உனக்குத் தெரிந்து விட்டதா?— நீ அப்படி நினைக்கிறாயா?"

"ஆம்; அப்படித்தான் நினைக்கிறேன்! இப்பொழுது அவன் பெயரை வெளியிட எனக்குத் தெரியவில்லை. இருந்த போதிலும், போலீஸார் 'தடயம்' என்று சொல்லுகிறார்களே; அது எனக்குக் கிடைத்து இருப்பதாகவே நினைக்கிறேன். நான் சிறுமியாக இருந்த பொழுது செட்டியார் வீட்டில் இருந்தேனே; அப்போது நடந்த சில நிகழ்ச்சிகளை நான் இன்னும் மறக்கவில்லை!"

"அப்படியானால் நான் இன்ஸ்பெக்டர் துரைசாமிக்கு...!"

இப்பொழுது அவசரப்படாதீர்கள், மோகன் நான் நினைத்தது தவறாகவும் இருக்கலாம். எதற்கும் நான் இதை தீர்க்கமாக தெரிந்து கொண்ட பிறகுதான் வெளியே சொல்ல வேண்டும். நான் சில சமாச்சாரங்களை துப்பறிய வேண்டி இருக்கிறது!" என்றாள் மனோரமா.

"சரிதான்! நீயும் துப்பறிவாளராகப் போகப் போகிறாய் போலிருக்கிறது!" என்று உற்சாகமாகக் கூறினான் மோகன்.

ஆமாம் பெரிய கருப்பன் செட்டியார் கொலை சம்பந்தமாக உங்கள் மீது குற்றம் சாட்டவே இன்ஸ்பெக்டர் துரைசாமி உங்களைச் சுற்றித் தடயங்கள் தேடி அலைகிறார்! உங்கள் மீதுள்ள சந்தேகத்தைப் போக்க நான் உண்மைக் குற்றவாளியை கண்டு

பிடித்தாக வேண்டும்!" என்று மனோரமா கூறியபோது மோகனின் முகம் சவம் போல் வெளுத்தது!

அன்று மாலை, இன்ஸ்பெக்டர் துரைசாமி, மோகனுக்கு டெலிபோன் செய்து தம்மை உடனே தலைமைக் காரியாலயத்தில் வந்து சந்திக்கும்படி கூறினார். மோகன் அங்கு சென்ற பொழுது பாங்க் அக்கௌண் டெண்ட் உட்கார்ந்திருந்தார்.

"செட்டியார் ஒரு 'பாங்க்' ஸ்டேட்மெண்டின் பின்பக்கத்தில், மனோரமாவுக்கு கடிதம் அனுப்பி இருந்தாரல்லவா? இந்த 'ஸ்டேட்'மெண்ட தங்கள் பாங்கியில் உள்ள 'டைப்ரைட்டிங்' மெஷினில் அடிக்கப்டவில்லை என்றார் அக்கவுண்டெண்ட். ஏனென்றால், சந்தியா பாங்கின் தலைமைக் காரியாலயத்திலும் கிளைக் காரியாலயங்களிலும், ஒரே விதமான 'மெஷினைத்'தான் உபயோகிக்கிறார்கள். அந்த டைப்ரைட்டிங் எழுத்துக்களும் மிகப் பெரியவை. அதோடு அவர்களின் பாங்க் கணக்கு ஸ்டேட்மெண்ட் எல்லாம், கருப்பு கலரில் 'டைப்' அடிக்கப்பட்டிருக்கும். ஆனால் செட்டியாருக்கு அனுப்பப்பட்ட இந்தப் போலி ஸ்டேட்மெண்ட் 'ஊதா' கலரில் அடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த ஸ்டேட்மெண்ட் வெளியில் எங்கோ 'டைப்' மிஷினில் அடிக்கப்பட்டிருக்க வேண்டும்" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

"எதற்காக இப்படிச் செய்ய வேண்டும்?'' என்று கேட்டான் மோகன்.

"பாங்கியில் செட்டியாரின் பணம் சூறையாடப்படும் விவரம் அவருக்குத் தெரியாமல் இருக்க, அந்தப் பொய்க் கணக்கு ஸ்டேட்மெண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது."

"இந்த 'ஸ்டேட்மெண்ட்' பாரங்கள் ஜாக்கிரதையாக பாங்கியில் வைத்திருக்க மாட்டார்களா?" என்று கேட்டான மோகன்.

அதற்கு அக்கவுண்டெண்ட், "சாதாரணமாக இந்தப்பாரங்களை ஆயிரக் கணக்கில் அச்சிட்டு எடுத்து வருகிறோம். அது வழியில் தவறலாம்; பாங்கியிலும் தவறிப் போகலாம்—ஏன் பிரஸ்ஸில் கூடக் கிடைக்கலாம்!" என்றார்.

" அப்படியானால் பாங்கில் பதவி வகிக்காத வெளி ஆளுக்குக்கூட இந்தக் கணக்கு நகல 'பாரம்' கிடைப்பது சாத்தியம் என்று சொல்லுங்கள்!" என்றார் துரைசாமி.

"பிரஸ்ஸில் கிடைக்கலாம் அல்லவா?" என்று கூறினார் பாங்க் அக்கவுண்டென்ட்.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு. அக்கவுண்டெண்ட் புறப்பட்டுச் சென்றார்.

பிரபாகரின் வீட்டில் டைப்ரைட்டிங் மெஷினைப் பார்த்ததாக இன்ஸ்பெக்டருக்கு நினைவில்லை. சிந்தாதிரிப் பேட்டை சாமி நாயக்கன் தெரு மாடியைச் சோதனை போட்ட போதும் அங்கு டைப்ரைட்டிங் மெஷின் எதுவும் இல்லை. அங்கு எல்லாம்

இல்லா விட்டாலும், பிரபாகார் தான் அந்தப் போலிக் கணக்கு ஸ்டேட் மெண்டை அனுப்பினான் என்றால் அவன் வேறு எங்காவது ரகசிய ஆபீஸ் வைத்திருக்கலாம் அல்லவா?

"உங்களுக்கு ஏதாவது புதுச் சந்தேகம் தோன்றுகிறதா?" என்று கேட்டான் மோகன்.

"எவ்வளவோ சந்தேகங்கள் தோன்றுகின்றன. நாம் செட்டியார் கொலைபட்ட அன்று பழைய மோட்டார் காரில் கடன்கார ராமையா நம்மைத் தாண்டிப் போவதைப் பார்த்தோமே, அவன் தானே உங்கள் துப்பாக்கியையும், 'சைலன்ஸரை'யும் திருடி இருக்கக் கூடுமென்று நினைத்தோம். அவன் கார் அன்றைய தினம் உங்கள் மாமா உட்கார்ந்திருந்த இடத்தின் பக்கம் வந்ததும், வேகம் குறைவாக ஓட்டப்பட்டிருக்கிறது!"

" அப்படியானால், ராமையா கொலை செய்திருப்பான் என்று சந்தேகிக்கிறீர்களா?"

"ஏன் செய்திருக்கக் கூடாது? அவன் அவருக்கு ஏராளமான பணம் கொடுக்க வேண்டும். அதைக் கொடுக்க வழியில்லை. கோர்ட்டுக்கு இழுப்பதாக மிரட்டுகிறார்! ஏன் கொலை செய்யக் கூடாது? அவன் அப்படிப்பட்ட ஆள் தான்" என்றார் துரைசாமி!

"அவன் எங்கே இருக்கிறான்?" "நாம் அன்று பார்த்த பிறகு, அவன் இன்னும் யார் கண்ணிலும் தட்டுப்படவே இல்லையாம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"அப்படியானால் ராமையாதான் செட்டியாருக்கு கடனைத் திருப்பிக் கொடுக்க வழியில்லாமல் அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டு ஓடி மறைந்து இருப்பானோ?... அப்படியானால் பாங்கியிலுள்ள செட்டியார் பணம் ஒன்றரை லட்சததைச் சுருட்டிக் கொண்டு பாங்க் ஏஜண்ட் பிரபாகர் ஓடி மறைந்து இருக்கிறானே? அவனும் செட்டியாரைச் சுட்டுக் கொன்றிருக்கக் கூடுமோ? இவ்விருவரில் யார் செட்டியாரைச் சுட்டுக் கொன்று இருப்பார்கள்? இவ்விருவரில் யார் சோமசேகராக வேஷமிட்டுத் திரிந்த மர்ம மனிதர்?" என்று மோகன் வியப்புடன் கேட்டான்.

ஏன், நீங்கள் கூட அந்த மர்ம மனிதன் சோமசேகரனாக இருக்கலாம். நீங்கள் கூட பெரிய கருப்பன் செட்டியாரை உங்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று இருக்கலாம்! ஏன் என்றால் பெரிய கருப்பன் செட்டியார் தம் சொத்தை எல்லாம் கோயிலுக்கோ வேறு யார் பேருக்கோ உயில் எழுதி வைக்காது இருந்தால், அந்தச் சொத்து முழுவதும் வெகு சீக்கிரம் உங்களுக்கு வந்து சேரும் அல்லவா? செட்டியார் தீர்ந்து விட்டால் உங்களுக்கும் மனோரமாவிற்கும் கல்யாணம் நடப்பதற்குக் குறுக்கே உள்ள ஒரு தடையும் தீர்ந்து போகும் அல்லவா?" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

அதைக் கேட்டதும் மோகனின் முகம் வெளுத்தது. தன் காதலி மனோரமா உண்மைக் குற்றவாளியைப் பிடிக்கத் தடயங்கள் தேடித் துப்பறிவேன் என்று துடித்ததும் அவனுக்கு நினைவுக்கு வந்து நெஞ்சில் 'சுரீரெ'ன்று தைத்தது.

## 17.சோமசேகரைக் கண்டு பிடிக்க முடியுமா?

இன்ஸ்பெக்டர் துரைசாமி, காணாமல் போன சந்தியா பாங்க் ஏஜண்டான பிரபாகரனின் ஒவ்வொரு நடவடிக்கையையும் நன்றாகப் பதிந்து வைத்துக் கொண்டிருந்தார். கொலை நடந்ததற்கு முதல் நாள் பிரபாகருக்கு ரேடியோ பிரசங்கம் இருந்தது. அதை முடித்துக் கொண்டு நேரே, வேல்டாக்ஸ் தியேட்டருக்குப் போயிருக்கிறான். அங்கிருந்து மோகனோடு சேர்ந்து, மோகனின் துப்பாக்கி 'ஓர்க்' ஷாப்புக்கு வந்திருக்கான். 'ஓர்க்' ஷாப்பிலிருந்த வீடு திரும்பியதும், அங்கு ஒரு கடிதத்தைப் பார்த்து விட்டு நேரே மனோரமா வீட்டிற்குப் போயிருக்கிறான். மனோரமாவிடம், சில 'ஷேர் பத்திரங்களில் கையெழுத்து வாங்கியிருக்கிறான். அந்த 'ஷேர்'கள் எது சம்பந்தப்பட்டவை? நன்றாகத் துருவி விசாரித்த பிறகுதான் அது தெரியும்.

கொலை நடந்த அன்று காலையில் டெலிபோனில் பாங்க் அக்கௌன்டெண்ட் அவனோடு பேசியிருக்கிறார். அவனுக்கு லீவு கிடைக்கவில்லை என சொல்லி இருக்கிறார். அதன் பிறகு பிரபாகர் என்ன செய்தான்? எங்கே போனான்? அன்று நாலே கால் மணிக்கு விமானத்தில் புறப்பட்டு போயிருக்கிறான். ஆனால் விமானக் கம்பெனியில் விசாரித்த, ஒரு வாரத்துக்கு முன்பே அவன் விமானத்தில் பிரயாணம் செய்ய 'டிக்கேட்' வாங்கி வைத்திருப்பதாகத் தெரிந்தது. அதுதான் விஷயத்தை மிகவும் குழப்புகிறது.

பிரபாகர் சமாசாரந்தான் இப்படி என்றால், கடன்காரன் ராமையாவின் விவகாரம் இன்னும் குழப்பமாக இருக்கிறது. அவன் ஏன் திடீரென மறைய வேண்டும்? அவனது ஜாகையில் போய் விசாரித்தால், யாருக்கும் எதவும் தெரியவில்லை. அதோடு அவன் தனியே வசித்து வந்ததால், பக்கத்தில் இருப்பவர்களுக்கும் அவனைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஆனால் அவனுக்குத் திருச்சி ஜில்லாவில் கொஞ்சம் நஞ்சை நிலம் இருக்கிறது என்று இன்ஸ்பெக்டர் துரைசாமி அறிந்து கொண்டார். ஆனால் அந்த நிலத்தில் இருந்து வரும் வருமானம் செட்டியாரின் கடனுக்கு வட்டி கட்டக் கூடப் போதுமானதாக இல்லை. ராமையா, இரண்டு மூன்று இடங்களை வாடகைக்குப் பிடித்து வைத்துக் கொண்டு வாசம் செய்யவும், வசதி இல்லாதவன். அவன் எங்கே போயிருப்பான்? திருச்சியிலும் அவன் இப்பொழுது இல்லை!

செட்டியார் உடலில் பாய்ந்து அவர் உயிரைக் குடித்த குண்டும், போன இடம் தெரியவில்லை. செட்டியாரின் பங்களாத் தோட்டம் முழுவதும் வெட்டிப் பார்த்தும், அந்தத் துப்பாக்கிக் குண்டு கிடைக்கவில்லை! துரைசாமி நினைத்தபடி, பிரபாகர் தன் வீட்டு ஜன்னல் வழியாக மாடி மீதிருந்து சுட்டிருந்தால், அந்தக் குண்டு, தோட்டத்தில் எங்காவது விழுந்து கிடக்கும். அல்லது, செட்டியார் உட்கார்ந்திருந்த தள்ளு வண்டியில் எங்காவது சிக்கியிருக்கும். அங்கு எல்லாம் காணவில்லை .

ராமையா காரிலிருந்தபடியே சுட்டிருந்தால், அது அவர் உடலைத் துளைத்துக் கொண்டு, காம்பவுண்ட் சுவரில் பதிந்திருக்க வேண்டும்; அல்லது கூவம் ஆற்றில் போய் விழுந்திருக்க வேண்டும்!

வேலைக்காரனான பாலுவை துரைசாமி அடிக்கடி விசாரித்துக் கொண்டே இருந்தார். அவன் எதையாவது சொல்வதற்கு மறந்திருக்கலாம் என்று திரும்பத் திரும்ப அவனை நினைவு படுத்திக் கேட்டார். அவனுக்குப் புதிதாக எதுவும் நினைவுக்கு வரவில்லை. துப்பாக்கிக் குண்டு 'ஷ்' என்ற ஒலியோடு வரும். அது கூடக் கேட்க வில்லை என்கிறான். ஒருக்கால் ராமையாவின் கார் சப்தத்தில் அது கேட்காமலும் போயிருக்கலாம்.

இப்படிப் பல விதமாக யோசனை செய்து கொண்டே, இன்ஸ்பெக்டர் துரைசாமி மவுண்ட்ரோடு 'ரவுண்ட் டாணா' அருகே சென்று கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில், நரசிங்கபுரம் ரோடிலிருந்து வந்து கொண்டிருந்த ஒருவன் மீது திடீரென மோதிக் கொண்டார்! தன்னோடு மோதிய குருடன்' யாரென்று பார்ததார் துரைசாமி: அவன் வேறு யாருமிலலை! மனோரமா நடித்த நாடகக் கம்பெனிச் செகரெட்டரி செல்லப்பாவே தான்!

"ஏ; உன்னத்தான் தேடிக் கொண்டு இருக்கிறேன்!" என்றார் துரைசாமி. ஒரு நாளில் அவன் ரொம்பவும் மாறிப் போயிருந்தான்: முன்தினம் தான் அவனை வேல்டாக்ஸ் தியேட்டரில் துரைசாமி பார்த்தார். அவன் முகம் எல்லாம் வீங்கி, தொங்கிப் போயிருந்தது. பார்த்ததும் அவன் முகம் வெளுத்தது போலவும் தோன்றியது!

"என்னையா தேடினீர்கள்!... ஏன்?..." என்று தடுமாறினான்.

"உனக்கு டெலிபோன் பண்ணிக் கூப்பிட்டேன், மத்தியானம் வரையில் நீ அகப்படவே இல்லை. எங்கே போயிருந்தாய்?"

செல்லப்பா திடுக்கிட்டான்.

"நான் கொஞ்சம் வெளியில் போயிருந்தேன்; எதற்காக என்னைத் தேடினீர்கள்"

"நீ உன் இருப்பிடத்தில் இல்லை; தியேட்டரில் இல்லை; எங்கே தலைமறைவாகத் திரிகிறாய்?" என்று அதட்டினார் துரைசாமி.

செல்லப்பாவால் பேச முடியவில்லை. எச்சிலை விழுங்கிக் கொண்டு "வாருங்கள்; பக்கத்தில் ஹோட்டலில் உட்கார்ந்து காபி சாப்பிட்டபடி பேசலாம்!" என்று தடுமாறிக் கொண்டே கூறினான்.

"காபி சாப்பிட்டால் தான் உன் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யுமா? சரி வா!" —என்றார் துரைசாமி.

இருவரும் பக்கத்திலிருந்த காபி ஹோட்டலில் நுழைந்தார்கள். துரைசாமி இருவருக்கும் காபி கொண்டுவரச் சொன்னார். இருவரும் ஆளே இல்லாத ஒரு மூலைப்பக்கம் போய் உட்கார்ந்தார்கள்.

"என்ன ஓரே அடியாகக் கலங்கிப் போய் இருக்கிறாய்? எதைப் பற்றி மனதை அலட்டிக் கொள்கிறாய்? சோமசேகரைப் பற்றியா?"

செல்லப்பா துரைசாமியை வெறிக்கப் பார்த்தான். பிறகு "ஆமாம்" என்று உளறினான். அதைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். இனிமேல் நாடகம் நடத்த முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. அவர் பணம் தரப் போவதில்லை. அது மட்டு மல்ல அவர் பழகுவதற்கு ரொம்பவும் நல்ல மனிதர்!" என்றான்.

இதைச் சொல்லிவிட்டு, துரைசாமி முகத்தை ஜாடையாகக் கவனித்தான். "அவரைப் பற்றி விசாரிக்கத்தான் என்னைத் தேடினீர்களோ?" என்றான்.

"ஆமாம், சோமசேகர் உன் நண்பரல்லவா!"

"போஷகர்!— விருந்து சமயத்தில் தான் நான் அவரோடு நெருங்கிப் பழகுவேன். அதற்கு மேல் அவரைப்பற்றி எனக்குத் தெரியாது. ஏராளமான பணம் வைத்திருக்கிறார் என்று மட்டும் புரிந்து கொண்டேன்!" என்றான் செல்லப்பா.

"அந்தப் பணம் அவருக்கு எப்படி வந்தது என்று நீ கேட்கவில்லையா செல்லப்பா?"

"அப்படிக் கேட்பது இயற்கை தானே?" என்று சுற்றி வளைத்துப் பேசினான் செல்லப்பா.

இன்ஸ்பெக்டர் துரைசாமிக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு, வந்தது. இருந்தாலும் அதை அடக்கிக் கொண்டு, "இதோ பார் செல்லப்பா! நேரடியாக என்னிடம் பேசு. மர்ம மனிதர் சோமசேகர் யார் சொல்லு" என்று கடுமையாகக் கேட்டார்.

செல்லப்பா தன் நெற்றியில் வந்த வேர்வையைத் துடைத்துக் கொண்டான். முதலில் என் நிலைமையை நான் புரிந்து கொள்ள வேண்டும். சோம சேகரைப் பற்றி நான் சொன்னால் உடனே என்னை எந்த விதத்தில் நீங்கள் நடத்தப் போகிறீர்கள்? அதாவது எனக்கு கஷ்டம் கொடுப்பீர்களா? ஆதரவு தருவீர்களா? அது முதலில் தெரிய வேண்டும். இதனால் நான் ஏதோ பிரமாத உளவு கொடுக்க முடியும் என்று

நினைக்காதீர்கள். சமீபத்தில் எனக்கு அதிகப் பணம் வேண்டியிருந்தது. அதற்காக அவரிடம் எனக்கு உதவி செய்ய முடியுமா? அல்லது உங்கள் உள் விவகாரங்களில் நான் தலையிட்டு ஆராய்ச்சி செய்து உங்கள் நிலவரத்தைத் துப்பறியட்டுமா?' என்று கேட்டேன்"

"அதாவது மிரட்டினாய்!" என்றார் துரைசாமி.

"அது மிரட்டலே இல்லை. ஏனென்றால் அவரைப் பற்றி எனக்குத் தெரிந்த விஷயம் எதுவுமே இல்லை. ஆனால் சோமசேகர் சம்பந்தமாக ஏதோ ஒரு மர்மம் இருப்பதாக எனக்குப்பட்டது. அதனால் குருட்டடியாகக் கேட்டேன். ஐயா! அதன் பலன்... நான் அடியோடு நாசமாகி விட்டேன் அவர் என் கண்ணில் இனி எங்கே தட்டுப்படப் போகிறார்?" என்று கண்ணீ ரோடு கூறினான்.

துரைசாமி அவன் முகத்தையே வெறிக்கப் பார்த்தார். பிறகு அவர், தோளில் கையை வைத்து, "டேய் இந்தக் கொலையில் உனக்கு எவ்வளவு சம்பந்தம்? பதில் சொல்" என்று மிரட்டலாகக் கேட்டார்.

செல்லப்பாவின் முகம் பீதியால் விகாரமடைந்தது. "கொலையா? நானா...? எந்தக் கொலை..?''

"பெரிய கருப்பன் செட்டியார் கொலை! உனக்குத் தெரியாது?"

இதற்குச் செல்லப்பா நேரிட பதில் சொல்லவில்லை. அளவு கடந்த கலவரம் அவனைப் பீடித்தது.

'செட்டியார்... கொலை செய்யப் பட்டார்' என்று பிரமை தட்டிப் போய்க் கூறினான்.

சென்னையில் இருந்த யாருக்கும் அந்தக் கொலையைப் பற்றித் தெரியவில்லை என்றால் அது அதிசயம்தான்! அப்படிச் சொன்னாலும் நம்மால் நம்ப முடியாது. ஏனென்றால் எல்லாப் பத்திரிகைகளும் அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தன. ஆனால் செல்லப்பா, அது தனக்குத் தெரியாது என்று கூறியதை இன்ஸ்பெக்டர் துரைசாமி நம்பினார்! அல்லது நம்புவது போல நடித்தார்!

"பெரிய கருப்பன் செட்டியார் கொலையுண்டாரா? அது உண்மை தானா?"

"உண்மைதான். உன்னிடம் நான் விளையாடுவதாக நினைத்தாயா?"

செல்லப்பா கற்சிலை போல உட்கார்ந்திருந்தான். அவனால் பேச முடியவில்லை. செல்லப்பா சில சமயங்களில் உணர்ச்சி வசப்பட்டுத் துடித்துப் போவான். ஆனால் அவனுக்கு உறுதியான மனோ வலிமையும் இருந்தது. கஷ்டப்பட்டு உணாச்சியை ஒடுக்கி அவன் பேச ஆரம்பித்தான். அவன் பேச்சில் ஒரு நிதானம் இருந்தது.

"அதிர்ச்சி தரக்கூடிய செய்தி! நான் இரண்டு நாட்களாகப் பத்திரிகையே பார்க்கவில்லை, என் கவலை என் தலைக்கு மேல் இருக்கிறது. நாடகங்களை இனி நடத்த முடியாமல் போய்விட்டதே என்ற ஒரே கவலை தான் எனக்கு, மற்றவைகளைப் பற்றி நான் சிந்திக்க முடியவில்லையே!" என்றான்.

இன்ஸ்பெக்டர் துரைசாமியின் முகம் மாறியது. இதுவரையில் அதில் இருந்த மனிதர்களை இலேசாக மாறி, மிருகராஜனைப் போன்ற கொடூரக் களை படர ஆரம்பித்தது.

"சோமசேகருக்கு நீ என்னென்ன வேலைகள் செய்தாய்? அதாவது அவருடைய கலா ரசனைக்குக் கலைச் செல்விகளை அனுப்புவதைக் கேட்கவில்லை... அவனுக்காக நீ போய் பாங்கியிலிருந்து பணம் வாங்கி வருவது வழக்கமல்லவா?"

செல்லப்பா நடுக்கத்தோடு தலை அசைத்தான்.

"ஆமாம். பெரிய தொகைகளை எல்லாம் வாங்கி வருவேன், அவர் சொல்லும் இடத்தில் போய் அவரைச் சந்தித்து அந்தப் பணத்தைக் கொடுப்பேன்"

"எங்கெங்கு சந்தித்திருக்கிறாய்?" என்று கடுமையாகக் கேட்டார் .

"பல இடங்களில், பெரும்பாலும் அன்னிமீரா ஹோட்டலில், சில சமயங்களில், எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில். பொதுவாக அவர் விருந்து கொடுக்கும் சமயங்களில் நிறைய பணம் எடுப்பார். அதை பாங்கியிலிருந்து வாங்கிப் போய் விருந்து ஆரம்பிக்கு முன் அவரிடம் கொடுப்பேன். தான் சிலோனில் பெரிய எஸ்டேட் முதலாளி என்றும் தனக்கு இந்தியாவிலும் சொத்து இருப்பதாகவும், இங்குள்ள பணத்தை அங்கு கொண்டு போக முடியாததால் இங்கேயே மனம் திருப்திப்படும்படி செலவிடுவதாகவும் அவர் சொல்லி இருக்கிறார். அதற்கு மேல் நான் அவரைக் கேட்கவில்லை. ஏனென்றால், அதைப் போல சிலர் இங்கு மடத்தனமாகக் காசை வாரி எறிவதாக நான் கேள்விப்பட்டு இருக்கிறேன். நமக்கு அதைப் பற்றி என்னவென்று இருந்து விட்டேன்."

"எந்த பாங்கில் போய் பணம் வாங்கி வருவாய்?" "சிந்தாதிரிப் பேட்டை பாங்கில்’’

"ம்!’’ என்று உறுமினார் துரைசாமி, "மரியாதையாகக் கேட்கிறேன், சொல்லி விடு. சோமசேகர் யார்?"

"சத்தியமாய் எனக்குத் தெரியாது என்னைக் கொன்றாலும் தெரியாது. நான் — இன்ஸால் வென்ஸி மனுப்போட்டிருப்பது பேப்பரில், வெளிவந்தது. அதைப் பார்த்த அவர் என்னைப் போன்ற ஒரு புத்தசாலியான மனிதன்நொடித்துப் போனது பற்றி ரொம்ப வருந்துவதாகவும், தன்னை வந்து சந்தித்தால், முடிந்தவரை உதவி செய்வதாகவும் எழுதி யிருந்தார்"

"அவர் கைப்பட எழுதினாரா?"

இல்லை, டைப் மிஷினில் டைப் அடித்த கடிதம் அது. அதை எங்கோ போட்டு வைத்திருக்கிறேன். தம்மை அன்னிமீரா ஹோட்டலில் சந்திக்கும் படி எழுதியிருந்தார்: நான் அங்கு போய் பார்த்தேன். அவரைப் பற்றி எனக்குத் தெரிந்த உண்மை ஒன்று தான். அவருக்கு நிஜத்தில் தலைமயிர் இல்லை! அதனால் "டோப்பா' மயிர் வைத்திருந்தார்! இதைத் தவிர அவர் விவகாரத்தில் நான் தலையிட்டு ஆராயவில்லை ."

"இது பொய்! அவரை மிரட்டினதாக என்னிடம் சொன்னாயே"

"நான் அவரிடம் சும்மா கப்ஸா' விட்டேன்! உண்மையில் எனக்கு அவரைப் பற்றி எதுவும் தெரியாது. ஆனால் அவர் ஒரு 'மர்ம மனிதர்' என்ற சந்தேகம் மாத்திரம் எனக்கு ஏற்பட்டிருந்தது." செல்லப்பா புளுகுகிறான் என்று இன்ஸ்பெக்டர் துரைசாமிக்கு நிச்சயமாகப்பட்டது.

"இந்த மர்ம மனிதனைக் கைது செய்தால் உனக்கு எதுவும் ஆபத்து வருமென்ற பயப்படுகிறாயா? அவன் பெரிய கருப்பன் செட்டியார் பணத்தை ஏராளமாக மோசம் செய்திருக்கிறான் என்று எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. அதோடு அவன்தான் செட்டியாரைக் கொன்றான் என்றும் நிச்சயமாக நம்புகிறேன், அது பயங்கரமான கொலை. அந்தக் கொலையில் மாட்டிக் கொள்ள நீ விரும்ப வில்லை! இல்லையா?"

செல்லப்பாவின் முகம் மீண்டும் பயத்தால் விகாரம் அடைந்தது. "எனக்குத் தெரிந்தால் அவன் யாரென்று உங்களுக்குச் சொல்லி விடுவேன் சார்! — சத்தியமாக எனக்கு அவன் யாரெனத் தெரியாது" என்று கெஞ்சுங் குரலில் கூறினான்.

துரைசாமி அவன் முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

"இன்ஸ்பெக்டர்; என்னை நம்புங்கள்" என்று மீண்டும் பரிதாபமாகக் கூறினான்.

"பிரபாகரைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?"

"யா...யா...யார்! சந்தியா பாங்க் ஏஜண்டைப் பற்றியா?" என்று தடுமாறினன் செல்லப்பா.

"இப்பொழுது மனோரமாவிடம் இருக்கும் ஒரு பாங்கு 'ஸ்டேட்மெண், செட்டியாரை ஏமாற்ற மோசடியாகத் தயாரிக்கப்பட்ட ஸ்டேட்மெண்ட், அதைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?"

இதைக் கேட்டதும் செல்லப்பா மயங்கி விழுந்து விடும் நிலையை அடைந்தான். "எனக்கு ஒன்றும் தெரியாது —எதுவும் தெரியாது; எனக்குப் பிரபாகரைத் தெரியும்

—சோமசேகரையும் தெரியும்!" என்று உளறிவிட்டு சிறிது நேரம் பிரமை பிடித்தது போல உட்கார்ந்து இருந்தான்.

"'நான் சோமசேகரைக் கண்டு பிடித்துக் கொடுக்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள்; என் நிலைமை என்ன? எப்படி நடத்துவீர்கள்?" என்று கேட்டான்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி தன் ஆசனத்தை விட்டு எழுந்தார்.

"அவனை நீ கண்டு பிடித்துக் கொடுத்தாலும் நாங்கள் கண்டு பிடித்தாலும், உன் நிலைமை ஒன்றேதான்" என்ற கடூரமாகக் கூறிவிட்டு, செல்லப்பா! நீ எப்படிப்பட்ட சூழ்நிலையில் சிக்கிக் கொண்டிருக்கிறாய் என்று உனக்குப் புரியவில்லை. இங்கே ஒருவர் கொலை செய்யப்பட்டு இருக்கிறார் — இன்னொருவன் சில தினங்களுக்கு முன் கொல்லப்பட்டான் — இரண்டையும் அதே ஆள் தான் செய்திருக்கக் கூடும். ஏனென்றால் சங்கருக்கு அதிகப்படியான உண்மைகள் தெரிந்திருந்தன. உனக்கும் தெரிந்திருக்கும் என்றே தோன்றுகிறது. நீ வெளியே இருப்பதை விட உள்ளே (சிறையில்) இருப்பது தான் உன் உயிருக்குப் பந்தோபஸ்து!" என்றார்.

செல்லப்பா ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

"உன்னிடம் சொல்ல வேண்டியது நிறைய இருக்கிறது. இரு இங்கேயே உட்கார்ந்திரு. நான் போய் டெலிபோ'னில் பேசி விட்டு வருகிறேன்!" என்று நகர்ந்தார் .

செல்லப்பா அளவு கடந்த கலவரம் அடைந்து விட்டான் என்பதை அவன் முகமே எடுத்துக் காட்டியது.

"பயப்படாதே! உன்னை நான் கைது செய்யப் போவதில்லை. அதற்கு எனக்கு உதவிக்கு யாரும் தேவையும் இல்லை. நாயை அடிக்கக் குறுந்தடி' எதற்கு?" என்று கூறிவிட்டு டெலிபோன் இருந்த இடத்திற்குப் போனார்.

அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து நூறு கஜத்திற்கு அப்பால் 'டெலிபோன்' இருந்தது. அதைச் சுற்றி கண்ணாடிப் பெட்டி இருந்தது. துரைசாமி போலீஸ் தலைமைக் காரியாலயத்திற்குப் போன் செய்து பேசினார்:

ஹலோ! துரைசாமி பேசுகிறேன்... இங்கே 'ரவுண்ட்டாணா" வில் 'காபி ஹோட்டலில்' செல்லப்ப வோடு இருக்கிறேன். உடனே இரண்டு ஸி.ஐ.டி. இன்ஸ்பெக்டர்களை அனுப்புங்கள். அவனை இரவு பகல் கண்காணிக்க வேண்டும். இப்பொழுது இருந்தே அவனை நம் பார்வையில் வைத்திருக்க வேண்டும். இதில் தவறி விடக்கூடாது. என்ன?... சரி!" என்று டெலிபோனை வைத்து விட்டு வந்தார்.

கால் மணி நேரம் கழித்து, துரைசாமியும் செல்லப்பாவும் ஹோட்டலை விட்டு வெளியே வந்தார்கள். சிறிது தூரத்தில் இரு இளைஞர்கள் அவர்களைத் தொடர்ந்து

வந்தார்கள். செல்லப்பா துரைசாமியிடம் விடை பெற்றுக் கொண்டு ஒரு 'டாச்ஸி' காரில் ஏறி டவுனை நோக்கிப் போனான். அவர்களைத் தொடர்ந்த வந்த இளைஞர்களும் மற்றொரு காரில் ஏறி செல்லப்பாவின் காரைத் தொடர்ந்தார்கள்.

அன்று இரவுதான், "சகல கலா நாடக அரங்கு" என்ற செல்லப்பாவின் நாடக சபையின் வந்தனோபசார இரவு!' அதாவது நாடகங்கள் நடத்துவதை நிறுத்தப் போவதாக பொது மக்களுக்கு அறிவிக்க, கடைசியாக ஒரு நாடகம் போட்டு எல்லோரிடமும் விடை பெற்றுக் கொள்ளும் நாள்! அன்று கண்டிப்பாக செல்லப்பா மேடையில் தோன்றி ஏதாவது பேசியிருக்க வேண்டும். ஆனால் அவன் வரவில்லை!

நாடகம் முடிந்ததும், கதாநாயகி மனோரமா வழக்கம் போல் 'மேக் அப்' அறைக்கு வந்தாள். அங்கு மோகன் மாலைப் பத்திரிகை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தான். மனோரமா உள்ளே வருவதைப் பார்த்ததும், "என்ன மனோரமா? நீ துப்பறிவது எந்த நிலையில் இருக்கிறது?" என்று விளையாட்டாகக் கேட்டான்.

"இருக்கிறது!" என்றாள் மனோரமா .

"நான் பாலுவைப் பார்த்தேன். அவன், ராமையாதான் கொலை செய்திருப்பான் என்கிறான்; அதை நான் நம்பவில்லை. ஏனென்றால், ராமையாவை அவனுக்குப் பிடிக்காது!" என்றான் மோகன்.

அதை மனோரமா அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை.

"துரைசாமி, தனக்குக் கிடைத்த தடயங்களை எல்லாம் உங்களிடம் சொன்னாரா?" என்று கேட்டாள் மனோரமா.

"இல்லை. அவர் ஒரு தினுசான ஆள்!" என்றான் மோகன். "நான் கேட்டால் சொல்லுவாரா?" மோகன் ஆச்சரியத்தோடு அவளைப் பார்த்தான்.

"உன்னால் அவருக்கு எதுவும் உதவி செய்ய முடியும் என்று நினைத்தால், சொல்லலாம். இப்பொழுது இங்கே வருவதாகத் தகவல் அனுப்பி இருக்கிறார். வந்தால் நான் கேட்கட்டுமா?"

"நானே கேட்கிறேன்" என்றாள் மனோரமா.

இன்ஸ்பெக்டர் துரைசாமி வெகு நேரம் கழித்து வந்தார். அவர் மனம் ரொம்பவும் வேதனைப்பட்டது. ஏனென்றால் ஏழரை மணிக்கு அவருக்கு ஒரு தகவல் கிடைத்தது.

செல்லப்பா ஸி.ஐ.டி.க்காரர்கள் கண்காணிப்பில் இருந்து தப்பிவிட் டான்... !

அதைக் கேட்டதும் துரைசாமி ஆத்திரமாக "சென்னையில் அவன் எங்கிருந்தாலும் தேடிப் பிடித்து அவனை விடாமல் தொடர்ந்து செல்லுங்கள்!" என்று அவர்களிடம்

கத்தினார். 'வேல் டாக்ஸ்' தியேட்டருக்கு வந்தார். "இந்தக் காலத்துப் பிள்ளைகளே இப்படித்தான், துப்பறிய வந்து விட்டார்கள்—துப்பறிய!" என்று உறுமினார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

"இதோ உங்களுக்கு ஒரு புது துப்பறியும் நிபுணர்!" என்று மனோரமாவைச் சுட்டிக் காட்டினான் மோகன். துரைசாமி எந்த வித உணர்ச்சியையும் வெளிப்படுத்தவில்லை.

"இந்த அம்மாள் சுண்டு விரல் முனையில் இருக்கும் அறிவு கூட அந்தப் பையன்களின் மண்டையில் இருக்காது" என்று கூறி விட்டு துரைசாமி மனோரமாவைப் பார்த்தார்.

"நான் உங்களை ஒன்று கேட்க வேண்டும். இன்ஸ்பெக்டர்! இந்தக் கொலை வழக்கில் உங்களுக்குத் தெரிந்த விவரம் எல்லாம் நீங்கள் சொல்வீர்களா? நான் உங்களுக்குச் சில உதவிகள் செய்ய முடியும் என நினைக்கிறேன்" என்றாள் மனோரமா.

அதைத் துரைசாமி கிண்டல் செய்யாமல் இருந்தது, மோகனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அதற்குப் பதிலாக ஆழ்ந்த யோசனையில் இருந்தார் துரைசாமி பிறகு, "ஓ, தாராளமாய்! இருவருக்கும் தெரிய வேண்டும் என்று நினைக்கிறீர்களா?'' என்று மோகனைச் சுட்டிக் காண்பித்தார்.

"உங்களுக்கு ஆட்சேபணை இல்லா விட்டால். சரி, ஆட்சேபணை இருந்தால் அவரைப் போகச் சொல்லி விடலாம்'' என்றாள்.

இதற்குள் வீட்டுக்குப் புறப்பட மனோரமா தயாராகி விட்டாள். மூவரும் வெளியே நின்ற டாக்ஸியில் ஏறி, மனோரமாவின் வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

மனோரமாவின் வீட்டைக் கார் நெருங்கியதும், காரை விட்டு இறங்க மூவரும் வீட்டை நோக்கிச் சென்றார்கள். வீடு விரியத் திறந்து கிடந்தது! மனோரமா பிரமித்துப் போய்விட்டாள். துரைசாமி அவசரமாகப் பூட்டைப் பார்த்தார். ஏதோ திராவகத்தை ஊற்றிப் பூட்டை யாரோ திறந்து இருக்கிறார்கள்.

துரைசாமி பையில் இருந்த துப்பாக்கியை எடுத்துக் கொண்டு மெதுவாக, ஸ்விட்ச் போட்டு இருந்த இடத்தை அணுகி விளக்கை எரிய விட்டார். வீடு காலியாக இருந்தது. யாருமில்லை. வீடு முழுவதும் விளக்கைப் போட்டு ஒவ்வொரு இடமாகப் பார்த்தக் கொண்டே வந்தார், கொல்லைப் புறக்கதவும் விரியத் திறந்து கிடந்தது.

வீட்டில் யாருமே இல்லை...!

ஆனால், வீடு முழுவதும் அலங்கோலமாகச் சாமான்கள் சிதைந்து கிடந்தன. மனோரமாவின் பெட்டியிலிருந்த துணிகள் எல்லாம் வெளியே எடுத்துப் போடப்பட்டுக்

கிடந்தன. மேஜை டிராயரில் இருந்த பத்திரிகைகள், கடிதங்கள் எல்லாம் வெளியில் எடுத்துத் தாறுமாறாக வீசி எறியப்பட்டிருந்தன, அழுக்குக் கூடை கூட தல கீழாகக் கவிழ்க்கப் பட்டு அழுக்குத் துணிகள் வெளியே எடுத்துப் போடப்பட்டிருந்தன. மேஜை மேலிருந்த 'டைம்பீஸ்' கடிகாரம், கீழே மல்லாக்காகக் கிடந்தது. 9—20 மணிக்கு நின்று போயிருந்தது. திரும்பி எடுத்து வைத்ததும் ஓட ஆரம்பித்தது.

"எதையோ தேடிப் பார்த்திருக்கிறான் திருடன்!" என்றார் துரைசாமி.

"சுமார் 9—20க்கு அவன் இங்கு இருந்திருக்க வேண்டும். அப்பொழுது கடிகாரத்தைத் தூக்கிப் போட்டிருக்கிறான். 'லெவல்' சரியாக இல்லாததால் உடனே அது நின்று விட்டது."

இதற்குள் மோகன், கீழே எடுத்துப் போடப்பட்டிருந்த மனோரமாவின் பட்டுப் புடவை ஒன்றை நகர்த்தி விட்டு, அதன் அடியிலிருந்த ஒரு வட்ட வடிவமான நகைப் பெட்டியை எடுத்துப் பார்த்தான். அதில் வைக்கப்பட்டிருந்த ஒட்டியாணமும், காசு மாலையும் அப்படியே இருந்தன.

"இதை விட்டுவிட்டுப் போய் விட்டானே; இதன் விலை மூவாயிரம் ரூபாய்க்கு மேல் ஆகுதே" என்று ஆச்சரியப்பட்டான் மோகன்.

"அதைத் திருட அவன் வரவில்லை!" என்றார் துரைசாமி. மோகனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"உங்கள் வீட்டுக்கு யார் அடிக்கடி வருவார்கள்?" என்று கேட்டார் துரைசாமி.

நீங்கள் வருவீர்கள்; மோகன் வருவார்; செல்லப்பா வருவார். வேறு யாரும் வருவதில்லை!" என்றாள் மனேரமா.

"சரி; வீட்டின் எல்லா பாகத்தையும் நான் பார்த்து விட்டேனா? இன்னும் பார்க்க வேண்டிய இடம் எதுவும் இருக்கிறதா?" என்று கேட்டார் துரைசாமி. "ஸ்தான அறை தவிர எல்லா இடமும் பார்த்தாகி விட்டது.! "என்றாள் மனோரமா.

"அதையும் பார்த்து விடலாம்" என்று துரைசாமி கூறவே மூவரும் ஸ்தான அறைக்குச் சென்றார்கள். அங்கு பார்க்க வேண்டியது எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே துரைசாமி திரும்பினார். அந்தச் சமயத்தில் அவர் பார்வை சட்டென்று சுவரில் விழுந்தது.

அங்கே பத்தையாக ரத்தக்கறை இருந்தது. துரைசாமி ஒரு விரலை வைத்துப் பார்த்தார். ரத்தம் 'பிசு பிசு' வென ஒட்டியது.

"பச்சை ரத்தம்!" என்றார் துரைசாமி. மனோரமாவின் உடல் நடுங்கியது. பீதியோடு அறைக்குள் பார்த்தாள். அங்கு கொடியில் ஒரு துணி கிடந்தது. அது

அவளுடையதல்ல.

அது எப்படி அங்கே வந்தது?

"அந்தத் துணியை எடுத்துப் பாருங்கள்" என்று இன்ஸ்பெக்டரிடம் கூறினாள். துரைசாமி அதைக் கையில் எடுத்தார் அது ஒரு 'புஷ் கோட்'. புதிதாகத் தைக்கப்பட்டது. அதில் எந்தவிதக் குறியும் இல்லை. ஆனால் புஷ் கோட்டின் முதுகுப் பக்கம் கை அகலத்திற்கு ரத்தத்தில் நனைந்திருந்தது.

"திருடனுக்கு எங்கோ காயம் பட்டிருக்கிறது," என்றான் மோகன்.

"திருடனுக்கு எதவும் காயம் பட்டதாக எனக்குத் தோன்றவில்லை. அப்படிப் பட்டிருந்தால், தரையில் ரத்தம் சொட்டி இருக்கும். அவன் மேல் எங்கேயோ இன்னொருவர் உடைய ரத்தம் பட்டிருக்கிறது. அதை இங்கே வந்து கழுவி இருக்கிறான். புஷ் கோட்டில் ரத்தம் அதிகமாக இருந்ததால், அதை வீசி எறிந்து விட்டுப் போயிருக்கிறான்" என்றார் துரைசாமி.

" அப்படியானால் இங்கு வருவதற்கு முன்..."

"அவன் எங்காவது அடிபட்டிருக்கலாம். அல்லது, யாரையாவது படுகாயப்படுத்தி இருக்கலாம்; அல்லது கொலை செய்திருக்கலாம். சரி, ஒரு நிமிஷம் இருங்கள்; போலீஸ் ஸ்டேஷனுக்கு டெலிபோன் செய்து விடுகிறேன்" என்று டெலிபோன் செய்யப் போனார்.

மோகன் கொல்லைப்புறக் கதவைத் தாளிட்டு விட்டு வந்தான். இன்ஸ்பெக்டர் துரைசாமி தன் வேலையை முடித்துக் கொண்டு வந்தார். மனோரமா சாந்தமாக, "செட்டியார் கொலையைப் பற்றிய விவரங்களைச் சொல்கிறேன் என்றீர்களே." என்று நினைவு படுத்தினாள்.

துரைசாமி அந்தக் கொலை சம்பந்தமாகத் தமக்குக் கிடைத்த எல்லாப் 'புலன்' களையும் அவளுக்கு விளக்கிக் கூறினார். இதைக் கவனித்த மோகன் ஆச்சரியத்தில் ஸ்தம்பித்து விட்டான், ஏனென்றால், துரைசாமி தன்னிடமுள்ள 'கேஸை' ப்பற்றி யாரிடமும் பேச மாட்டார். எது கேட்டாலும் ஊமைபோல இருப்பார். அவரா ஒரு சிறு பெண்ணுக்கு இவ்வளவு விளக்கமாகத் தம் வழக்கை எடுத்துக் கூறுகிறார் என்று திகைத்துப் போனான்.

மனோரமா, துரைசாமி சொன்னதை எல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். எல்லாவற்றையும் கூறி முடித்த துரைசாமி மனோரமாவிடம், "நீங்கள் சொல்ல வேண்டியது எதுவும் இருக்கிறதா?" என்று கேட்டார்.

இதை கேட்கும்பொழுது அவர் பார்வை மோகன் மீது விழுந்தது. அவன் வியப்போடு அவரைப் பார்த்துக் கொண்டிருந்தான். துரைசாமி உடனே, "என்னை முட்டாள் என்று நினைக்கிறீர்களா மோகன்? அந்த எண்ணத்தை விட்டு விடுங்கள். நான் முட்டாளல்ல. ஒரு துப்பறிபவன் மனம் எப்படி இருக்க வேண்டுமோ அதைப் போலத்தான் ஒவ்வொரு பெண்ணின் மனமும் இயற்கையிலேயே அமைந்திருக்கிறது. அதனால் அவர்களுக்கு ஏதாவது விஷயம் மனதில் உதித்தால் நிச்சயம் பிரயோசனப்படும்!" என்றார்.

மறுபடியும் மனோரமா பக்கம் திரும்பி அவளை மீண்டும் கேட்டார். மனோரமா தலையை ஆட்டினாள். "கொலையைப் பற்றி மேற்கொண்டு எதுவும் புலனாகவில்லை. ஆனால் என் வீட்டை ஏன் இப்படிச் சோதனை போட்டிருக்கிறார்கள் என்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது" என்றாள். துரைசாமி தலையை அசைத்தபடி, "அது இங்கே இருக்கிறது என்று அவர்களுக்கு யார் சொன்னார்கள் என உங்களுக்குத் தெரிகிறதா?" என்று கேட்டார் துரைசாமி.

மோகனுக்குப் பொறுக்க முடியவில்லை. அது என்று சூசகமாகப் பேசுகிறீர்களே; எது?" என்று ஆவலாகக் கேட்டான்.

"பாங்க் ஸ்டேட்மெண்ட்—செட்டியாருக்கு அனுப்பிய பொய்க் கணக்கு நகல்," என்றாள் மனோரமா, துரைசாமியும் புன்னகையோடு 'ஆம்' என்ற தலையை அசைத்தார்.

"அதற்காகத்தான் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று யூகிக்கிறேன். ஆனால் அது இங்கே இருக்கிறது என்று எப்படித் தெரிந்து கொண்டார்களோ?" என்றாள் மனோரமா.

"நான் தான் இன்று மாலை செல்லப்பாவிடம் அப்படிச் சொன்னேன். அது என் பையில் இருப்பது அவனுக்குத் தெரியாது!" என்றார் துரைசாமி. இதைச் சொல்லிவிட்டு துரைசாமி, முகட்டை அண்ணாந்து பார்த்தபடி, "அந்த ரத்தக் கறை— அதுதான் எனக்குத் தலை வேதனையைத் தருகிறது" என்று கூறி விட்டு மறுபடியும் தன் காரியாலயத்திற்குப் போன் செய்யப் போனார்.

சிறிது நேரத்தில் திரும்பி வந்து, "ரயில்வே ஸ்டேஷன், ரோடுப் பாதைகள், விமான நிலையங்கள் முதலிய எல்லா இடங்களிலும், பந்தோபஸ்து செய்யும்படி ஏற்பாடு செய்து விட்டேன். செல்லப்பா எங்கும் தப்பிப் போய்விட முடியாது!" என்று கூறினார்.

அந்தச் சமயத்தில், துரைசாமி டெலிபோனில் தகவல் கொடுத்த படி, மனோரமா வீட்டுக்குக் காவலுக்காக இரண்டு போலீஸ்காரர்கள் வந்து சேர்ந்தார்கள். ஸி. ஐ. டி. ராமமூர்த்தியும் வந்து சேர்ந்தார். மனோரமா 'வேண்டாம்' என்று மறுத்துப் பார்த்தாள். ஆனால் துரைசாமி, அம்மாதிரி முரட்டுத் துணிவோடு இருப்பது தவறு என்று கூறி, இரு கான்ஸ்டேபிள்களையும் முன்புறம் ஒருவரும், பின்புறம் ஒருவருமாகக் காவல் காக்க ஏற்பாடு செய்து விட்டு, புறப்பட்டார்.

அவர் புறப்படும்போது மனோரமாவை ஒருபுறம் தனியாக அழைத்துச் சென்று அவளுடன் இரகசியமாக உரையாடினார்.

"மனோரமா! இனிமேல் நீங்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பெரிய கருப்பன் செட்டியார் தம் வீட்டை மோகனுக்கும் தம்முடைய பாங்க் இருப்புப் பணம், புரலூர் கிராமத்திலுள்ள ஸ்தாவர சொத்துக்கள் முதலானவற்றை உங்களுக்கும் இரகசியமாக உயில் எழுதி வைப்பது சம்பந்தமாக ஒரு வக்கீலிடம் கலந்து ஆலோசித்ததாகக் கேள்விப்பட்டேன்!" "அப்படியானால்...?"

" அந்த உயிலையோ உங்களையோ அழித்துவிட யாராவது முயற்சிக்கலாம்."

"அப்படி உயிலை அழிப்பதனால் யாருக்கு நன்மை? ஏன் மோகனுக்குத்தானே முழுச் சொத்தும் வாரிசுப்படிப் போய்ச் சேரும்?"

"இந்த விஷயத்தில் உங்கள் மோகனைக்கூட நீங்கள் முழுவதும் நம்பிவிடக் கூடாது!... ஆனால் மோகன் உங்களுக்குரிய உயிலை அழிக்க முயற்சிக்க மாட்டார் என்று நீங்கள் நம்பினாலும் நீங்கள் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும் ஏனெனில்... வேறு யாராவது மர்ம மனிதன் உங்கள் உயிலையோ உங்களையோ திருடிச் செல்ல முடியலாம்... அப்படிப்பட்ட ஒரு மர்ம மனிதன் சொத்துள்ள பெண்களைத் தூக்கிச் சென்று ஏதோ ஒரு ரகசிய அறைக்குள் அடைத்து வைக்கிறானாம். அவர்களுடைய கற்பையும் கெடுத்து அவர்களுடைய சொத்துப் பற்றுக்களைப் பயமுறுத்தி எழுதி வாங்கி பணமாக்கிக் கொண்ட பிறகு, அந்த அபலைகளைக் கொன்று தன் இரகசிய அறைக்குள்ளேயே புதைத்து விடுவானாம்..."

இதை துரைசாமி சொன்னதும் மனோரமாவின் நெஞ்சில் என்னவோ சுரீரென்று தைத்தது. அவளுக்கு ஆதியில் மர்ம மனிதன் ஒருவன் எழுதிய மொட்டைக் கடிதம் நினைப்பு வந்தது. அந்தக் கிராதகன் அவளையும் அவளுடைய உயிலையும் அபகரித்துச் செல்ல முயற்சிக்கிறானோ...? அவளை ரகசிய அறைக்குள் அடைத்து வைத்து அவளைப் பல வந்தமாக ஆசைநாயகி ஆக்கிக் கொண்டு விடுவானே?... சொத்துக்களை எல்லாம் மெல்ல மெல்லப் பணமாக்கும் வரை அவளை ரகசிய அறைக்குள் ஆசை நாயகியாக அடைத்து வைத்திருந்து காரியம் முடிந்ததும் அவளுடைய கழுத்தை நெரித்துக் கொன்று ரகசிய அறைக்குள்ளேயே புதைத்து விடுவானே?... இவ்வாறு எல்லாம் நினைத்த மனோரமா திக் பிரமை பிடித்தவளாய் நின்றாள். அவளைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே இன்ஸ்பெக்டர் துரைசாமி அவளுடைய வீட்டை விட்டு வெளியே வந்தார்.

வெளியே அவருக்காகக் காத்திருந்த மோகன், "இன்ஸ்பெக்டர்! என் மாமாவை யார் கொலை செய்திருப்பார்கள் என உங்களுக்குத் தோன்றுகிறது?" என்று கேட்டான்.

அவன் காதுக்குள் இன்ஸ்பெக்டர் ரகசியமாக பலவற்றைக் கூறி, முடிவில் பின் வருமாறு சொன்னார். உன் மனோரமா கூட அவரைக் கொலை செய்திருக்கலாம்! செட்டியார் தம் வீட்டைத் தவிர மற்ற சொத்துக்களை எல்லாம் மனோரமாவுக்கு ரகசியமாக எழுதி வைத்திருந்தால், எப்போதாவது அவர் மனம் மாறி உயிலை மாற்றி எழுத முடியாதபடி அவரை உடனே 'பைசல்' செய்து விடுவது அவசியம்... மேலும் நூறாண்டுக்கு மேலும் உயிர் வாழ முடியும் என்ற நம்பிக்கை உள்ள அந்தச் செட்டியார் இப்படி அவசர அவசரமாக உயில் எழுத வேண்டிய அவசியம் என்ன?

...மனோரமாவே அவ்வாறு உயில் எழுதும் படியான சூழ்நிலை உண்டாக்கி இருக்க வேண்டும்: அந்தச் சூழ்நிலையைச் சமாளிப்பதற்குத் தந்திரக்காரரான செட்டியார் அவளுக்காக அவசர அவசரமாக உயிர் உயில் எழுதிப் பின்னால் சந்தர்ப்பம் நேராகும் போது உயில் மாற்றி எழுதி விடலாம் என்று அவர் நினைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யக்கூடிய குணம் செட்டியாருக்கு உண்டு என்பது மனோரமாவுக்கு வெகு நன்றாகத் தெரிந்திருக்கும். அதனால் உயில் எழுதிய கையோடு செட்டியாரைத் தீர்த்துக்கட்டி விடுவது அவசியம் எனக் கருதிருக்கலாம். பெரிய கருப்பன் செட்டியார் கொலையை இப்படியும் ஏன் யூகிக்கக் கூடாது?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார். மோகனின் முகம் சவம் போல் வெளுத்தது.

"இது அபாண்டம்! உயிலுக்காக மனோரமா அப்படிச் செய்யமாட்டாள். அவ்வாறு உயில் எழுதப்படாவிட்டால், என்ன? வாரிசுச் சட்டப்படி செட்டியாரின் சொத்து எல்லாம் எனக்குத்தானே வந்து சேரும்?.... மனோரமா என்னை உயிருக்குயிராய்க் காதலிப் பவள்!" என்றான்மோகன்.

"மிஸ்டர் மோகன் இந்த மர்மமான சூழ்நிலையில் மனோரமாவை நீங்கள் அவ்வளவு தூரம் நம்பிவிட முடியாது அவள் நாடகக்காரி உணர்ச்சிகரமான கட்டங்களில் தத்ரூபமாக நடித்துக் காட்டும் பழக்கமுள்ளவள்" என்று துரைசாமி சிரித்தபோது மோகனுக்கு உயிரே போய்விட்டது மாதிரி இருந்தது. மோகனிடம் விடைபெற்றுக் கொண்டு இன்ஸ்பெக்டர் துரைசாமி நகர்ந்ததும் ஸி.ஐ.டி. ராம மூர்த்தி அவரிடம் "சார் மனோரமா, மோகன் இவ்விருவரில் யார் செட்டியாரின் கொலைக்குக் காரணமாக இருக்கக் கூடும் என நினைக்கறீர்கள்?" என்று கேட்டார்.

"இருவருமே சேர்ந்து செட்டியாரைக் கொலை செய்திருக்கலாம்!" என்று இன்ஸ்பெக்டர் துரைசாமி சிரித்துக் கொண்டே ராமமூர்த்திக்குச் சில வேலைகளைக் கூறிவிட்டுச் சென்றார்.

எழும்பூர் ரோடில் உள்ள தன் காரியாலய அறைக்குப் போவதற்கு முன், என்னவோ யோசனையோடு, பெரியகருப்பன் செட்டியாரின் பங்களாப் பக்கம் போய், பாலுவை

எழுப்பினார். துரைசாமி எழுப்பும் பொழுது நல்ல தூக்கத்தில் இருந்தான். ரொம்ப ஜாக்கிரதையாக, யாரென்று தெளிவு படுத்திக் கொண்டுதான் கதவைத் திறந்தான், அவன் 'உஷாராக' இருந்ததற்கும் காரணம் இருந்தது ஏனென்றால், 'பாரா' இருந்த போலீஸ்காரர்களை எல்லாம், 'வேண்டாம்' என்று துரைசாமி கூறிவிட்டார். இரவில் பாலு மாத்திரந்தான் தனியாகப் படுத்திருக்கும்படி நேர்ந்தது.

துரைசாமி உள்ளே நுழைந்ததும், "கதவை நீங்கள் இடித்ததும் எனக்கு ஒரே பயம், யார் இந்த நேரத்தில் வந்திருக்கக் கூடும் என்று திகைத்துப் போனேன்?" என்றான் பாலு.

"உன்னிடம் ஒரு முக்கியமான தகவல் விசாரித்துப் போக வந்தேன் பாலு. இங்கே சந்தியா பாங்க் ஏஜண்ட் பிரபாகர் வந்தானே அது நினைவிருக்கிறது அல்லவா?"

"ஆமாம்," "எதற்காக அவன் வந்தான் என்று உனக்குத் தெரியுமா?"

பாலு சிறிது தயங்கினான். பிறகு "எனக்குத் தெரியாது சார்! ஆனால், செட்டியாருக்கு பாங்கில் எவ்வளவு 'இருப்பு' இருக்கிறது என்பதைப் பற்றி ஏதோ பேசத்தான் வந்திருக்கிறார். செட்டியார் ஒரு விசித்திரமான ஆள். அவர் யாரையும் பார்க்கவே மாட்டார். அப்படிப் பார்த்தால் அவர்களோடு எதாவது தகராறு செய்து கொள்வார்."

"பிரபாகரிடம் எதுவும் தகராறு செய்து கொண்டாரா?" பாலு மறுபடியும் தயங்கினான்.

"நான் எதுவும் கதை திரிக்கத் தயாராக இல்லை சார்! என் காதில் விழுந்த சில வார்த்தைகளில் இருந்து ஏதோ 'கசமுசா' ஆனது போல் எனக்குப்பட்டது."

"நீ ஒட்டுக் கேட்டாயா?" என்றார் துரைசாமி, பாலு சிரித்துக் கொண்டே 'ஆம்' என தலையாட்டினான்.

"உனக்குப் பிரபாகரை நன்றாகத் தெரியும் அல்லவா?" "நன்றாகத் தெரியும் — அவர் வேலையாளாக இருந்தேன்!" "ஆமாம்; எனக்கு நினைவிருக்கிறது!" என்றார் துரைசாமி. "செட்டியாரைப் பார்த்து விட்டுக் கீழே வந்தவர் — பிரபாகர் — உன்னிடம் பேசினாரா?"

மறுபடியும் பாலு தயங்கினான். "சார்! நான் யாரையும் சந்தியில் இழுத்துவிட விரும்பவில்லை" என்றான்.

"உன்னோடு இது தான் பெரிய அவதி பாலு... கேட்ட கேள்விக்கு 'உண்டு' 'இல்லை' என்று உன்னால் சொல்லவே முடியாது. உன்னைப் பார்த்ததும் எதுவும் பிரபாகர் பேசினானா?"

"ஆமாம் சார், பேசினார். நான் மேலே செட்டியாருக்கு வந்த ஒரு தபால் கார்டை எடுத்துக் கொண்டு போனேன். அப்பொழுது பிரபாகர் இறங்கி வந்தார், நான் இங்கு வந்து போனதை யாரிடமும் சொல்லாதே, என்றார்" என்று கூறினான் பாலு.

அந்தச் சமயத்தில், ஜன்னலில் இருந்த ஒரு பொட்டலத்தின் மீது இன்ஸ்பெக்டரின் பார்வை சென்றது. அதைக் கையில் எடுத்துப் பார்த்தார். மரத்திலோ, சுவற்றிலோ, 'மூளி' ஏற்பட்டால், அந்த இடத்தில் வைத்து அடைப்பதற்கு உபயோகப்படுத்தப்படும் 'மக்கு' அது.

"இது எதற்கு பாலு?"

"காலையில் சமையற்கட்டு ஜன்னலில் சாமான் வைக்கும் பொழுது ஒரு கண்ணாடி உடைந்து விட்டது. உடைந்த கண்ணாடிகளின் இடையில் இதைத் தடவி ஒட்டினால், கண்ணாடி ஓட்டிக் கொள்ளும். அதற்கு வைத்திருக்கிறேன்," என்றான்.

"இந்த வீட்டில் ஜன்னல் கண்ணாடிகள் அடிக்கடி உடைபட்டுப் போகின்றன!" என்று கூறிவிட்டு துரைசாமி புறட்பட்டார். வெளியே வந்ததும் அந்த வீட்டை ஒரு முறை நன்றாகச் சுற்றிப் பார்த்தார். பின்புற வழியாக ஒருவன் வீட்டுக்குள் ஏறிக் குதிப்பது எவ்வளவு சுலபம் என்று புரிந்து கொண்டார்!

"ஏறிக் குதிப்பதைப்பற்றி நினைத்ததும் சில நாட்களுக்கு முன், செட்டியார் வீட்டில் யாரோ ஜன்னல் வழியாகக் குதித்த சம்பவம் துரைசாமிக்கு நினைவு வந்தது. அது என்றைக்கு?... ஆம்; சங்கர் கொலையுண்ட அதே தினம்தான்! அப்படியானால் இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் எதுவும் சம்பந்தம் இருக்குமோ?

இன்ஸ்பெக்டர் துரைசாமிக்கு இன்னும் தூக்கம் வரவில்லை, ஆகவே தலைமைக் காரியாலயம் போய், ஏதாவது ரிப்போர்ட்டுகள் வந்திருக்கின்றனவா என்று பார்க்கப் போனார். பாங்க் ஏஜண்ட் பிரபாகரைப் பற்றி, டெல்லி போலீசாரால் எதுவும் மேற்கொண்டு தகவல் கொடுக்க முடியவில்லை. கடன்காரன் ராமையாவைப் பற்றியும் எதுவும் தகவல் இல்லை!

சாமி நாயக்கன் தெருவில் உள்ள மாடியில் துரைசாமி சோதனை போட்ட பொழுது கைப்பற்றப்பட்ட உறைகளும் பழையகாலப் பித்தளைச் சாவி ஒன்றும், அவரிடம் இருந்தன. அவற்றைத் திரும்பவும் எடுத்துப் பார்த்தார். அவற்றை வைத்து எதுவும் புதிதாக யூகிக்க முடிய வில்லை .

இதுவரையில் நடந்த விவரங்களை எல்லாம் ஒரு பெரிய தாளை எடுத்துக் குறித்துப் பார்த்தார்.

சங்கர் கொலையுண்டான் — செட்டியார் கொலையுண்டார் — இரண்டையும் செய்தவன் ஒருவனாகவே இருக்கலாம். இந்த இரண்டு கொலைகளையும் ஒன்றோடொன்றைப் பிணைக்கச் சாத்தியம் எதுவும் இல்லாவிட்டாலும், கொலைகாரன் ஒருவனாகவே இருந்திருக்கலாம். பிரபாகர் எந்த விதத்தில் பார்ததாலும், சட்டத்தை ஏமாற்றி ஓட முயன்றவன் ஆகவேபடுகிறது. அவன் மீது நடவடிக்கை எடுக்கலாம்; அவன் ஊரை விட்டு ஓடிய சமயத்தில், செட்டியார் கொலையுண்டிருந்தார்; அவரது பணம் பாங்கில் 'சூறை' யாடப்பட்டிருந்தது.

பிரபாகர் காஷ்மீர் போய் விட்டானா? மனோரமாவின் வீட்டிலிருந்த பாங்க் ஸ்டேட்மெண்ட்' (செட்டியாரை ஏமாற்றத் தயாரித்ததை) யார் அவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடிக்கொண்டு வந்தது? அது மனோரமாவிடம் இருப்பதாக ஒருவனுக்குத் தெரியும்; அது நாடக சபா காரியதரிசி செல்லப்பாதான்!

செல்லப்பாவின் அன்றைய சாயங்கால நடவடிக்கைகளைக் கவனித்ததால் அவன் குற்றமுள்ள 'நெஞ்சு' தெளிவாகத் தெரிந்தது. அவனுக்குச் சோமசேகரைத் தெரியும். சோமசேகர் என்ற பெயருள்ள ஆள் ஒரு கொலைகாரன்—இரண்டு மூன்று கொலைகள் கூட அவன் செய்திருக்கலாம். அவன் எங்கே ஓடி மறைந்தான் அவனுடைய பழைய சரித்திரம்...? அவன் எத்தனையோ குடும்பப் பெண்களைக் கெடுத்திருக்கிறான். அந்தப் பெண்களை மிரட்டிப் பணம் பறித்து வாழ்க்கை நடத்தியிருக்கிறான். எவளாவது சொத்துள்ள பெண் என்று தெரிந்தால் அவளுடைய சொத்தையும் அவளது அழகின் மூலம் பிறரின் சொத்தையும் பறிக்கத் திட்டம் போடுவான்...

தூக்கமில்லாமல் இப்படி மண்டையை உடைத்துக் கொண்டு அவதிப்பட்டதால் துரைசாமிக்கு என்னவோபோல சோர்வாக இருந்தது. 'எல்லாவற்றையும் ஒருபுறம் எடுத்துப் போட்டு பூட்டி விட்டு வெளியே புறப்படத் தயாரானார். அந்தச் சமயத்தில் டெலிபோன் மணி அடித்தது.

மோகன் தான் பேசினான். அவன் குரலிலே பதட்டம் காணப்பட்டது. சிரிது நேரத்தில் போலீஸ் காரியாலயத்திற்கு வருவதாவும், அவரை காத்திருக்கும் படியாகவும் கூறினான். துரைசாமி சரியென்று கூறிவிட்டு டேலி போனை கொக்கியில் மாட்டினார்.

எதற்காக அந்த அகாலத்தில் மோகன் போலீஸ் ஸ்டேஷனத் தேடி வரவேண்டும்? இந்தக் கேள்விக் அவருக்குப் பதிலே கிடைக்கவில்லை. மனோரமாவுக்கு எதுவும் நேர்ந்திருக்க வழியில்லை. ஏனென்றால் அங்கே போலீஸார் காவல் காக்கிறார்கள். பிறகு என்ன? ஒருக்கால் காணமல்போன 'ஸைலன்ஸரும்' துப்பாக்கியும் அவனுக்குக் கிடைத்திருக்கலாம்! முடிவுக்கும் வரமுடியாமல் துரைசாமி யோசனையோடு உட்கார்ந்திருந்தார்.

சிறிது நேரத்தில் மோகனே அங்கு வந்துவிட்டான். "மனோரம்மா! வீட்டைவிட்டு நான் புறப்படும் சமயத்தில் அவளுக்கு டெலிபோன் செய்தி ஒன்று வந்தது. செல்லப்பா அங்கு இருக்கிறானா என்று அவன் வேலைக்காரன் விசாரித்தான். தன் வேலைக்காரனை எல்லாப் பெட்டிகளையும், சாமான்களையும் எடுத்துக் கொண்டு, சென்ட்ரல் ஸ்டேஷனில் வந்து காத்திருக்கும்படி செல்லப்பா சொன்னதாகவும், தான் பங்களூர் மெயிலில் போகப் போவதாகக் கூறியதாகவும், அதனால் வேலைக்காரன் எட்டு மணிக்கே செனட்ரல் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் போய்க் காத்திருப்பதாகவும், அங்கு செல்லப்பா வந்து சேரவில்லை என்றும் வேலைக்காரன் சொன்னான்..." என்று மோகன் கூறிக் கொண்டே வரும்பொழுது துரைசாமி இடைமறித்து "ஒருக்கால் செல்லப்பா போலீஸுக்குப் பயந்து தன் வீட்டில் ஒளிந்து கொண்டு இருப்பான்?" என்று சந்தேகத்தைக் கிளப்பினார்.

"தெரிய வில்லை" என்றான் மோகன்.

"செல்லப்பா வீடு, பூக்கடை போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகில் தான் இருக்கிறது. அங்கு டெலிபோன் செய்து, ஒரு கான்ஸ்டேபிளை அனுப்பிப் பார்க்கலாம்!" என்றார் துரைசாமி, உடனே டெலிபோன் செய்தார்.

கொஞ்ச நேரத்திற்கு எல்லாம் பதில் வந்தது. செல்லப்பா அன்று இரவு ஏழுமணிக்குத் தன் வீட்டைக் காலி செய்து சாமானை வேலைக்காரன் வசம் ஒப்புவித்து எங்கோ போகச் சொல்லிவிட்டு சாவியை வீட்டுக்காரியிடம் கொடுத்து விட்டான் என்ற பூக்கடை போலீசார் தகவல் கொடுத்தார்கள்.

"என்னைச் சந்தித்த பிறகு, எங்காவது தப்பி ஓடிவிட வேண்டும் என அவன் முடிவு செய்து இருக்கிறான், நான் அனுப்பிய ஸி.ஐ.டிகளை ஏமாற்றிப் போக்கு காட்டிவிட்டு, தன் வீட்டுக்குதான் போயிருக்கிறான்—பரவாயில்லை; அவன் எப்படியும் தப்ப முடியாது. நான் தக்க ஏற்பாடு செய்து விட்டேன் அவன் மர்ம மனிதன் சசேகரனின் கையாளாகப் பல கொலைகளை செய்து இருக்கலாம்!" என்றார்.

இந்தச் சமயத்தில் கோடம்பாக்கம் அவுட் போஸ்டிலிருந்து ஒரு டெலி போன் செய்தி வந்தது ..

செல்லப்பா கொலை செய்யப்பட்டு, ஜகரியா காலனிக்கு வடக்கே ரயில்வே லயன் ஓரம் போடப்பட்டிருப்பதாகத் தகவல் வந்தது!

## 18. பச்சைக் காரின் மர்மம்... ?

பிணமாகக் கிடந்த செல்லப்பாவின் முகம் நிர்மலமாக இருந்தது! யாரே அவன் நெற்றில் ரிவால்வர் துப்பாக்கியை அழுத்திப் பிடித்துச் சுட்டுக் கொன்று இருக்கிறார்கள்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி, ஜகரியா காலனியில் குடி இருந்த ஒரு வீட்டுக்காரரை விசாத்தார். அவர் வீட்டிலிருந்து சுமார் 150 கஜ தூரத்தில் தான் அந்தப் பிணம் வீசி எறிய பட்டிருந்தது.

அந்த வீட்டுக்காரர், "எட்டு மணிக்கு ஒரு கார் இந்த ரோடு வழியாகப் போயிற்று. இந்த ரோடு சிறிது தூரம் போய் முடிந்து விடுவதாலும் அதற்குமேல் எங்கும் போக முடியாததாலும், இந்தக்கார் ஏன்? இப்படிப் போகிறது என நினைத்துக் கொண்டேன். பிறகு கால் மணி நேரத்தில் அந்தக் கார் திரும்பவும் வந்த வழியாகத் திரும்பிச் சென்றது." என்றார்

"எட்டுமணி என்று உமக்கு எப்படித் தெரியும்?"

"அப்பொழுது தான் இசைக்குயில் இந்திராணியின் சங்கீதக் கச்சேரி ரேடியோவில் ஆரம்பமாகியது. ரேடியோவை நான் திருப்பிவிட்டு உட்கார்ந்திருக்கும் பொழுது, ஜன்னல் வழியாக, அந்தக்கார் வடக்கே போவதைப் பார்த்தேன்" என்றார்.

"அங்கேதான் வீடு இல்லை என்று உமக்குத் தெரியுமே; ஏன் வெளியில் போய் அக்கார் எதற்காகப் போகிறது என்று பார்க்கவில்லை?" என்று கேட்டார் துரைசாமி.

"இசைக் குயிலின் கச்சேரியை விட்டுவிட்டு எந்த மடையன் சார் போகிற வருகிற கார்களை வேடிக்கை பார்க்கப் போவான்? எவனாவது வழி தெரியாமல் தடுமாறுகிறான் என்று நினைத்தேன்!" என்றார் அந்த சங்கீத ரசிகர்.

"கார் எப்படி இருந்தது? என்ன கலர்? நினைவிருக்கிறதா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

அந்தக்கார் பெரிய கார். கலர் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது! எனக்கு ரொம்பப் பிடித்த கலர்! கிளிப்பச்சைக் கலர்!" என்றார் அவர்.

"...ம்... நல்ல இசைக் குயில்... நல்ல கிளிப்பச்சை... எல்லாம் ஒரே பட்சி பறவைகள் மயமாக இருக்கிறது..." என்று துரைசாமி அதைக் குறித்துக் கொண்டார். பிறகு தலைமைக் காரியாலயத்திற்குச் சென்று விசாரித்தார். கிளிப்பச்சை வர்ணமுள்ள போர்டு கார் ஒன்று, மவுண்டு ரோடு வட்டத்தில் காணாமல் போய் விட்டதாக, எட்டு மணிக்கு போலீசில் எழுதி வைத்திருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் துரைசாமிக்கு இன்னொரு தகவலும் கிடைத்தது. ஒரு ரோந்துப் போலீஸ்காரன் ஆயிரம் விளக்கு அருகேயுள்ள ரட்லண்கேட் காலனிப் பக்கம் ஒரு 'கிளிப்பச்சை' கலர் போர்டு கார், கவனிப்பாரற்றுக் கிடப்பதாக டெலிபோன் செய்திருந்தான்.

உடனே துரைசாமி அந்த இடத்திற்கு விரைந்து சென்றார். அவரோடு ஒரு துப்பறிவாளர் கோஷ்டியும் சென்றது. மோகனும் அவர் கூடவே சென்றான்.

அந்தக் காரில் தான், செல்லப்பாவின் பிணம் எடுத்துச் செல்லப் பட்டிருக்கிறது என்பதை ஒரு வினாடியில் எல்லோரும் புரிந்து கொண்டார்கள். ஏனென்றால், காரின் பின்ஸீட் பக்கத்தில் ரத்த வெள்ளமாக இருந்தது. காரைத் திருப்பும் 'ஸ்டியரிங்' சக்கரத்தில் பூதக் கண்ணாடி வைத்து ஆராய்ந்துப் பார்த்தார் ஒரு துப்பறிவாளர்.

உடனே துரைசாமி, "உங்களுக்கு கைரேகைத் தடயங்கள் கிடைப்பது சுலபம். ஏனென்றால் சோம சேகர், கையில் ரப்பர் கை உறை அணிந்து கொள்கிறார்!" என்றார்.

உடனே மோகன், 'இது பிரபாகர் வேலை தானே? அப்படியானால் கோடீஸ்வரர் சோமசேகர் என்ற வேஷத்தில் திரியும் மர்மமனிதன் என்பவன் பிரபாகர் தானா?" என்று கேட்டான்.

துரைசாமி ஒரு புன்னகை புரிந்தார்.

"பிரபாகர் எங்கே இருக்கிறான் — காஷ்மீரம் சென்றிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம்! — அவன் போகாமல் இங்கேயே இருந்தாலும் இருக்கலாம், அங்கிருந்து விமானம் மூலம் திரும்பியும் இருக்கலாம்!"

"அப்படியானால்.." என்று பீதியோடு கேட்டான் மோகன். பிரபாகர் சென்னையில் இருப்பான் என்ற எண்ணம் அவனை நடுங்கச் செய்தது. அவனால் மனோரமாவுக்கு எதுவும் ஆபத்து வருமோ என்னவோ? அவள் நடித்த மாய மனிதன் நாடகத்திற்குத் தவறாமல் தினசரி வந்து ஆசை விழிகளால் பார்த்தானே? இதைத் துரைசாமிடம் அவன் கூறியபோது, அவரும் ஒப்புக் கொண்டார். மனோரமா ஆயிரம் விளக்கிலுள்ள தன்வீட்டைக் காலி செய்துவிட்டு வேறு எங்காவது பந்தோபஸ்தான இடத்தில் தங்க வேண்டும் என்றும். இப்பொழுது அவள் இந்த கொலை வழக்கில் தலையிட்டு சில விசாரணைகள் செய்து வருவதால் பிரபாகருக்கு அது பேராபத்தை விளைவிக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டு கொலை பாதகத்தைச் செய்ய, பிரபாகர் துணியவும் கூடும் என்றும் கூறினார். இதைக் கேட்டதும், மோகன் முகத்தில் முத்து முத்தாக வியர்வை அரும்பியது.

இதற்குள் போலீசார் காரைச் சோதனை போட்டார்கள். எஞ்சின் பக்கததில், டிரைவர்கள் லைசென்ஸ் முதலியன போட்டு வைக்கும் சிறு அறையில் ஒரு சிகரெட்கேஸ் அகப்பட்டது. அது ஒரு வெள்ளிடப்பா. அதை துரைசாமியிடம் எடுத்துக் கொடுத்தார்கள். அது நன்றாக மெருகிடப்பட்டு 'பளபள' வென்று இருந்தது. அதை துரைசாமி திறந்து பார்த்தார். உள்ளே கீழ்கண்டவாறு ஆங்கில எழுத்துகளில் வெட்டப்பட்டிருந்தது.

"இந்த வெள்ளி சிகரெட் கேஸ் பிரபாகருக்கு நட்பின் அறிகுறியாக பரிசளிக்கப்பட்டது — வில்லியம்பர்க், நியூயார்க்."

அதைப் படித்ததும், மோகனின ரத்தம் உறைந்து விடும் போலிருந்தது. அதில் ஒரு 'பிளேயர்ஸ்' சிகரெட்டும், கொஞ்சம் புகையிலைத் தூள்களும் காணப்பட்டன. அதை ஜாக்கிரதையாக ஒரு பேப்பரில் சுற்றி, தம்பைக்குள் வைத்துக் கொண்டார் துரைசாமி.

இந்த சிகரேட் 'கேஸ்' இந்த இடத்தில் கிடப்பது ஆச்சரியமாக இல்லை?.. அதாவது விநோதமாக இல்லையா?' என்று கேட்டார் துரைசாமி.

"அதை அங்கு வைத்து விட்டு மறந்திருப்பான்" என்றான் மோகன்.

"இது அவன் சொந்தக்காரர் அல்லவே; திருடியதல்லவா? அதனால் தான் இது விநோதமாக எனக்குப் படுகிறது," என்றார் துரைசாமி.

"செல்லப்பா, தன் வீட்டைக் காலி செய்து விட்டு, இந்தக் கொலைகார'னைச் சந்தித்திருக்கிறான். செட்டியாருக்குப் பொய்க் கணக்கு நகலாக அனுப்பிய போலியான பாங்க் ஸ்டேட்மெண்ட் மனோரமாவிடம் சிக்கி இருப்பதைக் கூறிவிட்டு, தன்னைப் போலீஸ் கண்காணித்து வருவதாகவும், தான் சென்னையில் இருந்தால் எப்படியும் தன்னைப் பிடித்து உண்மையை கிரகித்து விடுவார்கள் என்றும் அவன் அந்தக் ' கொலை கார'னிடம் சொல்லிவிட்டு, வெளியூர் போக அவனைப் பணம் கேட்டிருக்க வேண்டும். அந்தக் கொலைகாரனுக்கும் அவனுக்கும் தொகை சம்பந்தமாக தகராறு ஏற்பட்டிருக்க வேண்டும், உடனே செல்லப்பா அவனை மிரட்டிப் பணம் பறிக்க முயன்றிருக்க வேண்டும். அதனால் கோபமடைந்த கொலைகாரன் செல்லப்பாவை இப்படித் தீர்த்துக் கட்டி விட்டு காரையும், ஆயிரம் விளக்கு— அதாவது மனோரமா வீடு இருக்கும் எல்லைக்கு ஓ...டி வந்து அதை விட்டு விட்டு மனோரா வீட்டுக்கு நடந்து போய் சோதனை போட்டிருக்க வேண்டும்; பிறகு அங்கு தான் தன் மீதிருந்த ரத்தக் கறையை அவன் கவனித்திருப்பார். உடனே புஷ்கோட்டை அங்கு சுழற்றறிந்து விட்டுப் போயிருக்கிறான். இந்த முடிவுக்கு நான் எப்படி வந்தேனென்றால் இரவு எட்டு மணிக்கு ஜகரியா காலனி பக்கம் கார் போனதாயக — அந்த வீட்டுக்காரர் கூறுகிறார். மனோரமா! வீட்டுக் கடிகாரம் 9—20ல் நின்றிருந்தது. ஆகவே, அந்தக் கொலை முடிந்த பிறகுதான் அந்தக் கொலைகாரன் மனோரமா வீட்டுக்கு வந்திருக்கிறான், அவனுக்கு மனோரமாவின் வீட்டு அமைப்பு நன்றாகத தெரிந்திருக்க வேண்டும்" என்றார் துரைசாமி.

"பிரபாகருக்குத் தெரிந்திருந்தது போல!" என்றான் மோகன். "அது பிரபாகராகவும் இருக்கலாம்; வேறு யாராகவும் இருக்கலாம்; ஆனால் அவனுக்குத் தேவைப்பட்டது அந்தப் பாங்க் ஸ்டேட்மெண்ட்! என்றார் துரைசாமி கடைக் கண்ணால் மோகனை கவனித்து கொண்டே. அவர் மேஜை மீது கொலையுண்ட செல்லப்பாவின் உடலில் இருந்து சில சாமான்களும், சட்டைப் பையிலிருந்த சில காகிதங்களும் எடுத்து

வைக்கப்பட்டு இருந்தன. ஒரு கைக் கடிகாரம்: பவுண்டன் பேனா; மணிபர்ஸ் அதில் 3 ரூபாய் தான் இருந்தது...

அந்தக் காகிதங்களை எடுத்துப் பார்த்தார். அதில் ஒரு நாடக நோட்டீஸ்; ஒரு பத்திரிகையில் இருந்து வெட்டப்பட்ட ரயில்வே கால அட்டவணை; இவற்றைத் தவிர வேறொரு காகிதம் இருந்தது! அதில் கீழ்க்கண்டவாறு குறிக்கப்பட்டு இருந்தன!

ரொக்கம் : 2,12,060—14.0

ஷேர்கள் : 3,30,000—0—0

இதைப் பார்த்ததும், இன்ஸ்பெக்டர் துரைசாமிக்குத் திடீரென ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. இந்தத் தொகைதான் செட்டியாருக்குப் பாங்க் கணக்கு நகலாகக் கொடுக்கப்பட்ட போலி 'பாங்க' ஸ்டேட்மெண்டில் எழுதப்பட்டிருந்தது. அதை எதற்காகச் செல்லப்பா குறித்து வைக்கிறான்! அது எப்படி அவனுக்குத் தெரிந்தது? அந்தப் போலி ஸ்டேட்மெண்டில் உள்ள தொகை பொய்யானது என்றால், அதை எதற்காக இவன் எழுதிச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்? துரைசாமிக்கு இது புதிராகவே இருந்தது!

மறுநாள் காலை, துரைசாமி வீட்டிற்கு வரும் பொழுது, முன் அத்தியாயத்தில் குறிப்பிட்ட, செட்டியாரின் செக்கையும், சாமி நாயக்கன் தெரு மாடியில் எடுத்த பழைய காலப் பித்தளைச் சாவியையும் எடுத்துக் கொண்டு வந்தார்.

செக்கைப் பார்த்ததும், மனோரமா, அதன் பின்னால் பென்சிலால் எழுதப்பட்டிருந்தது செட்டியார் எழுத்துத்தான் என்று புரிந்து கொண்டாள். "செட்டியார் ரொம்பக் கெட்டிக்காரர். அவர் வீடடை நிர்வரகம் செய்து வந்த விதமே அலாதியானது. நான் சிறு பெண்ணாக அங்கே இருக்கையில் எனக்குப் பல விஷயங்கள் தெரியாததால் தவறு செய்து தடுமாறுவேன். அதை எல்லாம் மீண்டும் ஏற்படாமல் தடுக்க அவர் என்னென்ன செய்ய வேண்டுமோ அதெல்லாம் செய்வார்!"

"அப்படி என்றால்?" என்று கேட்டார் துரைசாமி.

"வீட்டுச் சாமான் வாங்குவதிலிருந்து எனக்கு எதிலும் நல்லது கெட்டது' தெரியாது. அது எல்லாம் அவரே கவனித்து, ஆவன செய்வார்!" என்றாள் மனோரமா.

பிறகு அந்தப் பழங்கால சாவியைப் பல தடவை திருப்பித் திருப்பிப் பார்த்தாள்.

"செட்டியாரைக் கொலை செய்தவனை என்னால் கண்டு பிடிக்க முடியும் என்று நான் சொன்னபோது. அதை வெறும் 'ஜம்பம்' என்று நினைத்தீர்களோ?" என்று கேட்டாள் மனோரமா.

இல்லை, அழகான இளம் பெண்ணான நீங்கள் தனியே இதில் ஈடுபடுவது புத்தசாலித்தனம் அல்ல என்று தான் நினைத்தேன். இந்தக் கொலைகாரன் சாமான்ய மானவன் அல்ல பண ஆசையோடு பெண்ணாசையும் உள்ளவன் என்று கருத வேண்டியிருக்கிறது" என்றார் துரைசாமி. "நான் ஒப்புக் கொள்கிறேன். எனக்கு இன்னும் ஒரு வார அவகாசம் தருவீர்களா— நான் விசாரணையைப் பூர்த்தி செய்வதற்கு?" என்று கேட்டாள் மனோரமா.

"உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகங்களை இப்பொழுது என்னிடம் சொல்ல முடியுமா?" என்று கேட்டார் துரைசாமி.

"இல்லை; ஒருக்கால் நான் தவறாக ஏதாவது கணக்கிட்டிருக்கலாம்; எதற்கும் கொஞ்சம் பொறுங்கள்" என்றாள்.

துரைசாமி தன் உதட்டை மடித்து யோசனை செய்தார்.

"இவைகளை உங்களிடம் விட்டு வைக்க முடியாது என்று நினைக்கி றேன்."

"இந்தச் சாவியையும், 'செக்'கையும் தானே? அவை இரண்டும் எனக்கு வேண்டாம். இந்தச் சாவியைப் போல ஒரு மாறு சாவி செய்து கொண்டு வந்து கொடுங்கள், போதும். இதற்குச் சேரக் கூடிய பூட்டை எந்த உலகத்தில் இருந்தாலும் கண்டுபிடித்து வருகிறேன். அந்த ரகசிய வீட்டைக் கண்டுபிடித்து வந்ததும், உங்களுக்கு உடனே 'டெலிபோன்' செய்கிறேன்!" என்றாள் மனோரமா.

"அப்படியானால் இந்தச் சாவி சேரக்கூடிய் பூட்டைக் கண்டு பிடித்து விடுவீர்களா?" என்று ஆவலோடு கேட்டார் துரைசாமி. மனோரமா 'ஆம்' எனத் தலையை அசைத்தாள். துரைசாமி பெருமூச்சு விட்டார்.

"இது என்னமோ எல்லாம் நாவல்களில் வருவது மாதிரி இருக்கிறது! இதைப் போல மர்மமாக நீங்கள் எல்லாம் செய்து வருவதை என்னால் ரசிக்க முடியவில்லை! இருந்தாலும் உங்களுக்கு இதே மாதிரியான நகல் சாவி செய்து அனுப்பி வைக்கிறேன்!" என்றார்.

இரண்டு தினங்களில், மனோரமாவுக்கு ஒரு புது சாவி கிடைத்தது. அதைக் கொண்டு ஆராய்ச்சி நடத்த ஆரம்பித்தாள் ஆனால் அவளுக்குத் தெரியாமலே, அவளைத் தொடரும்படி, மிகவும் திறமை வாய்ந்த இரு ஸி.ஐ.டி. போலீஸ்காரர்களை துரைசாமி நியமித்திருந்தார். அவர்கள் நிரம்ப அனுபவம் வாய்ந்தவர்கள். அவர்கள் தன்னை இரவு பகல் தவறாமல் தொடருவது, மனோரமாவுக்குத் தெரியாது.

செல்லப்பா இறந்து மூன்று தினங்களுக்குப் பிறகு, பத்திரிகையில் மணிலா (கடலை) மார்க்கெட்டில் விழிப்பு என்ற தலைப்பில், விலை ஏற்றம் ஆரம்பித்து

இருப்பதாகச் செய்தி வெளி வந்தது. சர்க்கார் ஏற்றுமதிக்கு இருந்த தடையை நீக்கி விட்டதால், எண்ணை விலை வெகு வேகமாக ஏறியது. அதே போல அந்தத் தொழில் சம்பந்தப்பட்ட 'ஷேர்'களும் மதிப்பு உயர்ந்து விஷம் போல் விலையேறிக் கொண்டே சென்றன.

"இந்த மணிலா ஷேரில்" தானே நீங்கள் பிரபாகரிடம் கையொப்பமிட்டது?" என்று கேட்டார் துரைசாமி, பிறகு பாங்கில் விசாரணை செய்து புரிந்து கொண்ட மனோரமா, ஆமாம் என்றாள். உள்ளபடியே 'ஷேர்'களின் விலை ஒன்றுக்குப் பதினேழு மடங்காக உயர்ந்து விட்டது.

துரைசாமி, ஒரு பிரபல ஷேர் தரகர் நடத்தும் ஆபீஸிற்குச் சென்றார். "சென்னையில் யாரிடம் அதிகப்படியான 'மணிலா ஷேர்' இருக்கிறது?" என்று கேட்டார்.

"சந்தியா பாங்க் ஏஜண்ட் பிரபாகரிடம் தான் இருக்கிறது! அவர் அதை விற்க வேண்டும் என்று சில நாட்களுக்கு முன் துடியாய்த் துடித்தார். நான் வேண்டாம் என்றேன். இப்பொழுது எங்கோ வடக்கே போயிருக்கிறார் போலிருக்கிறது. வந்து விட்டாரோ, என்னவோ?" என்றார் அந்தத் தரகர்!

## *19. ராமையாவின் கதி?*

பிரபாகர்! அவனிடம், மணிலா மார்க்கெட் ஷேர் ஏராளமாக இருக்கிறது! அதை அவன் இதுவரை விற்காமல் இருந்தால், தரகரின் கணக்குப்படி அவனுக்கு பத்து லட்ச ரூபாய்க்கு மேல் லாபம் கிடைக்கும்! இதில் செட்டியாரின் 'ஷேர்' ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் இருந்ததை விற்கச் சொல்லி, அவரிடம் கையெழுத்தும், மனோரமாவிடம் மேல் ஒப்பமும் வாங்கிப் போயிருக்கிறான்! அதில் வேறு கொள்ளை லாபம் கிடைக்கும். இப்பொழுது அவனுக்கு இவ்வளவு பணம் கிடைத்தால் அவன் என்ன செய்வான்? தன் கிராதகச் செயல்களை விட்டு விடுவானா? விட்டு விட்டாலும் சட்டம் அவனை விடுமா?

இப்படி என்னென்னவோ நினைத்துக் கொண்டு, இன்ஸ்பெக்டர் துரைசாமி தம் காரியாலயம் சென்றார். அங்கு மனோரமா இவருக்காகக் காத்திருந்தாள்.

"என்ன சமாச்சாரம்? எப்படி இருக்கிறது?" என்று ஆதரவோடு விசாரித்தார் துரைசாமி.

"தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறேன்!" என்றாள் மனோரமா' ஆனால் இதைச் சொல்லும் பொழுது அவள் மனம் சஞ்சலத்தில் தான் இருந்தது. ஏனென்றால் காலையிலிருந்து நடத்த சில நிகழ்சிகளால், அவள் மனம் ரொம்பவும் பீதியடைந்திருந்தது. பேசாமல் சாவியைத் திருப்பி துரைசாமிக்கு அனுப்பிவிட்டு இந்தத் தகராறிலிருந்தே விடுதலை பெற்று விடலாம் என்று கூட ஒரு கணம் நினைத்தாள்.

ஆனால், பிறகு என்னவோ அந்த யோசனையை மாற்றி தைரியத்தை வரவழைத்துக் கொண்டாள். இப்பொழுது துரைசாமியைப் பார்த்ததும் இனனும் கொஞ்சம் தைரியம் அவளுக்கு ஏற்பட்டது.

"என்னிடம் சொல்லக்கூடியது எதுவும் இருக்கிறதா?" என்றார் துரைசாமி.

"ஒரு வாரம் பொறுங்கள்!" என்றாள் மனோரமா.

"எல்லாம் மர்மக்கதை மாதிரி இருக்கிறதே!" என்று அலுத்துக் கொண்டார் துரைசாமி.

"ஓரளவு, மர்மமாகத்தான் வேலை செய்கிறேன்" என்றாள் மனோரமா.

"சரி; என்ன விசேஷமாகத் தேடி வந்தீர்கள்?"

"எனக்கு ஒரு பட்டியல் வேண்டும். செட்டியார் கணக்கில் பத்தாயிரம், பதினையாயிரம், இருபதினாயிரம் என்று எல்லாம் தொகைகள் வாங்கப்பட்டனவே, அவைகள், அந்தந்த மாதங்களில் எந்தத் தேதியில் வாங்கப்பட்டன என்று தெரிய வேண்டும். நான் நினைப்பது சரியானால், அவை எல்லாம் அந்தந்த மாதங்களில் பதினான்காம் தேதிகளில் வாங்கப்பட்டிருக்க வேண்டும்," என்றாள் மனோரமா.

இதைக் கேட்டதும் துரைசாமி அயர்ந்து போய் நாற்காலியில் சாய்ந்து விட்டார்.

"இதைக் கேட்கக் கேட்க பெரிய மர்மமாக இருக்கிறது. இதை அவசியம் தெரிந்துக் கொள்ள தான் வேண்டும்!" என்று கூறிவிட்டு, பாங்கிற்கு டெலிபோன செய்தார்.

பதிலும் வந்தது. ஒரு செக் பிப்ரவரி 14—ம் தேதி. இன்னொன்று ஏப்ரல் 14ம் தேதி. மற்றொன்று அக்டோபர் 14; இன்னொன்று நவம்பர் 14; இதைப் போல கிட்டத்தட்ட பனிரெண்டு—அயிட்டங்கள் துரைசாமி குறித்துக் கொண்டார். எல்லாம் பதினான்காம் தேதி!

"பிரமாதம்! பிரமாதம்!" என்று புகழ்ந்தார் துரைசாமி. சரி; இப்பொழுதாவது விஷயங்களைக் கொஞ்சம் தெளிவுபடுத்தி எனக்குச் சொல்ல முடியுமா?" என்று மனோரமாவிடம் கேட்டார் துரைசாமி.

"இன்னும் ஒரு வாரத்தில் அவசியம் சொல்கிறேன்" என்று கூறி விட்டு மனோமா, "இன்னொரு முக்கிய விஷயமாக உங்களிடம் வந்தேன். என்னை யாரோ தொடர்வது போல எனக்குத் தோன்றுகிறது. நான் நினைப்பது ஒருக்கால் வெறும் மனப் பிராந்தியாகவும் இருக்கலாம். இருந்தாலும் என்னால் அதை அப்படி சுலபமாக ஒதுக்கித் தள்ளி விடவும் முடியல்லை. நான் இன்று மவுண்ட் ரோட்டில் போகும் பொழுது ஒருவர் தொடர்ந்து வந்தார். பிறகு நான் 3—ம் நம்பர் பஸ்ஸில் ஏறி ராயப்பேட்டையில்,

பெஸண்ட் ரோடுக்குச் சென்றேன். 'பெஸனட் ரோட்டில் நான் சந்திச்சுப் போனவர் வீட்டு ஜன்னல் வழியாக யதேச்சையாக வெளிய பார்த்தேன், அந்த ஆள், எதிரிலுள்ள ஒரு சினிமா போஸ்டரைப் படிப்பவர் போல நின்று கொண்டிருந்தார். 'ஹிட்லர் மீசை' வைத்த கருத்த உயரமான ஆசாமி! முப்பத்தைந்து வயதிருக்கும்" என்ற மனோரமா சிறிது கலவரத்தோடு கூறினாள்.

துரைசாமி ஒரு புன்னகை பூத்தார்.

"அது ராமமூர்த்தி! ஸி.ஐ.டி. போலீஸ் இலாக்காவைச் சேர்ந்தவர்" என்றார்.

"அப்படியா!" என்று பிரமித்துப் போய்க் கேட்டாள் மனோரமா.

"ஆம்! உங்களைப் பற்றி நான் அளவு கடந்த ஜாக்கிரதை எடுத்துக் கொண்டிருக்கிறேன். உங்கள் மேல் அவநம்பிக்கைப் பட்டு உங்களுக்கு ஸி.ஐ.டி. போட வில்லை; நீங்கள் இப்பொழுது எங்கள் பாதுகாப்பில் இருப்பதால் உங்களைக் காப்பாற்றவே ஸி.ஐ.டிக்காரர்கள் வருகிருர்கள் " என்றார்.

மனோரமா நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"அப்பாடா! இப்பொழுது எவ்வளவு நிம்மதி அடைந்தேன் தெரியுமா?"

"அது சரி; இந்த 14—ம் தேதி விவகாரம் என்ன?" என்று ஆவலாகக் கேட்டார்.

"ஆக்கப் பொறுத்த நீங்கள் ஆறப் பொறுக்கக் கூடாதா?" என்று கேலியாகக் கூறி விட்டு, மனோரமா விடை பெற்றுச் சென்றாள்.

துரைசாமி சிறிது நேரம் தபால்களைப் பார்த்து விட்டு, வெளியே புறப்பட்டார்.

நேராக மோகனின் 'ஓர்க்ஷாப்'பிற்குச் சென்ற துரைசாமி மோகன் புதுத்துப்பாக்கி 'ஸைலன்ஸரை'ப் பொருத்தி, சோதனை செய்து கொண்டிருப்பதைக் கண்டார். துரைசாமியைக் கண்டதும், மோகன் பதறினான். "மனோரமா துப்பறிகிறேன் என்று பயம் தெரியாமல் பெரிய ஆபத்துக்களில் போய்த் தலையிடுகிறாள். நீங்களாவது தயவு செய்து அவளுக்குப் புத்தி சொல்லக் கூடாதா? அந்தப் போலி 'பாங்க் ஸ்டேட்மெண்ட்' அவளிடம் இருப்பதாகவே 'அவன்' — அந்தக் கொலைக்காரன் இன்னும் நினைத்துக் கொண்டிருப்பான்!" என்றான்.

"நீங்கள் மனோரமாவைச் சமீபத்தில் பார்க்க வில்லையா?"

"பார்த்தேன். பாலுவை சில தினங்கள் தன்னிடம் அனுப்பும்படி கூறினாள். அவனுக்கு ஏதோ வேலை இருக்கிறதாம்!"

"பாலுவையா?"

"ஆமாம். அவன் இப்பொழுது என் வேலைக்காரன் தானே? அதனால் என்னிடம் அனுமதி கேட்டாள்!"

"இதை அவள் என்னிடம் சொல்லவே இல்லையே?" என்று ஆச்சரியப் பட்டார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

"என் மாமா பெரியகருப்பன் செட்டியாரிடம் வேலை பார்த்த ஒரு வேலைக்காரி மாறு பெயருடன் பெங்களூர் அருகே மல்லேஸ்வரத்தில் வசிக்கிறாளாம். பாலு வேலைக்கு வந்து சேருமுன் அவள் இங்கே வேலை பார்த்திருக்கிறாள். அவளுக்குத் தொண்ணூறு வயது இருக்கும். அவளைப் பார்த்து இருப்பதாகவும், அவள் முகம் நினைவு இருப்பதாகவும் பாலு சொல்கிறான். அந்தக் கிழவிக்கு ஒரு மகன் இருக்கிறானாம். பெரிய போக்கிரியாம். எந்தக் கிராதக வேலைக்கும் துணிந்தவனாம். அவனை பாலுவுக்கு நினைவில்லை. ஆனால் மனோரமா நினைவு வைத்திருக்கிறாள். அவன் எங்கே இருக்கிறான்; அவனது நடவடிக்கை என்ன என்று 'வேவு' பார்க்கவே பாலுவை அனுப்பப் போகிறேன் என்று மனோரமா கூறினாள்!" என்றான் மோகன்.

"சரி; உங்கள் மாமா பெரியகருப்பன் செட்டியாரின் வீடுதான் உங்களுக்கு உரிமையாகி விட்டது போலிருக்கிறதே."

"என்னவோ ஒரு புத்தியில் கிழவன் அப்படி எழுதி வைத்து விட்டுச் செத்திருக்கிறார்" என்றான் மோகன்.

"அதை என்ன செய்யப் போகிறீர்கள்?"

"அந்த வீட்டிற்கு நிறைய 'கிராக்கி' இருக்கிறது. சிலர் வந்து கேட்டு விட்டுப் போகிறார்கள். விற்று விடப் போகிறேன்" என்றான் மோகன்.

"ஆமாம்... இனி நீங்கள் விற்றுவிட வேண்டியது தான். கொலை நடந்த வீடு..." என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

"என் மாமா பெரியகருப்பன் செட்டியாரை யார் கொலை செய்திருப்பான் என்று முடிவு கட்டியிருக்கிறீர்கள்? தலை மறைந்து போன பாங்க் ஏஜண்ட் பிரபாகரைத் தவிர, கடன்காரன் ராமையாவும் தலை மறைந்து விட்டானே! ஒரு வேளை ராமையா எங்கள் செட்டியாரைக் கொன்றிருக்கலாம் அல்லவா?... அவனுக்கும் மனோரமாவின் மீது உள்ளூர ஓர் ஆசை உண்டு..." என்று கேட்டான் மோகன்.

"இருக்கலாம். தலை மறைந்து போன ராமையா அகப்பட்டால் விஷயம் நிச்சயமாக வெளிப்பட்டு விடும்!" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

"ராமையா அகப்படுவான் என எனக்குத் தோன்றவில்லை! அவன் எமகாதகப் பயல்!" என்றான் மோகன். இன்ஸ்பெக்டர் அவன் முகத்தை ஒரு மாதிரியாகக் கூர்ந்து

பார்த்தார்.

இந்தச் சமயத்தில் ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் அங்கு வந்து இன்ஸ்பெக்டர் துரைசாமிக்கு ஒரு சலாம் அடித்து நின்றான்.

இன்ஸ்பெக்டர், "என்ன விசேஷம்?" என்றார். கான்ஸ்டபிள் ஒரு காகிதத்தைக் கொடுத்தான்.

இன்ஸ்பெக்டர் அதை வாங்கிப் படித்துப் பார்த்தார். அவர் முகம் மாறியது. மீண்டும் படித்துப் பார்த்தார். "ஒரு சந்தேகம் தீர்ந்தது — ஆனால் பயங்கரமாகத் தீர்ந்தது!" என்றார்.

"என்ன? அதுவும் இந்த வழக்குச் சம்பந்தப்பட்டதா?" என்றான் மோகன்.

"இல்லை. உங்கள் சம்பந்தப்பட்டது!" என்று கூறி அக்கடிதத்தை மோகனிடம் கொடுத்தார் இன்ஸ்பெக்டர் துரைசாமி.

"தாம்பரம் போலீஸிலிருந்து, நம் ஆபீசிற்கு போன் வந்ததும், மோகன் என்பவரின் துப்பாக்கியும் 'சைல்ன்சரும்' தாம்பரம் காட்டில் கண்டு பிடிக்கப்பட்டன. அவை ஒரு குழியில் கிடந்தன. அவற்றின் மீது ராமையா என்பவரின் பிரேதம் கிடந்தது என்ற தகவல் கிடைத்திருக்கிறது. நம் வரவைத் தாம்பரம் போலீஸ் எதிர்பார்க்கிறது." என்று சார்ஜென்ட் ஒருவர் எழுதி இருந்தார்!

அத்தியாயம் : 20

## மனோரமாவின் அபாயப்பாதை!

தாம்பரத்தை அடைந்த துரைசாமிக்கு, ராமையா எப்படி இறந்தான் என்று கண்டுபிடிக்க வெகு நேரம் ஆகவில்லை. அது கொலையல்ல; விபத்து தான் என்று புரிந்து கொண்டார்.

கூட வந்திருந்த மோகனிடம் அதை விளக்கிச் சொன்னார்: "உங்கள் தொழிற் சாலையில் இருந்து இத்துப்பாக்கியை எடுத்துப் போன ராமையா அதை எப்படி உபயோகப்படுத்துவது என்று புரியாமல் தவித்திருக்க வேண்டும். அதனால் அவனுக்குப் பெரிய தவிப்பு. ஏனென்றால், கொலை செய்யும் துணிவு, அவனுக்கு எந்தக் காலத்திலும் ஏற்பட முடியாது. அதை வெளியில் விற்கவும் முடியாது. போலீஸார், அதே கண்ணோட்டமாக அலைகிறார்கள். ஆகவே இதை எங்காவது கொண்டு போய்ப் போட்டுப் புதைத்து விடுவதே சரியான யோசனை என்று தீர்மானித்திருக்கிறான். சென்னை நகரத்தில் அதை எங்கும் செய்ய முடியாது. ஆகவே தாம்பரம் வந்து. இந்த மறைவான இடத்தில் அதைக் குழி தோண்டிப் புதைத்திருக்கிறான். அந்தத் துப்பாக்கியில் குண்டு அடைக்கப்பட்டிருப்பது அவனுக்குத் தெரிந்திருக்காது. ஆகவே

அதை செங்குத்தாக குழிக்குள் நட்டு அமுக்கும் போது, வில் அமுக்கப்பட்டு குண்டு அவன் நெஞ்சின் மீதே பாய்ந்திருக்கிறது. அந்தக் குண்டை அவன் விழுந்து கிடந்த இடத்திற்குப் பின்னாலிருந்த 'நுணா' மரத்தின் உச்சிக் கிளையிலிருந்து எடுத்து விட்டோம். ஆகவே இது கொலை அல்ல, தற்செயலாக ஏற்பட்ட மரணமே தான்!" என்றார் துரைசாமி.

அங்கு செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு அவர்கள் சென்னை திரும்பிய போது மாலை வெகு நேரமாகி விட்டது. இன்ஸ்பெக்டர் துரைசாமி மனம் சோர்ந்து போயிருந்தார்.

"ராமையாவுக்கும், செட்டியார் கொலைக்கும் சம்பந்தமிருக்கும் என்று இதுவரை நினைத்திருந்தேன். ஆனால் அது சரியான யூகமல்ல என்று தெளிவாகி விட்டது. நீங்கள் அந்தத் துப்பாக்கியில் ஒரு குண்டுதான் போட்டிருந்தீர்கள் அந்தக் குண்டு அவனையே பலியாகக் கொண்டுவிட்டது. செட்டியாரைக் கொன்றிருந்தால் இன்னொரு குண்டல்லவா அதில் இருந்திருக்க வேண்டும்?" என்றார் துரைசாமி. அவர் சொல்வதை ஆமோதித்து மோகன் தலையை ஆட்டினான்.

மனோரமாவைச் சந்தித்து, ராமையாவின் மரணத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று நினைத்து, மோகன் பல தடவைகள் அவள் வீட்டுக்கு 'டெலிபான்' செய்து பார்த்தான். மனோரமா இரவு வெகுநேரம் வரையில் வீட்டுக்கு வரவில்லை. கடைசியாக வெகுநேரம் கழித்து அவள் வீட்டுக்கு வந்திருக்கிறாள், மோகன் அலுத்து போய், கடைசித்தரமாக டெலிபோன் பண்ணிப் பார்க்கலாம் என்று போனை எடுத்துப் பேசிய போது, மனோரமா மிகவும் உற்சாகத்தோடு, "என்ன?" என கேட்டாள்.

மோகன் ராமையாவின் மரணத்தைப் பற்றி அவளுக்குச் சொன்னபோது, அவள் அதைப் பிரமாதமாகக் கருதியதாகத் தெரியவில்லை. "இன்றைய தினம் சில பிரமாத நிசழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. சில ரகசியங்களைக் கண்டு பிடித்திருக்கிறேன். நாளையோ, மறுதினமோ, உங்கள் எல்லோருக்கும், ரத்தம் உறையும் படியான சில தகவல்கள் சொல்லப் போகிறேன்" என்றாள் மனோரமா. "மனோரமா, மறுபடி எச்சரிக்கிறேன். இந்தத் துப்பறியும் வேலையை விட்டு விடு... உன் நன்மையை நினைத்துத்தான் சொல்கிறேன்...!" என்றான் மோகன்.

"முடியாது. கடைசி வரையில் உண்மையைக் கண்டு பிடித்துக் கொலைகாரனைப் போலீஸாரிடம் பிடித்துக் கொடுக்காமல் விடமாட்டேன்!" என்று மானோரமா ஒரு புன் சிரிப்புடன் டெலிபோனில் சொல்லிவிட்டு டக்கென்று போனை வைத்து விட்டாள்.

அன்று இரவு மோகன் படுக்கையில் படுத்துத் தூக்கம் வராமல் புரண்டு கொண்டு கிடந்தான். மனோரமா மிக ஆபத்தான காரியங்களில் தலை கொடுத்து அலைவது,

அவனுக்கு ரொம்ப சங்கடமாக இருந்தது மறுநாள் காலை அவளுக்கு 'டெலிபோன' செய்தான். அதற்கு முன்பே, அவள் எங்கோ புறப்பட்டுப் போய்விட்டாள். பிறகு, இன்ஸ்பெக்டர் துரைசாமியைச் சந்தித்த பொழுது மோகன் அவரிடம் தன் கவலையை எடுத்துக் கூறினான். அவர் அவனுக்குத் தைரியம் கொடுத்தார். "சென்னை ஸி.ஐ.டி. போலீஸ் இலாகாவிலேயே மிகவும் திறமை வாய்ந்த ராமமூர்த்தி அவளைத் தம் கண்களை மூடாமல், கண்காணித்து வருகிறார். அவளுக்கு எவ்விதத் தீமையும் வராது!" என்று உறுதி கூறினார். பிறகு, "அவள் எப்படித் துப்பறிகிறாள் என்று உங்களிடம் கூட சொல்ல வில்லையா? எனக்குத் தெரிந்த வரையில் அவள் நகரம் பூராவும் பல வியாபார ஸ்தலங்களில் ஏறி இறங்குகிறாள். எதுவும் சாமான்கள் வாங்குகிறாள் போலிருக்கிறது" என்றார்.

"சாமான்களா? என்ன சாமான்கள்?" என்று கேட்டான் மோகன்.

"ஊறுகாய், அப்பளம்; இப்படி ஏதாவது இருக்கும்" என்று கிண்டலாகக் கூறினார் துரைசாமி.

உள்ளபடி மனோரமா, இவ்வளவு மர்மமாக வேலை செய்வது அவருக்குப் பிடிக்கவில்லை. அவருக்கு மர்மம் என்றாலே, எப்பொழுதும் பிடிக்காது!

மனோரமா வழக்கத்தைவிட அன்றைய தினம் கொஞ்சம் விரிவாக விசாரணை நடத்தினாள், பூக்கடை போலீஸ் ஸ்டேஷன் அருகில் இப்பொழுது செருப்பு தைக்கும் ஆறுமுகம், அருணாசல ஆச்சாரித் தெருவில் 'பிராஞ்சு' மளிகை வைத்து வியாபாரம் செய்து வரும் நல்லசிவ முதலியார், கொத்தவான் சாவடியில் அரிசிக்கடை வைத்திருக்கும் சாம்பசிவ ரெட்டியார், இப்படியாக ஏராளமான பேர்களைச் சந்தித்து விட்டு அறைக்கு வந்த பொழுது, அவளுக்கு ஒரே அசதியாக இருந்தது. வெந்நீர் போட்டு ஸ்தானம் செய்விட்டு இரண்டு மணி நேரம் தூங்கினாள். விழித்ததும் அவள் அசதி ஓரளவு போயிருந்தது. அப்பொழுது இரவ மணி எட்டு பத்து, அவள் அவசரமாக ஆடை மாற்றிக் கொண்டு, டாக்சி ஒன்றைப் பிடித்து ஏறி சென்டரல் ஸ்டேஷனுக்குப் போனாள். அங்கு பாலு பொறுமை இல்லாமல் காத்திருந்தான்.

மனோரமா அவனை நெருங்கி ஏதோ அவனிடம் பேசிக் கொண்டிருந்தாள். இதை அவளைத் தொடர்ந்து வந்த ஸி.ஐ.டி. போலீஸ் சிறிது தூரத்தில் இருந்து கவனித்துக் கொண்டே இருந்தார். பாலு எதற்காக பங்களூருக்கு அனுப்பப்படுகிறான் என்பதைப் பற்றி — அந்த சி.ஐ.டி ஓரளவு கேள்விப்பட்டிருந்த படியால், ரொம்ப சுவாரசியத்தோடு பாலுவைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆனால் பாலு ரொம்பவும் சங்கடப்பட்டான்.

"அவளை எனக்கு இப்பொழுது அடையாளம் தெரியுமோ என்னமோ அம்மா கழடாகப் போய்விட்டால் அடியோடு மாறி விடுகிறார்கள். அதோடு நான் வேலையில் சேர்ந்த சில தினங்களில் அவள் போய்விட்டாள்..." என்றான் பாலு மனோரமாவிடம்.

"இருந்தாலும் நீ அவளை அடையாளம் கண்டு கொள்ளலாம்!" என்று சாதித்தாள் மனோரமா.

"கண்டு பிடித்து விடலாம். ஆனால் இன்னொன்றையும் உங்களுக்குச் சொல்ல வேண்டும் அம்மா. இந்த ராத்திரிப் பயணம் என்றால், எனக்கு ஆகாது. ஒரு சமயம் ரயில் விபத்து ஒன்றில் நான் சிக்கிக் கொண்டேன். அதிலிருந்து இரவுப் பயணம் என்றாலே எனக்கு சிம்ம சொப்பனம். நம்ம செட்டியார் இறந்தாலும் இறந்தார் — இந்தப் பத்திரிகைக்காரர்கள், பகல் இரவு பாராமல் என்னைச் சதா பேட்டி கண்டு தொல்லைப் படுத்தி, என் தூக்கத்தை எல்லாம் பாழாக்கி உடல் நிலையையே கெடுத்து விட்டார்கள்" என்று முனகினான் பாலு. மனோரமா அதை எல்லாம் கவனித்ததாகத் தெரியவில்லை. நீ மல்லேஸ்வரத்தில் இந்த விலாசத்திற்கு போய், லோகாம்பாள் என்ற பெயரைச் சொல்லி விசாரி, அவள் இப்பொழுது அந்த மாறு பெயரில் தான் இருக்கிறாளாம். ஏனென்றால் அவள் மகன் ஏராளமான தொல்லையில் சிக்கி....."

"ஹூம்! பெற்றவர்கள் பண்ணிய பாபம் பிள்ளை தலையில் விடியும் என்பார்கள். இந்தக் காலத்தில் பிள்ளைகள் பண்ணும் பாபம் பெற்றவர் தலையில் விடிகிறது!" என்றான் பாலு.

"அவள் நம் பழைய வேலைக்காரிதான் என்று உறுதியாகத் தெரிந்ததும் நீ உடனே தந்தி கொடு. முதலில் சரியாக உறுதி செய்து கொள். அவளுடைய புகைப்படம் கொடுத்தேனே; இருக்கிறதா?"

பாலு ஓய்ந்து போய்த் தலையை ஆட்டினான்.

"இருக்கிறது அம்மா, ஆனால் இந்தத் துப்பறிகிற வேலை எல்லாம் போலீஸ்காரர்கள் செய்ய வேண்டிய வேலையாயிற்றே, அம்மா!"

"பாலு! இப்பொழுது நான் என்ன சொல்கிறேனோ அதை செய்வதுதான் உன் கடமை உனக்கு சௌக்கியமாகப் பிரயாணம் செய்ய ஒரு 'இண்டர்' வகுப்பு டிக்கெட் வாங்கிக் கொடுத்திருக்கிறேன். படுத்துக் கொண்டு கூடப் போகலாம்".

"இண்டர் கிளாஸில் எங்கம்மா படுப்பது? தூக்கம் தொலைந்தது" என்ற சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தவன், திடீரென்று, தான் யாரோடு பேசுகிறோம் என்று நினைவு வந்ததும், "சரி அம்மா! நீங்கள் சொன்னபடியே செய்கிறேன்" என்றான்.

பங்களூர் மெயில் புறப்படச் சில நிமிஷங்கள் இருக்கும் பொழுது மனோரமா, ஸ்டேஷனை விட்டுக் கிளம்பி விட்டாள். ஒரு டாக்ஸியில் ஏறிப் புறப்பட்டாள். சாதாரணமாக அவள் இனி வீட்டுக்குத்தானே போவாள் என்று நினைத்து ஸி.ஐ.டி. இன்னொரு டாக்ஸியில் ஏறி "அந்தக் காரைத் தொடர்ந்து போ!" என்றார். அவருக்கு நாளெல்லாம் அலைந்து அலைந்து அலுப்பாக இருந்ததால் பின் ஸீட்டில் கொஞ்சம் ஆசுவாசத்தோடு கண்ணை சிறிது மூடிச் சாய்ந்து படுத்தார்.

டாக்ஸி 'ரவுண்டாணா' திருப்பத்தில், திருவல்லிக்கேணிப் பக்கம் திரும்பி பாரகன் டாக்கீஸை, நெருங்கும் பொழுதுதான் திடுக்கிட்டு எழுந்து, முன்னால் போன 'டாக்ஸி'யை கூர்ந்து கவனித்தார். இந்தச் சமயத்தில் முன்னால் போன 'டாக்ஸிக் கார் 'பாரகன் தியேட்டருக்கு எதிரில் நிறுத்தப்பட்டது. அதிலிருந்து ஒரு கிழவர் இறங்கி சினிமா பார்க்கத் தியேட்டருக்குப் போனார். உள்ளபடியே ஸி.ஐ.டி.யின் 'டாக்ஸி' டிரைவர் ஏமாந்து விட்டான். மனோரமா இருந்த 'டாக்ஸி'யைத் தவற வேறு விட்டுவிட்டு, இதைத் தொடர்ந்து வந்திருக்கிறான்.

பதைத்துப்போன ஸி.ஐ.டி. அவசரமாகக் காரைத் திருப்பச் சொல்லி, மனோரமா வீட்டை நோக்கி ஓட்டச் சொன்னார். அங்கு அவள் வரவில்லை. சில நிமிஷங்கள் பொறுத்துப் பார்த்தார்; அப்போதும் வரவில்லை!... ஐயோ... டாக்ஸியில் அவசரமாகப் போனாளே...? அவர் மனம் திக் திக் கென்று அடித்துக் கொண்டது. இப்படிக் கவலை இல்லாமல் நடந்து கொண்டதற்காக மேல் அதிகாரிகள் கோபித்தால் என்ன செய்வது? அதோடு இதுவரை 'டிபார்ட்மெண்டில்' எடுத்த நல்ல பெயர் எல்லாம் பாழாகப் போய் விடுமே? அது மட்டும் அல்லாமல், அந்தப் பெண்ணுடைய உயிருக்கு எதுவும் ஆபத்து நேர்ந்து விட்டால்?

பதட்டத்தோடு மறுபடியும் 'டாக்ஸி' காரை அவள் போகக் கூடிய இடங்களுக்கு எல்லாம் ஓட்டச் சொன்னார். கடைசியில் 'கெயிட்டி' தியேட்டருக்கு அருகில் கார் போய்க் கொண்டிருக்கும் பொழுது மனோரமா எதிரே கூவம் ஆற்றின் பாலத்து இறக்கத்தில் கால் நடையாக வேகமாக நடந்து போவதைக் கவனித்தார், 'சட்டென்று' 'டாக்ஸியை' நிறுத்தி, அவனுக்குக் கூலியைக் கொடுத்து விட்டு, மனோரமாவைத் தொடர்ந்து நடக்க ஆரம்பித்தார். அப்பொழுது மழை பெய்ய ஆரம்பித்தது, வெகு சீக்கிரத்தில் கொட்டு 'கொட்' டென்று கொட்டியது.

## 21. ரகசிய அறைக்குள்...?

தன்னை ஒரு ஸி.ஐ.டி. தொடர்ந்து வருகிறார் என்ற விவரம் தெரியாமலே, மனோரமா, தான் எங்கே போக வேண்டும் என்று தீர்மானித்து வந்தாளோ, அந்த இடத்தை நோக்கிச் சென்றாள். தளத்திற்கு 'சிமெண்ட்' பூசப்பட்டிருந்த ஒரு முற்றத்தின்

வழியாக, தன் கையிலிருந்த 'டார்ச்' விளக்கின் ஒளியில் மெதுவாக அடிமேல் அடிவைத்து அவள் போய்க் கொண்டிருந்தாள். முற்றத்தின் கோடியிலே ஒரு கதவு இருந்தது.

அந்தக் கதவின் வாசற்படி அருகே கொஞ்ச நேரம் ஸ்தம்பித்து நின்றாள் மனோரமா, அதற்குள் தான் ரகசிய அறையா?... இருளடைந்து கிடக்கும் அதன் வாசல் பாதாளச் சாமான் கிடங்கிற்குச் செல்வதா?... அவளுடைய கற்பைப் பலவந்தமாக எவனோ ஒருவன் பறித்து ரகசிய அறைக்குள் அவனுடைய ஆசை நாயகியாக அடைத்து வைக்கப் போவதாக எழுதிய மொட்டைக் கடிதம் இப்போது நினைவு வந்தது. அவள் நெஞ்சு 'பட பட' வென்று அடித்துக் கொண்டது. அவளால் மூச்சுவிடக் கூட முடியாமல் கஷ்டமாக இருந்தது. இந்தத் துப்பறியும் வேலைக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட வேண்டும் என்று காலையில் அவள் மனதில் உருவெடுத்த எண்ணம், இப்பொழுது மீண்டும் ரொம்ப வலுவாகத் தலை தூக்க ஆரம்பித்தது. உள்ளபடியே இப்படிப்பட்ட ஆபத்துக்களில் தலை கொடுத்து வேலை செய்வது ரொம்பவும் 'பைத்தியக்காரத்தனம்' என்று அவளுக்குத் தோன்றியது. போலீஸ் வேலையின் அபாயத்தை ஒரு பெண் மேற்கொள்ளத் துணிவது விவேகமல்ல என்று அவளுக்குத் தோன்றியது.

இரவின் நிசப்தமும் தான் தனிமையாக இருக்கிறோம் என்ற எண்ணமும், மழை தூற்றல் விழுவதால் ஏற்படும் 'வரண்ட' சப்தமும் அவள் நரம்புகளைப் புடைக்கச் செய்தன.

இன்ஸ்பெக்டர் துரைசாமி கொடுத்து அனுப்பிய பித்தளைச் சாவியை கதவின் சாவிச் சந்தில் நுழைந்தாள். தனது சந்தேகங்கள் நியாயமானவையா பைத்தியக்காரத் தனமானவையா என்று இப்போது நிரூபணமாகி விடும். ஒரு வினாடி அந்தச் சாவியைத் திருப்பி, கதவைத் திறக்க முயன்றாள். முடியவில்லை . 'சரி நாம் நினைத்தது தவறாய் போய்விட்டது' என்று எண்ணினாள். இப்படித் தவறிப் போனதைப்பற்றி அவள் சந்தேஷப்பட்டாள்! ஏனென்றால் இந்த ஆபத்து இதோடு தொலைந்து விடுமல்லவா?

ஆனால் மறுபடி சாவியைச் சிறிது வெளியே இழுத்து சரியான நிலையில் வைத்துத் திருப்பியதும், பூட்டு 'டணார்' என்று ராட்சச சப்தத்துடன் திறந்து கொண்டது.

அவள் உடல் நடுங்கியது. அவள் உடலின் பளுவை தாங்க முடியாதவை போல அவள் முழங்கால்கள் நடுங்கின அவளால் சரியாக மூச்சு விட முடியவில்லை, முகம் எல்லாம் முத்து முத்தாக வியர்வை அரும்பியது.

இந்த இடத்தில் அவளுடைய, வேலை நியாயமாக இத்துடன் முடிந்து விட்டது. இனி அவள் நேரே தன் வீட்டுக்குத் திரும்பி, யார் கையில் இந்த வேலையை ஒப்பு

விக்க வேண்டுமோ, அவர் கையில் ஒப்புவிக்க வேண்டும். ஆனால், 'தீரச்' செயல்கள் செய்ய வேண்டும் என்ற ஆசை இருக்கிறதே, அது அவள் மனதில் இலேசாகத் தலை தூக்கியது. கதவை சிறிது தள்ளி திறந்தாள், சப்தமில்லாமல் கதவு திறந்து கொண்டது. பயத்தோடு உள் பக்கம் பார்த்தாள். கருங் கும்மென்று ஒரே இருட்டாக இருந்தது!... உள்ளே போகலாமா!— 'கூடாது' என்ற அறிவு சொல்லியது — ஆனால் அறிவு அப்படிச் சொல்லியதாக, அவள் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. ஒருக்கால், 'பெண்மையின் கோழைத்தனம்' அவளை அம்மாதரி கலவரமடையச் செய்திருக்கலாம். அல்லது அந்த இருட்டு அவள் அம்மாதிரிக் கலவரமடையச் செய்திருக்கலாம்... உள்ளே எவனாவது இருட்டில் மறைந்திருந்து லபக்கென்று அவளை இழுத்து அணைத்துக கொண்டு விடுவானோ என்ற பயமாயிருக்கலாம். ஆனால் வெளியே பூட்டப் பட்டிருக்கும் போது ரகசிய ஆசாமி எப்படி அதன் உள்ளே இருப்பான் என்ற நினைப்பு வந்தது....

கதவை இன்னுநம் கொஞ்சம் விரியத் திறந்து ஓர் அடி உள்ளே எடுத்து வைத்து. தன் 'டார்ச் விளக்கை' அடித்துப் பார்த்தாள். ஒன்றும் கண்ணுக்குத் தெரியவில்லை. பிறகு டார்ச் விளக்கை அணைத்து விட்டு மெதுவாக உள்ளே நுழைந்தாள். தரை முரட்டுத் தளவரிசை போடப் பட்டதாகவும் ஆங்காங்கே சாமான்சரக்குப் பெட்டிகளும், பீப்பாய்களும், கண்ணாடிப் போத்தல்களும், நூலாம் படைகளும் சிதறிக் கிடப்பதாகவும் இருட்டில் அவளுக்கு ஓர் உணர்ச்சி ஏற்பட்டது! சிறிது தூரம் உள்ளே நடந்ததும் மெல்லக் கையிலுள்ள டார்ச் விளக்கைப் போட்டுப் பார்க்கலாமா கூடதா என்று தயங்கி நின்றாள்.

அந்தச் சமயம், அந்த இருட்டுக்குள்ளிருந்து, ரத்தத்தை உறைந்து போகச் செய்யும் ஒரு சப்தம் வந்தது. ஒரு பெண்ணின் வேதனை நிறைந்த பயங்கர முனகல் அது.

மனோரமாவின்'ரோமங்கள்' குத்திட்டு நின்றன. தான் மூர்ச்சையாகி விழுந்து விடப் போகிறோம் என்று பயந்தாள். அந்தக் குரல் அவள் கால்களின் கீழே இருந்து வந்ததைப் போலிருந்தது. அதே சமயத்தில் தனக்கு எதிரே வெகு சமீபத்திலிருந்து வந்ததைப் போலவும் இருந்தது! ஒரு வேளை ஏதாவது பெண் பேயின் பயங்கர முனகலாக இருக்குமோ? ஆனால் இருட்டிலே தான் பேய்களின் ஆதிக்கம் கிளம்பும் என்பார்கள். உடனே...

அவள் கையிலிருந்த டார்ச் விளக்கைப் போட்டு எதிரே பார்க்க முயன்றாள். ஒன்றும் தெரியவே இல்லை. கையைச் சுவரில் வைத்து, மெதுவாகத் தடவிப் பார்த்தாள், அவள் கையில் ஏதோ ஒன்று தட்டுப்பட்டது. அலமாரிக்கதவு மாதிரி இருந்தது. அதன் அருகில் போய் ஓட்டிக் கொண்டு கவனித்தாள்.

ஆம்; அந்தச் சப்தம். அங்கிருந்து தான் வந்தது— கீழே இருந்தும் (பாதாளத்தில் இருந்தும்) கேட்டது. அப்படியானால் கீழே ஒரு ரகசிய அறை இருக்கிறது. அதற்குள் கற்பழிக்கப்பட்ட எவளாவது ஒருத்தி அடைத்து வைக்கப்பட்டிருக்கலாம் அந்தக் கதவு வழியாகத்தான் கீழே உள்ள அந்த ரகசிய அறைக்குப் போக வேண்டும் என்று நினைத்தாள் மனோரமா. அதைத் திறப்பதற்காகத் தடவிப் பார்த்தாள். அது பூட்டப்பட்டிருந்தது. அந்தச் சமயத்தில் அவளுக்கு ஓர் இனம் தெரியாத கலவரம் ஏற்பட்டது. இது வரையில் அவளுக்கு அப்படிப்பட்ட பயமே ஏற்பட்டதில்லை. ஏதோ ஓர் அபாயம், சமீபத்தில் இருக்கிறது. ஆனால் என்னவென்று புரிந்து கொள்ள முடியாத பயங்கரமான அபாயம் அது!

மனோரமா மெதுவாகத் திரும்பினாள். கலவரத்தால் உடல் எல்லாம் பதற முகம் எல்லாம் வியர்த்துக் கொட்ட, நின்ற இடத்தை விட்டு நகர முடியாமல் அப்படியே நின்றாள். அவள் எந்தக் கதவின் வழியாக உள்ளே நுழைந்தாளோ, அந்தக் கதவு மெதுவாக மூட ஆரம்பித்தது. பாய்ந்து அந்தக கதவைப் பிடிக்க முயன்றாள். கதவின் ஓரம் அவள் கைக்குக் கிடைத்தது. ஆனால் யாரோ கதவை பலமாக அழுத்தினார்கள். அந்த யாரோ அவ்வளவு நேரமும் அங்கே இருக்கிறார்கள்! — அவள் அங்கிருந்த அந்த நேரம் பூராவும், கதவுக்குப் பின்னால் யாரோ நின்று கொண்டிருந்து இருக்கிறார்கள்!... 'ஐயையோ' என்று வீறிட்டு அலற நினைத்தாள்... ஆனால் வாயை மூடிக் கொண்டாள்... அது வெறும் மனப் பிராந்தியாக இருக்கலாம்.... ரகசிய கதவின் விசை அமைப்பினால் அவ்வாறு திறக்கவராதபடி இருக்கலாம் என்று மனசை சமாதானப் படுத்தி கொண்டாள். 'பாட்ரி' வெளிச்சத்தை அந்தக் கதவுப் பக்கம் திருப்பிப் பார்க்கப் பயம்... தான் அங்கிருப்பது யாருக்கும் தெரியக் கூடாது — இருட்டுக்குள், பூனை போல் அடிமேல் அடி வைத்து சிறிதும் ஓசைப்படாமல் முன்னே நடந்தாள்... யாரும் தன்னைப் பின்பற்றி வரும் காலடி ஓசை இல்லை. தான் நுழைந்து வந்த ரகசிய அறைக் கதவுப்பக்கமும் எந்தவித நடமாட்ட ஓசையும் இல்லை. மனோரமா கொஞ்சம் மன நிம்மதியோடு முன்னே வேகமாகச் சென்றாள். முழங்காலில் ஏதோ தட்டியது. கையிலுள்ள பாட்ரி விளக்கைப் போட்டு வெளிச்சத்தில் பார்த்தாள். பீ பாய், சரக்குக் கேஸ் பெட்டி ரம்பம், சுத்தியல் இவற்றின் மத்தியில் ஒரு பெட்டியின் மீது டைப் ரைட்டர் மிஷினும் இருந்தது. அந்த மிஷன் எழுத்துக்கள் பெரியகருப்பன் செட்டியாருக்கு அனுப்பப்பட்ட போலிக் கணக்கு ஸ்டேட்மெண்டில் உள்ள எழுத்துக்கள் போன்றிருந்தன. மனோரமாவுக்கு நடுக்கம் அதிகம் ஆயிற்று. அது தான் பயங்கர மர்ம மனிதனின் இரகசிய அறை என்பதும் நிச்சயமாகி விட்டது. சுவர் மீது தொங்கும் சுருக்குக் கயிறும் அவளுக்குத் தென்பட்டது.

மனோரமாவின் நடுங்கும் கருவிழிகள் டைப்ரைட்டர் அருகிலுள்ள ஒரு கடிதத்தின் மீது விழுந்தன. நடுங்கும் கைகளால் அதை எடுத்து மனதிற்குள் படித்துப் பார்த்தாள்.

"மனோரமா! நீயாக வலிய வந்து என் ரகசிய அறைக்குள் அகப்பட்டுக் கொள்வாய் என்பது எனக்குத் தெரியும். அதனால் உனக்கு முன்பாகவே நான் இங்கு வந்து காத்திருக்கிறேன். இனி என் ஆசை வலையில் இருந்து நீ தப்பிச் செல்ல முடியாது! இனி இந்த ரகசிய அறையை விட்டு உயிரற்ற உன் பிணம் கூடத் திரும்பிப் போக முடியாது! சில பூக்களை மேலெழுந்த வாரியாக முகர்ந்து பார்த்தால் மணக்கும். சில பூக்களைக் கசக்கிப் பிழிந்தால் அது அற்புதமான அத்தரும் அலாதியான ருசியும் கிடைக்கும்...! துப்பறிபவளே! உன் மானத்தையும் உயிரையும் இன்று இழக்கப் போகிறாய்—மர்ம மனிதன்!"

பயத்தால் வீரிட்டு அலற, மனோரமா முயன்றபோது அவள் வாயை ஒரு முரட்டுக் கை பற்றியது. இன்னொரு கை, அவள் தோளை முரட்டுத் தனமாகப் பிடித்து உள் பக்கம் இழுத்துத் தள்ளியது! கதவு 'படா' ரென்று சாத்திக் கொண்டது.

"மனோரமா! நீ எப்படி இந்த வேலைக்குத் துணிந்தாய்?"

அந்தக் குரல் யாருடையது என்று தெளிவாகப் புரிந்து கொண்டாள். அந்தக் குரலை, அன்னிமீராஹோட்டல் விருந்தின் போது — சோமசேகரிடம் பேசும் போது — கேட்டிருக்கிறாள், அதே நிதானமான பேச்சு! அதே மர்ம மனிதர் சோமசேகர் தான்... ஆனால் அவர் முகம் தெரியவில்லை. தாடி மீசைகளுள்ள அந்த முகத்தில் பாதிக்கு மேல் கருப்புத் துணியால் மூடி மறைத்துக் கட்டப்பட்டிருந்தது — திருடனைப் போல, மேல் பாதி முகத்தை ஒரு தொப்பியின் நிழல் மறைத்திருந்தது — வெள்ளைக்காரப் பெரிய மனிதரைப் போல... ஆனால் ஆசை வெறியும் கொலை வெறியும் அவனுடைய விழிகளில் மட்டும் தான் தெரிந்தன தன்னை விடுவித்துக் கொள்ள முரட்டுத்தனமாக முயன்றாள்.

"பேசாமல் இருக்கிறாயா? குரல் வளையை நெறிக்கட்டுமா?" அந்தக் குரலில் காணப்பட்ட அமரிக்கை மனோரமா உடம்பைப் புல்லரிக்கச் செய்தது. அது சாதாரண மிரட்டலல்ல; உண்மையிலேயே செய்யப் போவதைச் சொல்லும் 'தொனி' அது என்று மனோரமா புரிந்து கொண்டாள். சாதாரண ஒரு முயல் குட்டியை நசுக்குவது போலத் தன்னைத் தீர்த்து விடக் கூடியவன் அவன் என்று புரிந்து கொண்டாள். ஆனால் தனது அழகையும் பெண்மையையும் அள்ளிப் பருகாமல், உடனடியாக அவன் கொலை செய்யும் உத்தேசத்தில் இல்லை என்று புரிந்து கொண்டாள். ஆகவே, தன் மூளையை உபயோகித்தால், தப்பிக்க இடம் இருக்கிறது என்றே அவளுக்குத் தோன்றியது.

பயங்கரமான ஒரு முனகலோடு, திடீரென அவன் கையில் மரக்கட்டை போல் மூர்ச்சித்து விழுவதாகப் பாசாங்கு செய்தாள். இதை அவன் எதிர் பார்க்காததால், அவள் முழுப் பளுவும் தன் மீது தாக்கியதால், தடுமாறிக் கொண்டு அவளோடு கீழே விழுந்தான்.

பிறகு ஏதோ அவளைத் திட்டியபடி எழுந்தான். பீரோக் கதவு போன்ற கதவு இருந்த இடத்திற்கு அவன் போவதை மனோரமா கவனித்தாள். அவன் கையில் ஒரு சாவிக் கொத்து இருந்தது. அந்தக் கதவைத் திறக்க, சாவியைப் பூட்டுத் துவாரத்தில் சொருகினான்.

இதற்குள் சப்தமில்லாமல் மனோரமா எழுந்து வாசற் கதவுப் பக்கம் போய், 'சடா'ரென்று அந்தக் கதவைத் திறந்து ஒரே பாய்ச்சலாக முற்றத்துப் பக்கம் பாய்ந்தாள். பிரமித்துப் போன அவன், திகைப்பு நீங்கி அவளைப் பிடித்து நிறுத்த முயலுவதற்குள் அவள் வெளி வீதிக்கே ஓடி வந்து விட்டாள்.

சில வினாடிகளில் அவள் 'மெயின்ரோடு'க்கே வந்து விட்டாள். தனக்கு முன்னால் சிறிது தூரத்தில் இரண்டு போலீஸ்காரர்களைப் பார்த்தாள். அவர்களிடம் ஓடிச் சென்று தன்'அனுபவத்தை'க் கூறத் துடித்தாள். ஆனால் அவளுக்கு ஒரு தயக்கம் ஏற்பட்டது. தான் சொல்வதை அவர்கள் நம்பாமல் தன்னைப் பைத்தியம் என்று நினைத்தால்? அதோடு

"ஹலோ; மனோரமா! என்னை நடுங்கிப் போகச் செய்து விட்டீர்களே!"— இது ஸி. ஐ.டி. யின் குரல்!

"ஆமாம். நீங்கள் எங்கே போய் மறைந்தீர்கள்? நான் ஸி. ஐ. டி. இலாகாவைச் சேர்ந்த ராமமூர்த்தி. நான் உங்களைத் தொடர்ந்து வருவது உங்களுக்குத் தெரியும் என்று இன்ஸ்பெக்டர் துரைசாமி என்னிடம் கூறினார்."

அளவு கடந்த பதட்டத்தோடு மனோரமா, சற்று முன் நிகழ்ந்ததை எல்லாம் அவரிடம் சொன்னாள்.

"உங்களிடம் அந்தச் சாவி இருக்கிறதா?" "இல்லை; அந்தக் கதவிலேயே விட்டுவிட்டு வந்து விட்டேன்!"

சரி; நான் முதலில் உங்களை வீட்டுக்கு அழைத்துப்போய் விட்டு விட்டு, துரைசாமிக்கு விஷயத்தைத் தெரிவிக்கிறேன்.

மனோரமாவை வீட்டில் கொண்டு வந்து விட்டதும், ஸி.ஐ.டி. ராமமூர்த்தி அவசர அவசரமாக, தானே அந்த இடத்திற்குப் போய்ச் சில விஷயங்களை நேரில் பார்த்து பிறகு துரைசாமிக்குத் தெரிவிக்கலாம் என நினைத்து, டாக்ஸியில் ஏறிக் கொண்டு

பறந்தார். அவர் சமீபத்தில் தான் வேலைக்கு வந்தவர் ஆதலால் அவரிடம் அளவுகடந்த உற்சாகம் இருந்தது.

மனோரமாவுக்கு இன்னும் நடுக்கம் தெளியவில்லை. ஹாலில் விளக்கை எரியவிட்டு அடுக்களையில் போய்க் கொஞ்சம் தேநீர் தயாரித்து அருந்தினாள். பிறகு தனது படுக்கையில் போய்ப்படுத்தாள். அவளால் தூங்க முடியவில்லை. சாதாரணமாக எல்லா வீடுகளிலிலும் இரவு நேரங்களில் கேட்கும் இனம் தெரியாத சப்தம், அந்த வீட்டில் கேட்கும் பொழுது எல்லாம் வாரிச் சுருட்டி எழுந்து உட்கார்ந்தாள். மர்ம மனிதன் சோமசேகரின் ரகசிய அறையை விட்டு அவள் மயிரிழையில் தப்பி வந்து விட்டாள். ஆனால் அந்த மாறுவேஷ தாரி யார் என்பதை அவள் கண்டுபிடித்து விட்டதாக எண்ணிக் கொண்டு, அவளைக் கொலை செய்ய நினைப்பானோ? உடனே தன்னைக் கொல்லத் தன் வீட்டிற்கு வருவானே? தனியாக இருக்க அவளுக்குப் பயமாக இருந்தது. மோகனுக்கு இதை டெலிபோன் மூலம் தெரிவிக்கலாம் என்று நினைத்து டெலிபோனை எடுக்கக் கையை நீட்டினாள். திடீரென்று எதிர்பாராமல் டெலிபோன் மணி ‘கண கண' வென்று அடிக்கவே தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு.

சமாளித்துக் கொண்டு, யார் பேசுகிறார்கள் என்று கேட்க டெலிபோனை எடுத்துக் காதில் வைத்தாள். இன்ஸ் பெக்டர் துரைசாமிதான் பேசினார். அவர் குரல் படபடத்தது.

மனோரமாவா? உடனே தெருக்கதவு, கொல்லைக் கதவு எல்லாம் சரியாகத் தாள் போட்டுக் கொள்ளுங்கள்! அவசரம்! நான் வரும் வரையில் கதவைத் திறக்கவே வேண்டாம். பத்து நிமிஷத்தில் வருகிறேன்! ஜாக்கிரதை! ஜாக்கிரதை!"

"ஆனால்..."

"சொன்னபடி செய்" என்று ஆத்திரமாகக் கத்திவிட்டு 'டக்' கென்று போனை வைத்து விட்டார், இன்ஸ்பெக்டர் துரைசாமி. மனோரமா நடு நடுங்கி விட்டாள். வாசல் கதவை அன்று தாள் போட மறந்து விட்டாள். வந்த அவசரத்தில் கதவைச் சும்மா சாத்தி விட்டு தேநீர் போட சமையலறைக்கு உள்ளே வந்து விட்டாள். என்ன ஆபத்து! நிலைமை மோசமாக — பயங்கரமாக இல்லாவிட்டால் இன்ஸ்பெக்டர் துரைசாமி அப்படிப் பேச மாட்டாரே...?

பரபரப்போடு, தெருக்கதவைத் தாளிட ஹால் பக்கம் போக அடி எடுத்து வைத்தவள், ஹால் இருட்டாக இருப்பதைப் பார்த்தாள். அவள் அங்கு விளக்கை எரிய விட்டு வந்திருந்தாள். இப்பொழுது விளக்கு இல்லை! அது அணைக்கப்பட்டிருந்தது! அவள் ரத்தம் பயத்தால் உறைந்து விடும் போலிருந்தது! சட்டென்று தன் படுக்கை அறைக்கு ஓடி, கதவைப் படாரென அடித்துத் தாளிட்டுக் கொண்டாள். மறு வினாடி ஒரு பளுவான உருவம், திடீரென கதவின் மீது விழுந்து, முரட்டுத் தனமாக உடலால்

இடித்து, கதவைத் திறக்க முயன்றது. அவளுடைய படுக்கை அறையில் தற்காப்புக்கு ஏற்ற எந்த வித ஆயுதமும் கிடையாது.

'திடீர், திடீர்' என வெளியே அந்த உருவம் கதவின் மீது மோதியது. கதவு ஆடியது!

'சட்'டென்று அறையிலிருந்த விளக்கை மனோரமா அணைத்து விட்டாள்.

"என்னிடம் கைத்துப்பாக்கி இருக்கிறது. நீ போகாவிட்டால் சுட்டு விடுவேன்" என்று தன் கையில் துப்பாக்கி இருப்பது போல் பாசாங்காகக் கத்தினாள் மனோரமா.

மறுபடியும் நிசப்தம். மனோரமா இப்பொழுது திறமையாக நடிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவள் உயிரே போய் விடும்!

சட்டென்று வீதிப்பக்கம் இருந்த ஜன்னலைத் திறந்தாள். கீழே பார்த்தபடி, "யார்? இன்ஸ்பெக்டர் துரைசாமியா? பின் கதவு வழியாகச் சீக்கிரம் மேலே வாருங்கள்!" என்றாள்.

மீண்டும் வெளியிலிருந்த உருவம் கதவின் மீது 'படார், படார்' என மோதியது இந்தச் சமயத்தில் அவளுக்குத் திடீரென மற்றொரு யோசனை தோன்றியது. டெலிபோனை எடுத்தாள்.

"இது போலீஸ் ஸ்டேஷனா? — மனோரமா பேசுகிறேன்! இங்கே என் அறைக் கதவை உடைக்க பிரபாகர் என்பவன் முயலுகிறான் — சந்தியா பாங்க் ஏஜண்ட் பிரபாகரன் — எனக்கு எதுவும் நேர்ந்தால் அந்தப் பெயரை மறக்காதீர்கள்... பிரபாகர்" என்று கத்தினாள்.

பிறகு டெலிபோன் ரீஸிவரை வைத்துவிட்டு, மெதுவாகக் கதவுப் பக்கம் போய்க் கவனித்தாள். கதவோரம் நின்ற உருவம் மெதுவாக நடந்து போகும் காலடிச் சத்தம் கேட்டது. வரவர காலடி ஓசை தூரமாக போவது தெரிந்தது. பிறகு அந்த ஓசை கேட்கவே இல்லை.

மனோரமா அயர்ந்து போய்த் தரையில் உட்கார்ந்தாள். அவள் தலை சுழன்றது. மூர்ச்சித்து விழுந்து விட்டாள், மோகனும் துரைசாமியும் வந்து வெகு நேரம் கதவை 'இடி இடி' என்று இடித்த பிறகுதான் நினைவு இலேசாக வந்து கதவைத் திறந்தாள்.

அவர்களிடம் நடந்த விஷயங்களைக் கூற ஆரம்பித்ததும், மறுபடியும் மூர்ச்சையாகி விட்டாள்.

"உடனே ஒரு நர்ஸை'க் கூப்பிடுங்கள். நான் இவளை உயிரோடு பார்ப்போமென்றே நினைக்கவில்லை" என்றார் இன்ஸ்பெக்டர் துரைசாமி, மோகன் அவள் முகத்தில் தண்ணீர் தெளித்து உபசரித்துக் கொண்டிருந்தான்.

"மனோரமாவைத் தொடர்ந்து சென்ற ஸி.ஐ.டி. யிடமிருந்து முழு விவரங்களும் டெலிபோன் மூலம் எனக்குக் கிடைத்தன. உடனே மனோரமா வீட்டுக்குப்போ நான் அங்கு வரும்வரை அங்கேயே இரு!" என் அவரிடம் சொன்னேன். உங்களுக்குப் போன் செய்தேன். அரை மணி நேரம் கழித்து அந்த ஸி.ஐ.டி. தான் அந்த வீட்டைப் போய்ச் சோதனை போட்டதாகவும் ஒருவரும் இல்லை என்றும் கூறினார். எனக்கு எப்படி இருக்கும்? பதறிப் போய் மனோரமாவுக்கு 'போன் செய்தேன், இங்குள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் செய்திருக்கலாம். அதற்குள் நானே வந்துவிடலாம் என்று நினைத்தேன்" என்றார் துரைசாமி.

சிறிது நேரத்தில் மனோரமா மூர்ச்சை தெளிர்ந்து எழுந்தாள். ஆனால் அவள் முகம் வெளிறிப்போய் இருந்தது. உடலில் இலேசான நடுக்கம் இருந்தது. நடந்த விவரங்களை எல்லாம், துரைசாமியிடம் கூறினாள். இன்ஸ்பெக்டர் துரைசாமி 'சோமசேகரின்' அங்க அடயாளங்களை எல்லாம் எல்லா போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் ஒலிபரப்பி, அந்த அடையாள முள்ள ஆள் அகப்பட்டால் உடனே கைது செய்யும்படி ஏற்பாடு செய்தார். ஒருக்கால் அந்த ஆள் ஒரு பெண்ணோடு போகக்கூடும் என்றும் தகவல் அறிவிக்கப்பட்டது.

இன்ஸ்பெக்டர் துரைசாமி யோசனையின் பேரில், மனோரமா தமது ஜாகையைத் தற்காலிகமாகக் காலி செய்து கொண்டு, 'கண்ண பிரான்' ஹோட்டலில் போய் அறை வாடகைக்கு எடுத்துக் கொண்டு வசிப்பது என்று ஏற்பாடாயிற்று. இனிமேல் மனோரமாவுக்கு அதிக ஆபத்து இல்லை என்று துரைசாமி கருதினார். ஏனென்றால் சோமசேகர் யாரென்று மனோரமா சொல்லிவிடக் கூடும் என்ற பயத்தில் தான், சோம சேகர் அவளைக் கொலை செய்ய முயல்வான். ஆனால் இப்பொழுது அவள் அதை வெளிப்படையாகச் சொல்லி விட்டாள். இனிமேல் அவன் மனோரமாவைக் கொலை செய்வதைப்பற்றிக் கவலைப் படமாட்டான் என்றும் தோன்றியது!

மனோராமாவுக்கு அந்த விசித்திர அனுபவங்கள் ஏற்பட்ட அன்று இரவுக்கு முன்பாகவே இன்ஸ்பெக்டர் துரைசாமி, அமெரிக்காவின் துப்பறியும் நிபுணரான 'ஸாம் வேல்' கோல்டுவினுக்கு, 'சோமசேகர்' என்ற ஆள் பார்வைக்கு எப்படி இருக்கிறான் என்று விவரமாகத் தந்தி அடித்திருந்தார். நியூயார்க் போலீஸ் இலாகாவிற்குத் தந்தி அனுப்பி, 'மெட்ராஸ்' பாபுவின் புகைப்படத்தை அனுப்பும்படியும் கேட்டிருந்தார். புகைப்படம் கைக்குக் கிடைத்த அன்று, இன்ஸ்பெக்டர் துரைசாமி வேகமாகப் பிரபாகர் வேலை பார்த்த, சந்தியா பாங்கிற்குச் சென்றார். அந்த கணக்குகளை எல்லாம் ரொம்ப ஜாக்கிரதையாகப் பரிசீலனை செய்தார். ஆனால் பாங்க் கணக்குகளில் எந்தவித மோசடியும் இல்லை.

விசாரணையை முடித்துக் கொண்டு இன்ஸ்பெக்டர் துரைசாமி புறப்பட்ட பொழுது, பாங்க் ஜெனரல் மானேஜர், "உங்களுக்கு இது தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். பிரபாகர் நமது பாங்கில் வேலை பார்க்கும் பொழுது, இடையில் மூன்று வருஷம் அமெரிக்காவில் போய் தங்கி இருந்தார். அப்பொழுது சில தொழில்கள் செய்தாராம், அவை என்ன தொழில்கள் என்பதை அவர் எங்களிடம் சொல்லவே இல்லை!" என்றார்.

"விசித்திரமாக இருக்கிறது" என்றார் இன்ஸ்பெக்டர்.

"அதோடு பிரபாகருக்கு 'மணிலா எண்ணெய்' மார்க்கெட்டின் ஷேர்கள் ஏராளமாக இருந்தனவாம். அவைகள் இப்பொழுது ரொம்ப விலை ஏறி இருக்கின்றன. அதில் அவருக்குக் கொஞ்சம் லாபம் கிடைக்கலாம்" என்றார் மானேஜர்.

"அதில் பல லட்ச ரூபாய்கள் சம்பாதிக்கலாம்!" என்றார் துரைசாமி. ஜெனரல் மானேஜரின் கண்கள் ஆசரியத்தால் வெளியே பிதுங்கி விடுவன போல இருந்தன.

"அப்படியானால் இனி அகௌரவமான வழிகளில் பணம் தேடும் அவசியம் அவருக்கு இருக்காது!"

"எந்தக் காலத்திலும் இருந்ததில்லை" என்று துரைசாமி 'ஒரு மாதிரி' யாகக் கூறினார்.

மோகனுக்கு, தன் மாமாவின் எஸ்டேட் சம்பந்தமான வேலைகள் நிறைய இருந்தன. பெரிய கருப்பன் செட்டியார் சிலருக்கு நன்செய் நிலத்தின் மேல், கடன் கொடுத்தார். அவை வசூல் செய்யவும் அந்தக் கடன்கள் 'காலாவதி' ஆகாமல் கவனிக்கவும், மோகன் பல ஊர்களுக்கு போக வேண்டியிருந்தது. வில்லிவாக்கத்தில் ஒருவர் நிறையப் பணம் கொடுக்க வேண்டி இருந்தது. அவரைச் சந்தித்து விட்டு அன்று மத்தியான இரண்டரை மணிக்கு வில்லிவாக்கம் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனான் மோகன். அந்தச் சமயம் பெங்களூரிலிருந்து வரும் "மதராஸ் எக்ஸ்பிரஸ்" வில்லிவாக்கம் ஸ்டேஷனில் நுழைந்தது. அந்த எக்ஸ்பிரஸ் அங்கே நிற்காது. ஆனால் ஸ்டேஷனுக்கள் புகுந்து செல்வதால் அங்கு கொஞ்சம் மெதுவாகப் போகும்.

மோகன் ரயிலை சோம்பேறித்தனமாக வேடிக்கை பார்த்தான். மூன்றாம் வகுப்பு வண்டி ஒரே கூட்டமாக இருந்தது. இண்டர் வகுப்பு பரவாயில்லை. இரண்டாம் வகுப்பில் ஒரே ஒரு ஆள் தான் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார்.

அந்த ஒரே ஒரு ஆள்! அது யார்? தன்னைத் தாண்டிச் சென்று வண்டியைத் தொடர்ந்து ஓடி மீண்டும் ஒருமுறை பார்த்தான்—அது சந்தேகமில்லாமல் பிரபாகர்தான்!

அந்த மெயில், வழியில் எங்கும் நிற்காது, நேராக சென்ட்ரல் ஸ்டேஷனில் போய்த்தான் நிற்கும்!

மோகன் பரபரப்போடு ஸ்டேஷன் மாஸ்டர் அறைக்கு ஓடி சென்ட்ரல் ரயில்வே போலீஸிற்குத் தகவல் கொடுக்கச் சொன்னான். இன்ஸ்பெக்டர் துரைசாமிக்குத தெரிவிக்கச் சொன்னான். உள்ள படியே மதராஸ் போலீஸ் ரொம்ப வேகமாக இயங்கக் கூடியது. ரயில், சென்ட்ரல் ஸ்டேஷனை அடைவதற்குள் பிரபாகரை 'வரவேற்க' போலீசார் தயாராகக் காத்துக் கொண்டிருந்தனர். மெயில் வந்து ஸ்டேசனில் நின்றது. இரண்டாம் வகுப்பு வண்டியை நோக்கிப் போலீசார் விரைந்தனர். ஆனால் ரயிலிலுள்ள எந்தப் பெட்டியிலும் பிரபாகர் இல்லை!

"டெக்கான் ஹெரால்டு" என்ற ஆங்கில தினசரிதான் கிடந்தது! பிறகு விசாரித்ததில், மெயில் கொஞ்சம் முன்னதாக வந்து விட்டதால், அதை பேஸின் பிரிட்ஜ்' ஜங்ஷனில் நிறத்தி இருந்தார்கள் என்று தெரிய வந்தது!

## 22. ஓர் உருவத்தின் நிழல்!

இன்ஸ்பெக்டர் துரைசாமி நினைத்தது போலவே, பிரபாகர் 'பேஸின் பிரிட்ஜ்' ஜங்ஷனில் இறங்கி விட்டான். அங்கே சாதாரணமாக அந்த மெயில் வண்டி நிற்பதில்லை வர வேண்டிய நேரத்திற்குச் சற்று முன்னதாக வந்து விட்டால் — அங்கு சில நிமிஷங்கள் நிற்பது வழக்கம். இன்று அம்மாதிரி நேர்ந்ததால், பிரபாகர் தப்பித்துச் செல்ல சாத்தியமாகிவிட்டது.

இன்ஸ்பெக்டர் துரைசாமி, பிரபாகர் வீட்டைக் கண்காணிப்பில் வைக்கச் செய்தார், மோகனின் 'ஒர்க்ஷாப்'பிற்கும், மோகன் இருப்பிடத்திற்கும் ஒருக்கால் பிரபாகர் வந்தானானால் அதற்கும் முன்னெச்சரிக்கையாக 'பாரா' போட்டார். நகரிலுள்ள எல்லா ஹோட்டலுக்கும் பிரபாகர் வந்து தங்கினால் தெரிவிக்கும்படி தகவல் கொடுத்து விட்டார்.

இவற்றை எல்லாம் முடித்துக் கொண்டு, அவர் மனோரமா தங்கியிருந்த கண்ணபிரான் ஹோட்டலுக்குப் போகும் பொழுது, கொஞ்சம் 'பிந்தி' விட்டார்! அரை மணி நேரம் முன்னதாக அவர் வந்திருந்தால், பிரபாகர் அந்த ஹோட்டலில், 'கோழிக்கோடு—மாதவன்' என்ற பெயரில் அறையெடுத்ததையும், அவனுக்கு மனோரமாவின் அறைக்கு அடுத்த அறை திறந்து விடப்பட்டதையும் பார்த்திருப்பார்!

பிரபாகர் தன் அறைக்குச் சென்றதும் உடனே சாப்பாடு கொண்டுவரச் சொல்லிச் சாப்பிட்டான். பிறகு கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டு, தன் தோல் பெட்டியில் இருந்த 'தஸ்தாவேஜி'களை எடுத்து மேஜை மேல் வைத்துக் கொண்டு அந்த வேலையில் ஆழ்ந்து விட்டான்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி மனோரமாவின் அறையில் அவளோடு வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார், இன்னும் பிறகு அவள், வீடு திரும்பி விடலாம் என்று கூறி விட்டு, குற்றவாளியைப் பிடிக்க என்னென்ன முயற்சிகள் செய்யப்பட்டு இருக்கின்றன என்று விளக்கிக் கூறினார்.

மனோரமாவுக்கு அந்த ஹோட்டலில் தங்கியிருப்பது நரக வேதனையாக இருந்தது. ஏனென்றால், அவளது ஒவ்வொரு நடவடிக்கையையும் கட்டுப் படுத்தி, ரகசிய போலீசார் தடை விதித்திருக்கிறார்கள். அதற்கு எல்லாம் அடங்கி அறைக்குள்ளே அடைந்து கிடக்க வேண்டியிருந்தது.

"இப்பொழுது நான் அந்த மர்ம மனிதனைத் தெரிந்து கொண்டதாலும், அவனது அங்க அடையாளங்கள் எல்லா போலீசாருக்கும் அனுப்பப்பட்டு விட்டதாலும், அவன் தப்பித்து ஓட நினைப்பானே அன்றி, என்னைத் தேடி வந்து கொலை செய்யவா போகிறான்?" என்றாள் மனோரமா.

"அப்படிச் சொல்ல முடியாது. இவன் 'வெறி' பிடித்து அலைவான், பழிவாங்குவது அவனுக்கொரு விளையாட்டு. அவன் கண் வைத்த எந்தப் பெண்ணையும் கெடுக்காமல் விட்டதில்லையாம். இதில் தாம் அஜாக்கிரதையாக இருக்கக் கூடாது" என்றார் துரைசாமி

"அந்த அமெரிக்கத் துப்பறியும் அதிகாரி குறிப்பிட்ட 'மெட்றாஸ் பாபு' இவன் தானா?"

"ஆமாம், நியூயார்க்கில் அவன் தங்கி இருந்த இரண்டு மூன்று வருஷங்களில் சில பயங்கரக் கோஷ்டிகளோடு தன்னைச் சம்பந்தப்படுத்திக் கொண்டு பல குற்றங்கள் செய்திருக்கிறான். இதில் என்ன வேடிக்கை என்றால் அக்காலத்திலும் நடிகர்களுக்கு விருந்து கொடுக்கும் பழக்கம் இவனுக்கு இருந்திருக்கிறது. அங்குள்ள பாடகர்களையும், மேடை நடிகர் நடிகைகளையும் வரவழைத்து பெரிய விருந்துகள் கொடுப்பானாம்!" என்றார் துரைசாமி.

துரைசாமி போன பிறகு மனோரமா ரொம்பவும் சோர்வடைந்து இருந்தாள். அவள் மீது சுமத்தப்பட்டிருக்கும் நிபந்தனைகளை ஏற்று நடப்பது அவளுக்கு ரொம்பக் கஷ்டமாக இருந்தது. எல்லாவற்றையும் விட மிகவும் சிரமமான நிபந்தனை என்னவென்றால், இரவு ஒன்பது மணிக்கு அவள் தன் அறைக்குள் படுத்து விட வேண்டும். என்பதுதான்... அது தனக்குப் பிடிக்காவிட்டாலும், அதை அவள் செய்து வரத்தான் வேண்டியிருந்தது!

அன்று இரவு ஒன்பது மணிக்குப் படுத்து விட்டாள். பத்து பதினொன்று அடிப்பதெல்லாம் அவள் காதில் விழுந்தன. அவளுக்குத் தூக்கம் வராமல் புரண்டு

கொண்டு கிடந்தாள்.

பிறகு அவள் சிறிது கண் மூடியிருக்க வேண்டும். எப்பொழுது என்று அவளுக்கத் தெரியாது. திடீரென்று விழித்துக் கொண்டாள். எதனால் அவளுக்கு அந்த விழிப்பு ஏற்பட்டது என்று தெரியவில்லை. அவள் உடம்பு நடுங்கியது. போர்வையை நன்றாக இழுத்துப் போர்த்திக் கொண்டாள். அப்பொழுது கொஞ்சம் நஞ்சம் இருந்த தூக்கம் போய், நன்றாக விழித்துக் கொண்டாள் அவள் அறை ஜன்னல் கதவு திறந்திருந்தது. படுக்கும் போது வடக்கு நோக்கி இருந்த ஜன்னல் வழியாக சாரல் வருகிறது என்று அதை இழுத்தி மூடியிருந்தாள். உள்ளே கொக்கி போட்டதாகக் கூட ஞாபகம்... போடாமலும் இருந்திருக்கலாம்: ஆனால் அந்தக் கதவு எப்படி இம்மாதிரி 'விரிய' திறந்திருக்கிறது. துரதிருஷ்டவசமாக அந்த ஜன்னலுக்கு கம்பிகள் கிடை யாது. ஜன்னலையொட்டி வெளிப்புறத்தில் ஒரு வராந்தா நீளமாகச் செல்கிறது.

திரும்பவும் ஜன்னலை ஜாக்கிரதையாக மூடித் தாளிட மனோரமா படுக்கையை விட்டு எழுந்தபோது, யாரோ ஓர் உருவத்தின் நிழல் ஜன்னல் மீது விழுந்தது. சில வினாடிகளில் அந்த ஆள் ஜன்னல் பக்கம் எட்டிப்பார்த்தான்! மனோரமாவுக்கு அடையாளம் புரிந்து விட்டது. அதே ஆள் தான் பயமும், கலவரமும் சில வினாடிகள் அவளை ஸ்தம்பிக்கச் செய்தது. பிறகு உயிருக்கு போராடும் ஜீவனைப்போல், தன் முழு சக்தியையும் வைத்து 'வீர்' என்று அந்தக் கட்டிடமே பிளந்து போகும் படி அலறினாள்.

அந்த ஆள் திரும்பி மறைந்து விட்டான். ஓட்டமாக ஓடி ஜன்னல் கதவை இழுத்துப் 'படீ'ரெனச் சாத்தினாள். விளக்கைப் பொருத்தி விட்டு, கை, கால்களெல்லாம் உதற, பயத்தோடு கட்டிலின் மேல் உட்கார்ந்தாள் இதற்குள் ஹோட்டல் சிப்பந்திகள் அங்கு ஓடி வந்து விட்டார்கள்.

யாரோ ஒரு ஆள் ஜன்னல் பக்கம் வந்ததாக அவர்களிடம் சொன்னாள், உடனே இன்ஸபெக்டர் துரைசாமிக்கு 'டெலி போன்' செய்யும்படி கூறினாள். ஒருவன் டெலிபோன் செய்ய ஓடினான்.

"ஆள் வந்தான் என்றா சொல்கிறீர்கள்? இந்தப் பக்கமாக யாரும் வரவில்லை?" என்றான் மற்றொருவன்.

"பின் பக்கத்துப் படிக்கட்டு வழியாக நமக்குத் தெரியாமல் வந்திருப்பான்!" என்று கூறினான் இன்னொருவன். "பின் பக்கம் படி இருக்கிறதா?" "என்று கேட்டாள் மனோரமா இருக்கிறதம்மா!" என்றான் அவன்.

"ஏதாவது திருட்டு போச்சாம்மா?" "இல்லை" என்றாள் மனோரமா.

இன்ஸ்பெக்டர் துரைசாமி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே வந்து விட்டார். அவரிடம் தனியே சென்று, நடந்ததை எடுத்தச் சொன்னாள் மனோரமா.

அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ பொசுங்கல் வாடை வந்தது. ஏதோ துணி தீப்பற்றிக் கொண்ட வாடை அது. துரைசாமி ஆட்களை அனுப்பி சுற்றிலும் பார்த்துவரச் சொன்னார். ஹோட்டல் ஆட்கள் இருட்டில் அங்குமிங்கும் ஓடினார்கள், ஆனால் எங்கிருந்து வாடை வருகிறது என்று தெரியவில்லை. வரவர அந்த வாடை அதிகமாகயிற்று.

துரைசாமி பரபரப்போடு சுற்றிலும் பார்த்தார். மனோரமாவின் அறைக்கு அடுத்த அறையிலிருந்து, கதவு இடுக்கு வழியாக புகை வந்தது தெரிந்தது. துரைசாமி அவசரமாகப் போய்க் கதவைப் படபட, என்று இடித்தார். கதவு திறக்கப்பட வில்லை. ஆத்திரத்தோடு ஓங்கி இடித்துப் பார்த்தார். கதவு திறக்கப்படவில்லை!

"எடுத்து வா கடப்பாறையை" என்று கத்தினார்.

கடப்பாறையை எடுத்துக் கொண்டு ஒருவன் ஓடி வந்தான், அறைக் கதவு பிளந்தெறியப்பட்டது. ஆத்திரமாக துரைசாமி உள்ளே பாய்ந்து விளக்கைப் பொருத்தினர், எங்கு பார்த்தாலும் ஒரே புகை. மூச்சு விட முடியாமல் ஒரே திணறலாக இருந்தது. உள்ளே இருப்பது ஒன்றும் சரியாகக் கண்ணுக்குப் புலனாகவில்லை. கட்டிலின் மீது ஓர் உருவம் கிடந்தது. இன்ஸ்பெக்டர் பரபரப்போடு அந்த உடலை தூக்கி வந்து வெளியே கிடத்தி, அவன் முகத்தைப் பார்த்தார்.

"பிரபாகர்!" என்று வீரிட்டாள் மனோரமா!

## 23. வாக்கு மூலம்

ஹோட்டலில் ஏற்பட்ட 'அமளி துமளி'யில் எல்லோரும் விழித்துக் கொண்டார்கள், அங்கு ஒரு டாக்டர் தங்கி இருந்தார். அவர் ஓடி வந்து, பிரபாகருக்குச் சிகிச்சை செய்தார், போலீஸ் தலைமைக் காரியாலயத்திற்கு போன் செய்யப்பட்டு, உதவிக் கமிஷனர் உள்பட பலர் அங்கு வந்து விட்டார்கள்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி, பிரபாகர் தங்கியிருந்த அறைக்குள் நுழைந்தார். ஒரு மூலையில் இன்னும் எரிந்து கொண்டிருந்த ஹோட்டல் மெத்தை ஒன்றை அணைக்கும்படி ஆட்களிடம் கூறிவிட்டு, அந்த அறையை ஆராய்ந்து பார்த்தார்.

பிரபாகர் மேஜை மீது ஏதோ கடிதம் எழுதிக் கொண்டிருந்தது பாதியில் அப்படியே விடப்பட்டிருந்தது. ஜன்னல் கதவுகள் இறக்கி மூடப்பட்டு, இடுக்குகளுக்கு எல்லாம்,

'மக்' தடவப்பட்டிருந்தது. காற்றுப் புக ஏதாவது சிறு ஓட்டை இருந்தாலும் அது அடைக்கப்பட்டிருந்தது.

தரையில் ஒரு பக்கத்தில் கைக்குட்டை கிடந்தது. அதைக் கையில் எடுக்கும் பொழுதே ஒரு பயங்கர ரசாயன நெடி அடித்தது. அதை ஜாக்கிறதையாக ஒரு டப்பாவில் போட்டு மூடி, டாக்டர் பரிசோதனைக்காக துரைசாமி வைத்துக் கொண்டார்.

மேஜையிலிருந்த கடிதத்தின் பக்கத்தில் ஒரு 'டைப்' அடித்த பேப்பர் கிடந்தது, அதைக் கவனிக்காமல், துரைசாமி பக்கத்தில் இருந்த கடிதத்தை (பிரபாகர் அரைகுறையாக எழுதிய கடிதத்தை) படித்துப் பார்த்தார்.

"அன்புள்ள ஐயா,

நான் திரும்ப சென்னை வந்து விட்டேன், ஒரு ஹோட்டலில் மாறு பெயருடன் இருக்கிறேன், ஏன் இப்படி தங்கி இருக்கிறேன் என்று உங்களுக்கு காரணம் சொல்லும் போது அதை நீங்கள் ஒப்பிக் கொள்வீர்கள் என்றே கருதுகிறேன்................."

இதோடு அந்தக் கடிதம் அப்படியே நின்றிருந்தது. இதிலிருந்து அந்தச் சமயத்தில் பிரபாகருக்கு, என்னவோ திடீரென்று ஏற்பட்டிருக்க வேண்டுமெனத் தோன்றியது.

துரைசாமி திரும்பவும் அறையைச் சுற்றிப் பார்த்தார். ஸ்நான அறை (சென்னையிலுள்ள பிரபல ஹோட்டல்களில் ஒவ்வொரு அறைக்கும் ஒரு ஸ்நான அறையை அந்தந்த அறைக்குள்ளேயே கட்டி வைப்பார்கள்) பக்கமாகப் போய்ப் பார்த்தார். அங்கு இரண்டு காலடித் தடங்கள் இருந்தன. சேற்றில் வெறுங்காலோடு அந்த ஆள் நடந்து வந்திருக்க வேண்டும். பிறகு ஸ்நான அறையில் அந்தக் காலடித்தடம் நாலைந்து இடங்களில் நெருக்கமாக இருந்தது. அதிலிருந்து அந்த ஆள் அங்கு ஒளிந்திருக்க வேண்டும் என்று துரைசாமி நினைத்தார். எல்லாம் ஒரே குழப்பமாக இருந்தது துரைசாமிக்கு.

மெதுவாக அறையை விட்டு வெளியே வந்தார். பிரபாகருக்கு டாக்டர் சிகிச்சை செய்து கொண்டிருந்தார். உதவி கமிஷனர் முதலியோர் அருகில் நின்று கொண்டிருந்தார்கள்.

மேஜை மீது ஒரு 'டைப்' அடித்த 'ஷீட்' கிடந்தது. துரைசாமிக்கு நினைவு வந்தது. திரும்பவும் அறைக்குள் நுழைந்து அந்தத் தாளைக் கையில் எடுத்துப் பார்த்தார். அதில் ஒரு பாராவைப் படித்து முடிப்பதற்குள், ஆச்சரியந்தாங்காமல் துரைசாமி பக்கத்திலிருந்த சோபாவில் 'தொப்'பென்ற சாய்ந்து விட்டார். ஏனென்றால் அந்தத் தாள் ,ஓர் ஒப்புதல் வாக்குமூலம் போல இருந்தது.

"பிரபாகராகிய நான், இந்த வாழ்விலிருந்து விடுதலை பெறத் தீர்மானித்து விட்டேன். அப்படி இறப்பதற்கு முன்னால், நான் செய்த மூன்று கொலைகளை எடுத்து விளக்கிக்கூற விரும்புகிறேன். முதலாவது நபர் சங்கர்.

சங்கர், நான் பாங்கியிலுள்ள பெரியகருப்பன் செட்டியார் பணத்தை கையாடுவதை ஓரளவு தெரிந்து கொண்டான், என்னை பல மாதங்களாக மிரட்டி பணம் பறித்து வந்தான். சோமசேகர் என்று மாறு பெயரில் நான் நடமாடுவதையும், அதற்கு வேஷம் அணிய நான் சாமி நாயக்கன் தெருவில் ஒரு மாடி அறை அமர்த்தி இருப்பதையும் கண்டு கொண்டான், எனனை மிரட்டி ஆயிரம் ரூபாய் கேட்டான். நான் நூறு ரூபாய் கொடுத்து விட்டு, அவனை அழைத்தேன். அவன் ஒப்புக் கொண்டான். ஒரு வாடகைக் காரைக் கடத்தி அதில் இருவரும் ஏறிக் கொண்டு கடற்கரை வழியாக போனோம் அங்கு நிர்மானுஷ்யமான இடத்தில், அவனை சுட்டுக் கொன்று விட்டு பிரேதத்தைக் காரில் போட்டு மவுண்ட் ரோடில் விட்டு விட்டுப் போய் விட்டேன்..........

"மறு நாள் நான் பெரிய கருப்பன் செட்டியாரைச் சந்தித்துப் பேசினேன். அவருக்கு என் மீது சந்தேகம் ஏற்பட்டிருப்பது தெரிந்தது. அவர் கையெழுத்தைக் கள்ளதனமாகப் போட்டு, பல்லாயிரக் கணக்கான ரூபாய்களை நான் பாங்கிலிருந்து எடுத்து விட்டேன். அவரை ஏமாற்ற உதவி செய்யும் படியும், ஏராளமாகப் பணம் தருவதாகவும் பாலு என்ற அவரது அந்தரங்கப் பணியாளுக்கு ஆசை காட்டினேன். அவன் அதற்கு மசியவில்லை. "எஜமானத் துரோகம் எங்கள் பரம்பரையிலே கிடையாது" என்றான். நான் உலகத்திலே பார்த்ததில், பாலுவைப்போல நேர்மையானவனைக் கண்டதே இல்லை .......

"தினசரி செட்டியார் காற்றுக்காக மாமரத்தடி வருவது தெரியும். அவரை அன்றைய தினம் என் அறை ஜன்னலில் இருந்து துப்பாக்கியால் சுட்டுக் கொன்றேன். துப்பாக்கியில் 'ஸைலன்ஸர்' என்ற (சப்தத்தை அடக்கிவிடும்) கருவியை மாட்டி இருந்ததால் சத்தமே ஏற்படவில்லை. அதோடு ராமையாவின் ஓட்டைக்கார் வேறு, 'தடதட'வென அந்தப் பக்கம் போயிற்று. பிறகு மறு வினாடியே ஒரு ஆளைத் தயார் செய்து என் பெயரோடு, டெல்லிக்கும், காஷ்மீரத்திற்கும் போகும்படி செய்தேன். நான் சென்னையிலேயே தங்கி விட்டேன்.

"நாடகக் காரியதரிசி செல்லப்பாவும் என்னை மிரட்டிப் பணம் பறித்து வந்தான். அவனையும் சுட்டுக் கொன்றேன். அதற்கு முன் நான் செட்டியாருக்கு அனுப்பிய போலி பாங்க்ஸ்டேட்மென்ட் மனோரமா அறையில் இருப்பதைக் கேள்விப்பட்டு, அவள் அறையைச் சோதனையிட்டேன். எதுவும் கிடைக்கவில்லை"...

"இவ்வளவு எல்லாம் செய்தும் எனக்கு நிம்மதி இல்லை. எங்கும் என்னைத் தேடிப் போலீஸ்காரர்கள் வேட்டை நாய்கள் போல் அலைகிறார்கள். எவ்வளவு பணம்

தேடினாலும் வாழ்வில் நிம்மதி இல்லா விட்டால் எதற்காக உயிர் வாழ வேண்டும்? நான் தற்கொலை செய்து கொள்கிறேன். அதைப் பற்றி வருந்தவில்லை."

அதில் 'பிரபாகர்' என்று கையொப்பமிட்டிருந்தது. இன்ஸ்பெக்டர் துரைசாமி, இந்த வாக்கு மூலத்தைப் பல தடவைகள் ஜாக்கிரதையாகப் படித்தார். பிறகு மனோரமாவின் அறைக்குச் சென்றார்.

"ஜன்னலோரமாக வந்தவனின் முகத்தை நீங்கள் நன்றாகப் பார்த் தீர்களா?"

"இல்லை" யென்று தலையை ஆட்டினாள் மனோரமா.

"வேறு எந்த வித அடையாளத்தாலாவது. யாராக இருக்கக் கூடுமென்று உங்களால் யூகிக்க முடிந்ததா?"

மனோரமா சிறிது யோசித்தாள். தனக்குத் தோன்றியதை அவரிடம் சொன்னாள்.

இந்தச் சமயத்தில் தரையில் கிடந்த ஒரு வஸ்து துரைசாமியின் கவனத்தை இழுத்தது. அது மனோரமா அறையின் ஜன்னல் ஓரமாககிடந்தது. அதை குனிந்து எடுத்தார். அது ஒரு சாவி. அதை எடுத்துக் கொண்டு அடுத்த அறைக்குப் போனார்.

அந்த அறைக் கதவின் சாவித் துவாரத்திற்கு மேல் அடைக்கப்பட்டிருந்த 'மக்கை'ப் பெயர்த்து விட்டு சாவியை அதற்குள் நுழைத்த திருப்பிப் பார்த்தார், பூட்டு சுலபமாகத் திறந்து பூட்டியது, அது அந்த அறையின் சாவிதான் என்று ஹோட்டல் வேலைக்காரனும் கத்தினான். துரைசாமிக்கு விஷயங்கள் ஒருவாறு விளங்க ஆரம்பித்தன.

பிரபாகர் இன்னும் மயக்கமாக இருந்தான். அவனைப் போலீஸ் பாதுகாப்பில் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பியதோடு அந்தக் கைகுட்டை அடைத்து வைத்த டப்பாவையும் பரிசோதனைக்காக அவர்களோடு அனுப்பி வைத்தார் துரைசாமி. பிறகு எல்லோரும் போலீஸ் தலைமைக் காரியாலயத்துக்குக் கிளம்பினார்கள்.

"மூன்று மணி நேரம் கழித்து தலைமைக் காரியாலயத்தில் அதிகாரிகள் கூட்டம் நடந்தது. துரைசாமி, பிரபாகரின், 'ஒப்புதல் வாக்கு மூலத்தை' அவர்களிடம் கொடுத்தார். உதவிக் கமிஷனர் அதைப் படித்து விட்டு வெட்ட வெளிச்சமாக இருக்கிறது. அவனுக்கு மூர்ச்சை தெளிந்ததும், ரிமாண்ட் பண்ணிவிட்டு, 'சார்ஜ் ஷீட்' கொடுத்து விட வேண்டியது தான்!" என்றார்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி அதற்கு உடனடியாக எந்தப் பதிலும் சொல்லவில்லை. மறுபடியும் அந்த 'வாக்கு' மூலத்தைப் பார்த்தார். "இதைப் பிரபாகர் தன் அறையில் 'டைப்' அடித்திருக்க முடியாது. ஏனென்றால் அங்கு 'டைப் ரைட்டிங் மெஷின்' கிடையாது. நான் நன்றாகச் சோதனையிட்டு விட்டேன். அடுத்தபடியாக அறைக்கதவு

உள்புறம் பூட்டப்பட்டிருந்தது. ஆனால் சாவி மனோரமா அறைக்குள் கிடக்குது. அறையின் ஜன்னலுக்கு உள்புறம் கொக்கிப் போடாமல் வெளிப் பக்கத்தில் தாள் போடப்பட்டிருந்தது! இவைகள் எல்லாம் யாரோ வெளியாள் கவனப் பிசகால் செய்த தவறுகளாகும்." என்றார்.

ஒருவரும் ஒன்றும் பேசவில்லை.

"அதோடு அந்த அறையில் கிடந்த கைக்குட்டையில் கொடுரமான மயக்க மருந்து தெளிக்கப்பட்டிருந்ததாக டாக்டர் தகவல் அனுப்பி இருக்கிறார். எல்லாம் குழப்பமாக இருக்கிறது!" என்றார் மீண்டும்.

அதிகாரிகளில் ஒருவர் "மிஸ்டர் துரைசாமி— எல்லாம் குழப்பம் என்றால், நீங்கள் என்ன தான் நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"பிரபாகர் அன்று மாலை எங்கோ வெளியே சென்று விட்டுத் திரும்பியதாக ஹோட்டல் 'சர்வர்' என்னிடம் கூறினான். நான் அவன் மேஜை மீதிருந்த தஸ்தாவேஜுகளை எல்லாம் பார்த்தேன். அவற்றைப் பார்த்தால் அவனுக்குத் தற்கொலை எண்ணமே ஏற்பட்டிருக்கக் கூடுமென எனக்குத் தோனறவில்லை. அவன், 'மணிலா எண்ணெய்' ஷேர்களை நிறைய வாங்கவே திட்டம் போட்டுக் கொண்டு இங்கு வந்து தங்கி இருக்கிறான். ஏனென்றால், மார்க்கெட்டில் அந்த 'ஷேர்களுக்கு ஏராள மதிப்பு ஏற்பட்டதால் அதில் நிறையப் பணம் வருமென்று தீர்மானித்திருக்கிறான். தான் அதைப் போல அவற்றை நிறைய வாங்கும் விஷயம் வெளியே தெரிந்தால், அவற்றிற்கு அதிக 'மவுஸ்' ஏற்பட்டு, ஒரேடியாக விலை உயர்ந்து விடும் எனப் பயந்தே மாறு பெயரில் தங்கி இருந்திருக்கிறான். இதை அவன் தன் காஷ்மீர் 'பார்ட்னர்' ஒருவருக்கு எழுதிய கடிதத்திலிருந்து புரிந்து கொண்டேன். அதுவும் அங்கும் மேஜை மீது இருந்தது. அதோடு நாளை சந்தியா பாங்கன மானேஜிங் டைரக்டரைக் காலை பத்து மணிக்குப் பார்க்க வருவதாக டெலிபோன் செய்திருக்கிறான், இதெல்லாம் சாகப் போகிறவனுக்கு எதற்கு?" என்று கேட்டார் துரைசாமி.

ஒருவரும் ஒன்றும் பேசவில்லை.

உதவிக் கமிஷனர் தொண்டையைக் கனைத்துக் கொண்டார் "அப்படியானால்...?"

"பிரபாகர் தற்கொலை செய்து கொள்ள முயலவில்லை. அவன் வெளியே சென்றிருந்த போது, யாரோ அறைக்குள் புகுந்து ஒளிந்து கொண்டிருந்து இருக்கிறார்கள். அது மிகவும் சுலபம். ஏனென்றால் பக்கத்தில் இரண்டு அறைகள் காலியாகக இருக்கின்றன. அந்த அறை ஒன்றின் வழியாகப் பின்பக்க வராந்தாவுக்கு வந்து, ஜன்னல் வழியாக உள்ளே குதித்திருக்கலாம் ஜன்னலுக்குக் கம்பிகள் கிடையாது."

"அறைக்குள் நுழைந்து அந்த ஆள் ஒளிந்திருக்கும் பொழுது, பிரபாகர் வெளியிலிருந்து திரும்பி வந்திருக்க வேண்டும். அவன் உள்ளே நுழைந்து ஏதோ கடிதம் எழுத ஆரம்பித்திருக்கிறான், உடனே அவன் மீது பாய்ந்து, அந்த ஆள் மயக்க மருந்து கைக்குட்டையை முகத்தில் காணபித்தப் பிரபாகரை மயங்கச் செய்திருக்க வேண்டும். பிறகு தான் தயராகக் கொண்டு வந்த டைப் அடித்த வாக்கு மூலத்தை மேஜை மேல் வைத்து விட்டு, பிரபாகரை கட்டிலில் தூக்கிப் போட்டு எல்லா ஜன்னல்களையும், ஓட்டைகளையும், 'மக்கு' வைத்து அடைத்து விட்டு, கட்டில் மெத்தைக்கு நெருப்பு வைத்திருக்கிறான். அதைச் செய்து அந்த அறையை விட்டு வெளியேறி, தப்பித்துப் போவதற்காக மனோரமாவின் அறையை தான் முதலில் வந்த அறையென்று தப்பாக நினைத்துக் கொண்டு, அதன் வழியாக ஏறி குதிக்க முயன்றிருக்கிரான். அந்தச் சமயத்தில் அவன் கையிலிருந்த (பிரபாகர்) அறைச் சாவி மனோரமா அறையில் தவறி விழுந்திருக்க வேண்டும். அந்த சமயத்தில் விழித்த மனோரமா, கட்டிலில் புரளுவதைப் பார்த்து, சட்டென்று திரும்பவும் ஜன்னலை விட்டு இறங்க வராந்தாவில் மறைந்து நினறிருக்கிரான. பிறகு சிறிது நேரம் சத்தம் வராததைக் கண்டு, தான் தவற விட்டு விட்ட சாவியை எடுத்து, பிரபாகர் அறைக்குள்ளேயே போட்டு விட எண்ணி மறுபடி அவள் அறை ஜன்னல் பக்கம் வந்திருக்கிறான், அப்பொழுது அவனைப் பார்த்து விட்டுத்தான் மனோரமா கூச்சல் போட்டிருக்கிறாள். அவன் ஓடிவிட்டான" என்றார் துரைசாமி.

"எதற்காக ஓட்டைகளில் 'மக்கு' வைத்து அடைத்தான்?"

"அதற்கு இரண்டு காரணம். ஒன்று புகை நன்றாகச் சூழ்ந்து கொண்டால், பிரபாகரால் தப்ப முடியாது. இரண்டாவது துணி எரிய ஆரம்பித்ததும் அந்தப் புகை வெளியே போனால் யாராவது கண்டு பிடித்து அணைத்து விட்டால் காரியம் கெட்டு விடுமே என்ற எண்ணம்! அதோடு அந்தச் சாவிக்காக அவன் ஏன் மறுபடி மனோரமா அறைக்குப் போனான்? ஏனென்றால் அந்தச் சாவியும் உள்ளே கிடந்தால், பிரபாகரன் தற்கொலை செய்து கொண்டான் என்ற முடிவு ஸ்திரமாகும் அல்லவா?" என்றார் துரைசாமி.

சிறிது நேரம் நிசப்தம் நிலவியது.

பிறகு துரைசாமி பேச ஆரம்பித்தார்!

'வாக்கு மூலத்திலுள்ள சில வரிகளை அவர்களுக்கு வாசித்துக் காண்பித்தார். அவையெல்லாம் பாலுவைப் பற்றியவை.

"பாலுவுக்குப் பிரபாகர் அளிக்கும் புகழ் மாலையைப் பாருங்கள். இது பைத்தியக்காரத்தனமான வேலை! பாலுவைத் தவிர வேறு யார் இப்படி எழுதிக்

கொண்டிருக்க முடியும்?

"என்ன? பெரியகருப்பன் செட்டியாரின் வேலைக்காரன் பாலுவா?"

'ஆம்!' என்று தலையசைத்தார் துரைசாமி.

"பாலுவுக்குப் பல பெயர்கள் உண்டு, அதில் சோமசேகர், என்பதும் ஒன்று! அவன் தான் கொலைகாரன்!" என்றார் துரைசாமி.

"என்ன? என்ன?" என்று எல்லோரும் பிரமை தட்டிப் போய்க் கேட்டார்கள்.

"ஆம்! அவனே தான்! இதோ பாருங்கள்" என்று தம் பையிலிருந்த ஒரு கவரை வெளியே எடுத்தார் துரைசாமி. அது அமெரிக்க போலீஸ் இலாகாவினால் அனுப்பப்பட்ட ரிப்போர்ட். அதோடு ஒரு போட்டோவும் இருந்தது. அந்தப் போட்டோவில் இருந்த 'மெட்றாஸ் பாபு' என்று அமெரிக்காவில் பிரபலப்பட்ட கிராதகனின் உருவம் பாலுவின் உருவத்தை நினைப்பூட்டுவதாய் இருந்தது!

## 24. இனித் தப்ப முடியாது!

அமெரிக்காவிலிருந்து வந்த தந்தியில், எல்லாம் தெளிவாக இருந்தன.

"இந்த 'மெட்ராஸ் பாபு' என்ற மனிதன் சுத்தமாக ஆங்கிலம் பேசுகிறான். பொதுவாக யாராவது பணக்காரர்களிடம் வேலையாள் போலச் சேர்ந்து, நடித்து ஏரளமாகப் பணம் கொள்ளை அடிப்பதே இவன் வேலை. இங்கு மூன்று கொள்ளைக் கேசுகளில் சம்பந்தப்பட்டிருக்கிறான். டேலர் என்பவரைச் சுட்டுக் கொன்றவன் அவன் தான் என நிரூபணமாகி இருக்காது."

இதை துரைசாமி வாய்வீட்டுப் படித்தார். பிறகு புகைப்படத்தைக் காண்பித்தார். அது பாலுவின் புகைப்படந்தான்; அமெரிக்காவிலிருந்து வந்தது.

"எதற்காக அவன் பெரியகருப்பன் செட்டியாரைக் கொலை செய்ய வேண்டும்?"

ஏனென்றால் அவர் கையெழுத்தில் அவன் 'தில்லு முல்லு' செய்து வந்தான். மனோரமாதான் அதைத் தெளிவு படுத்தினாள். அந்த மோசடி எல்லாம் ஓவ்வொரு மாதமும் பதனான்காம் தேதி நடந்து வந்தது. அந்தத் தேதியில் தான், செட்டியார், தன்னிடம் பாகி வசூல் செய்ய வருபவர்களுக்கும் பணம் கொடுப்பது வழக்கம். அதாவது மளிகைக கடைக்காரன்—அரிசி மண்டிக்காரன் — பால்காரன் — இப்படி....

"அதோடு செட்டியாருக்கு அந்த வியாபாரரிகள் மீதெல்லாம் ஒரு அவநம்பிக்கை. எல்லோரும் தம்மை ஏமாற்றிக் கொள்ளை அடிக்கவே நினைக்கிறார்கள் என்பது அவர் கருத்து. இதனால் ரொக்கமாக அவர்களுக்குப் பணம் கொடுத்தால் நாளைக்கு இல்லை என்று சொல்லி விடுவார்களோ எனப்பயந்து, சில்லறைத் தொகைளுக்கும்

'செக்' மூலமே கொடுப்பார். அதோடு அந்தச் செக்கின் பின் புறத்தில் அவர்கள் செய்யும் ஏமாற்று வேலைகளைச் சுட்டிக்காட்டி அவர்களை எச்சரிக்கை செய்வது அவர் வழக்கம். உதாரணமாக இந்தச் செக்கில் அரிசி காரனை எச்சரிக்கை செய்து எழுதி இருக்கிறார். (என்று நாம் முன் குறிப்பிட்டிருக்கும் செக்கை எடுத்தார்) இதேதான் அவரது வழக்கமாக இருந்து வந்தது.

"ஆனால் மனோரமா, இந்த 'செக்'கைப் பார்த்த பிறகு, வியாபாரிகளை எல்லாம் போய் விசாரிக்க ஆரம்பித்தாள். சென்ற பல மாதங்களாக, செட்டியார் செக் அனுப்புவதில்லை என்றும் ரொக்கமாகவே பாலு மூலம் பணம் கொடுத்து அனுப்பியதாகவும் கூறினார்கள். இதிலிருந்து எனன தெரிகிறது? செட்டியாருக்கு கண் பார்வை தகராறாக இருந்தபடியால், கடைக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டிய 'செக்கை' எல்லாம், பாலு பென்ஸிலால், எழுதி அவரிடம் கையெழுத்து வாங்கி இருக்கிறான். அவரிடம் கையெழுத்து வாங்கும் பொழுது, அந்த வியாபாரிகளுக்குச் சேரவேண்டிய நியாயமான சிறு சிறு தொகை இருக்கும். பிறகு அதை ரப்பரால் அழித்துவிட்டு, பெரிய தொகைகளையும் வேறு பெயர்களையும், அதில் எழுதிக் கொள்வான் பாலு".

"இதையெல்லாம் எப்படியோ புரிந்து கொண்டுதான் மனோரமா துப்பறிந்து வருகிறாளென அவனுக்கு எப்படியோ தெரிந்து விட்டது. அதனால் தான் அவளைக் கொலை செய்துவிடும் நோக்கத்தோடு, அவள் வீட்டுக்கு அன்று இரவு சென்றிருக்கிறான். நல்ல வேளையாக மனோரமா, அவன் மீது தனக்குச் சந்தேகமில்லாதது போல நடித்து, "பிரபாகர் என் வீட்டை உடைக்கிறான்" என்று போலீசுக்குப் போன் செய்ய ஆரம்பித்ததும் அவன் போய்விட்டான். ஆனால் அவள் செய்து வந்த துப்பறியும் வேலை முழுவதும் அவனுக்கு எதிராகச் செய்யப்பட்டது தான் என அவன் புரிந்து கொள்ளவில்லை..."

"கொலை — அதாவது பெரிய கருப்பன் செட்டியார் கொலை எங்கே நடந்திருக்கிறது?"

அதையும் கண்டுபிடித்து விட்டேன். செட்டியார் வீட்டு அடுக்களையை ஒட்டியுள்ள நடைபாதைச் சுவற்றில், செட்டியாரைக் கொன்ற துப்பாக்கி ரவை பதிந்திருந்தது. அதன் மேல் பாலு கொஞ்சம் சுண்ணாம்பை அமுக்கி வைத்திருந்தான். அது பெயர்ந்து விழுந்துவிட்டது. அந்தக் குண்டும் "இதோ' இருக்கிறது" என்று மேஜைக்குள்ளிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்து வெளியே போட்டார்.

"அப்படியானால் செட்டியாரைக் கொலை செய்து விட்டு, அவரைப் பிணமாக வண்டியில் வைத்து, தைரியமாய்த் தோட்டத்திற்குத் தள்ளி வந்திருக்கிறான்!" என்றார்

ஓர் ஆபீசர்.

"அது மட்டுமல்ல; அந்தப் பிணத்திற்கு தினச் செய்தி பத்திரிகையும் படித்துக் காண்பித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தானே; கிராதகன்!" என்றார் மற்றொரு ஆபீசர்.

"அது சரி; நாடகக் காரியதரிசி, செல்லப்பாவை, எதற்காகக் கொலை செய்தான்? அவன் ரகசியம் தெரிந்திருந்ததால் தானே, அவனுக்கு நிறையப் பணம் கொடுத்து நாடகம் நடத்தச் செய்தான் — இப்படி இருந்தும் அவனைக் கொல்வதற்குக் காரணம்?" என்று கேட்டார் வேறொரு அதிகாரி.

"செல்லப்பா என்னோடு பேசிக் கொண்டிருந்தது அவனுக்குத் தெரியும். அதிலிருந்து தான் செட்டியார் வரவு செலவுக்குரிய போலி 'பாங்க்' ஸ்டேட்மெண்ட்' மனோரமா வீட்டிலிருப்பதாக யூகித்தான். செல்லப்பா ஒரு பயங்காளி என்பது பாலுவுக்குத் தெரியும். அவன் போலீஸில் எதுவும் உளறிவிடுவான் என்று பயந்தே அவனை ஒழித்திருக்கிறான்" என்றார் துரைசாமி. "அது சரி; 'பாங்க் ஸ்டேட்மெண்ட்'டைப்பற்றி அவ்வளவு அக்கறை எடுத்து, பாலுவிடம் செல்லப்பா போய் சொல்லுவதற்குக் காரணம்?" என்று கேட்டார் ஒருவர்.

"அதற்குக் காரணம் ரொம்ப விசித்திரமானதாக எனக்குப் படுகிறது. 'பாங்க் ஸ்டேட்மெண்'டில் இருந்த அந்த மோசடிக் கணக்குக் குறிப்பு செல்லப்பாவின் பையில் இருந்தது. அதிலிருந்து அதை அவன் எழுதி உருப்போட்டிருக்க வேண்டும் என்று படுகிறது. எதற்காக உருப்போட வேண்டும்? அதை யாராவது கேட்கும்போது தவறில்லாமல் சொல்வதற்காக, யார் கேட்பார்கள்? பெரியகருப்பன் செட்டியார் ஒருவருக்குத்தான் அதில் அக்கறை இருக்கும். அவரிடம் செல்லப்பா சொல்ல வேண்டுமென்றால் அவன் யாரைப் போலாவது மாறு வேஷத்தில் போயிருக்க வேண்டும் — அதாவது பிரபாகரைப் போல! பிரபாகர் செட்டியாரை பார்த்து ஆறு மாதங்களுக்கு மேல் ஆனது உண்மை தான்! — ஆனால் செல்லப்பா தான் பிரபாகராக நடித்து அவர் இறப்பதற்கு முன் பார்த்திருக்கிறான். இது பாலு ஏற்பாடு. இப்படி என்றால் செட்டியார் தம் பண இருப்பைப் பற்றித் தெரிந்து கொள்ள பிரபாகரை வரும் படி தகவல் கொடுக்கப் பாலுவை அனுப்பி இருக்கிறார். உண்மையான பாங்க் ஏஜண்டு பிரபாகர் வந்தால் தன் குட்டு வெளிப்பட்டு விடுமே என்ற பயந்த பாலு, செல்லப்பாவைப் பிரபாகராக வேடமிடச் செய்து அந்த வேலைக்கு அமர்த்தி இருக்கிறான். செட்டியாருக்குப் பார்வை குறைவானதாலும் பாங்க் ஏஜண்டை முன்பு சரியாகப் பார்த்ததில்லை ஆதலாலும் இது சுலபமாகி விட்டது!" என்றார் துரைசாமி.

"செல்லப்பா கொலையுண்ட காரில், பிரபாகரின் சிகரெட் பெட்டி எப்படி இருந்தது?"

"பாலு பிரபாகரிடம் வேலைக்காரனாக இருந்து இருக்கிறான். அப்பொழுது அதைத் திருடி இருக்கிறான். அந்தப் பெட்டியைக் காரில் வைத்து விட்டால், சந்தேகம் பிரபாகர் மீது செல்லும் என்று நினைத்தே அவ்வாறு செய்திருக்கிறான்!"

"சரி; உண்மையான பாங்க் ஏஜண்ட் பிரபாகர் ஏன் திடீரென மறைய வேண்டும்?"

"அது தான் இந்த 'ஷேர்' தொழிலில் ஈடுபட்டு திடீர் பணக்காரனாக முயல்வோருக்கு உள்ள சங்கடம். 'ஷேர்'கள் கொஞ்சம் விலை குறையுமென நினைத்தால் உடனே விற்று விட வேண்டும். இதற்கு 'வாங்குபவர்'களைத் தேடிப் பிடிக்க வேண்டும். வட இந்தியர்கள் தான் துணிச்சலாக இதில் ஈடுபட்டு வாங்குவார்கள். அதற்கு ஆள் பிடிக்க வேண்டுமானால், பம்பாய், டெல்லி முதலிய இடங்கள் செல்ல வேண்டும். மணிலா எண்ணை ஷேர்களை விற்கும்படி பல நாட்களுக்கு முன் செட்டியார், பிரபாகரிடம் சொல்லி விட்டார், பிரபாகர் அந்த ஷேர்களின் விலை ஏறக் கூடுமென நினைத்து தன் சொத்துக்களையும் விற்று அவற்றை வாங்கினார். திடீரென விலை படுபாதாளத்தை நோக்கி இறங்க ஆரம்பித்ததும் பீதி அடைந்து விட்டார். அவற்றை விற்றாக வேண்டும். இல்லாவிட்டால் அவர் சொத்துக்கள் முழுவதும் நாசமாகி விடும். அதற்காகவே லீவு கேட்டார். பாங்கிக்காரர்கள் மறுத்தார்கள்' உடனே இந்த வேலையை விட அது முக்கியம் என்று, லீவு எடுக்காமலே புறப்பட்டுப் போய் விட்டார். அவர் நல்ல காலம் 'ஷேர்'கள். இப்பொழுது ஒன்றுக்கு இருபது மடங்குக்கு மேல் ஏறி விட்டிருக்கின்றன! — அதனால் இன்னும் சில 'ஷேர்'களை வாங்கலாம் என்றுதான் இப்பொழுது மாறு பெயரில் இங்கே வந்து தங்கி இருக்கிறார்" என்றார் துரைசாமி.

"சரி! மனோரமா, சாவியை எடுத்துப் போய்த் திறந்தாளே; அந்த இடம் எது? ஏன் அந்த சாவி சோமசேகர் அறையிலே சாமி நாய்க்கன் தெருவில் இருந்தது?"

"அந்தச் சாவி, செட்டியார் வீட்டுப் புழக்கடையிலிலுள்ள சுரங்க அறைக்குப் போகும் சாவி. அந்த சுரங்க அறையிலிருந்து அடுக்களைக்கு வழி இருக்கிறது, இரவில் வெளியே சுற்றி விட்டு வரும் பாலு, செட்டியாருக்குத் தெரியாமல் நுழைவதற்காக அந்தச் சாவியை வைத்திருந்தான் அதை இங்கே கைத்தவறி விட்டுப் போன நாட்களில். அடுக்களை ஜன்னலை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைவான், சங்கர் கொலை செய்யப்பட்ட அன்று, அப்படித்தான் நுழைந்திருக்கிறான்!"

"அது சரி; அந்தப் பாதாள ரகசிய அறையில் கேட்ட பெண் குரல் யாருடையது?"

"அது, பாலுவின் மனைவி என்று சொல்லப்பட்டவள் உடையது. பாலு அவளைக் கொஞ்சநாள் காதலியாக வைத்திருந்தான். அவள் தன்னைக் காட்டிக் கொடுத்து விடுவாளோ என்ற பயம் ஏற்பட்டதும் அவளைப் பாதாள ரகசிய அறையில் தள்ளி

வைத்திருந்தான். பிறகு அவளை எங்கோ கொண்டு போய் விட்டு விட்டான்!" என்றார் துரைசாமி.

"சரி; பாலுதான் இப்படிப்பட்டவன் என்பதை அறிந்த மனோரமா, அவனை ஒரு முக்கிய வேலையாக எப்படி பெங்களூர் அனுப்பினாள்?"

"முக்கிய வேலையாக அல்ல. அவனை பெங்களூர் அனுப்பிவிட்டால் அந்த ரகசிய அறையைச் சுலபமாகப் பார்க்கலாமே என்று தான் அனுப்பினாள். ஆனால் அவன் பங்களூருக்குப் போகாமல் அவளுக்கு முன்னால் பாதாள ரகசிய அறைக்கு வந்து காத்துக் கொண்டிருந்தான்!" என்றார் துரைசாமி.

"சரி! அவன் இப்பொழுது எங்கே போயிருப்பான்?"

"சென்னையை விட்டுத் தப்பமுடியாதபடி அவனுக்குக் காவல் ஏற்பாடுகள் எல்லாம் செய்துவிட்டேன். அவன் மாறு வேஷத்தில் போகக் கூடுமாதலால் அதற்கும் தக்க முன்னெச்சரிக்கை செய்து வைத்திருக்கிறேன்!" என்றார் துரைசாமி.

இந்தச் சமயத்தில் டெலிபோன் மணி, 'கணகண' வென்று அடித்தது, துரைசாமி எழுந்து போய்க் கேட்டார். அவர் பேச்சில் பதட்டம் இருந்தது. பேசி முடிந்ததும் அவசரமாக, மேஜை அருகே வந்தார்.

"பாலு ஒரு காரில் தப்பித்துப் போக முயன்றிருக்கிறான். வழியில் நமது கான்ஸ்டபிள்கள் அதை நிறுத்தி இருக்கிறார்கள். உடனே பாலு அவர்களை நோக்கிச் சுட்டானாம். நமது கான்ஸ்டபிள் பதிலுக்குச் சுட்ட பொழுது அவன் தப்பித்துக் கொள்ளப் பாய்ந்திருக்கிறான். ஆனால் குண்டு அவன் தலையில் அடித்து, 'டாப்' மேலே தூக்கிக் கொண்டு விட்டதாம். அபாயகரமான நிலையில் அவனை ஜெனரல் ஆஸ்பத்திரியில் போட்டிருக்கிறார்கள்" என்றார் துரைசாமி.

"அடடா; ஒரு நல்ல கொலை கேஸ் போய்விட்டதே" என்றார் ஒரு கோர்ட்டுப் பிரியர்.

"அதனால் நமக்கு ஏற்படும் கவலையை விட, தினச் செய்திப் பத்திரிகைக்காரனுக்குத்தான் அதிகக் கவலையாய் இருக்கும்; ஏனென்றால் வழக்கு முடியும்வரை தினசரி ஆயிரக் கணக்கில் பத்திரிகை விற்குமே!" இதைக் கூறிவிட்டு துரைசாமி கிளம்பினார்.

## 25. *முடிவில் என்ன?*

பாலு ஆஸ்பத்திரியில் இறந்து விட்டான், அகில உலக கொலை நட்சத்திரமாக விளங்கிய பாலு, ஒரு தெரு நாயைப்போல துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டான்.

கோர்ட்டில் வழக்கு வராமல் போயிற்றே என்று மனோரமா நிம்மதி அடைந்தாள். ஏனென்றால் சாட்சி சொல்வது முதலான தொல்லைகளுக்கு ஈடு கொடுத்து அவதிப்பட அவள் தயாராய் இல்லை.

மோகனோ பெரியகருப்பன் செட்டியாரின் பங்களாவை விற்க முயன்றார். 'கொலை விலாஸ்' என்று பெயர் பெற்ற அந்தக் கட்டிடத்தை யாருமே வாங்க முன்வரவில்லை. ஆகவே, அதை இடித்து, அந்தச் சாமான்களைக் கொண்டுபோய், அடையாற்றில் பங்களா கட்டிக்கொண்டான்.

இந்த விஷயங்கள் எல்லாம் ஒருவாறாக முடிந்ததும் மோகனுக்கும் மனோரமாவுக்கும் மணம் மிகச்சிறப்பாக நடந்தேறியது. பிரபாகரன் தான் அந்தக் கல்யாணத்தையே நடத்தி வைத்தான்.

அதோடு அவன் இன்னொரு பெருந்தன்மையான செயலையும் செய்தான். மனோரமாவுக்குச் சொந்தமான இருபதாயிரம் ரூபாய் 'மணிலா எண்ணை ஷேரை' செட்டியாரை விற்கச் சொல்லி, அவன் வாங்கி இருந்தானல்லவா? அவற்றை இப்பொழுது விற்றான். அதன் மூலம் மூன்று லட்ச ரூபாய் கிடைத்தது. அதை மனோரமாவுக்குக் கல்யாணப் பரிசாகக் கொடுத்து விட்டான்.

மற்ற எல்லோரையும் விட இன்ஸ்பெக்டர் துரைசாமிக்குத் தான், இந்த மர்மங்களைத் தெளிவாக்கியதில் ஒரு திருப்தி. ஏனென்றால், மற்ற கொலைகாரர்களைப் போல, சிறிது தூரத்தில் விலகி நின்று பாலு தன் குற்றங்களைச் செய்யவில்லை. குடும்பத்துக்குள் புகுந்து கொண்டு, ரொம்பவும் அன்னியோன்ய மனிதனாக இருந்து அவன் குற்றம் செய்ததால் அவனைக் கண்டு பிடிப்பது எளிதில் சாத்தியமல்ல.

அமெரிக்க நாட்டிலேயே தப்பித்துக் கொண்டு வரக் கூடிய சாமார்த்திய சாலியான பாலுவை, சாதாரணத்தில் பிடிக்க முடியாது. அவன் இப்பொழுது ஒழிந்தான் என்பதில் எல்லோருக்கும் அளவு கடந்த திருப்தி ஏற்பட்டது.

"பாலு எப்படி இவ்வளவு பெரிய புள்ளியானான் என்று இன்ஸ்பெக்டர் துரைசாமி விசாரிக்க ஆரம்பித்தார். அவன், 'பரோடா காலேஜில் பட்டதாரி என்று அவர் கேள்விப்பட்டதும் அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது' — பட்டதாரியாக இருந்தவன் எப்படி வேலையாளாக இருக்கச் சம்மதித்தான்? ஏன் இருந்தான் என்று திகைத்தார்!"

பாலு, பரோடா சர்வகலா சாலையில் பட்டம் பெற்ற பிறகு, ஒரு குட்டி சமஸ் தானாதிபதியிடம் அந்தரங்கக் காரியதரிசியாக வேலை பார்த்திருக்கிறான்.

அப்பொழுதுதான் அவன் அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறான்.

அமெரிக்காவில், குற்றவாளி கோஷ்டியோடு அவனுக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவர்கள் வாழும் முறை அவனுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. அதனால், மகாராஜா குடும்பத்தின் வேலைக்கு ஒரு முழுக்குப் போட்டுவிடத் தீர்மானித்தான்.

முழுக்குப் போட்டு விடுவது சுலபமானாலும், ராஜ குடும்பம் இந்தியா திரும்பிய பிறகு அவனால் அமெரிக்காவில் தங்கி இருக்க முடியாது. அதற்கு 'பாஸ்போர்ட்' வசதிகள் இடந்தர மாட்டாது. ஆகவே, தான் இறந்து போய்விட்டதாக ஒரு கதை கட்டத் தீர்மானித்தான்.

அவனது நண்பர்கள் அக்கதையை நம்புபடி ஜோடித்தார்கள். அதாவது, பனிக்கட்டிகள் இடையில் சிக்க அவன் மரணமடைந்ததாக, ராஜ குடும்பத்தினரிடம் நம்பும்படி சொல்லிவிட்டார்கள். பத்திரிகைகளில் எல்லாம் அந்த விஷயம் பிரமாதமாக அடிபட்டது. மகாராஜாவுக்கு ஏராளமான அனுதாபச் செய்திகள் பறந்தன. ராஜாவும் ஆராத துயரத்தோடு அமெரிக்காவை விட்டு இந்தியா திரும்பினார்.

அதன் பிறகு பாலு, அமெரிக்காவில், 'மதறாஸ் பாபு' என்று பெயரில் மறைந்திருந்து, நாடே பிரமிக்கும் படியான குற்றங்களை எல்லாம் செய்தான். பிறகு அங்கு இருந்தால், பிடித்து மின்சார நாற்காலியில் வைத்துப் பொசுக்கி விடுவார்கள் என்ற நிலைமை ஏற்பட்டதும், அதை விட்டுத் தப்பித்துப் போக எண்ணினான். அங்கிருந்து எப்படிப் புறப்படுவது? பிரயாண அனுமதிச் சீட்டு (பாஸ்போர்ட்) இல்லாமல் எப்படிக் கிளம்புவது?

இந்த நிலையில் அமெரிக்காவில் படித்துக் கொண்டிருந்த ஓர் இந்திய மாணவர் தாய்நாடு திரும்பப் போகிறார் என்ற செய்தியை அறிந்து மெதுவாக அவரிடம் பரிச்சயம் செய்து கொண்டான். பிரயாணத்திற்கு இரு தினங்கள் முன்னதாக, அமெரிக்காவிலுள்ள உன்னதமான விடுமுறை கழிக்கும் இடமான 'மியாமி' என்ற இடத்திற்கு அவனைக் கூட்டிச் சென்று கொலை செய்து கடலில் வீசி எறிந்து விட்டான். பிரேதத்தின் முகமும் அடையாளம் தெரியாமல் போய் விட்டது.

பிறகு அந்த 'பாஸ்போர்ட்டில் இந்தியா வந்து இறங்கினான். இங்கு பணக்காரர் வீட்டில் பணியாளாக இருக்கும் வசதி அவனுக்கு நன்றாகத் தெரியும். அதனால் தான் பெரியகருப்பன் செட்டியாரிடம் வேலையாளாக வந்து சேர்ந்தான். இங்கு வீட்டிலே வேறு யாரும் இல்லாததும், செட்டியாருக்குப் பார்வை சரியாக இல்லாததும், முடமாகிக் கிடந்ததும் ரொம்பவும் பாலுவுக்கு அனுகூலமாக இருந்தன.

அப்படி எல்லாம் என்னென்னவோ இந்திர ஜாலங்கள் செய்தானே பாலு, அவன் முடிவு என்ன? இதைப் பற்றி யோசிக்கும் பொழுதெல்லாம் இன்ஸ்பெக்டர் துரைசாமிக்கு ஒரேயொரு விஷயம் தான் புலனாயிற்று.

"என்ன தான் அறிவாளியாக இருந்தாலும், திறமைசாலி இருந்தாலும், எவனொருவனின் புத்தி அழிவு வேலையை நாடுகிறதோ, அவன் முடிவில் அழித்தே போகிறான்!" என்பது தான் அது.

இதைப் பற்றி, அவர் தன் நண்பர் ஒருவரிடம் சொன்னபொழுது, "இதற்கு ஏன் ஸார் எங்கோ போகிறீர்கள்? ஜாதிவெறி பிடித்த ஹிட்லரைப் பாருங்கள்!" என்று கூறினார்.

முற்றிற்று

## பிரேமா பிரசுர வெளியீடுகள்

ஸ்ரீ விநாயகர் புராணம், ஸ்ரீ கந்த புராணம், ஸ்ரீ தேவி பாகவதம், ஸ்ரீ சிவமஹா புராணம், ஸ்ரீ அறுபத்து மூவர் கதைகள், ஸ்ரீ விஷ்ணு புராணம், ஸ்ரீ கருட புராணம், ஸ்ரீ குருவாயூரப்பன், ஸ்ரீ வன்னிய புராணம், ஸ்ரீ வசவ புராணம், ஸ்ரீ பன்னிரு ஆழ்வார்கள் கதைகள், ஸ்ரீ ஆதிசங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ நாரதர் புராணம், ஸ்ரீ காஞ்சி காமகோடி புராணம், ஸ்ரீமத்பாண்டுரங்க பக்த விஜயம், திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் தேவாரம் (1 முதல் 6 திருமுறைகள் 6 தனிதனி புத்தகங்களில்), திருமந்திரம், திருவாசகம்(பெரிய எழுத்தில்) திருப்புகழ், கம்ப ராமாயணம், மகாபாரதம், ஸ்ரீ ரமண மகரிஷி, ஸ்ரீ நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருஅருட்பிரகாசவள்ளலார் சரிதம், வள்ளலாரின் திருஅருட்பா 1 முதல் 6 திருமுறைகள், மற்றும் இதர புராண நூல்கள், கதைகள், பொன்மொழிகள், சிந்தனையாளர் நூல்கள், ஜோதிட நூல்கள், சமுக, சரித்திர, மர்ம நாவல்ளின் விவரங்கள் கொண்ட இலவச விலைப் பட்டியலுக்குத் தொடர்பு கொள்க.

**பிரேமா பிரசுரம்**

59, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

✆: 044 24800325, 24833180, **cell:** 9486000325
e-mail : aruram@premapirasuram.com.